57

SCHOOL ADMINISTRATION

FOR BASIC TRAINING SCHOOLS

P. K. Vaidyanathan, B. A., L. T.

...IONAL ENTERPRISES
...MBAKONAM

T
N57
146579

Printed : February 1957

Printed on 26 lbs. M. G. Ptgs.

SARADA VILASA PRESS, KUMBAKONAM.

ஆக்கியோன் உரை

1954-ம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட ஆதார ஆசிரியர் பயிற்சிக்கான பாடத்திட்டத்தையொட்டிப் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ – ஆசிரியர் களுக்கென **ஆதாரப் பள்ளி ஆட்சியைச்** சுருக்கமாகக் கூறுவதே இந்நூலின் நோக்கம் ஆகும்.

பயிற்சிப் பள்ளிகளில் **பள்ளி ஆட்சியைப்** பயிற்றும் முறையைப்பற்றிப் பாடத்திட்டத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது :

''பள்ளி வேலைகளை உற்றுநோக்குவதிலும், ஒரு பள்ளி ஆசிரியரின்கீழ்த் தொழில் கற்போன் என்ற முறையில் சிறுவர்களுக்குக் கற்பிப்பதிலும், ஆசிரியரின் மேற்பார்வை யின்றித் தாமாகவே பிறர் சார்பற்றுச் சிறுவர்க்குக் கல்வி கற்பிப்பதிலும் பயிற்சியாளர்களுக்குக்கிட்டும் அநுபவங்களை அடிப்படையாகக்கொண்டு இப்பாடபோதனையும், இதைப் பற்றிய விவாதமும் நடைபெறவேண்டும்.''

இக்குறிப்பிலுள்ள செய்தியைக் கருத்திற்கொண்டு கூடிய மட்டில் அதை ஒட்டியே இந்நூலை எழுதத் துணிந்தேன். ஒவ்வொரு தலைப்பின்கீழும் பயிற்சியாளர் அக்கம்பக்கத்திலுள்ள ஆதாரப் பள்ளிகளில் உற்று நோக்கிவரவேண்டியவைபற்றிச் சிந்தையைத் தூண்ட வல்ல சில வினாக்கள் தர முயன்றுள்ளேன். அவை பயிற்சியாளர்க்குப் பெரும் பயனளிக்குமென்னும் துணிபுடையேன். இம்முறை இந்நூலுக்கு ஒரு புதுமையாகும்.

செங்கற்பட்டு, அரசினர் ஆதார ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் தற்போது உதவிஆசிரியராகப் பணியாற்றிவரும் எனக்கு 1949-ம் ஆண்டு முதல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் பணிபுரிந்ததன்பயனுகக் கிடைத்த என் அநுபவங்களையொட்டி இந்நூலைத் தயாரித்துள்ளேன். **இது அரசினர் வெளியீடு அன்று.**

இந்நூலை மேலும் இனிதாகச் செய்யவல்ல ஆக்க ஆலோசனைகளை அளித்துதவ ஆதாரக் கல்வி அன்பர்களையும் அறிஞர்களையும் வேண்டுகிறேன்.

இதனைப் புத்தக உருவில் வெளியிட அநுமதி வழங்கிய சென்னை அரசினருக்கும், சென்னை மாநிலக் கல்வி இயக்குநருக்கும் என் உளமார்ந்த நன்றி. இந்நூலின் பதிப்பாளர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

செங்கற்பட்டு
25—6—56

பூ. கி. வைத்தியநாதன்

பதிப்பாளர் உரை

ஆதாரக் கல்வி நம் அரசினர் ஏற்றுக்கொண்ட அருமைத் திட்டமாகும். முறை புதிதாகலின் புதிய நூல்களும் புதிய நடைமுறைகளும் தேவைப்படுகின்றன. ஆதாரப் பள்ளி ஆட்சி நூல் ஒன்றின் இல்லாமை ஒரு குறையாம்.

முன்பே ஆதாரக் கல்வி பற்றி மூன்று நூல்களை வெளியிட்டமையால், ***ஆதாரப் பள்ளி ஆட்சி*** நூல் ஒன்று வெளியிட எம்மை நண்பர்கள் ஊக்குவித்தனர். அதன் விளைவே இந்நூலாம். இத்துறையில் நீண்ட காலப் பயிற்சியும் அனுபவமும் வாய்ந்த உயர்திரு. **பூ. கி. வைத்தியநாதன்,** B. A., L. T., அவர்களை அணுகினோம்; அன்னாரும் உடன் இயைந்து உதவியுள்ளார்கள்.

இத்துறையில் இந்நூல் ஒரு புதிய முயற்சியாகும். உற்றுநோக்கல் முறையை ஒட்டி, ஒவ்வோர் அத்தியாயமும் நேரடி அனுபவம் பெறும் வகையில் எழுதப்பெற்றுளது. அமெரிக்க நாட்டில் இவ்வகை நூல்கள் பல எழுந்துள்ளன. ஆதாரக் கல்விக் கலைத் திட்டத்திலும் இம்முறை வற்புறுத்தப்பெற்றுள்ளது.

புது முயற்சியாதலின் இந்நூலிலுள்ள குற்றங் குறைகளைப் பொறுத்து நிறை கண்டு மேலும் ஊக்க வேண்டுகிறோம்.

கும்பகோணம்
4—2—1957

எஜுகேஷனல் எண்டர்பிரைசஸ்

இந்நூல் எழுதுவதற்கு உதவியனவும், படித்தற்கு உரியனவுமான துணை நூல்கள்

1. The Madras Elementary Education Manual (Departmental Publication)
2. Scheme and Syllabus for Basic Training Schools Do.
3. Elementary Education Act Do.
4. Rules relating to Elementary Schools Do.
5. Notes and Suggestions on the Syllabus for Elementary Schools Do.
6. Type Designs of Buildings for Basic Elementary Schools (Government Orders)
7. Relevant Proceedings of the Director (Director's Proceedings)
8. Introducing Basic Curriculum (Bombay Government Publication)
9. Revised Syllabus for Grades I to VIII of Basic Schools (Hindustani Talimi Sangh Publication)
10. Composite Latrine Do.
11. Nai Talim Pradarsini (Hindi booklet) Do.
12. Nai Talim (Tamil booklet) Do.
13. "Harijan" dated 13th May 1950
14. Teaching (Notes for Teachers in African Schools)
15. Student Teaching
16. The Story of Exhibitions (by K. W. Lockhurst)
17. School and Society (by John Dewey)
18. ஆதாரக் கல்வி - செயல் திட்டமும் செயல்களும் (by E. A. Ponniah Pillai, Educational Enterprises)
19. ஆதாரக் கல்வி ஆசிரியர் துணைப் புத்தகம் (நான்காம் வகுப்பு by Sakthivel, Ramakrishna Vidyalaya, Periyanayakanpalayam)
20. முதல் வகுப்பாசிரியர் (by M. Arunachalam)
21. Handbook of Basic Education (Ministry of Education, Govt. of India)

ஆதாரப் பள்ளியில் பஞ்சசீலம்

1. **துப்புரவு** — உள்ளும் புறமும், மேலும் கீழும், விளையாடுமிடத்திலும், தோட்டத்திலும், சரக்கறையிலும், சார்ந்த பிறவிடங்களிலும், சிறுநீர்க் குழி, குப்பைக் குழி, உரக் குழிகளிலும்.

2. **ஒழுங்கு, அழகு, கவர்ச்சி** — பள்ளி வாழ்க்கையிலுள்ள ஒவ்வோர் உறுப்பிலும்.

3. **உழைப்பு** — தோட்டவேலை, நூற்றல், நெசவு வேலை, பிற கைத்தொழில் வாயிலாகச் சுயதேவைப் பூர்த்திக்காக.

   கிராம சேவை வாயிலாகப் பழங்காலத் தவறுகளுக்குப் பிராயச்சித்தத்துக்காக.

4. **பட்டறிவு வாயிலாகக் கல்வி** — அறிவு, திறமை, பழக்க வழக்கங்கள், மனப்பான்மைகளை வளர்க்க.

   செயல்களுடன் இயைபுபடுத்திய கல்வி — வாழ்க்கையை வகையாய், வளமாய் வாழ.

5. **மக்கட் தொண்டு** — கிராமசேவை, புதிய சமுதாயப் படைப்புக்குப் பாடுபடுதல்.

உரைகல் :

(i) மாணவர்களிடம் சுறுசுறுப்பும் மகிழ்ச்சியும் காணவேண்டும்.

(ii) இந்தச் சீலங்கள் பள்ளியில் மட்டுமன்றி மாணவர்களின் வீட்டுக்கும் பரவவேண்டும்.

(iii) ஒரு மாணவனின் நடையுடை பாவனைகளைப் பார்த்தவுடன் அவன் ஆதாரக் கல்வி பெற்றவனாயிருக்கவேண்டும் என எவரும் எண்ணவேண்டும்.

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
	ஆக்கியோன் உரை	... iii
	பதிப்பாளரின் உரை	... v
	துணை நூல்கள்	... vi
	ஆதாரப் பள்ளியில் பஞ்சசீலம்	... vii
	உள்ளுறை	... viii
	முன்னுரை	... 1
1-A.	ஓர் ஆதாரப் பள்ளிக்கான இடமும் சாதனங்களும்	... 13
1-B.	தொழிற் கருவிகள் முதலியவைபற்றிய விதிகள்	... 60
2.	ஆசிரியர்	... 83
3.	ரிகார்டுகளும் ரிஜிஸ்தர்களும்	... 128
4.	திறமை அடிப்படையில் குழுக்கள் அமைப்பதும், வகுப்பு மாற்றலும்	... 142
5.	ஆதாரப் பள்ளிக் கலைத்திட்டம்பற்றிய தத்துவங்கள்	... 153
6.	செயல் திட்டங்கள்	... 188
7.	பள்ளிகளின் கூட்டுறவு	... 234
8.	பள்ளியும் சமூகமும்	... 258
9.	நண்பகல் இலவச உணவளிப்பு	... 284
10-A.	கலை நிகழ்ச்சிகள்	... 296
10-B.	கண்காட்சிகளும் பொருட்காட்சிகளும்	... 316
	பின் இணைப்பு I : கலைச் சொற்கள்	... 330
	பின் இணைப்பு II : பாடத்திட்டம் - ஒரு கண்ணோட்டம்	... 333
	பின் இணைப்பு III : சில சட்ட திட்டங்கள்	... 341
	பின் இணைப்பு IV : அதிகார வரம்புகள்	... 353

ஆதாரப் பள்ளி ஆட்சி

முன்னுரை

1. பள்ளி ஆட்சிமுறை என்றால் என்ன?

ஆதார ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மாணவ ஆசிரியர்கள் பயிற்சிபெறுங்கால் கற்கவேண்டிய பல பாடங்களுள் 'பள்ளி ஆட்சி' என்பதொன்றாகும். "பள்ளி பரிபாலனம்," அல்லது 'பள்ளியின் அமைப்பும் நிர்வாகமும்' என்றும் அது சொல்லப்படும். பள்ளி ஆட்சியா? வியப்பாயிருக்கிறதே! பள்ளியில் ஆட்சிக்கு என்ன உறுப்புக்கள் இருக்கின்றன எனச் சிலர் ஐயப்பாட்டுடன் வினவலாம்.

ஏதோ ஒரு முடிவுக்காகத் தனிப்பட்ட ஓர் எளிய செயலைக் குறுகிய காலத்தில் ஓரிருவர் திட்டமிட்டுச் செய்துமுடிப்பதைப் 'பரிபாலனம்', 'நிர்வாகம்', 'ஆட்சி' போன்ற சொற்களால் குறிப்பதில்லை. ஓர் ஆட்சியில் பல வகை உறுப்புக்கள் பலவிடங்களில் இயங்கவேண்டும்.

பல்வேறு இடங்களில் பரவி, நீடிய காலம் நீடித்து, பல்வேறு மக்கள் கூட்டுறவாகத் தெளிந்து தேர்ந்த சில நோக்கங்களுக்காகத் தொடர்ந்து தொழிலாற்றும் உறுப்பு நிறுவனங்களை நிர்வகித்து ஆளுவதையே 'ஆட்சி' எனக் கூறுகிறோம்.

இப்போது பள்ளி அலுவல்களை எடுத்துக்கொண்டு, அங்கு ஆட்சிமுறைக்கான அவசியம் இருக்கிறதாவென ஆராய்வோம்.

சென்னை மாநிலம் முழுவதும் பட்டணங்களிலும் சிற்றூர்களிலும் பல ஆரம்ப ஆதாரப் பள்ளிகள் வேலை செய்கின்றன. குறிப்பான சில நோக்கங்களுக்காக அவை வேலைசெய்கின்றன. அவற்றுள் பலவகைப் பள்ளிகள் உள்ளன. சில அரசினராலும், சில கார்ப்பரேஷன் ஆட்சி, நகராட்சி, பஞ்சாயத்து ஆட்சிபோன்ற தல சுய ஆட்சி நிறுவனங்களாலும், சில ஒரு கமிட்டிக் குழுவினராலும், சில தனிப்பட்ட நபர்களாலும், சில மிஷன் சங்கத்தினரா லும் நடத்தப்படுகின்றன. சிலவற்றில் 2, சிலவற்றில் 3, சிலவற்றில் 4, சிலவற்றில் 5, சிலவற்றில் 6, சிலவற்றில் 7. சிலவற்றில் 8 வகுப்புக்கள் உள்ளன. சிலவற்றில் 6, 7, 8 ஆகிய வகுப்புக்கள் மட்டுமே உள்ளன.

எவ்வகைப் பள்ளிக்கும் அரசினர் பலவகையில் உதவி புரிகின்றனர். ஆசிரியர் சம்பளத்திற்காகப் பண உதவி, நூற்புக் கருவிகள் வாங்குவதற்காகப் பண உதவி, பள்ளிக் கட்டடம் கட்டவும், கிணறு வெட்டவும், மரச் சாமான் களும், நூல் நிலையப் புத்தகம் வாங்கவும் பண உதவி எனப் பல்வேறு வகையில் பள்ளிகளுக்குப் பணம் வழங்கு கின்றனர். பள்ளிகளுக்கு விளையாட்டிடம் தேவையா யிருந்து, அதற்கருகில் புறம்போக்கு நிலம் இருந்தால் அதை அவற்றிற்கு இலவசமாக அளிக்கின்றனர்.

பள்ளிகள் செவ்வையாக வேலைபுரிகின்றனவா, அவற்றிற்கு வழங்கப்படும் பணம் வழங்கப்பட்ட காரணத் திற்காகச் செலவுசெய்யப்பட்டு, பள்ளியில் பயிலும் சிறுவர் சிறுமியர் பயன்பெறுகின்றனரா என்று ஆராயப் பள்ளி ஆய்வாளர்களை அரசினர் நியமித்திருக்கின்றனர். தவிர, நாள்தோறும் என்னென்ன கணக்குகள், பதிவேடு கள் பள்ளியில் வைக்கவேண்டும், என்னென்ன மாத,

ஆண்டுக் கணக்குகள் மேலதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும் என நிர்ணயித்து விதிகள் ஆக்கியிருக்கின்றனர்.

பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களின் நலன்களையும், பள்ளியை நடத்தும் நிர்வாகிகளின் நலன்களையும், பள்ளி மாணவர்களின் உடல், உள்ள, ஆன்ம நலன்களையும் காப்பாற்றி வளர்ப்பதற்கும் பல விதிகளை இயற்றியுள்ளனர்.

உடல்நலம் கெடாது பலர் கூடிப் படிக்கவும், விளையாடவும், தொழில் புரியவும், களிக்கவும் தகுதியான கட்டடம், தோட்டம், விளையாடுமிடம் முதலியவற்றைப் போன்ற பள்ளியின் குறைந்தபட்சத் தேவைகளையும் அளவுகளையும் வரையறையிட்டு விதிகளாக்கியுள்ளனர்.

என்னென்ன வகுப்புக்களில், என்னென்ன பாடங்களைக் கற்பிக்கவேண்டும், எத்தனை மணி நேரம் பாடம், எத்தனை மணி நேரம் தொழில், எத்தனை மணி நேரம் விளையாட்டு, எத்தனை மணி நேரம் களியாட்டம், பள்ளிப் பயணம், பிற செயல்கள், எத்தனை ஆண்டுகளில் ஒரு திட்டம் நிறைவேறவேண்டும் என ஒருவகைப் பாகுபாடு செய்து அளித்திருக்கின்றனர்.

என்னென்ன பாடப் புத்தகங்களை உபயோகிக்கலாம், பாடப் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை யாருக்கு உண்டு, ஒரு முறை வைக்கப்பட்ட ஒரு பாடப் புத்தகம் குறைந்தபட்சம் எத்தனை ஆண்டுகளுக்குக் குறையாமல் நீடிக்கவேண்டும் என்பதைப்பற்றியும் விதிகளை ஏற்படுத்தியுள்ளனர்.

புதிய பள்ளிகள் திறப்பதற்கு என்னென்ன செய்யவேண்டும்? அதற்கு அரசினர் அங்கீகாரம் பெறுவது எப்படி?

இவ்வாறு சமூக முன்னேற்றத்தை முன்னிட்டுப் பள்ளி ஆட்சிபற்றி இன்னும் பலப் பல விதிகளை ஏற்படுத்தியுள்ளனர். இவை தவிர, அதாவது பண உதவியும் மேற்பார்வையும் தவிர, பாடபோதனை சிறக்கும்படி வழிவகைகள் வகுத்து வேறு பல வசதிகள் வழங்கியும் வருகின்றனர்.

பள்ளிகளை நிர்வகிப்பதில் இவை சில பகுதிகளேயாம்; வேறு பகுதிகளும் உள்ளன. இவ்வாறு பள்ளிகளில் பதினாயிரக்கணக்கான ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இலட்சக்கணக்கான மாணவர்களும் மாணவிகளும் படிக்கிறார்கள். ஆசிரியர்கள் மாணவர்கள் தவிரப் பள்ளி அலுவல்களில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஈடுபடும் வேறு பலர் இருக்கின்றனர். அவர்கள் பள்ளிகளை நிர்வகிப்போர், அரசினர், தணிக்கைசெய்யும் அதிகாரிகள், பிற மேற்பார்வையாளர்கள், பெற்றோர்கள், பொது மக்கள் ஆகியோர் ஆவர்.

ஆரம்ப ஆதாரப் பள்ளிகளுக்காகும் செலவு சில கோடி ரூபாய் ஆகிறது. மேலே கூறியதிலிருந்து 'ஆட்சி' என்னும் சொல் பள்ளி சம்பந்தமாகவும் எவ்வளவு பொருத்தமானது என்று ஊகித்தறியலாம்.

பள்ளி ஆட்சி என்னும் நூல் (i) பள்ளி அலுவல் பற்றி மாணவர்கள், பெற்றோர்கள், அரசினர், உடன் வேலைசெய்யும் கூட்டாளிகள், தலைமையாசிரியர், நிர்வாகி, பிற பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், தணிக்கையாளர்கள், பார்வையிடுவோர்கள் ஆகிய ஒவ்வொருவர்பாலும் ஆசிரியரின் கடமைகளை விளக்கும். (ii) மேலே கூறப்பட்ட பலதிறப்பட்டவர்களுக்குள்ள தொடர்பையும் கூட்டுமுயற்சியின் இன்றியமையாத தன்மை

யையும் அறிவுறுத்தும். (iii) பிறர் செய்யக்கூடிய பல வகைத் தொண்டுகளை எடுத்துக்காட்டும். அவற்றை இணைக்க வழி கூறும். (iv) பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும், உடல்நல ரீதியிலும் நிலைபெற்றுத் தொடர்ந்து சீரான முறையில் பள்ளியை நடத்த வழி வகைகளைக் காட்டும். (v) பயிற்றல் வேலை சிறப்புறவும், கற்றல் எளிதாகவும் சில வழிவகைகளைக் காட்டும்.

2. பள்ளி ஆட்சியில் கற்கவேண்டியன எவை?

"பள்ளி ஆட்சி" என்னும் தலைப்பின்கீழ்ப் பயிற்சியாளர்கள் கற்கவேண்டியன எவை என அறிந்துகொள்வது நலம்.

பள்ளி ஆட்சிக்கான அரசினர் பாடத்திட்டம் பின்வருமாறு:

[குறிப்பு: பள்ளி வேலைகளை உற்றுநோக்குவதிலும், ஒரு பள்ளி ஆசிரியரின்கீழ்த் தொழில் கற்போன் என்ற முறையில் மாணவர்களுக்குக் கற்பிப்பதிலும், ஆசிரியரின் மேற்பார்வையில் தாமாகவே மாணவர்களுக்குப் போதிப்பதிலும் கிடைக்கும் அநுபவங்களின் அடிப்படை மீதே இப்பாட போதனையும், இதைப்பற்றிய விவாதமும் நடைபெறவேண்டும்.]

1. **ஓர் ஆதாரப் பள்ளிக்கான இடமும் சாதனங்களும்:** கட்டடங்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனிக்க வேண்டிய தத்துவங்களும் விதிகளும்; வேறுபாடின்றி எல்லா ஜாதிக் குழந்தைகளும் வந்து படிக்க வசதியளித்தல்; உடல்நல அடிப்படை, — காற்றோட்டமும் வெளிச்சமும், இட வசதி, தோட்ட வசதி முதலியன.

தொழிற் கருவிகள், மரச் சாமான்கள், உபகரணங்கள், நூல் நிலையம், பொருட்காட்சி இவைபற்றிய விதிகள்.

2. **ஆசிரியர்கள் :** இன்றியமையாத தகுதிகள் — ஒழுக்கமும் ஆளுமையும் — கிராமீய மனப்பான்மை — ஆரோக்கியமாயும் சுறுசுறுப்பாயும் இருக்க உதவும் பழக்க வழக்கங்கள் — மாணவர்கள், பிற ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகிகள், பொதுமக்கள் இவர்கள்பால் தொடர்பு - நூற்பு வேலைத் திறன் – ஆசிரியர் பயிற்சி – தலைமையாசிரியர், உதவி ஆசிரியர்களின் கடமைகள் - ஆசிரியர்களின் சுய முன்னேற்றம் — நூல் நிலையத்தை யும் ஆசிரியர் சங்கங்களையும் பயன்படுத்துதல்; தனிப் பட்ட மாணவர்களைப்பற்றிய ஆராய்ச்சி.

3. **ரிக்கார்டுகளும் ரிஜிஸ்தர்களும் :** ஆசிரியர்கள் வைக்கவேண்டுவன, மாணவர்கள் வைக்கவேண்டுவன –பொதுவான பள்ளி ரிக்கார்டுகளும், ரிஜிஸ்தர்களும்– ஆதாரப் பள்ளிக்குச் சிறப்பான நூற்பு ரிக்கார்டுகளும் ரிஜிஸ்தர்களும் — பொது மன்றங்களில் நடக்கும் வேலை பற்றிய அறிக்கைகள் — நாட்குறிப்புக்கள் — தேர்ச்சிக் குறிப்புக்கள்—உடல் வளர்ச்சி (எடை, உயரம்), ஆரோக்கிய விமரிசனம்பற்றிய ரிக்கார்டுகள்.

4. **திறமை அடிப்படையில் குழுவாகப் பிரித்தல்;** மாணவர்களை மேல்வகுப்புக்கு **மாற்றுதல்.**

5. **பள்ளிக் கலைத்திட்டம்பற்றிய தத்துவங்கள் :** அநுபவ வேலைக்கும் உள்ளூர் நிலைமைகளின் ஆராய்ச் சிக்கும் ஏற்பாடு.

6. **ஆண்டுத் திட்டங்களும், செயல் திட்டங்களும்- அவற்றைத் தயாரித்தலும் திட்டமிடுதலும் :** ஆதாரப் பள்ளிகளில் பாடப் புத்தகங்கள், கால அட்டவணை ஆகியவற்றின் இடம். பன்மை வகுப்பு. போதனை.

கல்விப் பயணங்கள்; வேலைப் பயிற்சிகள் (Assignments), வீட்டு வேலை முதலியவற்றின் இடம்.

7. **பல பள்ளிகளின் கூட்டுறவு:** விளையாட்டு விழாக்களும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளும். தொழில் வேலை அடிப்படையில் வரிசைப்படுத்துதல். குழு குழுவாகப் பிரிந்து ஆராய்ச்சியில் ஈடுபடுதல் — ஆசிரியர் சங்கங்களும், ஆசிரியர் யூனியன்களும் — ஆசிரியர் மாநாடுகள். கண்காட்சிகளும், செய்முறைக் காட்சிகளும்.

8. **பள்ளியும் சமூகமும்:** பெற்றோர் – ஆசிரியர் தொடர்புகள்- மாணவர்களின் இல்லங்களுக்கு விஜயம்- பெற்றோர் சங்க அமைப்பும் வேலை முறைகளும்-சமூக சேவா சங்கம்-அமைப்பும் வேலை முறைகளும்-பள்ளியில் நடக்கும் வேலைகளைப்பற்றிப் பொதுமக்களை அறியச் செய்தல்; அதன் நோக்கங்களும் வேலை முறைகளும். முன்னாள் மாணவர்களுக்கும் தற்போதைய மாணவர்களுக்கும் வாசகசாலை அமைத்தல். வயதுவந்தோர் வகுப்பு நடத்துதல்; பட விளக்கு, சினிமாப் படம், ரேடியோ முதலியவற்றைப் பயன்படுத்தல். பள்ளிக் களியாட்ட நிகழ்ச்சிகளும், அவற்றின் அமைப்பும். சமூகத்திலுள்ள மனிதர்களையும் பொருள்களையும் பள்ளி வேலைக்குப் பயன்படுத்திக்கொள்ளுதல். கிளர்ச்சியூட்டும் விளையாட்டுக்களுக்கான வாய்ப்புக்கள்.

9. **நண்பகல் உணவு அளிப்புத் திட்டம்:** மாணவர்களின் இல்ல உணவுகளிலுள்ள குறைபாடுகளைக் குறைக்க உள்ளூர்ப் பெரியோர்களின் உதவியுடன் ஏற்பாடு செய்வது எப்படி?

10. கலை நிகழ்ச்சிகள்: பலர் பங்கெடுத்துக் கூட்டு முயற்சியாக மலரவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்துதல்; உள்ளூரிலுள்ள கலைஞர்களையும் கலை மரபுகளையும் பயன்படுத்திக்கொள்ளுதல். கண்காட்சிகளும் பொருட்காட்சிகளும்.

[மேற்கூறிய பத்துத் தலைப்புக்களுள் அடங்கியுள்ள நோக்கங்களை எளிதாகவும், எடுத்த எடுப்பிலேயே தெரிந்துகொள்ளவும் இறுதியில் அநுபந்தத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் சுருக்கமான அட்டவணையைப் பார்க்கவும்.]

3. பள்ளி ஆட்சியைப்பற்றி ஆசிரியர் அறியவேண்டுவதேன்?

ஆசிரியரின் வேலை, மாணவர்களுக்குத் திறம்படக் கல்வி கற்பிப்பதுடன் நின்றுவிடுவதில்லை; செயல் மூலம் போதனையை வளப்படுத்துவதுடன் மட்டும் நின்றுவிடுவதில்லை. பள்ளியை நடத்தும், அதாவது பள்ளியை ஆட்சி புரியும் வேலையையும் அவர் அறிந்திருக்கவேண்டும். போதனை வேலையுடன் பள்ளியைத் திறம்பட நடத்தும் வேலை நுணுக்கங்களும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் பின்னிக் கிடக்கின்றன. இந்த உண்மையைத்தான் அநுபந்தத்தில் தரப்பட்டுள்ள அட்டவணை தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

கல்வி என்ற சொல்லுக்கு இப்போது விரிவான பொருள் தரப்படுகிறது.

மாணவர்களின் கற்றல் வேலை பள்ளியில் மட்டுமன்றி அவர்களுடைய இல்லம், விளையாடுமிடம், பிற சமூகச் சூழ்நிலைகள் ஆகிய பல இடங்களிலும் நடந்துகொண்டேயிருக்கிறது. ஆதலால் பெற்றோர், சமூக உறுப்பினர், பிற பள்ளிகளில் பணிபுரிவோர் ஆகிய பலதிறப்பட்டவரிடம்

தொடர்பு ஏற்படுவதன் அவசியத்தையும், அதற்கான வழி வகைகளையும் பயிற்சியாளர்கள் 'பள்ளி ஆட்சி'யில் தான் கற்க இயலும்.

புதிதாக ஒரு பள்ளியைத் திறத்தல், பள்ளிக்கு அரசினரிடம் அங்கீகாரமும் பண உதவியும் பெறுதல், விளையாடுமிடம் பெறுதல், நூற்பு உற்பத்திப் பொருள்களைத் திருப்பிக் கொடுத்தல் போன்ற பள்ளி வேலைகள்பற்றி அதிகார பூர்வமான ஆலோசனையளிப்பது 'பள்ளி ஆட்சி' என்னும் பாடமே. எதெதற்கு, எந்தெந்தக் காலங்களில் விண்ணப்பம் அனுப்பவேண்டும் என விளக்குவதும் இந் நூலேயாகும். இவையெல்லாம் தவிர மற்றொரு முக்கிய காரணமும் இருக்கிறது.

சென்னை மாநில அரசினர் அவர்களது வருப்படியில் கால் பகுதியைக் கல்விக்காக ஒதுக்குகின்றனர். அதில் பெரும்பங்கு ஆரம்ப ஆதாரப் பள்ளிகளுக்காகவே செலவழிக்கப்படுகிறது. வேறெந்த அரசாட்சித் துறைக்கும் இவ்வளவு பெருந்தொகை செலவிடுவதில்லை. எனவே, ஆண்டுதோறும் செலவழிக்கப்படும் அவ்வளவு பெருந் தொகை ஒழுங்காகப் பயன்தரும் வகையில் செலவழிக் கப்படுகிறதா என்பதைப்பற்றி அரசினரும் பொது மக்களும் அறிய விரும்புவது முறை தானே?

அரசினர் அறிய விரும்பும் செய்திகளை மாதந்தர நூற்புக் கணக்கு வாயிலாகவும், ஆஜர்க் கணக்கு வாயி லாகவும், ஆண்டு இறுதிக் கணக்கு வாயிலாகவும் அவ்வப் போது குறித்த காலத்தில் அனுப்பவேண்டியதன் அவசியத்தைப் "பள்ளி ஆட்சி" நூல்தான் எடுத்துக்கூறு கிறது. அந்தப் புள்ளிவிவரங்களின்மீதுதான் இப்போது தெள்ளிய திட்டங்கள் தீட்டுகிறார்கள்.

எனவே, பலரின் கூட்டுறவினால் பள்ளியின் வேலை தொடர்ந்து சீராக நடைபெறவும், பள்ளியின் பொருளாதார நிலை சீர்குலையாமல், சமூகத் தேவைக்கு ஒத்துழைக்கவும் 'பள்ளி ஆட்சி'யைப்பற்றிக் கற்கும் அவசியம் ஏற்படுகிறது. பள்ளி ஆட்சி முறைகளிற் சிலவும், விதிகளிற் சிலவும் சமூக முன்னேற்றத்துக்குத் தகுந்தவாறு அவ்வப்போது மாறுகின்றன. ஆகவே, பள்ளி ஆட்சி முறையில் அவ்வப்போது ஏற்படும் மாறுதல்களைப்பற்றி அறிவதும் அவசியமாகிறது. அத்தகைய மாறுதல்களையும், கல்வியில் ஏற்படும் புதுப் புதுக் கருத்துக்களையும் இயக்கங்களையும்பற்றித் திங்களுக்கு ஒரு முறை கூடும் ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் சுற்றறிக்கை மூலம் உடனுக்குடன் அரசினர் விளம்பரப்படுத்தி வருகிறார்கள். எனவே, பள்ளி ஆட்சி முறை தெரிந்திருக்க வேண்டிய அவசியம் பயிற்சிபெறும் காலத்தோடு மட்டும் நின்றுவிடாமல் ஆசிரியப் பணியுடன் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும் எனக் கூறலாம்.

4. பள்ளி ஆட்சிமுறையைப்பற்றிக் கற்பது எப்படி?

நீந்தக் கற்கவேண்டுமானால் நீரில் இறங்கியே கற்க வேண்டும். கரையிலிருந்தவாறே ஒருவன் நீந்தக் கற்க முடியாது. அதேபோல, மாணவ ஆசிரியர்கள் பள்ளி ஆட்சிமுறையைப்பற்றிக் கற்கவேண்டுமானால் பள்ளி நடத்தப்படும் முறையை உற்றுநோக்கி, அதில் நேரடியாகக் கலந்து, பங்கெடுத்தே கற்கவேண்டும். அதுவே சிறந்த முறையுமாகும். அம்முறையை ஆதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சித்திட்டம் வற்புறுத்தியிருப்பதுடன் அந்நோக்கம் எளிதில் வெற்றிபெறப் பொருத்தமான வழிமுறைகளை அமைத்துத் தந்திருக்கிறது.

அத்திட்டத்தின்படி பயிற்சியாளர்கள் கீழே விவரித்திருக்கும் இருவகைப்பட்ட பயிற்சிகளில் ஈடுபடவேண்டும்.

(அ) உற்றுநோக்குதல்:

(i) பாடபோதனை பயிலவெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் இயல்பாக நடைபெறும் போதனையை உற்றுநோக்குதல்.

(ii) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்கள் அவ்வப்போது நடத்திக்காட்டும் மாதிரிப் போதனையை உற்றுநோக்குதல்.

(ஆ) போதனைப் பயிற்சி:

(i) பாடபோதனை பயிலவெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களின் மேற்பார்வையில் போதனைப் பயிற்சி.

(ii) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியரின் மேற்பார்வையில் போதனைப் பயிற்சி.

(iii) யாதொரு மேற்பார்வை அல்லது உற்றுநோக்குதல் இன்றிச் சார்பற்ற போதனை. சிறப்பாகப் பள்ளி ஆசிரியர்கள் சிறு விடுதியில் போயிருக்கும் நாட்களில் போதனைப் பயிற்சி.

[குறிப்பு: திறம்பட வேலைசெய்யும் சில ஆதாரப் பள்ளிகளுக்கும் பள்ளிப் பயணங்கள் சென்று அவற்றின் அமைப்பு, வேலைமுறைகளை உற்றுநோக்கவேண்டும். ஒவ்வொரு விஜயத்திற்குப் பின்னும் பயிற்சியாளர் ஒவ்வொருவரும் ஓர் அறிக்கை எழுதித்தரவேண்டும்.]

மேற்குறித்துள்ள உற்றுநோக்குதல், போதனைப் பயிற்சிக் காலத்தில் போதனை முறைகளைக் கண்கூடாகக் கற்பதோடு பள்ளி ஆட்சிமுறையைப்பற்றியும் நேரிடை

யாகவும் தெளிவாகவும் பட்டறிவு வாயிலாகவே கற்க வேண்டும் எனப் பாடத்திட்டம் கூறுகிறது. தவிர, இவ் வாய்ப்புக்கள் குழந்தைகளோடு நெருங்கிப் பழகவும், அவர்களது பலதிறப்பட்ட நடத்தைகளைப் பலவிடத்து உற்றுநோக்கவும் உதவுகின்றன.

இவ்வுற்றுநோக்கலின் பயனாக ஆசிரியப் பயிற்சியில் மற்றொரு சிறப்பான பாடமாகிய **கல்வி மனநூலை** அநுபவ ரீதியாகக் கற்கவும், மாணவர்களின் நடத்தைப் பிரச்சினையைத் தீர்க்க மனநூல் ஆராய்ச்சிகளைப் பயன் படுத்தவும் இயலுகிறது. ஆகவே, பாடத்திட்டம் அமைத்துக் காட்டியிருக்கும் மேலே விவரித்துள்ள பயிற்சிகள் பயிற்சியாளருக்குப் பலவகையில் இன்றியமையாதவை என்பதைத் தெளிவாய் அறியவேண்டும்.

இவ்வரிய பயிற்சிகளில் மாணவ ஆசிரியர்கள் முழு மனத்துடன் ஈடுபடவேண்டும். ஒவ்வொரு சிறிய நுட்பத்தையும் கவனமாகவும் நிதானமாகவும் உற்றுநோக்கி, உற்றுநோக்கியவற்றைத் திருத்தமாய்க் குறித்துப் பின், வகுப்பில் மற்றவருடன் சர்ச்சைசெய்து ஒவ்வொரு செய்தியையும் கற்கவேண்டும்.

1-A. ஓர் ஆதாரப் பள்ளிக்கான இடமும் சாதனங்களும்

நாம் மேற்கொண்ட கல்வித்திட்டத்தின் நோக்கம் எளிதில், விரைவாய், இன்பமாய், வெற்றிகரமாய் நிறைவேற, அதாவது ஆசிரியர்கள், ஆதாரக் கல்வியை முறைப்படி பயிற்றவும், மாணவர்கள் வாழ்க்கைச் செயல் மூலம் கற்கவும் பொருத்தமான ஓரிடமும் (நிலமும்), தகுந்த போதுமான கட்டடமும், போதுமான குறைந்த அளவு சாதனங்களும் தேவையல்லவா? அவற்றையெல்லாம் பற்றி அரசினர், மிகக் குறைந்த அளவுத் தேவைகளை நிர்ணயித்துள்ளனர்.

ஏற்கெனவே ஆரம்பப் பள்ளிகள் நடந்துவருகின்றன. அவற்றிற்கான பல அளவுகள் அரசினரிடம் இருக்கின்றன. அவ்வளவுகள் பல ஆண்டுகளில், பல நாடுகளில் அநுபவத்தின்பேரில் நடந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் நம் மாநிலத்திற்கெனத் தனியாய் நிர்ணயிக்கப்பட்டுள்ளவை. ஒவ்வோர் அளவும் மன நூல், உடல் நூல், குழு நூல் ஆகியவற்றின் தேவைகளையொட்டி நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஆதாரப் பள்ளிக்கான **இடத்தைத்** தேர்ந்தெடுப்பதிலும், தகுந்த **கட்டடத்தைக்** கட்டுவதிலும், பள்ளிக்கு இன்றியமையாத **சாதனங்களைத்** திரட்டுவதிலும் அவ்வளவுகள் வழிகாட்டியாயிருக்கும்.

ஆதாரப் பள்ளிகளுக்கும் சில அளவுகளை அரசினர் வெளியிட்டுள்ளனர். அவற்றின் தத்துவங்களையும்,

கருத்துக்களையும்பற்றிப் படிக்கு முன்னர் அண்டையி லுள்ள பள்ளிகள் சிலவற்றிற்கு நேரடியாகச் சென்று, ஒவ்வோர் உறுப்பையும் உற்றுநோக்கிக் குறிப்பு எடுத்துவருவது நம் வேலையை எளிதாக்குவதோடு அரசினர் நிர்ணயித்துள்ள அளவுகளின் பொருளையும், அவற்றைப் பின்பற்றவேண்டியதன் அவசியத்தையும் தெளிவாக்கும். பட்டறிவு வாயிலாகக் கற்பதே சிறந்த முறையன்றோ? புரட்சிமிக்க சிலவற்றிற்கு இன்னும் அளவுகள் நிர்ணயிக்கப்படவில்லை. (உ-ம். வர்தா கக்கூசு) பட்டறிவின்பேரில் அவையும் சீக்கிரத்தில் நிர்ணயிக் கப்படும். ஆகவே மேலே குறித்த மூன்று அம்சங்களையும் உற்றுநோக்கத் தொடங்குமுன் ஆதாரக் கல்வியின் ஒன்றற்கொன்று தொடர்புகொண்ட இரு அடிப்படை நோக்கங்களை நாம் நினைவுறுத்திக்கொள்வது நலம்.

அந் நோக்கங்களாவன:

1. இந்தியாவில் வாழுகின்ற எல்லாக் குழந்தை களும் ஒரு புதிய சமுதாயத்தின் நற்குடிகளாக வளர வேண்டும். ஆதாரக் கல்வித்திட்டம் கருதுகிறபடி அப்புதிய சமுதாய மக்கள் தங்களுடைய கடமைகளை யும் உரிமைகளையும் உணர்ந்து, கூட்டுறவு முறையில் வேலைசெய்யவேண்டும்.

2. ஒவ்வொரு குழந்தையின் உடல், உள்ள, ஆன்ம ஆற்றல்கள் அத்தனையும் ஒருங்கே சீரான முறை யில் வளர்ச்சியுறுவதற்கு எல்லா வாய்ப்புக்களையும் அளிக்கவேண்டும். அவற்றின்மூலம் தன்னம்பிக்கை யும், ஆரோக்கியமும், பண்பாடும் உள்ள வாழ்க்கை உண்டாகவேண்டும். அவ்வகை வாழ்க்கையிலுள்ள

சமூக அறவழிக் கருத்துக்களை ஒவ்வொருவரும் தெளிவாக உணரவேண்டும்.

மேற்குறித்துள்ள நோக்கங்களை முற்றிலும் நிறைவேற்ற, குறைந்தபட்சம் எட்டு ஆண்டுகள் பிடிக்கும் எனப் பட்டறிவுவாயிலாகக் கணக்கிட்டுள்ளனர். கற்க வேண்டியவற்றைப் பாடஞ் சொல்லிக் கற்பிக்காமல் பிள்ளைகளை நேரடியாகச் செயல்களில் ஈடுபடுத்தி, நேர்முகப் பட்டறிவுவாயிலாகக் கற்பிக்க வகைசெய்துள்ளனர். அதற்கென வேலைத்திட்டங்கள் சில அமைத்திருக்கிறார்கள். வேலைகளைச் செய்யும்போது கிடைக்கும் அறிவுதான் பாடமாகும். வாழ்க்கையை வாழ்ந்து, வாழ்க்கை மூலம் கற்பதே உண்மைக் கல்வி; உரம் தரும் கல்வியாகும் என்ற அடிப்படையில் அவ்வேலைத் திட்டத்தில் ஐந்து வேலைகளைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அவ்வைந்தும் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. அவை கல்விபயிற்றச் சிறந்த வாய்ப்புப் படைத்தவை என்று கண்டறிந்துள்ளனர்.

அவற்றை நடுநாயக இயக்கமாக வைத்து வேலைத் திட்டத்தை அமைத்திருக்கிறார்கள். வகுப்புவாரியான பாடத்திட்டச் செய்தி முழுவதையும் அவற்றின் மூலமே கற்பிக்கலாம்.

அவ்வேலைகளாவன:

1. துப்புரவுடனும் உடல்நலத்துடனும் வாழப் பயிற்சி.
2. தன்னம்பிக்கை பெறும் பயிற்சி.
3. ஆக்க ஆதாரத் தொழில் பயிற்சி.

4. நற்குடிப் பயிற்சி.

5. கிளர்ச்சியாக்க வேலைகள், கலை நிகழ்ச்சிகளில் பயிற்சி.

ஆதாரப் பள்ளி வேலைகளையும், தேவைகளையும் இந்த நோக்கிலிருந்து பார்க்கவேண்டும். அதை மறக்கக் கூடாது.

ஆதாரப் பள்ளிக்கான இடம் (நிலமுள்பட) கட்டடம், தோட்டம், விளையாட்டிடம்பற்றிப் பின்வரும் உட்பகுதிகளைத் தனித்தனியாகக் கவனிப்பது பயன் தரும்.

பள்ளி (i) இடம்:

1. ஊர் மையம்.
2. அமைதி, நாற்றமின்மை, மக்கள் நெருக்கடியில்லாத சூழ்நிலை.
3. உடல்நலத்தைக் கெடுக்காத தன்மை.
4. இன்பகரமான சூழ்நிலை.

(ii) நிலம்:

1. கெட்டி மண்.
2. உயர்ந்த தாக்கு (இடம்), வடிகால் வசதி.
3. ஈரம் காக்காத தன்மை.
4. முள், பூச்சி முதலியவற்றால் அபாயமின்மை.

பள்ளிக் கட்டடம்:

1. எல்லா ஜாதியினரும் வந்து படிக்கும் வசதி.

2. சுகாதார வசதிகள்

- (a) போதுமான தன்மை
  - பிள்ளைகளுக்கு
  - ஆசிரியர்களுக்கு
  - தொழில்வேலைக்கு
  - பள்ளி மருத்துவச் சாலைக்கு
  - பள்ளி நண்பகல் உணவுத் திட்ட வேலைக்கு
  - கலை நிகழ்ச்சிகளுக்கு
  - நூல் நிலையத்திற்கு
  - பொருட்காட்சிக்கு
- (b) கட்டடப் பொருத்தம்
  - வேலைக்குப் பொருத்தம்
  - தரைப் ,,
  - அறைப் ,,
  - கூரைப் ,,
  - தாழ்வாரப் ,,
  - வடிவ அமைப்புப் ,,
- (c) வெளிச்சம்
  - சன்னல்
  - வாயில் வழிகள்
  - கூரையில் கண்ணாடி அமைப்பு
- (d) காற்றோட்டம்
  - சன்னல்கள்
  - உஷ்ணக் காற்றுப் போக்கி
- (e) குடி நீர் வசதி — தூய்மை
- (f) குப்பைக் குழி — போதுமான அளவு
- (g) சிறுநீர்க் குழி
  1. ஆதாரக் கல்விக் குறிக்கோள்களுக்கு ஏற்றவை
  2. போதுமான தன்மை
- (h) மலக் குழி — ஷை ஷை

(i) விளையாட்டிடம்
1. அண்மை
2. போதுமான தன்மை
3. பொருத்தமானது
4. குடி நீர் வசதி

(j) தோட்டம்
1. போதுமான தன்மை
2. அண்மை
3. பாதுகாப்புச் சுற்றுச் சுவர்
4. நீர் வசதி

இவற்றைத் தனித்தனியாக இனிக் கவனிப்போம்.

(i) பள்ளி இடம் :

பள்ளி கட்ட இடம் தேர்ந்தெடுக்கும்போது உற்றுநோக்கவேண்டியவைபற்றிக் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்.

1. இடம் ஊரில் மையமாக இருக்கிறதா?

2. அது வண்டிப்போக்குவரத்து மிகுந்த சாலைக்கருகில் இருக்கிறதா? அபாயம் நிறைந்த இரயில் பாதை அருகில் இருக்கிறதா? அல்லது சப்தமும், மக்கள் நெருக்கமுமுள்ள பெரிய கடைத்தெருவில் இருக்கிறதா?

3. மிகுந்த சப்தம் விளைவிக்கும் மாவு, நெல்லரைக்கும் யந்திரம், மின்பொறி, கொல்லன் பட்டறை, கருமான் பட்டறை இவற்றுக்கருகில் இருக்கிறதா? கூச்சல் மிகுந்த சந்தை கூடுமிடத்தருகில் இருக்கிறதா ?

4. நாளெல்லாம் இரவு பகலாகக் கரிப்புகையை வானத்தில் கக்கிச் சுற்றுப்புறத்திலுள்ள தூய காற்றைக் கெடுக்கும் பெரிய தொழிற்சாலைகளுக்கருகில் இருக்கிறதா? காளவாய், சுடுகாடு அருகில் இருக்கிறதா?

5. துர்நாற்றம் வீசும் தோல் பதனிடும் தொழிற் சாலைக் கிடங்குகள், குளம் குட்டைகள், சாக்கடைகள் முதலியன அதன் அருகில் இருக்கின்றனவா?

6. தேவையானல் பிற்காலத்தில் பள்ளியைப் பெரிதாக்கி விஸ்தரிக்க வசதியிருக்கிறதா ?

7. தோட்டம், விளையாட்டிடம் ஆகியவற்றிற்கு இடம் போதுமா ? ஆசிரியர்க்கு வீடு கட்டத் திட்டம் ஏற்பட்டால் அதற்குப் போதிய இடம் இருக்கிறதா?

8. பள்ளிக்கூடக் கட்டடத்திற்குத் தேவையான வெளிச்சத்தையும் காற்ரேட்டத்தையும் தடுக்கும் உயர்ந்த மதில்கள், மரங்கள், கட்டடங்கள் அருகில் உள்ளனவா?

9. உற்றுநோக்கும் பள்ளிகளில் இடத்தைத் தேர்ந் தெடுத்திருப்பது பொருத்தமாயிருக்கிறதா? இல்லை யானல், அதிலுள்ள குறைபாடுகள் யாவை?

10. தவிர்க்கமுடியாத அக்குறைபாடுகளை ஒவ்வொரு பள்ளியும் எவ்வாறு சமாளிக்கிறது?

(ii) பள்ளி நிலம் :

நிலத்தை உற்றுநோக்கி, அதன் தகுதியைத் தெரிந்துகொள்ளப் பின்வரும் வினக்கள் உதவும்.

1. பள்ளத்தாக்கான நிலமா?

2. பாழாய்க் கிடந்த குளம், குட்டைகளைப் புது மண்ணாலும் குப்பையாலும் நிரப்பி மட்டமாக்கப் பட்டதா?

3. ஏரி, மலை ஓரம், ஆற்ரேரம் அமைந்து, ஈரம் காக்கும் நிலமா?

4. முட்புதர்கள் அடர்ந்த நிலமா?

5. நிலத்தில் கிணறு வெட்ட வசதி இருக்கிறதா?

6. உற்றுநோக்கிய பள்ளி நிலத்தின் தன்மை திருப்திகரமாயிருக்கிறதா?

7. குறைபாடுகள் இருந்தால் அவை யாவை? அவற்றைப் பள்ளி ஆசிரியர்கள் எவ்வாறு சமாளிக்கிறார்கள்?

ஆதாரப் பள்ளி ஒன்றைக் கட்டப் பாங்குள்ள இடத்தைத் தேர்ந்தெடுப்பதில், இடம் ஊர்மையத்திலிருக்கும் தன்மையை மட்டுமே கருதாமல் அதன் சூழ்நிலை, அஃதாவது அமைதி, நாற்றமின்மை, மக்கள் நெருக்கடியின்மை, போக்குவரத்து நெருக்கடியின்மை, மாணவர்களின் உடல்நலம் பாதிக்கப்படா வகை ஆகிய ஒவ்வொன்றையும் கவனிக்கவேண்டும்.

பின்பு விஸ்தரிக்கவேண்டியிருந்தால், அதற்குப் போதுமான இட வசதியும் இருத்தல் சிறந்தது.

நிலத்தை ஆராய்வதில் ஈரம் காக்காத உயரத்தில் இருக்கும் தன்மை, மழை நீர் வழிந்தோடும் வடிகால் வசதி, கட்டடம் கட்டத் தகுதியுள்ள கெட்டிப்பட்ட மண், பூச்சி புழுக்களால் அபாயமும் உடல்நலக் கேடும் வராமை ஆகியவற்றைக் கவனிக்கவேண்டும்.

ஈரம் காக்கும் தரையாயிருந்தால் சிறுவர்களுக்கு நோய் எளிதில் தொற்றக்கூடும். பெரியவர்களைவிடச் சிறுவர்களை நோய் எளிதில் தொற்றுமாதலால் இந்த விஷயத்தில் தனிக் கவனம் செலுத்தவேண்டும்.

பள்ளிக் கட்டடம்

1. எல்லா ஜாதியினரும் வந்து படிக்கும் வசதி :

பள்ளிக்கூடக் கட்டடம்பற்றி முதன்முதல் சிந்திக்க வேண்டியது, அது 'எல்லா ஜாதிக் குழந்தைகளும் அங்கு வந்து படிக்கும் வசதி அளிக்கிறதா' என்பதே.

பல நூற்ருண்டுகளாகத் 'தீண்டாமை' என்னும் கொடிய அநாகரிகப் பழக்கத்தை நம் இந்திய நாடு பின்பற்றிவருகிறது. அதன் விளைவாய்த் தீண்டாதோர் குழந்தைகளைச் சில பள்ளிகளில் ஏதோ சாக்குப்போக்குக் கூறிச் சேர்த்துக்கொள்வதில்லை. அரசினர் பணவுதவி பெறும் ஒரு பள்ளி இந்தியக் குடிகளாகிய அவர்களை அப்படி ஒதுக்குவது முறையன்று. எனவே, அதனைக் கண்டிக்க அரசினர் சில விதிகளை இயற்றி யுள்ளனர். நடைமுறையில் இதைப்பற்றி உற்று நோக்குங்கால் கீழ்க்கண்ட வினுக்கள் உதவும்.

1. பள்ளிக் கட்டடம் எங்கிருக்கிறது? (பிராமணர் தெரு, வேளாளர் தெரு, ஊருக்கு வெளிப்புறம்)

2. அங்கு ஹரிஜன மாணவர்களும், தீண்டாதோர் குழந்தைகளும் படிக்கின்றனரா?

3. வகுப்புவாரியாக ஆண், பெண் தனித்தனியாக எத்தனை குழந்தைகள் படிக்கின்றனர்?

4. அக்குழந்தைகள் நாள்தோறும் பள்ளிக்கு வரு கின்றனரா? அல்லது அவர்களது பெயர்கள் பெயரளவில் பள்ளிப் பட்டியல்களில் வைக்கப்பட்டிருக்கின்றனவா? பள்ளி ஆய்வாளர் தணிக்கைக்காக வரும் நாட்களில்மட்டும் அழைக்கப்படுகிருர்களா?

5. அக்குழந்தைகள் தனியாய் உட்காரவைக்கப்படுகின்றனரா? மற்ற குழந்தைகளோடு சேர்த்து உட்கார வைக்கப்படுகிறார்களா?

6. ஹரிஜனக் குழந்தைகளே பள்ளியில் இல்லாவிடில், அருகில் சேரியே இல்லையா?

7. அவர்களுக்காகத் தனிப் பள்ளி ஏதேனும் அருகில் இருக்கிறதா?

8. அருகிலுள்ள சேரி எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?

இந்திய அரசியல் சாசனப்படி ஆண், பெண்; சாதி, மதம்; பணக்காரன், ஏழை என்ற எவ்வகை வேறுபாடுமின்றி நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி பெறும் சம வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவேதான் அங்கீகாரத்துடன் அரசினரின் பண உதவி பெறும் ஒவ்வொரு பள்ளியிலும் தீண்டாதோர் என ஒதுக்கப்பட்ட சாதியினரின் குழந்தைகளுக்கு ஒருவகைத் தடையுமின்றி இடமளிப்பது இன்றியமையாததாகும். ஒரு பள்ளியில் தீண்டாதோர் குழந்தைகள் ஒன்றுகூடப் படிக்கவில்லை யென்றால் அப்பள்ளி தீண்டாமைக் கொள்கையை ஆதரிக்கும் பள்ளி என முடிவுசெய்யப்பட்டு அதன் அங்கீகாரத்தையே ரத்துசெய்யலாம். இதற்கு விதிகள் இடம் கொடுக்கின்றன.

அருகில், அதாவது **ஒரு மைல் வட்டாரத்தில்** தீண்டாதோர் வாழும் சேரி யாதொன்றுமில்லை எனப் பள்ளி நிர்வாகி நிரூபித்தால்தான் பள்ளியின் அங்கீகாரம் ரத்தாகாது; அல்லது அருகில் ஹரிஜனப் பள்ளி ஒன்று இருக்கவேண்டும்.

தீண்டாமையை அறவே ஒழிக்க மத்திய அரசாங்கத்தினர் அண்மையில் ஒரு புதுச் சட்டம் பிறப்பித்திருக்கிறார்கள். அச்சட்டப்படி தீண்டாதோர் எனப் படுபவர் ஒருவருமிலர். ஆனால் தன்னைப் பிறர் தீண்டக் கூடாது என்று யாராவது சொன்னால், அவரது அச் செய்கை ஒரு பெருங் குற்றமாகக் கருதப்படும். அதற்குத் தண்டனையாகச் சிறைவாசம் கிடைக்கும்.

எனவே, எப்பள்ளியிலும் அருகில் ஒரு மைல் தூரத்திற்குள் சேரி இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு மைல் தூரத்திற்குள் ஹரிஜனக் குழந்தைகளுக் கென்ற தனிப் பள்ளி ஒன்று இருந்தாலும் இல்லா விட்டாலும் தீண்டாதோர் குழந்தை ஒன்று பள்ளியில் சேர்ந்து படிக்க விரும்பினால் அதற்கு இடம் தர மறுக்கக் கூடாது.

2. சுகாதார வழிகள்— (a) போதுமான தன்மை

கட்டடம் போதுமா, போதாதா என்று உற்று நோக்கப் பின் கண்ட வினாக்கள் உதவும்.

1. பள்ளியில் படிக்கும் எல்லாச் சிறுவர்களுக்கும் இட வசதி போதுமா?

2. இட வசதி போதும், போதாது என்று எவ்வாறு கணக்கிடுகிறார்கள்?

3. ஆசிரியர்களுக்குத் தனி அறை ஒன்று இருக்கிறதா?

4. ஆதாரத் தொழில் கருவிகள், பருத்தி முதலியவற்றை வைக்க ஒரு சரக்கு அறை உள்ளதா? அது போதுமா?

5. பள்ளி – மருத்துவச்சாலை இருக்கிறதா? அதற்கு இட வசதி போதுமா?

6. பள்ளியில் நண்பகல் உணவளிப்புத் திட்டமிருந்தால் சமையலறை பள்ளியின் அருகில் இருக்கிறதா? அது போதுமா? சுத்தமாயிருக்கிறதா?

7. பள்ளி நூல்நிலையம், பொருட்காட்சி ஆகியவற்றிற்கு இட வசதி போதுமா?

கற்றல் வேலை குறைபாடின்றிச் செவ்வனே நடக்க வேண்டுமானால் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு, அவர்களது அன்றாடத் தேவைகளுக்கும் விசேஷத் தேவைகளுக்கும் ஏற்றவாறு இட வசதி அளிக்க வேண்டுமல்லவா? பல மாணவர்கள் சேர்ந்து ஐந்து, ஆறு மணி நேரத்தைப் பள்ளியில் செலவிடுகிறார்கள். அவ்வாறு நீண்ட நேரம் பலர் கூடிப் பயிலுங்கால் தொற்றுநோய் ஒருவருக்கு வருமானால் அது எளிதில் மற்றவர்களைத் தொற்றும். சிறுவர்களின் இளமைப் பருவத்தில் எளிதில் நோய்க்குள்ளாகும் தன்மை அந்நோய் பீடிக்கவும், பரவவும் பெரிதும் உதவுகிறது. தவிர, அனைவரும் கூடி வேலைசெய்யப் போதுமான இட வசதி தேவை.

எனவே, உடல்நலப் பாதுகாப்பிற்கான அடிப்படை விஷயங்களை அங்கு அமைக்காவிடின் அவர்களது உடல்நலம் கெடும். ஆகவே, நலங் கெடாத வாழ்விற்கு இன்றியமையாத, மாணவ எண்ணிக்கைக்கு ஏற்ற **போதுமான இடம், சூரிய வெளிச்சம், காற்று** ஆகிய மூன்றும் ஆதாரப் பள்ளிக்கான கட்டட அமைப்பில் முதலிடம் பெறவேண்டும்.

உடல்நல அடிப்படையிலும், மன நூல் அடிப்படையிலும் அநுபவ ரீதியாக ஒவ்வொரு வகைப் பள்ளியில் படிக்கும் மாணவனுக்கும் கீழே குறித்திருக்கும் குறைந்தபட்ச தரைப் பரப்புத் தேவை என நிர்ணயித்திருக்கிறார்கள்.

ஓர் ஆரம்பப் பள்ளி மாணவன் $9\frac{1}{2}$ ச. அடி

ஓர் உயர்தரப் பள்ளி மாணவன் $11\frac{1}{2}$ ச. அடி

[I—VI படிவம்]

ஓர் ஆதாரப் பள்ளி மாணவன் 15 ச. அடி

[I—VIII வகுப்புகள்]

ஒரு மாணவனுக்குத் தேவையான சராசரி தரைப் பரப்பிடத்தை ஒரு பள்ளியிடம் (School place) எனச் சொல்வது மரபு. இதன்படி அறுபது குழந்தைகள் கொண்ட ஓர் ஆதாரப் பள்ளிக்குத் தேவையான குறைந்த பட்ச பள்ளியின் பரப்பளவு $= 60 \times 15 = 900$ சதுர அடி ஆகும்.

ஆதாரப் பள்ளி மாணவன் ராட்டை முதலிய நூற்புக் கருவிகளை நாள்தோறும் உபயோகிக்கவேண்டியிருப்பதாலும், தொழில்களில் ஈடுபடவேண்டியிருப்பதாலும், குழுக் குழுவாக வேலைசெய்யவேண்டியிருப்பதாலும் அதிக இடம் தேவைப்படுகிறது.

பள்ளியிடம் கணக்கிடுவதில் நடைபாதைகள், குறுகிய தாழ்வாரம் ஆகியவற்றின் பரப்பைச் சேர்க்கக் கூடாது.

ஆதாரப் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கெனத் தனி அறை ஒன்று இருப்பதில்லை. பள்ளிக்குள் நுழைந்தது முதல் வெளியே போகும் வரை அவர் மாணவர்களோடு

வேலைசெய்யவேண்டியிருக்கிறது. மாணவர்கள் விளையாடப் போனாலும், தோட்ட வேலைக்குப் போனாலும், கல்விப் பயணம் போனாலும் அவர்களுடன் கூடவே போகவேண்டியிருக்கிறது. ஏதாவது இடை நேரம் அவருக்கு இருந்தால் வகுப்பிலேயேதான் உட்கார்ந்திருக்கவேண்டியிருக்கிறது. எனினும், ஆதரிச ஆதாரப் பள்ளியில் ஆசிரியர்களுக்கென ஒரு தனி அறை இருப்பது சிறந்தது. அரசினர் வெளியிட்டுள்ள ஸீனியர் ஆதாரப் பள்ளிக்கான பிளானில் ஆசிரியர்களுக்கெனத் தனி அறை ஒன்றிற்கு இடம் உள்ளது.

ஆதாரப் பள்ளியில் ஓர் ஆதாரத் தொழில் மூல மாகக் கல்வி கற்பிக்கப்படுகிறது அல்லவா? அத்தொழில்

நூற்பும், நெசவும்

தோட்ட வேலையும், விவசாயமும்

தச்சு வேலையும், கொல்லத் தொழிலும்

என்ற மூன்றில் ஒன்ருக இருத்தல்கூடும். எதை ஆதாரத் தொழிலாகத் தேர்ந்தெடுத்தாலும் முதல் இரண்டும் சட்டாயமாக முதல் ஐந்து வகுப்புக்களில் கற்றுக்கொடுக்கப்படவேண்டும் எனப் பாடத்திட்டம் வற்புறுத்துகிறது. ஆகையால், ஆதாரத் தொழிலுக் கான மூலப் பொருள்கள், கருவிகள் எல்லாம் தேவை அல்லவா? (உதாரணமாகப் பருத்தி, பஞ்சு, ராட்டை, வீசனம், தோட்ட வேலைக் கருவிகள் முதலியன.) அவற்றையும், தொழிலிலிருந்து கிடைக்கும் உற்பத்திப் பொருள்கள், உப பொருள்கள், கழிவுப் பொருள்கள் ஆகியவற்றையும் பத்திரப்படுத்த ஒன்றிரண்டு அறை கள் ஒவ்வொரு ஆதாரப் பள்ளிக்கும் இன்றியமை

யாதவை. அதற்குச் சரக்கு அறை எனப் பெயர். சரக்கு அறை இல்லாத பள்ளியில் விலையுயர்ந்த பொருள்களுக்கு நஷ்டம் ஏற்படுவதுடன் கருவிகளால் மாணவர்களுக்கு ஆபத்தும் நேரிடக்கூடும். எனவே, அரசினர் தயாரித்துள்ள ஆதாரப் பள்ளிப் பிளான்கள் ஒவ்வொன்றிலும் சரக்கு அறைக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கருவிகளையும், கச்சாப் பொருள்களையும், பிற பொருள்களையும் கலையாக அதற்குள் வைக்கப் போதிய வசதிகள் அமைத்துக்கொள்ளவேண்டும். சரக்கு அறையிலிருந்து பொருள்களை அடிக்கடி எடுத்து மாணவர்களுக்கு வழங்கவேண்டியிருக்கும். ஆகையால், பொருள்கள் ஒழுங்காயிருக்கவேண்டும்.

ஆதரிச ஆதாரப் பள்ளியில் ஒரு **மருத்துவச் சாலையும், நண்பகல் உணவளிப்புத் திட்டமும்** இருப்பது மாணவர்களுக்குப் பட்டறிவு கொடுப்பதற்கும், சமூகப் பயிற்சி அளிப்பதற்கும் இன்றியமையாதது எனப் பாடத்திட்டம் கூறுகிறது. பெரும்பாலான ஆதாரப் பள்ளிகளில் இவை இரா. எனினும், மருத்துவச்சாலைக்கென ஒரு சிறு அறை பள்ளியிலே இருப்பது நல்லது.

நண்பகல் உணவைத் தயாரிக்க ஒரு தூய சமையலறை இருப்பது நலம். அதில் புகையில்லா **மகன் அடுப்பைப்** பயன்படுத்தவேண்டும். மகன் அடுப்பு சிக்கனம் மிகுந்தது. பெரிய ஆதாரப் பள்ளிகளில் நூல் நிலையத்திற்கும், செய்தித்தாள் படிப்பதற்கும், பொருட்காட்சிக்கும் தனி அறைகள் இருப்பது சிறந்தது. பெற்றோர்களும், பழைய மாணவர்களும் பள்ளிக்கு வந்து செய்தித்தாள் படிப்பதுடன் பள்ளியுடன்

தொடர்பு வைத்துக்கொள்ள நூல் நிலையம் பெரிதும் உதவும். சிறிய பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் ஓர் அலமாரியில் வகுப்பு நூல்நிலையம் இருக்கவேண்டும்.

முடிவாகப் போதுமான தன்மையை ஆராயுங்கால் மேற்கூறிய பல அம்சங்களை மனத்திற்கொண்டு பள்ளியைக் கட்டவேண்டும்.

(b) **கட்டடப் பொருத்தம் — வேலைக்குப் பொருத்தம்:** பள்ளிக் கட்டட அமைப்பை வேலைக்குப் பொருத்தம் என்ற கோணத்திலிருந்து உற்றுநோக்கும் போது பயிற்சியாளருக்குக் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

1. பள்ளிக் கட்டடப், பள்ளிக்காகக் கட்டப்பட்ட தனிக் கட்டடமா? அல்லது சத்திரம், மடம், கோயில், மாதாகோயில், குடியிருக்கும் வீடு, கொட்டகை போன்ற ஒன்று பள்ளியாகப் பயன்படுத்தப்படுகிறதா? பின்னதில் ஒன்றாய் இருந்தால், அதனால் ஏற்படும் இடையூறுகளும், தொல்லைகளும் யாவை? அத்தொல்லைகளை எவ்வாறு சமாளிக்கிறார்கள்?

2. பள்ளிக் கட்டடத்தின் நோக்குத் திசை எது? பருவக்காற்று மழையினால் மாணவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுகிறதா? உண்டானால் அதை எப்படிச் சமாளிக்கிறார்கள்?

3. அழகு, உடல்நலத்தை எவ்வகையிலும் பாதிக்காத தன்மை, கல்வி வேலைகளுக்குப் பொருத்தமானது என்ற மூன்று அம்சங்களையும் கட்டடம் திருப்திசெய்கிறதா? (Artistic, Hygienic and Educational point of view)

கல்வி நோக்கு, மனநூல் நோக்கு, உடல்நூல் நோக்கு, கலை நோக்கு என எந்த நோக்கிலிருந்து பார்த்தாலும் பள்ளிக் கட்டடம் பள்ளி வேலைக்கெனவே தனியாகக் கட்டப்பட்ட கட்டடமாக இருக்க வேண்டும். பிற வேலைக்காகக் கட்டப்பட்ட கட்டடம் பள்ளி வேலைக்கு உதவாது.

கட்டட நோக்குத் திசை, ராஜ்யத்திலுள்ள பல, பல இடங்களுக்கு ஏற்ப மாறுபடும். பருவக்காற்றின் வேகம், மழை, வெயில் முதலியவற்றிலிருந்து மாணவர்களைக் காக்கப் போதுமான காப்பு பள்ளியில் இருக்கச் செய்யவேண்டும் என்பதே அதன் கருத்து. பள்ளிக்குள் வரும் வெளிச்சம் வட திசையிலிருந்து வருவது சிறந்ததாகும்.

தரைப் பொருத்தம் : தரைப் பொருத்தத்தைப்பற்றி உற்றுநோக்கப் பின் கண்ட வினாக்கள் உதவும்.

1. *அறைகளின் தரைத்தளம் எதனாலானது (கருங்கல், சிமெண்டு, செங்கல், மண், மணல்)?*

2. *தரையைச் சுத்தமாக வைக்கும் முறை யாது (பெருக்குதல், மெழுகுதல், நீரால் அலம்புதல்)? துப்புரவு செய்கிறவர்கள் மாணவர்களா? பிறரா? அன்றாடம் துப்புரவு வேலை நடைபெறுகிறதா?*

3. *தரைச் சீதளம் மாணவர்களைப் பீடிக்காமலிருக்க என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது? பாய், பலகை, பெஞ்சு உபயோகப்படுகிறதா?*

பள்ளித் தரையில் நாள்தோறும் பல சிறுவர்கள் நடமாடுகிறார்கள். எனவே தரையில் புழுதி சேருவது இயல்பே. புழுதியில் நோய்க்கிருமிகள் சேரக்கூடும்.

அப்புழுதியை அவ்வப்போது பெருக்கித் திரட்ட வேண்டும். வாரமொருமுறையாவது தண்ணீர் விட்டுக் கழுவவேண்டும். ஆகவே, பள்ளியின் தரை தண்ணீர் விட்டுக் கழுவ லாயக்குள்ளதாயிருக்கவேண்டும். மண் தரையாயிருந்தால் வாரமொருமுறை சனிக்கிழமை தோறும் சாணம் இட்டு மெழுகவேண்டும். தரையில் ஈரம் காக்கவே கூடாது.

தரையின்மீது உட்காருவது சுகாதாரத்திற்கு உகந்தது அல்ல. பாய் அல்லது ஓலைத்தடுக்குகள் மீது உட்காருவது நல்லது. பாய்களையும் தடுக்குகளையும் அழுக்கில்லாதவாறு துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டும்.

தமக்குத் தேவையான ஓலைத்தடுக்குகளை மாணவர்களே முடைந்துகொள்ளலாம். அதனால் கல்விப் பயனும் உண்டு.

வகுப்பறைகளும் தனி அறைகளும்:

வகுப்பறைகள்பற்றி உற்றுநோக்கப் பின்வரும் வினாக்கள் உதவும்:

1. ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனி வகுப்பறை இருக்கிறதா? ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குப் போவது எப்படி?

2. வகுப்பறையின் நீள, அகலம் என்ன? அது மாணவர்களுக்குப் போதுமா?

3. கடைசி வரிசையிலிருக்கும் மாணவர்கள் கரும் பலகையில் எழுதியிருப்பதைக் கஷ்டமின்றிப் பார்க்கவும், ஆசிரியர் கற்பிப்பதைத் தடையின்றிக் கேட்கவும் வசதியான

அதிகபட்ச தூரம் எவ்வளவு இருக்கலாம்? அறையின் அகலம் அதிகபட்சமாக எவ்வளவு இருக்கலாம்?

4. சித்திரக் கலைக்கெனத் தனி அறை இருக்கிறதா? அதன் அமைப்பு எப்படி? அதன் நீள, அகலம் என்ன?

5. பள்ளியோடு இணைந்த சிறு மருத்துவச்சாலை இருக்கிறதா? அதன் பொறுப்பாளி யார்? என்னென்ன நோய்களுக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது? எளிய நாட்டுமருந்துகள் அங்கு உபயோகிக்கப்படுகின்றனவா? பள்ளித் தோட்டத்தில் மூலிகைச் செடிகள் உள்ளனவா? பள்ளி மாணவர்கள் அங்கு உதவிபுரிகிறார்களா? பள்ளியில் மருத்துவச்சாலை இல்லாவிடில், அருகில் கிராம மருத்துவச் சாலை உள்ளதா? அதில் மாணவர்கள் பயிற்சி பெறுகிறார்களா?

6. நண்பகல் உணவு தயாரிக்கும் சமையலறை இருக்கிறதா? அல்லது வேறிடத்தில் சமையல் நடக்கிறதா? தினசரி உணவு என்ன? உணவுத் திட்டம் என்ன? (அளவு, உண்ணும் நேரம், பரிமாறும் முறை, மாதச் செலவு, திங்கள்தோறும் வளர்ச்சி முன்னேற்றங் காணல், எடை, உயரம், மார்பளவு எடுக்கப்படுவது) சமைப்பது யார்? செலவுக்கான பணம் எங்கிருந்து கிடைக்கிறது? (நிர்வாகிகள், பெற்றோர்கள், அரசினர், வெளியோர்) மாணவர்கள் நாடகம் நடத்திப் பணம் வசூலித்துக் கொடுக்கிறார்களா? சமையலறையும் உண்ணுமிடமும் சுத்தமாய் இருக்கின்றனவா?

ஒரு வகுப்பில் 30 மாணவர்கள் இருந்தால் அவர்களுக்கு $30 \times 15 = 450$ சதுர அடிப் பரப்பு தேவையல்லவா? ஆகையால் வகுப்பறையின் நீள, அகலம் பின்வருமாறு இருக்கலாம்:

$$24' \times 19' = 456$$
$$24' \times 18' = 432$$
$$23' \times 20' = 460$$
$$22' \times 21' = 462$$
$$21' \times 20' = 420$$

ஆனால் நீளம் 24 அடிக்கு மேற்பட்டால் கரும்பலகையில் எழுதியிருப்பதைக் கடைசி வரிசையிலிருக்கும் மாணவர்கள் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது; ஆசிரியர் பேசுவதைக் கேட்கவும் முடியாது. தவிர, அகலம் அதிகமாக அதிகமாகக் கட்டடம் கட்டுவது கஷ்டமாகும். ஏனென்றால், அவ்வகலத்திற்குப் பொருத்தமான தூலங்கள் கிடைப்பது அரிதாகும். எனவே வகுப்பறை 24' அல்லது 23' அடி நீளம், 18' அல்லது 19' அகலத்திற்கு மேற்படாமல் இருக்கவேண்டும்.

அரசினர் வெளியிட்டுள்ள வகுப்பறையின் நீள, அகலம் 25', 14' ஆக உள்ளன.

வகுப்பறைகளை நடைபாதையாக உபயோகப் படுத்தக்கூடாது. அறைக் கதவுகள் வெளிப்புறமாகத் திறக்குமாறு அமைக்கப்படவேண்டும். வெளிப்புறத்தில் தாழ்வாரமொன்று இருக்கவேண்டும். ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குப் போகவேண்டுமானால் அத் தாழ்வாரத்தை உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு வகுப்பறைக்கும் ஒரே வாயில் போதுமானது. அதுவும் ஆசிரியர் அமரும் பக்கத்தில் இருத்தல் நலம். கலைஅறை, மருத்துவச்சாலை, சமையல் அறை முதலியவற்றிற்குத் தனி அளவுகள் தேவைப்படும். அவ்வளவுகள் அங்கு நடைபெறும் வேலையின் தன்மைக்கும்

அததில் வேலைசெய்யக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கைக்கும் ஏற்றவாறு அமையவேண்டும்.

கூரை : கூரையைப்பற்றி அறியப் பின் கண்ட வினக்கள் உதவும்.

1. கூரை மட்ட தளமா, மேல் மாடியுள்ளதா அல்லது சாய்ந்த மேற்கூரையுள்ளதா ?

2. மட்ட தளமானல் அதனடிப்புறத்தின் உயரம் என்ன ?

3. சாய்ந்த மேற்கூரையானல் அதனடிப்பாகத்தின் உயரம் என்ன ?

4. கூரையில் ஒழுக்கு இருக்கிறதா ?

5. கூரையில் பூச்சி சேர வழி இருக்கிறதா ?

6. வெயிலின் கொடுமையைக் கூரை நன்ருகத் தடுக்கிறதா ?

7. கூரைக்கு நெருப்பினல் உள்ள அபாயத்தைத் தடுக்க என்ன வழி ?

கூரை மட்ட தளமாயிருப்பது சிறந்தது; அல்லது நாட்டு ஓடுகளால் மூடப்பட்டிருக்கலாம். மங்களூர் ஓடு கூரைக்கு அழகாயிருக்கும். ஆனல் அது சூரிய வெப்பத்தை உட்செலுத்தும் பண்புள்ளது. அஸ்பெஸ்டாஸ் தகடுகள், துத்தநாகத் தகடுகளால் ஆன கூரை பள்ளிகளுக்குப் பொருத்தமானவை அல்ல. அவையும் சூரிய வெப்பத்தை மிகுதியாய் உட்செலுத்தும் தன்மையுடையவை.

தென்னை ஓலை, பனை ஓலையால் ஆன கூரையாயிருந்தால் வைக்கோல் அல்லது மலை மஞ்சு வேய்ந்திருந்

தால் உள்ளே சூரிய வெப்பம் வராது. ஆனால் ஓலைக் கூரைக்கு நெருப்பினால் அபாயம் உண்டு. கிராமங்களில் உள்ள பெரும்பாலான வீடுகள் ஓலைக்கூரையாலானவையே. அவற்றிற்குத் தீயினால் ஆபத்து உண்டு; காற்றினாலும் ஏற்படக்கூடிய சேதமும் தவிர்க்க முடியாததுதான். தவிர உட்புறம் ஒட்டடையால் புழு, பூச்சி சேர வழியுமுண்டு. ஆகவே, ஓலைக்கூரை சிறந்ததன்று.

கூரையின் உயரத்தைப்பற்றிய அளவுகள் மிக முக்கியமானவை. அவை பின்வருமாறு :

(1) மட்ட தளமாயிருந்தால் அதன் அடிப்பாகம் 12 அடிக்குக் குறையக்கூடாது.

(2) சாய்ந்த கூரையாயிருந்தால் 10 அடிக்குக் குறையக்கூடாது.

உயர்தரப் பள்ளிகளுக்கு இவ்வளவுடன் முறையே இரண்டடி கூடுதலாக இருக்கவேண்டும்.

தாழ்வாரம் : தாழ்வாரத்தைப்பற்றி அறியக் கீழ்க் கண்ட வினாக்கள் உதவும்.

1. தாழ்வாரம் இருக்கிறதா ? எங்கு ? அதற்கு மேற்கூரை இருக்கிறதா ?

2. அதன் அகலம் என்ன ?

3. அதற்கு வெளியடைப்பு இருக்கிறதா ?

4. அங்கு வகுப்பு நடத்துகிறார்களா ?

5. தாழ்வாரம் அமைத்திருப்பதன் நோக்கம் யாது (சூரிய ஒளியைத் தடுக்க, வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குப் போக வழியாக உதவ) ?

எந்தச் சிறந்த தாழ்வாரமும் வகுப்பு வேலைக்குப் பயன்படாது. அங்கு வகுப்பு நடந்தால் காற்று, மழை, வெப்பம், அதிக வெளிச்சம் முதலியவற்றால் கற்றல் வேலைகள் பாதிக்கப்படும்.

ஆகையால் வகுப்பறையில் அதிக வெளிச்சத்தைக் குறைக்கவே தாழ்வாரம் பயன்படவேண்டும். தவிர ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குப் போகவும் அது பயன்படும். வகுப்பு வேலைக்கு அது உதவாது. அதனாலேயே பள்ளியிலுள்ள பள்ளி இடம் கணக்கிடும் போது தாழ்வாரப் பரப்பைத் தள்ளிவிடுவது வழக்கம்.

வகுப்பறையின் இருபுறமும் தாழ்வாரம் இருப்பது சாலச்சிறந்தது.

கட்டட வடிவ அமைப்பு : கட்டட வடிவ அமைப்பைப்பற்றி அறியக் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

1. கட்டடத்தின் வடிவ உருவம் என்ன? (H, E, ⊓)

2. கட்டடம் அழகாயிருக்கிறதா ?

கட்டடம் பார்வைக்கு அழகாய் இருக்கவேண்டும். பள்ளியானது ஊருக்கே சமூக கேந்திரஸ்தானமாயிருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அது எளிமையாயிருந்தாலும், கட்டடத்தில் அழகம்சம் தனிக் கவர்ச்சி பெற வேண்டும்; முன்புறம் கவர்ச்சிகரமாயிருக்கவேண்டும்.

பள்ளியிலுள்ள கொடிக்கம்பம் அழகாய்க் கோபுரம் போல் நிமிர்ந்து நிற்றல்வேண்டும். நாலாபக்கமும் அது மிகுந்த தூரம் வரை தெரியவேண்டும். தோட்டமும், தோட்ட வேலியும், சுற்றுச் சுவரும், முன்னமைப்பும், பெயர்ப் பலகையும் கவர்ச்சிகரமாயிருக்கவேண்டும்.

தோற்றப் பொலிவு சிறப்பாயிருக்கவேண்டும். அந்தந்தக் கட்டடத்திற்கு ஏற்ப எவ்வளவோ செய்யலாம் என்பதை மட்டும் நினைவுறுத்துகிறோம். பள்ளியில் எங்கும், எப்பொழுதும், எதுவும் துப்புரவாயிருக்க வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை.

கட்டடத்தின் வடிவம் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாறுபடும். நேர்கோட்டு வடிவம், 'ח' வடிவம், 'H' வடிவம் 'L' வடிவம் என்ற வடிவங்களில் கட்டடம் கட்டலாம். வகுப்பறைகளின் எண்ணிக்கை பெருகப் பெருகப் பள்ளிக்கூட முழுவதற்கும் போதிய வெளிச்சமும் காற்றோட்டமும் பெறச் செய்யும் வேலை பெரும்பாடாகும். அதைச் சமாளிக்கவே மேற்கூறிய உருவங்களைப் பட்டறிவு வாயிலாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

(c) **வெளிச்சம்:** வெளிச்சம் போதுமா போதாதா என்பதுபற்றி உற்றுநோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

(1) வகுப்பறையில் வெளிச்சத்திற்கான ஏற்பாடுகள் யாவை (எத்தனை சன்னல்கள், சன்னல்களின் நீள, அகல அளவு, அவற்றின் அமைப்பு, மேற்கூரையிலுள்ள கண்ணாடி அமைப்பு)? அவ் வெளிச்சம் வெளிப்புறத்திலிருக்கக் கூடிய மரம், சுவர் முதலியவற்றால் தடைப்படுகிறதா?

(2) வகுப்பறை முழுவதும் வெளிச்சம் பரவி விழுகிறதா? வகுப்பறைக்கு வரும் வெளிச்சம் மாணவர்களின் கண்களுக்கு அநுகூலமாயுள்ளதா? அது எந்தப் பக்கத்திலிருந்து வருகிறது? (எதிர்ப்புறமிருந்தா, வலப்புறமிருந்தா, இடப்புறமிருந்தா?)

(3) பெஞ்சு போட்டிருக்கும் அறைகளில் சன்னல்களின் அடிப்பக்கத்தின் ஓரம் தரை மட்டத்திலிருந்து எவ்வளவு அடி உயரத்திலிருக்கிறது ?

(4) பெஞ்சில்லாமல் தரைமீது மாணவர்கள் உட்காரும் பள்ளிகளில் சன்னல்களின் அடிஉயரம் தரை மட்டத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் இருக்கிறது ?

(5) சன்னல்களின் மொத்தப் பரப்பளவு எவ்வளவு?

(6) தரையின் மொத்தப் பரப்பளவு எவ்வளவு?

(7) இவ்விரண்டுக்குமுள்ள விகிதம் என்ன ?

(8) சன்னல்களே இல்லாத பள்ளியா? அப்படியானல் வெளிச்சம் பெற என்ன ஏற்பாடு இருக்கிறது ?

சன்னல்கள் இரண்டு வகைகளில் பயன்படுகின்றன :

(1) வெளிச்சத்தைத் தருகின்றன;

(2) காற்றேட்டம் ஏற்படுத்துகின்றன.

அறை முழுவதும் சீரான சமவெளிச்சம் இருப்பது அவசியமாதலால் சன்னல்களைச் சமதூரத்திலும் எதிர் எதிராகவும் அமைக்கவேண்டும். அவ்வாறு அமைக்கப்பட்ட சன்னல்கள் கட்டடத்திற்கு அழகையும் தரவல்லவை.

பெஞ்சுகள் உள்ள வகுப்பறையானல் சன்னல்களின் அடிப்புறம் தரையிலிருந்து 4 அடிக்கு மிகாமல் இருக்கவேண்டும். ஆனல் ஆதாரப் பள்ளிகளில் பெஞ்சுகளை உபயோகிப்பதில்லை. மாணவர்கள் தரைமீது அமர்கிருர்கள். எனவே, ஆதாரப் பள்ளிகளில் சன்னலின் அடிப்புறம் தரையிலிருந்து $2\frac{1}{2}$ அடி முதல் 3 அடிக்குள்

இருக்கவேண்டும். அதற்கு மேற்பட்டால் மாணவர் களின் புத்தகம் நோட்டுகளின்மீது போதிய வெளிச்சம் படாது.

வகுப்பறைத் தரைப் பரப்பிற்கும் எல்லா சன்னல்களின் மொத்தப் பரப்பிற்கும் ஒருவகைச் சம்பந்தம் உள்ளது. சன்னல்களின் பரப்பு தரைப் பரப்பில் 1/5 பாகம் இருக்கவேண்டும். வெளிச்சம் பெரும் பாலும் வடபுறத்திலிருந்தே வரவேண்டும்.

மழைத்தூறலும் நேர்வெயிலும் வகுப்பறைக்குள் படாதவாறு சன்னல்களின் வெளிப்புறமாகச் சார்ப்பு ஒன்று அமைப்பது சிறந்தது. ஆனால் வெளிச்சம் உள்ளே வருவதை அச் சார்ப்புத் தடுக்கக்கூடாது.

சில பள்ளிகளில் சன்னல்களே இரா. அங்கு வெளிச்சம் குறைவாயிருக்கும். அதனால் மாணவர்களின் கண்களுக்குத் தீங்கு விளையும். அப்படிப்பட்ட பள்ளி களுக்கு அங்கீகாரம் கிடைப்பது அரிது. வகுப்பறைக் கதவை வெளிச்சம் வரும் வாயிலாகக் கொள்வதும் தவறு. சன்னல்கள் இருப்பது அவசியம். திறந்த பெரிய முற்றங்கள் இருந்தால் வெளிச்சம் இருக்கலாம். ஆனால் அவற்றால் வேறு வகைத் தீங்குகள் விளையக்கூடும். சில பள்ளிகளில் கூரையில் கண்ணாடி அமைப்பு ஒன்று வைத்து வகுப்பறைக்கு வெளிச்சம் வர ஏற்பாடு செய் திருக்கிறார்கள். அத்தகைய அமைப்புக்களில் இரண்டு விஷயங்களைக் கவனிக்கவேண்டும்.

(1) கண்ணாடியின் கீழ்ப்புறம் ஒட்டடை சேர விடக்கூடாது.

(2) அவ்வமைப்பினால் ஓட்டை ஏற்பட்டு மழை நீர் வகுப்பறைக்குள் சொட்டக்கூடாது.

(d) காற்றோட்டம்: காற்றோட்ட வசதிக்கான ஏற்பாடுகளை உற்றுநோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

1. சன்னல்கள் எதிரெதிராக உள்ளனவா?

2. மாணவர்கள் வெளிவிடும் கெட்ட காற்று வெளிச் செல்ல என்ன ஏற்பாடுகள் உள்ளன?

3. எத்தனை காற்றோட்டத் திறப்புக்கள் உள்ளன?

4. மொத்த மாணவ சங்கியைக்கும், காற்றோட்டத் திறப்புக்களின் மொத்தப் பரப்பிற்கும் உள்ள விகிதம் என்ன? [தலைக்கு எவ்வளவு சதுர அங்குலம் ஆகிறது?]

நாம் வெளிவிடும் காற்றில் கழிவுப் பொருள்கள் உள்ளன. அதையே மீண்டும் உள்ளுக்கு இழுப்பது உடல்நலத்திற்குத் தீங்கு செய்யும். தவிர, வெளிவிடும் காற்று சற்று வெப்பமும் உள்ளது. அதனாலும் உடல் நலத்திற்குத் தீங்கு விளையும். எனவே, காற்று உள்ளே வரச் சன்னல்கள் அமைப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது வெளிவிடும் காற்றை வெளியேற்றுவது. ஆகையால் மாணவர்கள் வெளிவிடும் வெப்பக் காற்றை விரைவில் வெளியேற்ற ஏற்பாடு செய்யவேண்டும்.

அவ்வாறு செய்ய நமக்கு இயற்கையே உதவுகிறது. காற்று வெப்பமடைந்தால் இலேசாகும். இலேசானால் அது மேலே மிதந்துபோகும். இந்தத் தத்துவத்தை யொட்டியே மாணவர்கள் வெளிவிடும் காற்றை விரைவில் வெளியே அனுப்பக் காற்றுப்போக்கிகள் சுவர்களின் மேற்புறத்தில் அமைக்கவேண்டும்.

அவை சன்னல்களுக்கு மேலே சுவரின் மேற்புறத்திற்குச் சற்றுக் கீழே அமைக்கப்படவேண்டும். சன்னல்களைப் போலவே வகுப்பறை முழுவதும் அவை சமதூரமாகப் பரவியிருக்கவேண்டும்.

ஆராய்ச்சியின் பயனாக ஒவ்வொரு மாணவனுக்கும் 48 சதுர அங்குலம் அளவுள்ள காற்றுப்போக்கிகள் தேவை எனக் கணக்கிட்டுள்ளார்கள்.

ஓடுகள் போட்ட கூரை, ஓலையாலான கூரை ஆகியவற்றின் மூலம் வெப்பக் காற்று, புகைபோவது போல எளிதில் வெளியே போய்விடுகிறது. எனவேதான் இத்தகைய பள்ளிக்கூடங்களில் காற்றுப்போக்கிகள் இல்லாமல் இருக்கும் குறைபாடு நமது கவனத்தைக் கவர்வதில்லை. ஆனால் ஓலையாலான கூரைக்குத் தீயினால் அபாயம் உண்டு. அதனாலேயே ஓலைக்கூரைக் கட்டடங்கள் சிறந்தவையல்ல என்று முன்னரே கூறினோம்.

(e) **குடிநீர் வசதி:** குடிநீர் வசதிபற்றி உற்று நோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

1. பள்ளியில் குடிநீர் வசதியிருக்கிறதா?

2. குடிநீர் தூய்மையாய் இருக்க என்ன ஏற்பாடு உள்ளது?

3. குடிநீர் எல்லா மாணவர்களுக்கும் போதுமானதா?

4. பானையிலிருக்கும் நீரைக் குவளையால் மொண்டு குடிக்கிறார்களா அல்லது வேறு ஏற்பாடு இருக்கிறதா?

5. குடிநீர் வசதியில் உள்ள குறைபாடுகள் யாவை?

பல மாணவர்கள் குழுமி வேலைசெய்து, ஓடி ஆடி, விளையாடிப் பள்ளியில் பயிலுங்கால் அவர்களுக்கு நீர் வேட்கை எடுப்பது இயல்பே. எனவே ஒவ்வொரு பள்ளி யிலும் ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியாகத் தூய் மையான குடிநீர் கிடைக்குமாறு செய்வது நமது முக்கிய மான கடமையாகும். சிறந்த முறையில் தொண்டாற்றி வரும் ஆதாரப் பள்ளிகளில் பின்வருமாறு ஏற்பாடுசெய் கிறார்கள். ஊரிலுள்ள குடிநீரை வடிகட்டி, கூடுமானால் காய்ச்சி, அடியில் குழாய் பொருத்தப்பட்ட பானைகளில் வைக்கிறார்கள். மாணவர்கள் குழாயைத் திருப்பி நீரைக் குவளையில் பிடித்துக் குடிக்கிறார்கள். இது சிறந்த முறை. சில பள்ளிகளில் சாதாரணப் பானைகளில் நீரை நிரப்பிவைக்கிறார்கள். அப்பானைக்குள்ளிருந்து நீரை எடுக்க ஒரு தனிக் குவளையும், மாணவர்கள் நீர் பருக வேறொரு குவளையும் வைக்கிறார்கள். நீர் குடிக்கும் குவளையைப் பானைக்குள் விட அநுமதிப்பது இல்லை.

பானையையும் குவளைகளையும் அன்றாடம் தேய்த்துக் கழுவுகிறார்கள். பானையை வாரம் ஒருமுறை வெயிலில் வைக்கிறார்கள். இம் முறைகளை ஒவ்வொரு ஆதாரப் பள்ளியிலும் பின்பற்றவேண்டும். ஆதாரப் பள்ளி களின் சிறப்பை நிரூபிக்கும் ஐந்து சோதனைகளில் குடிநீர் வசதி அமைப்பும் ஒன்றாகும்.

ஒவ்வொரு வகுப்பிற்கும் தேவையான குடிநீர் வசதியை அந்தந்த வகுப்புத் தண்ணீர் மந்திரி கவனிக்க வேண்டும். அதை ஆசிரியர் மேற்பார்வையிடவேண்டும்.

(f) **குப்பைக் குழி:** ஆதாரப் பள்ளிகளில் கழிவுப் பொருள்களை வெளியேற்றும் ஏற்பாடுகளை உற்று நோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும் :

1. வகுப்பறையிலும் சுற்றுப்புறத்திலும் அன்றாடம் சேரும் கழிவுப் பொருள்களைப் பெருக்கிச் சேர்த்து என்ன செய்கிறார்கள்?

2. பள்ளியில் ஒரு குப்பைக் குழி இருக்கிறதா?

3. அதன் நீள, அகல, ஆழம் என்ன?

4. அது வகுப்பறைக்கு அருகிலிருக்கிறதா? தொலைவிலிருக்கிறதா?

5. குப்பைக் குழி நிரம்பியதும் அதை என்ன செய்கிறார்கள்?

வகுப்பறைக்குக் காற்றுப்போக்கி அமைப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் ஒரு குப்பைக் குழி அமைப்பதாகும். காற்றுப்போக்கிகள் வாயு ரூபமாயுள்ள கழிவுப் பொருள்களை வெளியேற்றுகின்றன.

அன்றாடம் வகுப்பறையிலும், விளையாட்டிடத்திலும், தோட்டத்திலும் சேரும் திடரூபமான கழிவுப் பொருள்களும் குப்பை கூளங்களும் அங்குமிங்கும் படிந்து பள்ளியின் தோற்றத்தைப் பாதிக்காமல் இருக்கக் குப்பைக் குழிகள் தேவைப்படுகின்றன. அன்றாடம் சேரும் குப்பை கூளங்களை அக்குழிகளுக்குள் கொட்டவேண்டும்.

குப்பைக் குழிகள் $3' \times 3' \times 3'$ உள்ள அளவில் இருக்கலாம். அவ்வாறு ஒவ்வொரு பள்ளிக்கும் இரண்டு அல்லது மூன்று குப்பைக் குழிகள் போதுமானது. அவை பள்ளிக்கு அருகிலேயே இருக்கலாம். தொலைவில் இருந்தால் மாணவர்கள் சோம்பலினால் கழிவுப் பொருள்களை அவற்றில் போடாமல் வழக்கம்

போல் அங்குமிங்கும் போடக்கூடும். அன்றாடம் குப்பைகள் சேர்ந்து ஒரு குழி நிரம்பியதும் மண்ணைப் போட்டு மூடிவிடவேண்டும். உடனே வேறு ஒரு குழியும் தயார்செய்துகொள்ளவேண்டும்.

குப்பைக் குழியில்லா ஆதாரப் பள்ளி சப்பையே.

(g) சிறுநீர்க் குழியும் மலக் குழியும் (கக்கூசும்) :

சிறுநீர் கழிப்பதற்கும், மலம் கழிப்பதற்கும் பள்ளியில் உள்ள ஏற்பாடுகளைப்பற்றி உற்றுநோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும் :

1. சிறுநீர் கழிக்க என்ன ஏற்பாடு உள்ளது (திறந்த வெளி, பக்காக் கட்டடம், அல்லது சிறுநீரிலிருந்து தாவர எருப் பெறக்கூடிய சிறுநீர்க் குழி)? அவ்வசதி பள்ளியிலுள்ள மாணவர்களுக்குப் போதுமா ?

2. மலஜலம் கழிக்க என்ன ஏற்பாடு உள்ளது (திறந்த வெளி, பக்காக் கட்டடம், குழிக் கக்கூசு, மலத்தை எருவாக்கும் வர்தாக் கக்கூசு) ?

3. கக்கூசு வசதி போதுமா ? போதாதா ? அதிகக் கக்கூசுகள் தேவையா ?

4. ஆதாரக் கல்வி நோக்கங்களுக்கும் சாதாரணமாக உள்ள பக்காக் கட்டடக் கக்கூசு அமைப்புக்களுக்கும் உள்ள முரண்பாடு யாது ?

5. சிறுநீர்க் குழிகளும், கக்கூசுகளும் பள்ளிக் கட்டடத்திற்கு எவ்வளவு தூரத்திலிருக்கின்றன?

ஆதாரப் பள்ளிகளின் தனிச் சிறப்பை நிரூபிக்கும் ஐந்து சோதனைகளுள் சிறுநீர்க் குழி அமைப்பும், வர்தாக் கக்கூசு அமைப்பும் முக்கியம் வாய்ந்தவை.

சாதாரண ஆரம்பப் பள்ளிகளுக்கென அரசினர் வகுத்துள்ள விதிகளிலும் இவ்விரண்டும் முக்கியம் பெற்றுள்ளன. அவ்விதிகள் பின்வருமாறு :

1. பள்ளிக் கட்டடத்திற்கு 30 அடி தூரத்திற்குள் கக்கூசு இருக்கக்கூடாது.

2. பள்ளியை நோக்கி வீசும் காற்று வரும் வழியில் கக்கூசு இருக்கக்கூடாது.

3. கக்கூசு கட்டுவதற்குமுன் 'அரசினர் சுகாதார இலாகா'வைக் கலந்து ஆலோசிக்கவேண்டும்.

4. சிறுநீர் கழிக்க வேறிடமும், மலம் கழிக்க வேறு இடமும் அமைக்கவேண்டும்.

5. ஆசிரியருக்குத் தனிக் கக்கூசு தேவை.

6. பெண்களுக்குத் தனிக் கக்கூசு தேவை.

7. கக்கூசு அறைகளின் எண்ணிக்கை மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பப் பின்வருமாறு இருக்க வேண்டும் :

			பெண்கள்	ஆண்கள்
30	மாணவர்களுக்குக்	குறைந்தால்	2	1
50	,,	,,	3	2
70	,,	,,	4	2
100	,,	,,	5	3
150	,,	,,	6	3
200	,,	,,	8	4
300	,,	,,	12	5
500	,,	,,	20	8

8. 100 மாணவர்களுக்கு 4 என்ற விகிதத்தில் சிறுநீர் கழிக்கவெனத் தனியிடம் அமைக்க வேண்டும்.

9. அப்படித் தனியிடம் இல்லையானல் 7-ல் குறித்துள்ள கக்கூசு எண்ணிக்கையை அந்த விகிதத்திலேயே அதிகரிக்கவேண்டும்.

ஆதாரக் கல்வியின் புரட்சிகரமான அடிப்படை இலட்சியங்களைக் கூர்ந்து நோக்குங்கால் இவ்விதக் கக்கூசு அமைப்பும், சிறுநீர்க் குழி அமைப்பும் பெரும் முரண்பாடாகும். ஆகையால்தான் தேசத் தந்தை **காந்திஜியின்** ஜீவிய காலத்திலேயே "வர்தாக் கக்கூசு" என்ற ஒரு வகைக் கக்கூசு அவர் ஆணைப்படி உருவாயிற்று. அதில் கீழ்க்கண்ட அரிய சுதேசிய, சமூக, பொருளாதாரத் தத்துவங்கள் உள்ளடங்கியிருக்கின்றன:

1. மலமெடுக்கத் தனிச் சாதி என்ற வேறுபாடு ஒழிகிறது.

2. பலர் பார்க்க மலம் கழிக்கும் கெட்ட பழக்கம் மாறுகிறது.

3. நோய் உண்டாகும் வகையும், பரவும் வகையும் குறைகின்றன.

4. எளிதாய், இயல்பாய், மனித மலம் எருவாகிறது; கழிவு கனகமாகிறது.

5. இந்த இயக்கம் தேசீய லாபமாகும்.

6. வேலையின் பெருமையை ஒவ்வொருவரும் அறிகிறார்கள்.

எனவே, ஆதாரப் பள்ளியில் சிறுநீர் கழிக்க மாணவர்களே தனிச் சிறுநீர்க் குழிகள் வெட்டிக்கொள்ள வேண்டும். மலம் கழிக்க வர்தாக் கக்கூசையே உபயோகிக்கவேண்டும். பெரியநாயக்கன்பாளையம், கல்லுப்பட்டி, காந்திக்கிராமம், வேதாரணியம், திருச்சிற்றம்பலம் போன்ற ஆதரிச ஆதாரப் பள்ளிகளில் இவற்றையே உபயோகித்து, சிறுநீரையும் மலத்தையும் எருவாக்கித் தோட்ட வேலைக்கு உபயோகிக்கிறார்கள். அரசினர் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகள் சிலவற்றிலும் இம்முறைகளைக் கையாளுகிறார்கள்.

இவை நம் மாநிலம் முழுதும் பரவவில்லை. மிகப் புரட்சிகரமான மாறுதலாயிருப்பதால் மக்கள் மனத்தை இன்னும் கவரவில்லை. உண்மையில் இவை சோதனை நிலையிலிருக்கின்றன எனலாம். ஆதலால் சாதாரணக் கக்கூசுகளைப்பற்றித் திட்டவட்டமாகக் கூறியிருப்பது போல் இவைபற்றிய அளவுத் திட்டங்களை அரசினர் நாளிதுவரை நிர்ணயிக்கவில்லை. எனினும், சேவாக் கிராமத்திலிருக்கும் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் வெளியிட்டுள்ள **"கம்போஸ்ட் கக்கூசுகள் – அவற்றின் அநுகூலம், அமைப்பு, உபயோகிக்கும் முறை"** என்ற நூலில் இவைபற்றிய முழு ஆராய்ச்சி விவரங்களைத் தந்துள்ளனர். ஒவ்வொரு ஆதாரப் பள்ளி நிர்வாகியும் ஆசிரியர்களும் அந்நூலை வாசித்துப் பார்த்துப் பயனுறவேண்டும். அதிலிருந்து ஓர் ஆதாரப் பள்ளிக்கு எத்தனை வர்தாக் கக்கூசு தேவை என அறியலாம். இது பல மாணவர்களின் உடல்நலத்தோடு தொடர்பு கொண்ட ஒரு பெரும் பிரச்சினையாதலால் இவ்வகைக் கக்கூசுகளை அமைக்குமுன் நமது மாநில அரசினர்

கல்வித் துறை, சுகாதாரத் துறை அதிகாரிகளைக் கலந்துகொள்வது அவசியமாகும்.

சிறுநீர்க் குழி : ஆதாரப் பள்ளி ஒவ்வொன்றுக்கும் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மூன்று அல்லது நான்கு சிறுநீர்க் குழிகள் போதுமானது. ஒவ்வொரு சிறுநீர்க் குழிக்கும் மறைப்பு இருக்கவேண்டும். ஓலை, கீற்று, தட்டி முதலியவற்றால் மறைப்பு அமைக்கலாம்.

சிறுநீர்க் குழி அமைக்கும் முறைபற்றி முழு விவரம் கொடுக்கக்கூடிய இடம் இந்நூல் அன்று. எனினும், சில ஆதாரப்பள்ளிகளில் நடைமுறை அநுபவத்தில் இருந்து வரும் சிறுநீர்க் குழி அமைப்பைப்பற்றிக் கூறுவது பயன் தரும்.

பெரியநாயக்கன்பாளையத்தில் இருந்துவரும் முறை :

கட்டடத்திற்குச் சற்றுத் தொலைவில் 3' நீளம், 3' அகலம், 4' ஆழமுள்ள குழி ஒன்று வெட்டிக்கொள்ள வேண்டும். அதற்குள் பெருங்கற்கள், கருங்கல் ஜல்லி, செங்கல் ஜல்லி, அடுப்புக் கரி, சுண்ணும்புக் கல் ஆகியவற்றை முறையே கீழிருந்து வரிசையாய்ப் போட வேண்டும். மேலே ஒரு பழங்கோணியைப் பரப்ப வேண்டும். நடுவில் சற்றுப் பள்ளமாய் அமைத்துக் கொள்ளவேண்டும். மூன்று பக்கங்களில் 5, 6 அடி உயரத்திற்கு ஒரு மறைப்பு அமைத்துக்கொள்ள வேண்டும். இது ஒரு சிறுநீர்க் குழி ஆகும்.

கோணிமீது சிறுநீர் கழித்தால், சிறுநீரிலுள்ள பசைச் சத்தைக் கோணி நிறுத்திக்கொண்டு சிறுநீரை மட்டும் கீழே விடும். அந்நீர் சுண்ணும்புக்கல்லாலும்

செங்கற் ஜல்லியாலும் உறிஞ்சப்பட்டு இரசாயன மாறுதல் அடையும். பாக்கி நீர் இருந்தால், நாற்றம் நீங்கி இன்னும் கீழே இறங்கும்.

இக்குழி பள்ளிக் கட்டடத்திற்கு அருகில் இருக்கலாம். கெட்ட வீச்சம் வருவதில்லை. இரண்டு மாத காலத்தில் சுண்ணும்பும் செங்கல்லும் தூள் தூளாகும். அதை அப்புறப்படுத்தி, தாவரங்களுக்குப் பயன்படுத்தலாம்.

சிறுநீரிலுள்ள நைட்ரஜன் சத்து அத்தூளில் இருக்கிறது. அது தாவர வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

பெரியநாயக்கன்பாளையத்தில் ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக் கட்டடத்திற்கருகில் சுமார் 10, 12 அடித் தொலைவில் ஒரு சிறுநீர்க் குழி அமைத்துள்ளார்கள். வழக்கமாயுள்ள பக்காக் கட்டடக் கக்கூசுகள் சுமார் 100 அடிக்கு அப்பால் இருக்கின்றன.

சேவாக்கிராமத்தில் அனுஷ்டிக்கும் முறை :

சிறுநீர் கழிக்கத் தனி அமைப்பு உள்ளது. சுமார் 1 அல்லது $1\frac{1}{2}$ அடி உயரம் ஏறி நடுவிலுள்ள துவாரத்தில் சிறுநீர் கழிக்கவேண்டும். அதில் சிறுநீரைப் பிடிக்க வாளி ஒன்றைக் கீழே வைக்கிறார்கள். நாற்புறமும் மறைவுக்குத் தட்டிகள் உள்ளன. இரவில் சேரும் சிறுநீரைக் காலைதோறும் மல உரத்திலோ, குப்பை உரக் குழியிலோ கொட்டிவிடுகிறார்கள். மலத்தையும் குப்பையையும் மட்கச்செய்ய அது பேருதவிசெய்கிறது என ஆராய்ச்சி மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பூஸா பரிசோதனை ஸ்தலத்தில் அனுஷ்டிக்கும் முறை:

அங்கு 'சிறுநீர்த் தூள் அல்லது மண்' (urine earth) தயாரிக்கிறார்கள். 13—5—1950 தேதியுள்ள 'ஹரிஜன்' பத்திரிகை இதழில் அங்கு நடத்தப்பட்ட சோதனை முடிவுகளைப் பிரசுரித்திருக்கிறார்கள். அதைப் படிப்பது பயன்தரும்.

அங்குள்ள சிறுநீர்க் குழியைப் பின்வருமாறு சுருக்கமாக விவரிக்கலாம். ஒரு காலித் தொட்டி (Trough)யில் கொஞ்சம் மரத்தூள், அடுப்புக் கரித் தூள், உலர்ந்த இலைகள், பருத்திபோன்ற உறிஞ்சும் பொருளைப் போட்டு நிரப்பவேண்டும். மேற்புறத்தில் எலும்புத் தூளைப் பரப்பவேண்டும். ஒருவர் கழிக்கும் சிறுநீர், ஒரு குழாய் அல்லது புனல் வழியாகத் தொட்டியின் அடிப்புறத்திற்கு நேராகப் பாய்ந்தோட வேண்டும். அடியிலிடப்பட்டிருக்கும் உறிஞ்சும் பொருள் சிறுநீரை உறிஞ்சிவிடும். அதனால் சிறுநீரிலுள்ள நைட்ரஜன் அம்மோனியாவாகக் காற்றில் போகாதபடி தடுக்கப்படுகிறது. மேலிருக்கும் எலும்புத் தூள் நைட்ரஜனை இருத்த உதவும். இவ்வாறு நாளடைவில் சிறுநீரிலிருந்து சிறந்த ஆற்றலுள்ள உரம் கிடைக்கிறது.

பெரியநாயக்கன்பாளையத்திலிருக்கும் முறை எளிதாயிருக்கிறது. ஓர் ஆதாரப் பள்ளிக்கு அப்பேர்ப்பட்ட மூன்று அல்லது நான்கு சிறுநீர்க் குழிகள் போதும். ஒரு குழியின் நாற்புறத்திலும் நான்கு சிறுவர் உட்கார்ந்து சிறுநீர் கழிக்கலாம்.

(h) **மலக் குழி (கக்கூசு):**

அடுத்தபடியாகக் கவனிக்கவேண்டியது கக்கூசு விஷயம். ஆதாரப் பள்ளிக்கான வர்தாக் கக்கூசு, செங்கல் அல்லது கல் சுவர்களாலான பக்கா அமைப்பாக இருத்தல் சிறந்தது.

50, 60 சிறுவர்களுக்குப் போதுமான பக்கா வர்தாக் கக்கூசு அமைக்கும் முறை:

வர்தாக் கக்கூசில் இரண்டு முக்கிய பகுதிகள் உள்ளன.

(i) நீண்ட குழி அல்லது பள்ளம் (மலம் கழித்து மண்போட்டு மூட);

(ii) மேலமைப்பு (மறைவாய், வசதியாய் அமர்ந்து மலம் கழிக்க).

இதில் இரண்டு சமாந்தரமான நீண்ட குழிகள் அடுத்தடுத்து இருக்கும். அந்த இரண்டு நீண்ட பள்ளங்களையும் ஒரு நீண்ட சுவர் பிரிக்கும். கக்கூசின் நீளம் 18 அடி. அதில் சுவரின் ஒவ்வொரு பக்கத்திலும் 6 அறைகள் அமைக்கலாம். ஒவ்வொரு அறையும் 3 அடி நீளம், 3 அடி அகலம் உள்ளதாயிருக்கும்.

ஒரு குறிப்பிட்ட காலம் (சுமார் 2, 3 மாத காலம் வரை ஒரு வரிசையிலுள்ள ஆறு அறைகளை மட்டும் கக்கூசாக உபயோகிக்கவேண்டும். மற்ற ஆறு அறைகளையும் பூட்டிவைக்கவேண்டும்.

ஒவ்வோர் அறையிலும் பந்தோபஸ்தாக உட்கார்ந்து மலங்கழிக்க ஒரு தடிப்பான பலகை அல்லது இரண்டு சட்டங்கள் இருக்கும். அதன் நடுவில் மலம் கழிக்க ஓர் இடைவெளி இருக்கும். துவாரத்தின் இரு

புறங்களிலும் காலே வைத்துக்கொண்டு மலங்கழித்தால் மலம் கீழேயுள்ள குழிக்குள் விழும். மலம் கழித்த பின் அருகிலிருக்கும் மண்குவியலிலிருந்து ஓர் ஓடு அல்லது உடைந்த பானேயின் அடிப்புறம் அல்லது என் ஜினில் கரியை வாரி வீச உதவும் கருவிபோன்ற ஒரு கருவியினல் மலம் செவ்வையாய் மறையுமட்டும் மண்ணேப் போடவேண்டும். ஒவ்வொரு முறை மலம் கழிக்கும்போதும் இவ்வாறு மண் போட்டே மூட வேண்டும். ஒவ்வொரு நாளும் காலேயில் கக்கூசைத் துப்புரவு செய்யும்போது கொஞ்சம் பசுந்தழைகளேயும் மண்ணேயும் போட்டுத் திமிசு போடுவது வழக்கம். மண்ணுக்கு எங்கும் போகவேண்டியதில்லே. குழியி லிருந்து வெட்டியெடுத்த மண்ணே அறைகளுக்கருகிலே குவித்துக்கொள்வது வழக்கம்.

சுமார் 2, 3 மாத காலங்களில் ஆறு குழிகளும் நிரம்பித் தரை மட்டத்திற்கு வந்துவிடும். உடனே பசுந் தழைகளேப் போட்டு மண்ணேக்கொண்டு மூடிவிட்டு, அடுத்துள்ள ஆறு கக்கூசுகளேப் பயன்படுத்தத் தொடங்கவேண்டும். சுமார் 2, 3 மாத காலத்தில் முதல் வரிசையில் உள்ள மலம் மட்கி உரமாகும். சரி யாய் மட்கியிருந்தால் அதில் நாற்றமிராது; கறுப்பு நிறமாயிருக்கும்; கருவியால் தொட்டால் பொல பொல வென்று உதிரும். ஒரு குச்சியால் குழிக்குள் குத்திச் சோதித்த பின்னரே அவ்வுரத்தை எடுத்து உபயோகப் படுத்தலாம். பள்ளியிருக்கும் இடத்தின் மண் ராசி யைப் பொருத்தது மலம் மட்கும் காலம்.

குழி அமைப்பைப்பற்றி ஒரு வார்த்தை. குழியின் அகலம் $2\frac{1}{2}$ அல்லது $2\frac{3}{4}$ அடி, ஆழம் 4 அடிக்கு மேலே

போகக்கூடாது. அதிக ஆழம் போனால் மலம் மட்காது.

குழியின் தரையைக் கல் போட்டுக் கெட்டிப்படுத்த வேண்டும். பிறகு செங்கல் ஜல்லி போட்டுத் திமிசு போடவேண்டும். ஒருகாலும் தரைக்குச் சிமெண்டு போடக்கூடாது. சிமெண்டு, அருகிலுள்ள நீரை உறிஞ்சுவதுடன் அடைப்பிற்குள் ஏற்படும் வெப்பத்தைக் குறைத்து மலம் மட்குவதைப் பாதிக்கும். குழியின் சுவர்கள் கல் அல்லது செங்கல்லால் இருக்கவேண்டும். சுண்ணும்புப் பூச்சும் பூசலாம்.

மேலடைப்பு: ஆறு அறைகளும் சௌகரியம் நிறைந்தவையாய் இருக்கவேண்டும். ஒவ்வொன்றுக்கும் வெளியே திறக்கும் கதவுகள் அமைக்கவேண்டும். உபயோகத்திலிருக்கும் கக்கூசுகளுக்குமட்டும் கூரை இருக்கவேண்டும். மட்கின மலத்தை வெளியே எடுத்த பின் பள்ளம் சில நாட்கள் காலியாக இருக்க வேண்டும். அப்போது அதில் சூரிய வெப்பம் படுமாறு மேற்கூரையைப் பிரித்துவிடவேண்டும்.

பள்ளியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக் கேற்றபடி இந்த விகிதத்தில் கக்கூசுகள் அமைத்துக் கொள்ளலாம்.

இத்தகைய கக்கூசுகளை அமைக்க விஞ்ஞான அநுபவம் இன்றியமையாதது. மண் ராசி, கக்கூசு அமைக்க வேண்டிய இடம், இதர நுணுக்கங்கள் ஆகியவற்றைச் சுகாதார இலாகா அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்த பின்னரே வேலையைத் தொடங்கவேண்டும் எனக் கூற விரும்புகிறோம்.

இது புதிய விஷயம்; நுட்பமானது; பொது மக்களின் குழந்தைகளின் உடல்நலத்தோடு சம்பந்தங் கொண்டது. எனவே முன்னெச்சரிக்கை மிக அவசியம்.

சாதாரணமாக ஒரு குடும்பத்திற்குப் போதுமான கக்கூசின் படங்களும், பள்ளிக்குத் தேவையான கச்சாக் கக்கூசு அல்லது பக்காக் கக்கூசின் படங்களும் கீழே தரப்பட்டிருக்கின்றன. விடுதிகள் இணைந்த பள்ளிகளுக்கு பக்காக் கக்கூசு தேவை. ஏனைய பள்ளிகளில் குடும்பத்துக்கான கக்கூசையோ, எளிய கச்சாக் கக்கூசையோ பயன்படுத்திக்கொள்ளலாம்.



குடும்ப உபயோகத்துக்கானது



பள்ளி உபயோகத்துக்கானது

கச்சா கக்கூசு



பக்கா கக்கூசு

பள்ளி உபயோகத்துக்கானது

(i) விளையாட்டிடம் :

ஆதாரப் பள்ளிகளிலுள்ள விளையாட்டிடத்தை உற்றுநோக்கி வரக் கீழே கொடுத்திருக்கும் வினாக்கள் பயன்படும் :

1. விளையாட்டிடம் பள்ளிக்கருகில் இருக்கிறதா?

2. அதன் நீள, அகலம் என்ன? அது பள்ளி மாணவர்களுக்குப் போதுமா? போதும் என்று எவ்வாறு கணக்கிடுகிறார்கள்?

3. முள், கல், புழுதியின்றி அது துப்புரவாக இருக்கிறதா? தரைப்பரப்பு விளையாட்டிடத்திற்குத் தகுதியுள்ளதாய் இருக்கிறதா (கரடு முரடான கட்டாந்தரையா, மணற்பாங்கானதா, புல் பூண்டு நிறைந்ததா, சீரான தன்மையுள்ளதா)?

4. அதன் தரை சம மட்டமாய் இருக்கிறதா ?

5. ஊரார் அதைப் பொது வழியாக உபயோகிக்கிறார்களா?

6. அது சரிவரப் பயன்படுத்தப்பட்டுச் சீரான நிலையில் பாதுகாக்கப்படுகிறதா?

7. அருகில் தூய குடிநீர் வசதி உண்டா?

8. விளையாட என்னென்ன சாதனங்களும் கருவிகளும் உள்ளன?

கற்றல் செயல்கள் நடக்கும் பள்ளி நிறுவனத்தில் விளையாட்டிடத்திற்குப் புதிய பொருளும், புதிய பெருமையும் தற்காலத்தில் ஏற்பட்டுள்ளன. உடற் பயிற்சி, விளையாட்டு, மிடுக்கான நடை ஆகிய உடல் வளர்ச்சிச் செயல்களுக்கு மட்டுமே விளையாட்டிடம் பயன்படும் என எண்ணிவந்த காலம் மாறிப்போய் விட்டது. பல திறப்பட்ட உள்ளப் பண்புகளும், சமூகப் பண்புகளுங்கூட அங்குத்தான் அநுபவ ரீதியாய்க் கற்கப்படுகின்றன. அங்குத்தான் வெற்றி தோல்வியில் சீரான மனப்பான்மை, செயலில் நேர்மை, தன் முறை வரும் வரை காத்திருத்தல், குழுவிற்காகப் பாடுபடுதல், குழு உணர்ச்சி, தந்நலம் மறத்தல், சாதனங்களையும் வாய்ப்புக்களையும் பங்கிட்டுக்கொள்ளுதல் ஆகிய பல சிறப்பான நற்குடிப் பண்புகள் வளருகின்றன எனக் கண்டுபிடித்துள்ளனர். எனவே உடல், உள்ளம், ஆன்மா என்னும் மூவகை வளர்ச்சிக்கும் விளையாட்டிடம் பேருதவிசெய்கிறது.

பள்ளியின் விளையாட்டிடம் பள்ளிக்கருகிலேயே இருக்கவேண்டும். அது சமமாயும், முள், கல் இல்லாமலும், கரடு முரடு இல்லாமலும், துப்புரவாயுமிருக்க வேண்டும். ஊரார் அதை நடைவழியாகவோ, வண்டிப் பாதையாகவோ பயன்படுத்தக்கூடாது. அது எல்லா மாணவர்களும் ஒரே காலத்தில் விளையாடக்கூடும் பரப்பு உள்ளதாய் இருக்கவேண்டும். பிரதி மாணவனுக்கும் 50 சதுர அடிப் பரப்புத் தேவை எனக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

பள்ளிக்குச் சொந்தமான விளையாட்டிடம் இல்லையானாலும், ஊராரின் உதவிகொண்டு அருகிலுள்ள ஓர் இடத்தைக் காலை மாலை வேளைகளில் மாணவர்களின் விளையாட்டிற்கு உபயோகித்துக்கொள்ள அனுமதி பெறவேண்டும். அவ்வளவு முக்கியமானது விளையாட்டு என்பதை மறக்கக்கூடாது.

பள்ளிக்கு அருகில் அரசினரின் புறம்போக்கு நிலம் இருந்தால், அதைப் பள்ளிக்கு மாற்ற மேலதிகாரிகளுக்கு மனுச் செய்துகொள்ளலாம்.

விளையாட்டுக்கென விசேஷக் கருவிகள் ஆதாரப் பள்ளிக்குத் தேவையில்லை. ரப்பர்ப் பந்து, பம்பரம், லெஸிம், மூங்கில் கழி, தாண்டு கயிறு, இழு கயிறு முதலிய எளிய அதிக விலையில்லாப் பொருள்கள் போதுமானவை.

(j) **பள்ளித் தோட்டம்:** பள்ளித் தோட்டத்தைப் பற்றியும், தோட்ட வேலைபற்றியும் உற்றுநோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்களை மனதிற் கொள்ள வேண்டும்:

1. பள்ளிக்கு ஒரு தோட்டம் இருக்கிறதா?

2. அருகிலா? தொலைவிலா? எவ்வளவு தொலைவில்?

3. தோட்டத்தின் பரப்பு என்ன? பள்ளியிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் பயிற்சி கொடுக்கப் போதுமா, போதாதா? அதை எவ்வாறு கணக்கிடுகிறீர்கள்?

4. கிணறு, குளம் அல்லது பிற நீர்ப்பாசன வசதிகள் உளவா? ஆண்டு முழுவதற்கும் தோட்டவேலை செய்யப் போதுமான நீர்ப்பாசன வசதி இருக்கிறதா?

5. தோட்டத்தில் என்ன பயிரிடப்படுகிறது (பூ, காய்கறி, பலன்தரு மரங்கள், மூலிகை வகைகள்) ?

6. ஆண்டு முழுமைக்குமான தோட்டவேலைத் திட்டம் ஒன்று இருக்கிறதா? அல்லது பெயரளவில் தோட்டவேலை நடைபெறுகிறதா ?

7. கடந்த மூன்று ஆண்டுகளாக விதை, நாற்று, எரு, பந்தல், வேலி இவைபோன்றவற்றிற்காக ஏற்பட்ட செலவு என்ன ?

8. கடந்த மூன்று ஆண்டுகளாக உற்பத்திப் பொருள்கள் யாவை? அவற்றின் மதிப்பு என்ன ?

9. கடந்த மூன்ருண்டுகளில் ஏற்பட்ட நிகர லாபம், நஷ்டம் யாது? நஷ்டமானல் காரணம் என்ன? லாபமானல், அதை இன்னும் அதிகரிக்க வழியிருக்கிறதா ?

10. தோட்டவேலைபற்றி என்னென்ன பதிவேடுகள் உள்ளன ?

தோட்டம்: எல்லா ஆதாரப் பள்ளிகளிலும் எது ஆதாரத் தொழிலாயிருந்தாலும், முதல் ஐந்து வகுப்புக்களில் தோட்ட வேலை கட்டாய பாடமாகும் என ஆதாரப் பள்ளிகளுக்கான பாடத்திட்டம் அறைகூவுகிறது. ஒவ்வொரு ஆதாரப் பள்ளியிலும் குறைந்தபட்சமாக இரண்டு ஏக்கர் நிலமும், கிணறு ஒன்றும், அல்லது தோட்ட வேலைக்கு இன்றியமையாத நீர்ப்பாசனத்திற்கான வேறு வசதிகளும் இருக்கவேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

சாதாரண ஆரம்பப் பள்ளிகளிலேயே மாணவர்கள் தோட்ட வேலையில் ஈடுபடுவது அவசியமானதாகக் கருதப்படுகிறது.

தோட்ட வேலையில் பங்குகொள்வது உடல், உள்ள, ஆன்மப் பண்பு வளர்ச்சிகளுக்குப் பலவகையில் உதவுவதாக ஆராய்ச்சியாளர் கண்டுள்ளனர்.

உதாரணமாக,

1. பள்ளிக்கு அழகு கொடுக்க; அதனுல் இன்பம் பெற;

2. மாணவர்களிடம் இயல்பாயுள்ள மகவூக்கத்தைப் பேணி வளர்க்க;

3. தாவர நூலையும் உயிர் நூலையும் பட்டறிவு முறையில் கற்க;

4. உடல் உழைப்பின் பெருமையை அறிய;

5. கூடி வேலைசெய்து சமூகப் பண்புகளைக் கற்க;

6. தாமே பயிரிட்ட காய்கறி உற்பத்தியில் ஏற்பட்ட மகிழ்ச்சிக்காகத்

தோட்டவேலை உதவுகிறது.

ஆதாரப் பள்ளிகளில் தோட்ட வேலைக்கு இன்னும் தனிச் சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. "தோட்ட வேலையும் விவசாயமும்" என்பது ஓர் ஆதாரத் தொழிலாக அமையத் தகுதியுள்ளதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அத்தேர்வே அதன் தனிப் பெருமைக்குச் சான்று. அத்தேர்வினுல் இரண்டு அதிகப்படியான சிறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

(i) அத்தொழிலை மையமாகக்கொண்டு எல்லாப் பாடங்களையும் இணைத்துக் கற்பிக்க இயலும்.

(ii) தோட்டவேலை வாயிலாகவே சுயதேவைப் பூர்த்தி அடையலாம்.

“ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்” என்பதுபோலத் “தோட்டமில்லா ஆதாரப் பள்ளிக்கு அழகு பாழ்” என்று கூறலாம்.

முடிவு : அண்டையிலுள்ள பல பள்ளிகளைக்கூர்ந்து உற்றுநோக்கியதன் பயனாகச் சில உண்மைகள் நன்கு விளங்கும். எல்லா அம்சங்களிலும் நூற்றுக்கு நூறு நிறைவான திருப்தியளிக்கக்கூடிய பள்ளி இருப்பது அரிதாயிருக்கும்; கட்டடம் திருப்தியாயிருக்கும்; ஆனால் விளையாட்டிடமே இராது; அல்லது தோட்டம் இராது; எல்லாம் இருக்குமேயானால் தண்ணீர் வசதி இராது. சில பள்ளிகளில் போதுமான இடவசதியே இராது. சில குறைகளை நீக்க ஆசிரியருக்கு வழியே இராது.

ஆங்காங்குள்ள குறைபாடுகளைச் சமாளித்துக் கொண்டு ஆசிரியர்கள் எவ்வாறு பணியாற்றி வருகிறார்கள் எனக் கண்டுகொள்வதே ஒரு சிறந்த படிப்பினையாகும். அதிலிருந்து நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும்.

ஓர் ஐயம் : ஆசிரியர்கள் கையில் இல்லாத கட்டடம், விளையாட்டிடம், தோட்டம் ஆகிய அம்சங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள அவசியமென்ன என்று வினவலாம். ஒவ்வோர் அம்சத்திலும் உள்ள அதிகார பூர்வமான அதம பட்சத் தேவைகளையும், அளவுகளையும் தெரிந்திருந்தால்தான் பள்ளியை நிர்வகிப்பவர்களிடமும் ஊர் மக்களிடமும் மீண்டும் மீண்டும் அவற்றைப்பற்றி எடுத்துரைத்து, இயன்றவரையில் வெற்றி பெறலாம். விடுதலை பெற்றபின் ஏற்பட்டுள்ள விழிப்பின் காரணமாகப் புதுப் புதுப் பள்ளிகளைக் கிராமந் தோறும் நிறுவுகிறார்கள். அத்தருணத்தில் இவை பற்றிய அதிகாரபூர்வமான அறிவு பெரிதும் பயன்படும்.

1-B. தொழிற் கருவிகள் முதலியவைபற்றிய விதிகள்

அரசினரிடம் கிடைக்கக்கூடிய பண உதவிபற்றிப் பயிற்சியாளர் உற்றுநோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

1. ஆதாரப் பள்ளிக்காக என்னென்ன வகையில் அரசினர் பணஉதவி வழங்கியிருக்கின்றனர்?

2. ஒவ்வொரு உதவியையும்பற்றிய நிபந்தனைகள், விதிகள், பண உதவியின் அதிகபட்ச அளவு யாவை?

3. ஆதாரப் பள்ளி கட்டவும், உபகரணங்கள் வாங்கவும் கிராமவாசிகளுக்கு ஏதாவது பணஉதவி வழங்குகிறார்களா? வழங்கினால் அதுபற்றிய விதிகள் யாவை?

4. தொழிற் கருவிகள் பெறுவதற்கான முறை யாது?

5. சிட்டத்தின் விலையை நிர்ணயிப்பவர் யார்? எப்படி?

6. பருத்தி விதைகள், கழிவு முதலியவைகளை என்ன செய்கிறார்கள்?

7. அதிகப்படி வகுப்புக்கள் திறந்தால் தொழிற் கருவிகள் பெறும் முறை யாது?

ஆதாரப் பள்ளி நிர்வாகிகளுக்கு அரசினர் பின்வரும் வகைகளுக்காகப் பணஉதவி யளிக்கின்றனர்:

I. பள்ளிக்கான கட்டடம், மனை, விளையாட்டிடம், கிணறு.

II. தோழிற் கருவிகள்.

III. (a) மரச் சாமான்கள், புத்தகங்கள், போதனு சாதனங்கள்.

(b) மாணவர்களுக்குப் புத்தகம், சிலேட்டு முதலியன வழங்கும் சலுகைகள்.

IV. ஆசிரியர்களின் சம்பளமும் கிராக்கிப் படியும்.

V. மாணவர்களுக்கு சம்பளச் சலுகைகள்.

VI. கிராமவாசிகளுக்குப் பண உதவி.

(ஒவ்வொன்றைப்பற்றியும் விவரமான விதிகள் இயற்றியுள்ளனர்.)

ஒவ்வொரு தலைப்பின்கீழும் அவ்விதிகளைக் கவனிப்போம்.

I. பள்ளிக் கட்டடங்கள், கட்டட மனைகள், விளையாட்டிடம் இவற்றைக் குறித்த விதிகள்:

(அ) (i) **உதவியின் நோக்கம் :** கட்டடம் வாங்க, கட்டடம் கட்ட, உள்ள கட்டடத்தை விஸ்தரிக்க (மாணவர் உணவு விடுதி, காப்பாளரின் இல்லம், பிற ஆசிரியர்களுக்கு இடம் உள்பட), கிணறு வெட்டுதல்.

(ii) பரந்த அளவில் கட்டடத்தை மாற்றியமைத்தல்.

(iii) பள்ளி, உணவு விடுதி, விளையாட்டிடம் இவற்றுக்கு நிலம் வாங்குதல்.

(ஆ) **பண உதவி வழங்கும் நிபந்தனைகள்:**

(i) புதுக் கட்டடம், கட்டட விஸ்தரிப்பு, கட்டடத்தை மாற்றியமைத்தல் இவற்றுக்கு மாநிலக் கல்வித் துறைத் தலைவர் (Director of Public Instruction) அவர்களின் முன் – அனுமதி பெறவேண்டும். முன் –

அனுமதி பெருமல் தொடங்கும் வேலைகளுக்குப் பண உதவி கிடைக்காது.

மனைகள் அல்லது கட்டடம் வாங்கும் விஷயத்தில் டைரெக்டர் அவர்களை முன்கூட்டியே கலந்து ஆலோசிக்கவேண்டும். கல்வி வேலைகளுக்கே அது பயன்படுத்தப்படும் என அவருக்கு உறுதிமொழி கூறவேண்டும்.

(ii) அரசினரால் நிர்ணயிக்கப்பட்ட முறையில் கட்டப்படாத கட்டடங்களுக்குப் பொதுவாகப் பண உதவி அளிக்கப்படமாட்டாது. அவ்விதிகளை "ஆரம்பப் பள்ளிகளுக்கான விதிகள்" என்ற நூலில் அநுபந்தம் 14-ல் விவரமாகக் கொடுத்துள்ளனர்.

ஆதாரப் பள்ளிக்கான கட்டடத்தின் மாதிரிப் பிளான்கள் தனியே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவற்றின் படங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ளவும்.

(iii) உணவு விடுதியிலுள்ள அறைகளின் அளவுகள் பின்வரும் அளவுகளுக்குக் குறையக்கூடாது.

ஒரு மாணவன் உறங்கும் அறையாகில் அதில் 80 சதுர அடி பரப்பும், 900 கன அடி கனஅளவும் இருக்கவேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்களானால் உறங்கும் அறையின் அளவு தலைக்கு 30 சதுர அடி பரப்பிற்குக் குறையாமலும், 400 கன அடி கனஅளவுக்குக் குறையாமலும் இருக்கவேண்டும்.

உணவு உண்ணும் அறையில் ஒரு மாணவனுக்கு 8 சதுர அடி பரப்பும், 80 கன அடி இடமும் அமைக்க வேண்டும்.

(இ) **கட்டடத்திற்காகப் பண உதவி பெறும் முறை:**

(i) குறிப்பிட்ட நமூனுவில் விண்ணப்பம் தயாரித்து, மாவட்டக் கல்வியதிகாரிக்கு (District Educational Officer) குறித்த தேதிக்குள் அனுப்ப வேண்டும். கல்விநோக்குடன் அவ்வேண்டுகோளின் பொருத்தத்தைக் கவனிக்க அவசியமான கிடைப்படம் (Plan) முதலியவற்றையும் விண்ணப்பத்துடன் இணைக்கவேண்டும்.

(ii) டைரெக்டர் அவ்விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டால் நிர்வாகி விவரமான வரைப்படம், குறுக்கு வெட்டுப்படம் முதலிய படங்களையும், ஒவ்வொரு உட்பகுதியைப்பற்றிய நுணுக்கமான அளவுகளையும், பணச் செலவின் குற்றுமதிப்பையும் **இரு படிகள்** தயாரித்து அனுப்பவேண்டும். அவை யாவும் ஒப்புக்கொள்ளப் பட்ட ஓர் இன்ஜினீயரால் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

கட்டட அமைப்பு முறை திருப்திகரமாயும், குற்று மதிப்புச் செலவு விவரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக வும் இருக்கின்றன என்று டைரெக்டர் தெரிவித்தா லன்றிக் கட்டட வேலைகளைத் தொடங்கக்கூடாது. அவ்வாறு டைரெக்டரின் அனுமதிபெற்றுக் கட்டட வேலை முடிந்த பிறகு, குறிப்பிட்டுள்ள ஓர் உறுதிமொழி யைப் பூர்த்திசெய்து, முழு விவரங்களுடனும் பண உதவிக்காக மனுச் செய்யவேண்டும்.

குறிப்பு: கட்டட வேலைகளைக் கருத்திற்கொள்ளும் ஒரு நிர்வாகி அவ்வேலைகளைத் தொடங்குமுன் மாவட்டக் கல்வியதிகாரிக்கு எழுதி, கீழ்க்கண்டவற்றைப் பெறவேண்டும்:

(i) பண உதவிக்கான விண்ணப்ப நமூனு.

(ii) பிளான்களும் குற்றுமதிப்புச் செலவும் தயாரிக்க யோசனைகளும் விதிகளும்.

(ஈ) **அங்கீகரிக்கப்பட்ட வேலை ஜாபிதாவில் முன்னிடம் பெறுதல் :**

தன் முன்-அநுமதிபெற்ற கட்டடத் திட்டங்களின் பட்டியல் ஒன்றை டைரெக்டர் வைத்திருப்பார். அப்பட்டியலில் ஒரு நிர்வாகியின் கட்டடத் திட்டம் இடம்பெற்றிருந்தபோதிலும் சட்ட பூர்வமாகவோ, நன்னெறி அடிப்படையிலோ நிர்வாகியின் கட்டடத்திற்கான பணச் செலவை அரசினர் கொடுக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. பண வசதியிருந்தால் ரூ. 500/-க்குக் கீழ்ப்பட்ட மனுக்களை டைரெக்டர் ஏற்றுப் பணஉதவி யளிக்கலாம். ரூ. 500/-க்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அரசினரின் அநுமதிபெற மேலிடத்துக்கு டைரெக்டர் அனுப்புவார்.

(உ) (i) **பெந்தகப் பத்திரம் எழுதுதல் :**

ஒரு கட்டடத் திட்டத்தை ஏற்று டைரெக்டரோ, அரசினரோ பணஉதவி யளிக்கச் சம்மதித்தால் சம்பந்தப்பட்ட சொத்தை, பணஉதவியின் தொகையின் அடிப்படையில் குறிப்பிட்ட **ஐந்து வகை** நமூனுக்களில் பொருத்தமான ஒரு நமூனுவில் ஒரு பெந்தகப் பத்திரம் எழுதிக்கொடுக்கவேண்டும். ரூ. 10,000/-க்கு மேற்படாத சொத்து விஷயமாக மட்டும் பெந்தகப் பத்திரம் எழுதத் தேவையில்லை யென டைரெக்டர் கருதினுல் அவர் விலக்கு அளிக்கலாம்.

(ii) **சொத்தின்மீதுள்ள உரிமையைச் சோதித்தல்:**

விண்ணப்பதாரர் (நிர்வாகி) தாம் காட்டும் சொத்துக்கு அதன்மீது அவருக்குப் பூரண உரிமையுண்டு என்பதை அரசாங்க சொலிஸிடர் (Solicitor) திருப்திபெறுமாறு நிரூபிக்கவேண்டும். அரசினரின் பணஉதவி பெறுவதற்கு இது ஒரு முக்கிய நிபந்தனையாகும்.

(ஊ) **உதவித்தொகையின் அளவு:**

நிர்வாகி செலவழித்த மொத்தத் தொகையில் முக்கால் பாகத்திற்கு மேற்படாத ஒரு தொகையை மட்டுமே அரசினர் பணஉதவியாக அளிப்பார்கள்; முக்கால் பங்கு என்பது ஆதாரப் பள்ளிகளுக்கு மட்டும் உள்ள தனிச் சலுகை. மீதிச் செலவை நிர்வாகியே ஏற்றுக்கொள்ளவேண்டும். நிர்வாகியின் செலவு நியாயமானது என்றும், கணக்கு வழக்குகளுடனும், இரசீதுகளுடனும் டைரெக்டருக்குத் திருப்தியளிக்கும் வகையில் அவர் நிரூபிக்கவேண்டும். ஜூனியர், ஸீனியர் ஆதாரப் பள்ளிகளுக்குத் தனித்தனி உயர்ந்தபட்சத் தொகைகளை அரசினர் நிர்ணயித்துள்ளனர்.

(எ) **அரசினரின் உரிமை:**

அரசினரின் உதவியைப் பெற்று வாங்கப்பட்ட மனையோ, கட்டிய கட்டடமோ, விஸ்தரித்த கட்டடமோ, மாற்றியமைத்த கட்டட அமைப்போ கல்வி இயக்க நோக்கங்களைத் தவிர வேறு அலுவல்களுக்குப் பெந்தகப் பத்திரத்தில் குறிக்கப்பட்டுள்ள காலவரைக்குள் பயன்படுத்தப்பட்டால் பள்ளி நிர்வாகி அரசினரிடமிருந்து பெற்றுக்கொண்ட முழுத் தொகையையோ அல்லது டைரெக்டர் நிர்ணயிக்கும் ஒரு

குறிப்பிட்ட தொகையையோ அரசினருக்குத் திருப்பி யளிக்கவேண்டும்.

அரசினரின் பண உதவி ரூ. 1,000/-க்கு மேற்பட்டால் 40 ஆண்டுகளுக்கும், அவ்வுதவி ரூ. 1,000/-க்கு அல்லது அதற்குக் குறைந்தால் 20 ஆண்டுகள் வரைக்கும் அரசினருக்கு அச் சொத்தின்மீது சட்டபூர்வமான உரிமை உண்டு.

(ஏ) **கிணறு வெட்ட :**

முறையாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களின் மீது பள்ளியில் கிணறு ஒன்று வெட்ட ரூ. 300/-க்கு அதிகப்படாமல் டைரெக்டர் பணஉதவி யளிக்கலாம். கிணறு வெட்டும் செலவு ரூ. 300/-க்கு மேற்பட்டால் அரசினரின் முன்-அநுமதி பெறவேண்டும்.

II. **தொழிற் கருவிகள் :**

ஆதாரப் பள்ளிகளுக்குத் தேவையான தொழிற் கருவிகள்பற்றி அரசினர் நிர்ணயித்துள்ள விதிகள் பின்வருமாறு :

(அ) **கருவிகளாகவே வழங்குதல் :** ஆதாரப் பள்ளிகளுக்கு, தொழிற் கருவிகளுக்குரிய பணம் கொடுப்பதற்குப் பதிலாகத் தொழிற் கருவிகளாகவே வழங்க அரசினர் ஏற்பாடு செய்துள்ளனர். அந்த ஏற்பாடு கீழே விவரிக்கப்பட்டிருக்கிறது.

(ஆ) **மத்தியத் தொழிற் பண்டகசாலை** (Central Crafts Store) :

சுமார் 30 அல்லது 35 ஆதாரப் பள்ளிகள் சேர்ந்த அடைப்பான வட்டத்துக்கு **ஆதார அடைப்பு வட்டம்** (Basic Compact Range) என்று பெயர். அப் பள்ளி

களின் தேவைகளைக் கவனிக்கவும், அவற்றை மேற்பார்வையிட்டு ஆலோசனை கூறவும் பள்ளி ஆய்வாளர் (Deputy Inspector of Schools) ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். மேற்கூறிய பள்ளிகளுக்குத் தேவையான தொழிற் கருவிகளையும் மூலப் பொருள்களையும் வழங்கவும், அப்பள்ளிகளில் உற்பத்தியாகும் சிட்டம் போன்ற பொருள்களைப் பதிலுக்குப் பெறவும் **மத்தியத் தொழிற் பண்டகசாலை** ஒன்றை நிறுவியிருக்கிறார்கள்.

அப்பண்டகசாலை அருகிலிருக்கும் ஓர் ஆதார ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் அமைந்திருக்கும்; அல்லது ஓர் ஆதார அடைப்பு வட்டப் பள்ளிக்கூட ஆய்வாளர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு ஆதாரப் பள்ளியும் அது எந்த மத்தியத் தொழிற் பண்டகசாலையோடு அதிகார பூர்வமாக இணைக்கப்பட்டுள்ளதோ, அந்தப் பண்டகசாலையிலிருந்தே தொழிற் கருவிகளும், பருத்தி அல்லது பஞ்சும் பெறவேண்டும். பள்ளிக்கூடத்தில் உற்பத்தியாகும் நூற் சிட்டங்களை மீண்டும் அப்பண்டகசாலையிலேயே திருப்பியளித்து, அவற்றின் மதிப்புக்கு ஈடான பருத்தி போன்ற கச்சாப் பொருள்களைப் பெறவேண்டும்.

(இ) பண்டகசாலையிலிருந்து தொழிற் கருவிகள் பெறும் முறை:

பண்டகசாலையால் வழங்கப்படும் தொழிற் கருவிகள் இருவகைப்படும்.

(i) பருத்தி, பஞ்சு, நரம்பு போன்ற **கச்சாப் (மூலப்) பொருள்கள்**

(ii) சர்க்கா, தக்ளி போன்ற **நிரந்தரப் பொருள்கள்.**

ஓர் ஆதாரப் பள்ளி அரசினரால் அங்கீகரிக்கப் பட்டவுடன், அப்பள்ளியின் ஆய்வாளர் அப்பள்ளிக்குக் கூடிய சீக்கிரம் விஜயம் செய்து, அப்பள்ளியிலுள்ள மாணவர்களின் தேவைகளுக்கேற்ப, குறிப்பிட்ட நமூனுவில் விதிகளையொட்டித் தேவைப் பட்டியல் (Indent) ஒன்றில் **நான்கு படிகள்** தயாரித்து, தம் மேலதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். அந்தப் பட்டியலை மேலதிகாரிகள் ஆய்ந்து, திருத்தி, ஏற்று, அனுமதித்த பொருள்களை வழங்குமாறு மத்தியப் பண்டகசாலை அதிகாரிக்கு உத்தரவிடுவார்கள். ஏற்ற பட்டியலிலுள்ள இரண்டு படிகளை ஆதாரப் பள்ளியின் தலைமை ஆசிரியர்க்கு அனுப்புவார்கள்; எஞ்சியுள்ள இரண்டு படிகளில் ஒன்று பள்ளி ஆய்வாளருக்கும், மற்றொன்று சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அதிகாரிக்கும் அனுப்பப்படும். ஆதாரப் பள்ளியின் தலைமை ஆசிரியர், குறிப்பிட்ட பண்டகசாலையில் அனுமதிக்கப்பட்ட தொழிற் கருவிகளைப் பெற்று, தமக்குக் கிடைத்த ஒரு படியில் கருவிகளின் வரவைக் கையொப்பமிட்டுப் பண்டகசாலை அதிகாரியிடம் ஒப்படைக்கவேண்டும். மற்றொன்றிலும் தாம் பெற்ற பொருள்களின் அளவைக் குறித்துக்கொண்டு தம் பள்ளிக்கு உடன் எடுத்துச் சென்று, சம்பந்தப்பட்ட ரிஜிஸ்தர்களில் உடனடியாகப் பதிந்துகொள்ள வேண்டும். பள்ளியின் ஆண்டுத் தணிக்கையின்போது ரிஜிஸ்தர்களையும் பொருள்களையும் ஆய்வாளரிடம் காண்பிக்கவேண்டும்.

இவ்வாறு தொழிற்கருவிகள் பெற்றபின் அப் பள்ளிக்குத் தேவையான பருத்தி, பஞ்சு முதலிய மூலப் பொருள்களைப் பண்டகசாலையில் வாங்கவேண்டு மானால், ஒன்று அதன் விலைக்கு ரொக்கம் கொடுக்க வேண்டும்; அல்லது பள்ளியில் உற்பத்திசெய்யப்பட்ட சிட்டங்களைக் கொண்டுவந்து கொடுத்து, அவற்றின் கிரயத்திற்குச் சமமான தொகைக்குரிய பருத்தியை வாங்கிச் செல்லவேண்டும்.

பள்ளியில் மாணவர்களின் தொகை பெருகி அதிகப்படி ஆசிரியர் நியமிக்கப்பட்டால், புதிய வகுப்புக்குத் தேவையான தொழிற்கருவிகளுக்கு மேலே விவரித்த முறையிலேயே விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும். ஆனால் ஓர் ஆசிரியருக்குப் பதிலாக மற்றொருவர் நியமிக்கப்பட்டால் அவர் சார்பாகத் தொழிற் கருவிகளுக்கு மீண்டும் விண்ணப்பம் செய்யக் கூடாது.

அரசினர் வழங்கிய பொருள்களுக்குச் சரிவரக் கணக்குகள் வைப்பதுடன் அவற்றைச் சீராய்ப் பாது காத்துவரவேண்டும். துருப் பிடித்துவிடாமலும், கறையான் தின்றுவிடாமலும் அந்தந்தக் கருவிகளை அவ்வப்போது துடைத்தும் எண்ணெயிட்டும் பாதுகாக்கவேண்டும்.

அங்கீகாரமானவுடன் விண்ணப்ப மனுவைக் கால தாமதம் செய்யாமல் பிழையறத் தயாரித்தலை யும், அதிவிரைவில் தொழிற் கருவிகள் கிடைக்கச் செய்யவும் வேண்டி, அரசினர் இப்பொழுது பள்ளி ஆய்வாளரையே அதைத் தயாரிக்க உத்தரவிட்டிருக் கிறார்கள். ஆனால், ஆதாரப் பள்ளித் தலைமை ஆசிரிய

ருக்கு இவ்விஷயத்தில் பொறுப்பில்லை என நினைக்கக் கூடாது. முழுப் பொறுப்பும் அவருடையதே. தொழிற் கருவிகளும், பின்பு பருத்தியும் பெறுவதைப்பற்றிய இந்த விதிகள் எல்லா வகை ஆதாரப் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

சிட்ட நூல் நெசவுக்குத் தகுதியுள்ளதா ?

பண்டகசாலையில் சேர்ப்பிக்கும் சிட்டங்களின் நூல் நெசவு செய்யத் தகுதியுள்ளதாக இருக்கவேண்டும். இல்லாவிடில் சிட்டங்கள் அங்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா; ஈரிழையாக நூற்கும்பொருட்டு அவற்றைத் திருப்பிவிடலாம்.

சிட்டத்தின் விலை :

ஒரு சிட்டத்தின் விலையை அதன் நூலின் தன்மைக் கேற்ப ரூ. *0—3—9*, *0—3—6* .... போன்றவாறு பண்டகசாலை அதிகாரி நிர்ணயிக்கலாம். நூல் மிக மட்ட ரகமாயிருந்தால் ரூ. *0—2—0* ஆகக் கூட நிர்ணயிக்கலாம்.

பருத்தி விதைகள் :

ஆதாரப் பள்ளிகளில் பருத்தியிலிருந்து கிடைக்கும் பருத்தி விதைகளை உள்ளூரிலேயே அவ்வப்போதுள்ள விலைவாசிப்படி விற்றுக் கிடைக்கும் பணத்தைப் பண்டகசாலையில் சேர்ப்பிக்கவேண்டும். நூற்ற நூல் சிட்டங்களைப் பண்டகசாலையில் சேர்ப்பிக்காவிடில் அவற்றின் கிரயத்தைப் பண்டகசாலைக் கணக்கில் கட்ட வேண்டும். அப்பொழுதுதான் அத்தொகைக்குரிய பருத்தி வழங்கப்படும்.

கழிவை என்ன செய்வது?

பருத்தியைச் சுத்தஞ்செய்யும்போதும், பருத்தியிலிருந்து கொட்டை நீக்கும்போதும், பஞ்சை அடிக்கும் போதும், நூற்கும்போதும் கிடைக்கும் கழிவைப் பண்டகசாலையில் சேர்ப்பிக்கவேண்டுவதில்லை. அதற்கு ஊரில் தேவை யிராது. எனவே அதை விற்க இயலாது. ஆகையால் அதைப் பொம்மைகள் செய்யவும், கரும் பலகைத் துடைப்பான் செய்யவும், குண்டூசி குத்தும் திண்டு செய்யவும் பயனுள்ள வகையில் உபயோகிக்கலாம்.

தொழிற் கருவிகள்பற்றித் தலைமை ஆசிரியரின் கடமைகள் :

கீழ்க்கண்ட கடமைகளைப் பள்ளி ஆய்வாளர் நிறைவேற்ற ஆதாரப் பள்ளி ஆசிரியர்கள் உதவவேண்டும்:

(i) தேவையான தொழிற் கருவிகளுக்கான விண்ணப்பத்தை உடனடியாகத் தயாரிக்க உதவுதல்.

(ii) தேவைக்கு விஞ்சிய பொருள்கள் பள்ளியில் இருக்காமல் பார்த்துக்கொள்ளுதல்.

(iii) தொழிற்கருவிகள் சேதப்படாமல் வைக்கப் பட்டிருக்கும் முறையை அவ்வப்போது சோதித்து ஆவன செய்தல்.

(iv) தொழில் வேலையில் நல்ல பலமுள்ள நெசவுக்குத் தகுதியுள்ள நூல் நூற்றல்.

(v) உற்பத்திவேலையில் ஒவ்வொரு உட்பகுதியிலும் ஏற்படும் கழிவைக் குறைத்தல்.

(vi) தொழில் கணக்குகளையும் ரிஜிஸ்தர்களையும் சரிவர வைத்தல்.

(vii) தொழில் அறிக்கைகள்மீது மேலதிகாரிகளின் விமரிசனத்தைப்பற்றிச் சர்ச்சைசெய்து, சுய தேவைப் பூர்த்தி எல்லையை அடைய ஊக்குதல்.

(ஈ) தொழிற் கருவிக்கான தொகையின் அளவு:

ஒவ்வோர் ஆதாரப் பள்ளியிலும் உள்ள ஆதாரப் பயிற்சிபெற்ற ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் ரூ. 300-க்கு மேற்படாமல் தொழிற் கருவிகள் வழங்கப்படும். இந்தத் தொகையின் அதிகபட்ச எல்லை ஆசிரியரின் எண்ணிக்கையின்மீது நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனினும், பள்ளியில் பயிலும் மாணவர்களின் தேவைகளுக்குப் போதுமான அளவே தொழிற் கருவிகள் வழங்க உத்தரவிடப்படும். ஆகவே, தொழிற் கருவிக்கான விண்ணப்பம் தயாரிக்கும்போது மாணவர்களின் எண்ணிக்கையைக்கொண்டே தேவைகளை நிர்ணயிக்க வேண்டும். தேவைக்கு விஞ்சிய கருவிகளுக்கு மனுச் செய்தால் அம்மனு நிராகரிக்கப்படும்.

(உ) அங்கீகரிக்கப்பட்ட தொழிற் கருவிகளின் ஜாபிதா:

(அடுத்த பக்கத்திலுள்ள பட்டியலைப் பார்க்கவும்.)

தொழிற்கருவி அளவுப் பட்டியல் — வகுப்புவாரியாக

வரிசை எண்	தொழிற் கருவியின் பெயர்	I	II	III	IV	V	VI	VII	VIII
1	தக்ளி	64	64	64					
2	2 அடி வீசனம்	32	32	32					
3	தக்ளி நிலை	4	5	5					
4	பலகை மணை	10	10	10	10	10			
5	கை மணை	2	2	2	2	2			
6	மூங்கில் வில்	30	30	30	30	30			
7	பட்டைப் பலகை	6	6	6	6	6			
8	அட்டைத்துண்டு (சுமார் 12″ × 10″- தக்ளி சுழற்ற)	32	32	32					
9	பெரிய தராசு, படிக்கல் செட்டுடன்	1	1	1	1	1			
10	சிறிய ,, ,,	1	1	1	1	1			
11	உழவன் ராட்டை		24	24	24	24			
12	சிறிய தறி				1	2			
13	பெரிய தறி - துணைக் கருவிகளுடன்						2	2	2
14	பருத்தி, சிட்டம் வைக்க டிரம்	பள்ளிக்கு 2 அல்லது மூன்று							
15	தச்சுவேலைக் கருவிகள்	பள்ளி முழுதுக்கும் ரூ. 50							
16	தோட்டவேலைக் கருவிகள்	ஷை ரூ. 150/-							
17	பருத்தி*								

குறிப்பு:—*ஆரம்பத்தில் மட்டும் மொத்த மாணவர் சங்கியையின்மீது ஒரு மாதம் அல்லது இரு மாதத் தேவையின் அடிப்படையில் கணக்கிடப்படும். பின்பு, உற்பத்தியான சிட்டங்களைக் கொடுத்துவிட்டு, அவற்றின் மதிப்புக்கு ஈடான பருத்தியைப் பெறவேண்டும்.

இப்போது தேக்குமரத்தினுலான கை வில் வழங்குவதில்லை. அதற்குப் பதிலாக மூங்கில் வில்லை உபயோகப்படுத்த வேண்டும்.

மேற்குறித்த பட்டியல் வகுப்புவாரியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு வகுப்பிலும் 30 மாணவர்கள் படிப்பதாகத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரும்பாலான பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் 30 மாணவர்கள் இருப்பதில்லை. பள்ளி முழுவதிலுமே 40 முதல் 100-க்குட்பட்ட மாணவர்களே படிக்கின்றனர்; ஒன்று, இரண்டு அல்லது மூன்று ஆசிரியர்களே உள்ளனர்.

ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் ரூ. 300 வீதம் தொழிற் கருவிகளுக்கான பணஉதவி கணக்கிடப்படும். ஆகவே, அவற்றிற்கான விண்ணப்பம் மாணவர்களின் எண்ணிக்கையைப்பொறுத்தே தயாரிக்கப்படவேண்டும்.

மேல்வகுப்பு மாணவர்களுக்குத் தக்ளிகள் தனியாக வழங்கப் பட்டியலில் ஏற்பாடில்லை. அதனுல் அவ்வகுப்புக்களில் தக்ளி நூற்பு இல்லை என்று கொள்ளக்கூடாது. கீழ்வகுப்புகளுக்கென்று கணக்கிட்டுக் கொடுத்திருக்கும் தக்ளிகளையும், வீசனங்களையும், அட்டைகளையும், தக்ளி நிலைகளையும் மேல் வகுப்புக்களிலும் உபயோகித்துக்கொள்ளலாம். அதற்கியைய, கால அட்டவணையை மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும்.

தமக்குத் தேவையான புத்தகங்களை மாணவர்கள் தாமே வாங்குவதுபோன்று தக்ளி, வீசனம் முதலியவற்றையும் அவர்களே வாங்கிக்கொள்ளலாம். ஆனுல் அவ்வாறு வாங்கும்படி கட்டாயப்படுத்தக்கூடாது.

(ஊ) திருத்தப்பட்ட தொழிற் கருவிப் பட்டியல் :

ஆசிரியர்கள், மாணவர்கள் இவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் அண்மையில் வெளியிட்டுள்ள திருத்தப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது. ஆதாரப் பள்ளிக்குத் தேவையான தொழிற் கருவிகள் யாவும் அதில் இடம் பெற்றுள்ளன. அது பின்வருமாறு ஆகும் :

ஆதாரப் பள்ளிகளுக்கான தொழிற் கருவிகள்
(திருத்தப்பட்ட அளவுப் பட்டியல்)
[எல்லா வகைப் பள்ளிகளுக்கும் பொருந்தும்.]

வரிசை எண்	கருவியின் பெயர்	வழங்கப்படவேண்டிய பொருள்களின் எண்ணிக்கை. [ஆசிரியர் : மாணவர் எண்ணிக்கை]				
		ஓர் ஆசிரியர் [30 மாணவர்]	2 ஆசிரியர்கள் [60 மாணவர்]	3 ஆசிரியர்கள் [90 மாணவர்]	4 ஆசிரியர்கள் [120 மாணவர்]	5 ஆசிரியர்கள் [150 மாணவர்]
1	தக்ளி	24	48	72	96	120
2	இரண்டடி வீசனம்	12	24	36	48	60
3	தக்ளி நிலை	1.	2	3	4	5
4	கை மணை	2	4	6	8	10
5	பட்டைப் பலகைத் தொகுதி	2	4	6	8	10
6	உழவன் இராட்டை	8	16	24	36	40
7	உதிரிச் சர்க்கா வீசனம்	8	16	24	36	40
8	பலகை மணை	6	12	18	24	30
9	எண்ணெய்க் கூடு	1	2	3	4	5
10	கஜக் கோல்	1	2	3	4	5
11	தராசு படிக்கல்(பெரிய செட்டு)	1	2	3	4	5
12	,, (சிறியது)	1	2	3	4	5
13	சிறு தறி, அதன் உபகரணங்கள்	—	—	—	1	2
14	மண்வெட்டி	1	2	3	4	5
15	வாளி	1	2	3	4	5
16	களைக்கொத்து	2	4	6	8	10
17	கடப்பாரை	1	1	1	1	1
18	டிரம் (பருத்தி, சிட்டம் கொள்கலம்)	1	2	3	4	5
19	தகர டப்பா ஷை	2	4	6	8	10
20	அடுக்குப் புறை (Shelf)	1	1	1	1	1
21	கருவி வைக்கும் நிலை	1	1	1	1	2
22	அட்டை (தக்ளி சுற்ற)	24	48	72	96	120
23	பருத்தி*	—	—	—	—	—
24	தக்ளி ஈரிழை முறுக்கு நிலை	2	4	6	8	10
25	இராட்டை ஈரிழை நிலை	2	4	6	8	10

* ஒரு மாதம் அல்லது ஒரு மாதத் தேவைக்குப் போதுமான அளவு.

வரிசை எண்	கருவியின் பெயர்	வழங்கப்படவேண்டிய பொருள்களின் எண்ணிக்கை. [ஆசிரியர் : மாணவர் எண்ணிக்கை]				
		ஓர் ஆசிரியர் [30 மாணவர்]	2 ஆசிரியர்கள் [60 மாணவர்]	3 ஆசிரியர்கள் [90 மாணவர்]	4 ஆசிரியர்கள் [120 மாணவர்]	5 ஆசிரியர்கள் [150 மாணவர்]
26	பிற கருவிகள் :					
	சுத்தியல்	1	2	3	4	5
	குறடு	1	2	3	4	5
	ஸ்பேனர் (Spanner)	1	2	3	4	5
	Cutting Plier	1	2	3	4	5
	கத்தரிக்கோல்	1	2	3	4	5
	அளவு நாடா	1	2	3	4	5
	ரம்பம்	1	2	3	4	5
	அரம்	1	2	3	4	5
	மணிப்பொறி	1	2	3	4	5
	சிறு கத்தி	1	2	3	4	5

(எ) அரசினரின் உரிமை:

தொழிற் கருவிகள் வழங்கப்பட்ட ஐந்தாண்டுகள் வரை அரசினருக்கு அப்பொருள்களின்மீது சட்ட பூர்வமான உரிமையுண்டு. அந்தக் கால எல்லேக்குள் பள்ளியை மூடும்படி நேரிட்டால் நிர்வாகியிடமிருந்து கருவிகளேயோ, கருவிகளுக்கு ஈடான முழுத் தொகையையோ, அல்லது நியாயமாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையையோ வசூலிக்க அரசினருக்கு உரிமை உண்டு.

ஸ்தல ஸ்தாபனப் பள்ளிகள் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு பள்ளியில் தேவைக்கு அதிகப்படியா யுள்ள கருவிகளை அவை தேவைப்படும் வேறொரு பள்ளிக்கு மாற்ற அநுமதிக்கலாம்.

III. மரச் சாமான்கள், புத்தகங்கள், போதனு சாதனங்கள்

(அ) ஆதாரப் பள்ளிகளுக்குத் தேவையான மரச் சாமான்கள், புத்தகங்கள், போதனு சாதனங்கள் [விளையாட்டுக் கருவிகள் உள்பட] முதலியவை வாங்க அரசினர் பணஉதவி வழங்குகிறார்கள். அவைகளைக் குறித்து அரசினர் விடுத்துள்ள விதிகள் பின்வருமாறு:

(i) **உதவிக்கு விண்ணப்பஞ் செய்தல்:** பிரதி ஆண்டிலும் குறிப்பிட்ட நமூனுவில் மே-மீ முதல் தேதிக்குள் மாவட்டக் கல்வியதிகாரிக்குப் பள்ளி ஆய்வாளர் வாயிலாக விண்ணப்பம் அனுப்பவேண்டும். பொருள்களின் எண், விவரம், விலை விகிதம் முதலிய முழு விவரங்களும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

(ii) **பண உதவியின் அளவு:** நிர்வாகியின் மொத்தச் செலவில் பாதிக்கு மேற்படாத தொகையை அரசினர் பணஉதவியாக வழங்குவார்கள். நூல் நிலையம், விளையாட்டு இவற்றிற்காக மாணவர்களிடமிருந்தும், ஆசிரியர்களிடமிருந்தும் பண வசூல் செய்தால் அந்தத் தொகையை நிர்வாகி அரசினருக்குக் காண்பிக்கவேண்டும். அதற்குத் தகுந்தவாறு அரசினரின் பணஉதவி குறைத்து நிர்ணயிக்கப்படும்.

(iii) **சில நிபந்தனைகள் :** ஆதாரப் பள்ளிகளுக்கு அதிக மரச் சாமான்கள் தேவையில்லை. மரச் சாமான்கள்பற்றி ஒரு குறிப்பைக் கவனிக்கவேண்டும். ஆசிரியருக்குச் சிறிய மேஜை ஒன்றும், மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு சாய்வு மேஜையும் (கர்ணம் டெஸ்க்), சாமான்கள் வைக்கும் பெட்டி ஒன்றும் அரசினரால் அங்கீகரிக்கப்படும். அவை அரசினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகளைக் கொண்டனவாயிருக்கவேண்டும்.

(ஆ) **நூல் நிலையம் :** நூல் நிலையத்திற்குப் புத்தகங்கள் வாங்கவே பொதுவாக அரசினர் பணஉதவி வழங்குவார்கள். நூல்நிலையத்திற்கான புத்தகங்கள் புத்தகக் கமிட்டியினரால் [Text - Book Committee] அங்கீகரிக்கப்பட்டனவாய் இருத்தல்வேண்டும்.

(இ) **மாணவர்களுக்குப் புத்தகம், சிலேட்டு முதலியன வழங்க :** விசேஷ சந்தர்ப்பங்களில் பள்ளி மாணவர்களுக்குத் தேவையான புத்தகங்களும் சிலேட்டுகளும் வாங்கிக் கொடுக்க அரசினர் பணஉதவி செய்கிறார்கள். அவ்வித சந்தர்ப்பங்களில் மேற்படி புத்தகங்களும் சிலேட்டுகளும் பள்ளிக்கூடத்தின் சொத்தாகக் கருதப்படும். எனவே, மாணவர்கள் அவற்றைப் பள்ளியிலேயே பயன்படுத்தவேண்டும். அவற்றை வீட்டிற்கு எடுத்துச்செல்ல அனுமதித்தல் கூடாது.

(ஈ) **பிற கைத்தொழில்களுக்கு :** நூல் வேலை, கலை, இதர கைத்தொழில் கண்காட்சிகள் ஆகியவற்றுக்கும் அரசினர் பணஉதவி வழங்குகிறார்கள்.

தோட்டக் கருவிகள் வாங்கவும் அரசினர் பணம் வழங்குகிறார்கள். இவை தொழிற்கருவிப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

(உ) **போதனா சாதனங்கள் :** தவிர, தேசப் படங்கள், இரசாயனப் பொருள்கள், படங்கள், உருவ மாதிரிகள் (குளோப், இதயம்) முதலியன வாங்கவும் அரசினர் பணஉதவி வழங்குகிறார்கள். **மாவட்டக் கல்வி அதிகாரியின் முன்அநுமதி பெறாத எந்தப் பொருளையும் வாங்குதல்கூடாது. அவ்வாறு வாங்கினால் அவற்றிற்கு அரசினர் பணஉதவி அளிக்கமாட்டார்கள்.**

ஆகவே, முன்அநுமதி பெற்றுப் பொருளை வாங்கி, அதற்கான இரசீதுகளுடன் பணத்தைப் பெற மனுச் செய்யவேண்டும்.

(ஊ) **அரசினரின் உரிமை :** மேற்கூறிய பொருள்களுக்காகப் பணஉதவி பெற்ற ஒரு பள்ளி ஐந்து ஆண்டுகளுக்குள் மூடப்பட்டால் டைரெக்டர் நிர்ணயிக்கும் ஒரு நியாயமான தொகை நிர்வாகியிடமிருந்து வசூலிக்கப்படும்.

அதிகாரிகளின் பண அதிகார எல்லை :

ரூ. 250/-க்குட்பட்டு மாவட்டக் கல்வியதிகாரியும், ரூ. 250/-க்கு மேற்பட்டு ரூ. 500/-க்குள் பிரதேசக் கல்வியதிகாரியும், ரூ. 500/-க்கு மேற்பட்டு மாநிலக் கல்வித் தலைவரும் (Director of Public Instruction) பணம் வழங்கும் உரிமைபெற்றுள்ளனர்.

IV. ஆசிரியர்களின் சம்பளம்

ஆசிரியர்களுக்காக அரசினர் கொடுக்கும் சம்பளப் பணஉதவி விவரம்:

		பயிற்சி பெருதவர் ரூ.		பயிற்சி பெற்றவர் ரூ.
எலிமெண்டரி கிரேடு	லோயர்	11	மாதத்திற்கு	20
	ஹயர்	15	,,	30—½—33
ஜூனியர் பேஸிக்		15	,,	30—½—33
செகண்டரி கிரேடு		18	,,	40—1—48
ஸீனியர் பேஸிக்		18	,,	45-3-60-2-90
காலேஜ் கிரேடு		23	,,	40—1—48

மாதச் சம்பளம் தவிர அரசினர் மாதந்தோறும் பின்கண்ட விகிதத்தில் கிராக்கிப் படியும் தருகிறார்கள்:

சம்பளம்	கிராக்கிப் படி
ரூ. 20-ம், ரூ. 20-க்குக் கீழ்ப்பட்ட தொகைக்கும்	ரூ. 18
ரூ. 20-க்கு மேற்பட்டும், ரூ. 40-க்குக் கீழ்ப்பட்ட தொகைக்கும்	ரூ. 19
ரூ. 40-க்கு	ரூ. 21
ரூ. 40-க்கு மேற்பட்டு ரூ. 60 வரை	ரூ. 22
ரூ. 60-க்கு மேற்பட்டு ரூ. 100 வரை	ரூ. 24

ஆசிரியர்கள் சார்பாகக் கொடுக்கும் பணஉதவி பற்றிய விதிகள் மிக விரிவானவை. "Rules relating to Elementary Schools" என்ற அரசினர் வெளியீட்டில் அவற்றைப்பற்றி அறியலாம்.

V. மாணவர்களுக்குச் சம்பளச் சலுகைகள்

(அ) **சம்பளச் சலுகை விவரம் :** அரசினரின் பண உதவி பெறும் சில பள்ளிகளில் மாணவர்களிடமிருந்து மாதச் சம்பளம் வசூலிக்கும் வழக்கம் இருந்துவருகிறது. ஆனால் ஒரு சில மாணவர்களிடமிருந்து சம்பளம் வசூலிக்கக்கூடாதென அரசினர் உத்தர விட்டுள்ளனர். உதாரணமாக 1. இந்தியச் சிப்பாய்களின் குழந்தைகள், அல்லது அவர்களைச் சார்ந்து வாழும் குழந்தைகள். 2. அரசினரின் பண உதவியின்றிப் படிக்க முடியாத ஏழைப் பெண் குழந்தைகள். 3. கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களின் குழந்தைகள். 4. ஆசிரியர்களின் குழந்தைகள். 5. M. E. R. 92-ன் பிரகாரம் சில பிற்பட்ட வகுப்புக் குழந்தைகள் போன்றவர்கள்.

அரசினரால் கட்டளையிடப்பட்டுள்ள இந்தச் சம்பளச் சலுகையால் மேற்கூறிய பள்ளி நிர்வாகிகளுக்குச் சம்பள வசூலில் நஷ்டம் ஏற்படுகிறது. இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய அரசினர் நஷ்ட ஈடு முழுவதையும் பணமாகத் திருப்பிக் கொடுத்து விடுகிறார்கள்.

(ஆ) **சம்பள நஷ்ட ஈட்டுக்கு உதவிபெறும் முறை:** ஒவ்வொரு வகைச் சலுகைக்கும் தனித்தனி விதிகளும் விண்ணப்ப மனுவும் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் தனித்தனி குறித்த காலமும் இருக்கிறது. பள்ளி ஆய்வாளர் அலுவலகத்திலிருந்து முழு விவரங்களை அவ்வப்போது கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். குறித்த நமூனவில், பள்ளிக்கூடப் பதிவேடுகளிலுள்ள மாணவர்

களின் சார்பாக நஷ்டஈட்டைக் கணக்கிட்டு அரசினரின் உதவி பெறவேண்டும்.

(இ) **ஹரிஜன இலாகா செய்யும் பிற உதவிகள் :** மேலே விவரித்த சம்பளச் சலுகைகள் தவிர அரசினர் 'ஹரிஜன நலம்' எனும் இலாகா மூலமாகச் சில மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் (Scholarship) கொடுக்கிறார்கள். அச் சலுகை குறிப்பிட்ட சில ஜாதியினருக்கு மட்டுமே உண்டு. அவற்றைப்பற்றி ஹரிஜன இலாகாவிலிருந்து தெரிந்துகொண்டு குறித்த தேதிக்குள், நிர்ணயிக்கப்பட்ட நமூனாவில் பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு மட்டும் முழு விவரங்களுடன் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.

VI. கிராமவாசிகளுக்குப் பண உதவி

பள்ளி வேலைகளுக்காகப் பள்ளி நிர்வாகிகளுக்கு அரசினர் பணஉதவி செய்வதுபோலவே கிராமவாசிகளுக்கும் சில நிபந்தனைகளின்பேரில் ஒரு கிராமத்தில் பள்ளிக்கூடம் கட்ட அரசினர் பணஉதவி வழங்கலாம். கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் கட்டவோ, அல்லது அதை விஸ்தரிக்கவோ, அல்லது ஆசிரியர்களுக்கு இல்லம் கட்டித்தரவோ கிராமவாசிகள் விரும்பினால் அவர்களுக்கு அரசினர் பணஉதவி வழங்குவார்கள். ஆனால் கட்டடத்தைக் கட்டிமுடிக்கப் போதுமான பொருள்களையும், போதுமான கூலியாட்கள் முதலிய வசதிகளையும் அவர்கள் கொடுக்க முன்வரவேண்டும்.

அப்படிப்பட்ட பள்ளிகளுக்குத் தேவையான சாமான்கள், தளவாடங்கள், போதனு சாதனங்கள்

ஆகியவற்றை வழங்கவும் அரசினர் பணஉதவி செய்யலாம்.

இவ்வகையான பணஉதவி பெறும் பள்ளிக்கூடம் அந்தக் கிராமத்தின் பொதுச் சொத்தாகி, கிராம முன்சீபின் பொறுப்பில் இருக்கும்.

கட்டடம் எழுப்ப ரூ. 250-க்கு மேற்படாமலும், போதனுஉபகரணங்கள் வாங்க ரூ. 100-க்கு மேற்படாமலும் அரசினரின் பணஉதவி கிடைக்கும். உபகரணங்கள் வாங்குவதற்கென வழங்கப்பட்ட தொகையை வீடு கட்டும் செலவுக்குப் பயன்படுத்தக்கூடாது. இத்தொகைகளைக் கல்வித்துறை டைரெக்டர் மட்டுமே அனுமதிக்க முடியும்.

---

2. ஆசிரியர்

ஆதாரப் பள்ளிகளில் வேலைசெய்யும் ஆசிரியர்களிடம் இருக்கவேண்டிய தகுதிகள், தலைமை, உதவி ஆசிரியர்களின் கடமைகள், ஆசிரியர்கள் தங்களை மேலும் மேலும் அபிவிருத்தி செய்துகொள்ளும் வழிவகைகள் முதலியவற்றைப் பயிற்சியாளர்கள் உற்று நோக்குங்கால் கீழ்க்கண்ட வினுக்கள் உதவும் :

1. **ஆதாரப் பள்ளி ஆசிரியர்களிடம் இருக்க வேண்டிய அவசியமான தகுதிகள் யாவை ?**

2. **ஆதாரப் பள்ளி வேலைகள் திறம்பட நடக்க, ஆசிரியப் பயிற்சி எத்தன்மையதாய் இருக்கவேண்டும் ?**

3. **உதவி ஆசிரியர்களின் கடமைகள் யாவை ?**

4. **தலைமை ஆசிரியர்களின் கடமைகள் யாவை ?**

5. ஜூனியர் பேஸிக் (இளையோர் பயிற்சி முடித்தவர்), ஸீனியர் பேஸிக் (மூத்தோர் பயிற்சி முடித்தவர்) ஆசிரியப் பயிற்சி பெற்றவர் எந்தெந்த வகுப்புக்கள் வரை கற்பிக்கலாம்?

6. ஆசிரியர்கள் தங்களை மேலும் மேலும் எவ்வாறு அபிவிருத்தி செய்துகொள்ளுகிறார்கள்?

7. தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு குழந்தையையும் ஆசிரியர்கள் உற்றுநோக்குகிறார்களா?

8. என்னென்ன அம்சங்களில், எங்கு, எப்படி உற்றுநோக்குகிறார்கள்?

9. உற்றுநோக்கி எடுத்த குறிப்புக்களை எவ்வாறு குழந்தையின் நன்மைக்காகப் பயன்படுத்துகிறார்கள்?

ஆசிரியருக்கு அவசியமான தகுதிகள்: ஆதாரக் கல்வியின் அருமையான நோக்கங்களை நிறைவேற்றவும், ஆதாரக் கல்வித் திட்டம் மக்கள் மனத்தையும் மாணவர் மனத்தையும் கவரச்செய்யவும், ஆதாரக் கல்வியை விரைவில் நாட்டில் பரவச் செய்யவும் ஆசிரியர்களே சிறந்த கருவிகள் ஆவார்கள் அல்லவா? திட்டம் எவ்வளவு மேம்பாடு உள்ளதாயிருந்தாலும் அதை நடைமுறையில் நடத்தும் வேலை ஆசிரியர்கள் கையில்தானே இருக்கிறது.

புரட்சிகரமான கல்வி நோக்கங்கள், போதனை முறைகள், பிற அம்சங்கள் ஆகியவற்றின் நுணுக்கங்களை அவர்கள் சரிவரப் புரிந்துகொண்டிருந்தால் அவர்களுடைய போதனை வெற்றிதரும்; இல்லையேல் போதனை சிறக்காது; நோக்கங்கள் முற்றிலும்

நிறைவேரு. எனவே, ஆசிரியர்கள் பொறுப்பு மிகப் பெரியது. அப்·பொறுப்பை ஏற்க, ஆதாரப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சில தகுதிகள் தேவைப்படுகின்றன. அவற்றைக் கவனிப்போம். மிகப் பழங்காலத்திலேயே ஆசிரியர்கள் தகுதிகளைத் தொகுத்துப் பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்:

''குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மினையவும்
அமைபவன் நூலுரை யாசிரியன்னே.''

[நன்னூலில் பவணந்தி முனிவர்]

அதில் கூறியவை பெரும்பாலும் இன்றும் பொருந்தும். எனினும், சமூக முன்னேற்றத்திற்கேற்ப ஆசிரியர் ஒருவருக்கு இருக்கவேண்டிய தகுதிகளின் பட்டியல் சற்று மாறியும் விரிந்துமுள்ளது.

ஆதாரப் பள்ளிகளில் ஆசிரியரை மாணவர்கள் 'அண்ணு' என அழைக்கிருர்கள். ஆசிரியர் என்ற சொல்லுக்குக் குற்றத்தை நீக்குபவர் என்று பொருள் சொல்லப்பட்டது. [ஆசு = குற்றம்; இரியர் = நீக்கு பவர்.] இப்பொழுது ஆதாரக் கல்வியில் ஆசிரியர் ஒரு வழிகாட்டியாகவும், தோழராகவும், அநுபவம் மிகுந்த அன்புள்ள அண்ணுகவும் கருதப்படுகிருர். எவ்வளவு புரட்சிகரமான மாறுதல்!

ஆசிரியரின் தகுதிகளைக் கீழ்க்கண்ட தலைப்புக்களில் கவனிக்கலாம்.

1. தோற்றம் — புறம், அகம்
2. நடத்தையும் ஒழுக்கமும்

3. கிராம முன்னேற்றத்தில் விருப்பு

4. நல்ல உடல்நலம், சுறுசுறுப்பு, நல்ல பழக்கங்கள் அமைந்த தன்மை.

5. பிறருடன் தொடர்பு — மாணவருடன், உடன் ஆசிரியருடன், பொது மக்களுடன், பள்ளி நிர்வாகியுடன்.

6. தொழில் செய்வதில் திறமை

7. புலமை

8. ஆசிரியர்க்கான பயிற்சிபெற்றிருத்தல்.

தோற்றம் :

புறத் தோற்றம்: செயல்களைக் கற்பிப்பதோடு ஆசிரியரின் வேலை முடிவதில்லை. சில **நற்பழக்கங்களையும்,** சில **திறமைகளையும்,** சில **மனப்பான்மைகளையும்** மாணவர்களிடம் ஏற்படுத்துவதும் அவர் வேலையாகும். மாணவர்கள் சுத்தமாக வருதல், தூய உடை அணிதல், இனிமையாய்ப் பேசுதல், சீரான குரலில் பேசுதல் ஆகியவை எல்லாம்கூட ஆசிரியரின் பொறுப்பேயாகும். நாள் தோறும் பழகும் ஆசிரியரின் தோற்றத்திலிருந்தே மாணவர்கள் இப்பண்புகளைப் பின்பற்றுகிருர்கள்; பின்பற்றவும் வேண்டும். ஆகவே ஆசிரியரின் நல்ல தோற்றம் மிக முக்கியமானதொரு தகுதியாகும்.

தோற்றம், புறத் தோற்றம், அகத்தோற்றம் என இருவகைப்படும். புறத் தோற்றத்தை நாம் கண்ணுல் பார்க்கலாம். மாணவர்களும் பார்க்கிருர்கள். உடல் நலம், இன்முகம், முகமலர்ச்சி, குரல் இனிமை, விரும்பத் தக்க நடையுடை பாவனைகள் ஆகியவை புறத்தோற்ற

அம்சங்களாகும். மேலே சொன்ன விளக்கத்திலிருந்து ஆசிரியருக்கு இவை எவ்வளவு இன்றியமையாதவை என அறியலாம்.

அகத் தோற்றம் : இது சூட்சுமமானது. இதைக் கண்ணால் காணமுடியாது. இது உள்ளப் பண்புகளின் தோற்றம் (Passive virtues) ஆகும்; மனப்பான்மை களின் வெளியீடு எனவும் சொல்லலாம். நாள்தோறும் ஆசிரியர் மாணவர்களிடம் ஐந்து மணி நேரம் நெருங்கிப் பழகுகிறார். அவர்களுடன் பழகும்போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் எப்படி நடந்துகொள்கிறார் என்று கூர்ந்துநோக்கினால் அவரிடத்தில் சில நிலைத்த பழக்க வழக்கங்களையும், மனப்பான்மைகளையும் அறியலாம். அவற்றைத்தான் அகத் தோற்றம் என்று சொல்வது. ஆசிரியரின் புறத் தோற்றம் மாணவர்களைப் பாதிப்பதுபோல் அகத் தோற்றமும் பாதிக்கும்.

அகத் தோற்றத்தில் ஆர்வம், பொறுமை, நேர்மை, சீர்மை, நடுவுநிலைமை, விழிப்பு, சமயோசித புத்தி, நகைச்சுவை, அழகுணர்ச்சி, விழிப்புடைமை முதலிய நற்பண்புகளைக் குறிக்கலாம். இவற்றையும் ஆசிரியர் கற்பிக்காமலேயே மாணவர்கள் பற்றிக்கொள்வார்கள். ஆகவே ஆசிரியரின் தகுதிகளில் இவை சேருவதால் ஆசிரியர் இந்தப் பண்புகளை உடையவராயிருத்தல் அவசியமாகிறது. ஆசிரியர் மாணவர்களுக்கு ஒரு தலைவர்; வழிகாட்டி; வருங்காலத் தலைவர்களை உருவாக்குபவர்.

"ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் மாணவனே
நாடு காக்கும் தலைவனாய் நாளை விளங்கப் போகிறான்"

அல்லவா? மாணவர்கட்கு மட்டுமன்றித் தாம் வேலை செய்யும் கிராமத்திலுள்ள மக்களுக்கும் ஆசிரியர்

தலைவராகவும், வழிகாட்டியாகவும் இருக்கவேண்டு மெனச் சமூக நூல், கல்வி நூல் வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

மாணவர்களின் ஒழுங்கான, முறையான உடல் உள்ள ஆன்ம வளர்ச்சிக்கு முதன்முதலாக உதவுபவர் ஆதார ஆசிரியர் தானே? ஆகவே அவருடைய புறத் தோற்றமும், அகத்தோற்றமும் ஆசிரியர் வேலைக்குப் பொருத்தமாயிருக்கவேண்டும். அறிவிலும், அநுபவத் திலும், அங்க உருவ அமைப்பிலும் ஆசிரியர் பெரியவர். ஆதலால் மாணவர்கள் அவரை முறையே அறிவு, உணர்ச்சி, நடத்தை என்ற மூவகை மன வேலைகள் மூலம் குறிப்பறிந்து, ஒத்துணர்ந்து பின்பற்றுவார்கள்.

ஒழுக்கம், நன்னடத்தை: அடுத்தபடியாக ஆசிரியர் ஒவ்வொருவரும் நற்குணம் படைத்தவராகவும், ஒழுக்கத்தில் சிறந்தவராயுமிருத்தல் அவசியம். ஏனென்றால், கல்வியின் நோக்கங்களுள் ஒன்று மாணவர்களைக் குணசீலர்களாகவும், நன்னடத்தையுள்ளவர்களாகவும் இருக்கப் பயிற்றுவது அல்லவா? தம்மிடமே அப் பண்புகள் இல்லாமலிருந்தால், தம்மிடம் ஒப்படைக் கப்பட்ட மாணவர்களிடம் அவற்றை அவர் எப்படி ஏற்படுத்த முடியும்? எனவே, ஆசிரியர் ஒழுக்கத்திற்கும், நடத்தைக்கும் இருப்பிடமாகவும், முன்மாதிரியாகவும் இருக்கவேண்டும்.

கிராம முன்னேற்றத்தில் விருப்பு: ஆதார ஆசிரிய ருக்கு வேண்டிய வேறு தகுதிகளில் கிராம முன்னேற்றத்தில் விருப்பு ஒன்றாகும். ஆதாரக் கல்விக்கு ஆதார தேசியக் கல்வி என்பது முழுப் பெயர். ஆதாரக் கல்வித்திட்டத்திற்கு வித்திட்ட ஸாகீர் ஹுசேன்

கமிட்டியாரின் அறிக்கைக்கு ஆதாரக் கல்வியின் தந்தையாகிய காந்திஜி முன்னுரை எழுதியுள்ளார். அதில் ஆதார தேசியக் கல்வி என்பதற்குப் பதிலாக கிராமீய தேசியக் கல்வி எனப் பெயரிட்டால் மிகப் பொருத்தமாயிருக்கும் எனக் குறிப்பிட்டிருக்கிறுர். கிராம மனப்பான்மைக்கு அழுத்தம் அளிக்கவே அவர் அவ்வாறு கூறியுள்ளார்.

ஆதாரக் கல்வி என்பது நிர்மாணத் திட்டங்களில் ஒன்று. நிர்மாணத் திட்டங்கள் எல்லாம் இந்தியக் கிராமங்களின் சீர்கெட்ட நிலைமையைத் திருத்த ஏற்பட்டவைதாம். இந்த நோக்கிலும் கிராம மனப்பான்மை அழுத்தம் பெற்றுள்ளது. இந்தியாவில் 5 லட்சம் கிராமங்கள் உள்ளன. பெரும்பாலான மக்கள் கிராமங்களிலேயேதான் வாழ்ந்துவருகிறுர்கள். ஆகவே இந்தியா என்றுலே இந்திய கிராமங்கள் எனப் பொருள் கொள்ளவேண்டும். இந்தியா முன்னேறவேண்டுமென்றுல் இந்திய கிராமங்கள் முன்னேறவேண்டும் என்பது அதிலிருந்து தெரிகிறது. இந்திய தேசியக் கல்வி என்றுல் இந்திய கிராமங்களுக்கு ஏற்ற கல்வி என்பது பொருள். கல்வி மூலம் கிராமங்களில் எல்லாத் துறையிலும் மறுமலர்ச்சி ஏற்படவேண்டும். கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் இருக்கவேண்டிய நல்லுறவு மீண்டும் உயிர்பெறவேண்டும் என்பதே அதன் விளக்கம். ஒன்று மற்றென்றுக்குப் போட்டியாகி, அதை அழிக்கவோ சுரண்டவோ கூடாது. ஒன்று மற்றென்றைப் பூரணமாக்கவேண்டும். இந்தத் தத்துவத்தை ஆதார ஆசிரியர் நன்கு அறியவேண்டும்.

உடல்நலமும் சுறுசுறுப்பும்: எந்தத் துறையில் பணியாற்றுபவர்களுக்கும் உடல்நலப் பழக்கங்களும் சுறுசுறுப்பும் அவசியம். ஆதார ஆசிரியர்களுக்கு அவை இன்னும் முக்கியமாகும். தம்மிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களுக்கு அப்பழக்கங்களை ஏற்படுத்த வேண்டுவது அவரது வேலைகளில் ஒன்றாகும். ஆதலால் ஆசிரியர்களே இவ்வகைகளில் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

செயல்களைச் செய்யும்போதும், படிக்கும்போதும், எழுதும்போதும், உட்காரும்போதும், நிற்கும்போதும் சரியான உடல்நிலையைக் கவனிப்பது, உடலுழைப்பு, படிப்பு, ஓய்வு, உறக்கம் ஆகியவற்றிற்கு சீரான கால வரையறை ஏற்படுத்திக்கொள்வது, வேலைகளை முறையாகச் செய்ய ஒரு தினசரி வேலைத்திட்டம் அமைத்துக்கொண்டு அதைப் பின்பற்றுவது ஆகியவை சில நல்ல உடல்நலப் பழக்கங்களாகும்.

எல்லா நேரத்திலும் சுறுசுறுப்பாக இருக்க வேண்டும்; சோம்பலே கூடாது. ஒரு பெரும் நோக்கத்திற்காகப் பாடுபடும் ஆசிரியர், புதிய சமுதாயப் படைப்பிற்கு அடிகோலும் ஆசிரியர், சுறுசுறுப்பும் ஆர்வமும் நிறைந்தவராயும் இருக்கவேண்டும்.

பிறருடன் தொடர்பு: ஆதாரப் பள்ளியில் சமூக நோக்கு அதிக அழுத்தம் பெற்றுள்ளது. ஆதாரப் பள்ளி அமைந்திருக்கும் ஊரில் தூய்மை விளங்கவேண்டும்; சுறுசுறுப்பு ஓங்கவேண்டும்; பொருள் உற்பத்தி பெருக வேண்டும். ஒவ்வோர் ஆதாரப் பள்ளியும் கிராமத்தின் சமூக கேந்திரமாகத் திகழவேண்டும்.

எனவே ஆதாரப் பள்ளி ஆசிரியர்கள் தம் **மாணவர்களுடனும், உடன் ஆசிரியர்களுடனும், ஊர்ப் பொது மக்களுடனும், நிர்வாகியுடனும்** சீரிய தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும். ஒவ்வொரு வகைத் தொடர்பையும்பற்றிச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

மாணவர்களுடன்:

ஆசிரியர்கள் **மாணவர்களை** அன்புடனும் அனுதாபத்துடனும் நோக்கவேண்டும். அவர்களுடைய வறுமையைக் கண்டு சிறுமைப்படுத்தக்கூடாது. "அண்ணன்" என்ற முறையில் அவர்களுடன் விளையாட்டிலும், பிரார்த்தனையிலும், தொழிலிலும், பள்ளிப் பயணங்களிலும் நெருங்கிப் பழகவேண்டும்; அவர்களுடைய நிறை குறைகளைக் காணவேண்டும்; நிறைகளைப் பாராட்டவேண்டும்; குறைகளை மாற்ற முயலவேண்டும். எந்தெந்த வகையில் மாணவர்களைப் பழக்க ஆசிரியர் முற்படுகின்றாரோ, அந்தந்த வகைகளில் அவர் முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும்.

"வகுப்பில் ஐந்து மணிநேரத் தொடர்பு" என்ற குறுகிய நோக்கம் கொள்ளாமல் மாணவர்களை அவர்கள் இல்லங்களிலும், பிற இடங்களிலும் கூர்ந்து நோக்கிக் குறிப்பு வைக்கவேண்டும். அவர்களுடைய தனித் திறமையைக் கண்டுபிடித்து வளர்க்க முயலவேண்டும்.

உடன் ஆசிரியர்களுடன்:

ஓர் ஆசிரியர் தன் **உடன் ஆசிரியர்களுடன்** சீரிய தொடர்பும் தோழமையும் வைத்துக்கொள்ள வேண்டும். ஆதாரக் கல்வி போட்டி மனப்பான்மையைப் போக்கிக் கூட்டுறவு வேலையை வற்புறுத்துகிறது.

எனவே, அவர் தம் உடன் ஆசிரியர்களுடன் எந்த வகையிலும் போட்டியிடாமல் அவர்களுடன் நட்புக் கொண்டு கூட்டுறவாக வேலைசெய்து பள்ளியின் நற் பெயருக்குப் பாடுபடவேண்டும். எந்தெந்த வகைகளில் வகுப்புக்கள் கூடி வேலைசெய்யலாம்? (விழா நடத்து வது, பள்ளிப் பயணம் போவது, கொடி வணக்கம் செய்வது) எந்தெந்த வகைகளில் எல்லா வகுப்புகளிலும் சேர்ந்து கூட்டாக வேலைசெய்யலாம்? (ஆண்டு விழா, காலைப் பொதுக் கூட்டம்) எந்தெந்த வகைகளில் பிற வகுப்புக்களில் நடக்கும் வேலைகள் தம் வகுப்பிற்கும் பயன்படும் என்று உற்றுநோக்கி, சம்பந்தப்பட்டவர் களுடன் கலந்து ஆலோசித்து ஆவன செய்யலாம்.

ஊர்ப் பொதுமக்களுடன் :

ஊர்ப் பொதுமக்களுடனும் ஆதாரப் பள்ளி ஆசிரியர் சிரிய தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அத்தொடர்பு இருபோக்குள்ளதாக இருக்க வேண்டும். பள்ளியில் கற்பிக்கும் திறமைகள், பழக்க வழக்கங்கள், மனப்பான்மைகள் ஆகியவை பள்ளியோடு நின்றுவிடாமல் மாணவர்களின் இல்லத்துக்கும் பரவ வேண்டும். பள்ளியில் ஒரு குப்பைக் குழி இருப்பது போலத் தன் இல்லத்திலும் ஒன்று அமைத்துக்கொள்ள மாணவர்கள் விரும்புவது இயல்பே. அதற்கு இல்லத்தி லுள்ள பெற்றோரின் இசைவு வேண்டுமல்லவா? தேவைப்பட்டால் அதற்காகப் பெற்றோர்களின் இல்லங் களுக்கு ஆசிரியர்கள் சென்று விஷயங்களை விளக்கி மாணவனின் விருப்பத்தை நிறைவேற்ற உதவ வேண்டும். அதாவது, பள்ளியில் கற்பிக்கும் வேலை இல்லத்திற்கும் பரவ உதவவேண்டும். இது தவிர,

மாணவர்களுடைய நிறை குறைகள்பற்றிப் பேசவும், ஆஜர்க்குறைவு, புத்தகம், நோட்டுப்புத்தகம் இல்லாமை பற்றிப் பேசவும் பெற்ருேர்களிடம் ஆசிரியர் தொடர்பு கொள்ளவேண்டும். மாணவர்களின் தேர்ச்சிபற்றிய குறிப்பை ஆண்டுக்கு ஒன்றிரண்டு முறை பெற்ருேர்க்கு அனுப்பலாம். இது ஒரு போக்கு. மற்ருெரு போக்கு என்னவென்ருல் ஊர்ப் பொதுமக்களைப் பள்ளிக்கு அழைத்து, அவர்களுடன் வேருெரு வகையில் தொடர்பு வைத்துக்கொள்வதாகும்.

பள்ளிக்கு எத்தனையோ தேவைகள் இருக்கலாம். உதாரணமாக, நண்பகலில் ஏழை மாணவர்களுக்கு இலவசமாக உணவளித்தல், ஏழைகளுக்கு உடை அளித்தல், கட்டட விஸ்தரிப்பு, படங்கள், உபகரணங்கள் தேவை, விளையாடுவதற்கு இடமில்லாத குறை, நூல் நிலைய அமைப்பும் விஸ்தரிப்பும் முதலியவற்றைச் சில தேவைகளாகக் குறிக்கலாம். இவற்றில் எந்தெந்த வகையில் பெற்ருேர் உதவக்கூடுமோ அந்தந்த வகையைப் பெற முயலவேண்டும். பள்ளிக்கு இவ்வாறு உதவிபெற நல்ல முறையில் அமைக்கப்பட்ட பெற்ருேர் சங்கம் ஒன்று இன்றியமையாததாகும். தொண்டு மனப்பான்மை, உற்சாகம், செல்வாக்கு ஆகியவைகொண்ட 'பெற்ருேர் சங்கம்' ஒவ்வொரு பள்ளியிலும் நிறுவ வேண்டும். பெற்ருேரின் தொடர்பு ஒழுங்காய் வளர்ந்து பயன்தர அச்சங்கம் மாத மொருமுறை கூடலாம். பெற்ருேர் பலருக்கு ஓய்வு இருக்கும் முழுமதி நாளில் அல்லது அமாவாசை நாளில் இச் சங்கம் பள்ளியில் கூடலாம். அவ்வமயம் மாணவர்களின் களியாட்டம், தொழில் செய்யும் முறை, கைவேலை, பொருட்காட்சி முதலியன ஏற்பாடு செய்து பள்ளி வேலைகளைக்

காட்டலாம். பள்ளியில் நடக்கும் வேலைகளை அறியப் பெற்றோர்க்கு இது ஒரு நல்ல வாய்ப்பு ஆகும். இம் முறையினால் பெற்றோர்களையும் மாணவர்களையும் மகிழ் விக்கலாம்.

மற்றொரு முறையிலும் பொது மக்களின் தொடர் பைப் பயன்படுத்திக்கொள்ளலாம். உள்ளூரிலுள்ள தொழில் வல்லுநர், இசை வல்லுநர், பிற வல்லுநர் களையும் பள்ளிக்கு வரவழைத்துச் செயல்களில் ஈடு படுத்திக்கொள்ளலாம். இதற்குப் பாடத்திட்டம் ஆதரவு அளித்திருக்கிறது. தலைமை ஆசிரியர் வகுக்கும் திட்டப்படி அவர்கள் நடந்துவரவேண்டும். பேச்சாளர் களைப் பேசச் சொல்லலாம்.

பள்ளி நிர்வாகியுடன் :

பள்ளி நிர்வாகியுடனும் ஆசிரியர் சௌஜன்ய மான சீரிய தொடர்பு வைத்துக்கொள்ளவேண்டும். அதற்காக அரசினர் சில விதிகள் இயற்றியுள்ளனர். அவற்றை ஒவ்வொரு ஆசிரியரும் அறிந்து பின்பற்ற வேண்டும். பள்ளியின் முறையான வேலைக்கு நிர்வாகி பொறுப்பாளி. பொதுமக்களுக்கும் அரசினருக்கும் அவர் பொறுப்பாளி. அவர் இந்தப் பொறுப்பை நிறைவேற்ற அவருக்குப் பள்ளி ஆசிரியர்கள் உதவ வேண்டும். அவருக்குப் பண நஷ்டமோ அல்லது வேறு கஷ்டமோ ஏற்படுத்தக்கூடாது. நிர்வாகி – ஆசிரியர் தொடர்பு எழுத்து பூர்வமாகவும், விதிகளின்படி இரு திறத்தாருக்கும் தெளிவாயும் இருக்கவேண்டும்.

வேலைக்கு அமர்த்தும் உத்தரவு எழுத்துபூர்வமாய் இருக்கவேண்டும் அதில் மாதச் சம்பளம் எவ்வளவு,

வேலை நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா என்ற விவரங்கள் குறிக்கப்பட்டிருக்கவேண்டும். தற்காலிகமாய் இருந்தால் வேலை முடியும் காலத்தைக் குறிப்பாய்க் காட்டவேண்டுவது அவசியம். அவ்வுத்தர வின் நகல் ஒன்றைக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும்.

ஒவ்வோர் ஆசிரியரும், வேலையில் சேர்ந்த ஒரு மாத காலத்திற்குள், குறிப்பிடப்பட்ட நமூனுவில் (நிர்வாகி மூலம் அரசினர் கஜானுவில் 12 அணு செலுத்தி, அதற் கான சலானுடன்) ஓர் ஆசிரிய ஊழியர் ரிஜிஸ்தருக்காக விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும். நிர்வாகி, அந்த வட்டப் பள்ளி ஆய்வாளருக்கு அதை அனுப்புவார். நாளடைவில் கல்வி அதிகாரிகளிடமிருந்து அச்சிட்ட ரிஜிஸ்தர் ஒன்று கிடைக்கும். வேலைக்கு அமர்த்தும் போது கொடுத்த உத்தரவிலுள்ள விவரங்களை அதில் பூர்த்தி செய்து நிர்வாகி, ஆசிரியர் ஆகிய இருவரும் அதில் உரிய இடங்களில் கையெழுத்திடவேண்டும். அதுதான் இருவருக்கும் உள்ள ஒப்பந்தம். மூன்று மாத கால முன்னறிவிப்பின்றி இருவரில் எவரும் ஒப்பந் தத்தை முறிக்கக்கூடாது. ஆசிரியர் ஒழுக்கக் குறைவாக நடந்தால் மட்டுமே நிர்வாகி முன்னறிவிப்பின்றி அவரை வேலையினின்றும் நீக்கலாம்.

முறையில்லாதவாறு ஒருவர் ஒப்பந்தத்தை முறித் தால், கஷ்ட நஷ்டமடைந்தவர், கல்வி அதிகாரிகளுக்கு எழுதி நியாயம் வழங்கக் கேட்கலாம். இருதிறத் தாரையும் விசாரித்து, விதிகளின்படி யாரிடம் தவறு இருக்கிறது என அதிகாரிகள் நிர்ணயித்து ஆவன செய்வார்கள்.

ஒவ்வொரு ஆசிரியரும் (ஒரு மாத காலத்திற்குத் தற்காலிகமாக வேலைசெய்வோர் தவிர) அவர் அமர்த்தப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் ஆசிரிய ஊழியர் ரிஜிஸ்தர் ஒன்றுக்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். தவறினால் அவருக்காக வழங்கப்படும் அரசினர் பணஉதவி (கிராண்டு) கிடைக்காது.

ஊழிய ரிஜிஸ்தர் ஆசியரின் உடைமையாகும். அது அவரிடத்தில் இருக்கவேண்டும். தணிக்கையாளர் கேட்கும்போது அதைக் காட்டவேண்டும். ஆசிரியர் உரிமை லீவு எடுத்தால் அதில் பதிவுசெய்யவேண்டும். ஆசிரியரின் சம்பள ஏற்றத்தை அதில் ஆண்டுக்கொரு முறை குறிக்கவேண்டும்.

ஆசிரியர் ஒரு பள்ளியிலிருந்து வேறு பள்ளிக்கு மாறிப்போனால் அம்மாறுதல் சம்பந்தமான பதிவுகளையும், உரிமை லீவு, அவ்வாண்டில் எடுத்த சிறு விடுதி ஆகியவற்றையும் ஊழிய ரிஜிஸ்தரில் குறித்து, சம்பந்தப்பட்ட பள்ளி ஆய்வாளரிடம் கொடுத்துக் கையெழுத்துப் பெறவேண்டும்.

ஆதாரத் தொழிலில் திறமை : ஆதாரப் பள்ளியில் ஒரு தொழில் கற்பிப்பதன் மூலமாகப் போதனை நடைபெறவேண்டும். எனவே, ஆசிரியருக்கு அத்தொழிலில் உள்ள ஒவ்வொரு உட்பகுதியிலும் நுட்பமான திறமை அவசியம் எனச் சொல்லத் தேவையில்லை. செயல் செய்யும் திறமை மட்டும் தெரிந்திருந்தால் போதாது. ஒவ்வொரு பகுதியின் ஏன், எப்படி என்ற விஞ்ஞான விஷயங்களும், பொது விஷயங்களும் தெரியவேண்டும். தொழில் கற்பிக்கும் விஷயத்தில் வேறு மூன்று உறுப்புக்களும் உள்ளன :

1. தொழில் கற்பிக்கும்போது அறிவு வளருகிறது என்ற நோக்கத்தோடு கற்பிக்கவேண்டும்.

2. அறிவும் திறமையுமில்லாத சிறுவர் சிறுமியருக்குக் கற்பிக்கிறோம் என்பதை நினைவில் இருத்தவேண்டும்.

3. 20, 30 மாணவர்கள் கொண்ட ஒரு வகுப்பிற்குக் கற்பிக்கிறோம் என்பதை மறக்கக்கூடாது.

தொழிலாளிகள் சிலர் தம் தொழிலை நன்றாய்ச் செய்வார்கள். ஆனால் தாம் செய்வதை விளக்கவோ, பிறருக்கு, முக்கியமாக, ஒரு சிறுவனுக்குக் கற்பிக்கவோ அவர்களுக்குத் தெரியாது. ஆசிரியர் அம்மாதிரியான நிலையில் இருக்கக்கூடாது.

ஒவ்வொரு செயலிலும் உள்ள உட்பகுதிகளைக் குறித்துக்கொண்டு, ஒவ்வொரு நுணுக்கத்தையும் கூர்ந்து கவனித்து, குறைகளைக் கண்டு, குறையின் காரணத்தை விஞ்ஞான ரீதியாக எளிய முறையில் விளக்கித் திறமைபெறச் செய்யவேண்டும்.

மேற்சொன்ன பொறுப்புக்களை நிறைவேற்ற அவர் கீழ்க்கண்டவாறு செய்யவேண்டும்:

1. ஒழுங்கான முறையில் ஒவ்வொரு சிறு சிறு நுணுக்கத்தைப்பற்றியும் பதிவு வைக்கவேண்டும்.

2. மாணவர்களையே செய்விக்கவேண்டும்; ஆசிரியரே செய்துகொண்டிருக்கக்கூடாது.

3. தாம் செய்தவற்றைத் தாம் வைத்திருக்கும் குறிப்பிலிருந்து எளிய மொழியில் சொல்லவும், எழுதவும் செய்யவேண்டும்.

4. மாணவர்கள் செய்தபிறகு ஆசிரியர் மற்றொரு முறை செய்துகாட்டவேண்டும்.

5. பிறகு தனித்தனியாகவும், கூட்டாகவும் மாணவர்களைச் செய்விக்கவேண்டும்.

6. நுணுக்கங்களை மறக்கக்கூடாது. நுணுக்கத்தைப்பற்றிய விஞ்ஞான அறிவே திறமைக்கு அடிப்படை.

ஆதாரத் தொழிலில் ஆசிரியருக்குத் திறமை மட்டும் போதாது; புலமையும் வேண்டும்.

புலமை : கலைத்திட்டத்தின்படி எங்கெந்த விஷயங்களைக் கற்பிக்கவேண்டுமோ அவற்றில் ஆசிரியர்கள் புலமை பெற்றிருக்கவேண்டும். எனவே தாய்மொழி, ஆதாரத் தொழில், ஹிந்தி, சமூகப் பாடங்கள், பொது விஞ்ஞானம் ஆகியவற்றில் அவருக்குப் புலமை வேண்டும். ஆதாரத் தொழிலைப்பற்றி மேலே தனியாகக் கூறப்பட்டுள்ளது. புலமை என்று இங்கு நாம் சொல்லும்போது மாணவர்களுக்குத் தெளிவாகப் போதிக்கப் போதுமான அறிவு விரிவையும், சொல்வன்மையையும் குறிக்கிறோம். ஆதாரக் கல்வித் திட்டத்தில் பாடங்களைத் தனித்தனியாகக் கற்பிப்பதில்லை. ஏதாவதொரு செயல் செய்யும்போது எழும் பிரச்சினைகளையொட்டியே பாடங்களை இயைபுபடுத்துகிறோம். அப்படிச் செய்வதற்குப் பரந்த அறிவு தேவை. தவிர, அறிவோடுகூடப் பழக்க வழக்கங்களையும், மனப்பான்மைகளையும் ஆசிரியர் ஏற்படுத்தவேண்டும். எனவே, பரந்த அறிவும், சரியான செய்தியை உரிய தருணத்தில் கற்பிக்கும் சமயோசித புத்தியும் அவருக்கு இல்லாவிடில் இயைபு முறை வெற்றி தராது. எனவே, ஓர் ஆதார ஆசிரியருக்கு ஆழ்ந்த, பரந்த அறிவு இன்றியமையாததாகிறது.

ஆசிரியத் தொழிலுக்கான பயிற்சி: ஆசிரியத் தொழிலுக்குப் பயிற்சி அவசியமா என்றுகூடச் சிலர் ஐயுறுவதுண்டு. தவிர, அப்படியே பயிற்சி தேவைப் பட்டாலும் இருபத்தொன்று திங்கட்காலம் எதற்கு எனச் சிலர் வினவுவதுண்டு. பல்லாண்டு அநுபவத்தி லிருந்து பள்ளிக்கூடத்தில் கற்பிக்க ஆசிரியர்களுக்கு ஈராண்டுப் பயிற்சி அவசியமென நிரூபிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலக யுத்த காலத்தில் (1939 — 1945) செகண்டரி கிரேடு (Secondary Grade) ஆசிரியப் பயிற்சியை ஓராண்டுக் காலமாகப் பரீட்சார்த்தமாகக் குறைக்கப்பட்டது. அவ்வாறு குறைந்த காலப் பயிற்சி ஒரே ஒரு ஆண்டில்மட்டுமே நடந்தது. ஓராண்டுப் பயிற்சியினுல் ஆசிரியர்களின் தரம் குறைந்துவிட்டது என்று பலரால் குறை கூறப்பட்டது. பயிற்சிக் காலத் தைக் குறைக்கும் எண்ணம் அதோடு கைவிடப்பட்டது.

கணக்கு நன்ருய்த் தெரிவது வேறு; கணக்கை மாணவர்கள் நன்ருய்த் தெரிந்துகொள்ளும்படி போதிப் பது வேறு. விளையாடுவது வேறு; விளையாட்டைக் கற்பிப்பது வேறு.

கல்வி கற்பித்தல் என்பது ஒரு கலை. சிறுவர் களின் நடத்தையில் வேண்டத்தக்க மாறுதல் கள் ஏற்படுமாறு பிரதிவினைகள் ஏற்படுத்தும் திறமை, அவர்களைச் சிந்திக்கத் தூண்டும் திறமை, அவ்வாறு சிந்திக்கத் தூண்டுவதால் மேலே சொன்ன நடத்தை மாறுதல்களை நிலைத்து நிற்கச்செய்யும் திறமை, மாணவர்களின் நடத்தைக்கு வழி அமைக்குந் திறமை, மேலும் மேலும் உயர்ந்த குறிக்கோள்களை அமைத்துக்கொடுக்கும் திறமை ஆகிய பல திறமைகள்

ஆசிரியரிடம் அமையவேண்டும். இது ஒரு கடினமான கலை; மனிதப் பண்புமிக்க கலை; எனவேதான், கல்வி பயிற்றத் தனி ஆர்வம் வேண்டும். கற்றறிந்தவர் எல்லோருமே நல்லாசிரியராகார். ஆகவே, ஆதாரப் பள்ளிகளில் வேலைசெய்யும் ஆசிரியர்களுக்குப் போதிய பயிற்சி இன்றியமையாதது.

புரட்சிகரமான நோக்கங்களையும், புரட்சிகரமான போதனை முறைகளையும் கொண்ட ஆதாரக் கல்வித் திட்டத்தில் ஆசிரியர்களுக்குக் கொடுக்கவேண்டிய பயிற்சி முறையிலும் புரட்சி தேவைதானே! ஆசிரியர் பயிற்சியில் பின்வரும் மூன்று புரட்சிகள் தேவை என்று ஸ்ரீமதி ஆஷாதேவி அரியநாயகம் அவர்கள் மிக அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்கள். அவையாவன: 1. சரீரப் புரட்சி, 2. மானசீகப் புரட்சி, 3. ஆத்மீகப் புரட்சி.

சரீரப் புரட்சி: இதுவரை ஆசிரியர் உடலால் நீண்ட நேரம் உழைக்கவேண்டுமென்ற நியதி இல்லை. பாடத்தை அவர் ஒழுங்காய்ப் போதித்தால் போதும். ஆனால், ஆதாரப் பள்ளியில் ஆசிரியர்கள் எல்லாவற்றிலும் மாணவர்களுக்கு வழிகாட்டியாக உழைக்க வேண்டும். தோட்டத்தில் தமக்கு எனப் பாத்திகள் ஒதுக்கிக்கொண்டு மாணவர்களுடன் கொத்தவேண்டும்; நீர் இறைத்துப் பாய்ச்சவேண்டும்; மாணவர்களைப் போலவே மாதமொன்றுக்கு 8 சிட்டம் நூல் நூற்க வேண்டும்; தறியில் உட்கார்ந்து துணி நெய்யவேண்டும்; வாரமொருமுறை அருகிலுள்ள இடங்களுக்குக் கல்விப் பயணம் போதல்வேண்டும்; பேசுவதைக் குறைத்துக் கொண்டு செயலில் ஈடுபட்டு ஆர்வத்துடன் உழைக்க வேண்டும்; நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் வேலை

செய்தல்வேண்டும். அதில் உடல் வேலைக்குக் கணிச மான நேரம் ஒதுக்கவேண்டும். எனவே, உடலுழைப்பு மிக அவசியம். உடலுழைப்பு வேலைக்குச் சிறுமையில்லை என்ற புரட்சிகரமான மனப்பான்மை இல்லாதவர் ஆதார ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்குத் தகுதி இல்லை. உழைப்பை உவகையுடன் ஏற்கவேண்டும். மன மொத்து உழைப்பிற்கு உதவவேண்டும்.

"உண்பவன் உழைக்கவேண்டும்;
உடுப்பவன் நூற்கவேண்டும்"

என்ற மனப்பான்மை ஆசிரியரிடம் உறுதியா யிருக்க வேண்டும். இதுதான் சரீரப் புரட்சி.

மானசீகப் புரட்சி: நம் மனத்தில் கல்வியைப் பற்றிச் சில கருத்துக்கள் வேரூன்றியுள்ளன. அவற்றை அறவே மறந்து அதற்கு நேர்மாறான கருத்துக் களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற புரட்சி கரமான மாறுதலையே மானசீகப் புரட்சி என்று குறிக்கிறோம். ஓர் உதாரணத்தால் இதை விளக்கலாம். இது வரை பள்ளிகளில் புத்தகங்களின் வாயிலாகவே போதனை நடத்திவருகிறோம். அவற்றின் மூலமே மாணவரிடம் ஏற்படத் திட்டமிட்டுள்ள நல்ல பண்பு களும் பண்பாடும் ஏற்படக்கூடும் என எண்ணுகிறோம். தொழிலைப்பற்றி அவ்வளவு நல்ல மதிப்பு நம்மிடம் இல்லை. அது அறவே மாறவேண்டும். ஆதாரக் கல்வித் திட்டத்தில் ஆதாரத் தொழில் பிரதானம். ஒரு தொழிலைச் செய்வதன்மூலம் எல்லா நற்பண்புகளும் ஏற்படக்கூடும் என்று நம்மிடம் உறுதியான எண்ணம் உதயமாகவேண்டும். தொழிலாளியிடம் தன்னாட்சி இருக்கிறது. அதை நாம் நம்புவதில்லை.

அதிகமான மொழி நூல்கள் படித்து அறிவு பெறுவதையே பண்பாடு என எண்ணியிருக்கிறோம். இந்த எண்ணம் மாறவேண்டும். தொழிலை விஞ்ஞான முறையில் செய்வதாலும் உடல், உள்ள, ஆன்மப் பண்புகள் வளரும் என்ற நோக்கு நம்மிடம் ஏற்பட வேண்டும். இதுதான் மானசீகப் புரட்சி.

ஆத்மீகப் புரட்சி : நாம் தன்னலம் மிகுந்தவர்களா யிருக்கிறோம். தன்னலத்திற்காகச் சில வேளைகளில் கடமைகளையும் நேர்மையையும் கைவிட்டுவிடுகிறோம். '**தான்**' என்ற அகந்தையை மறந்து சமூகத்திற்கு நலம் கருதுகிறவர்களின் போக்கே தனிப்பட்டது. தன்னலம் மறந்து பிறர் நலம் பேணும் பண்பு மிக உயர்ந்தது. மாணவர்களிடம் வளர்க்கப்படவேண்டிய நற்பண்பு களில் இதுவும் ஒன்று. இந்திய நாடு இத்தகைய தியாகப் பண்பையே நாளிதுவரை போற்றிக் காத்துவந் துள்ளது. அதனால் நம் நாட்டைத் 'தியாக பூமி' என்றும் குறிப்பதுண்டு. ஆதாரப் பள்ளி ஆசிரியரிடம் இந்த இந்திய தேசியப்பண்பு, இந்தத் தன்னலம் மறக்கும் புரட்சிகரமான மாறுதல் ஏற்படவேண்டும். இதைத் தான் 'ஆத்மீகப் புரட்சி' எனக் குறிக்கிறார்கள். சமூக சேவை, ஹரிஜன சேவை, மௌன நூற்பு முதலிய வேலைகள் ஆத்மீகப் புரட்சி அம்சம் கொண்டவை. வெளி நாடுகளிலிருந்து வரும் பாதிரிமார்களின் கல்வித் தொண்டை மானசீகப் புரட்சிக்கு எடுத்துக்காட்டலாம்.

ஆசிரியப் பயிற்சியில் போதனா முறைப் பயிற்சியையே முதன்மையாகக் கருதுவது வழக்கம். மேலே கூறியுள்ள மூன்றுவகைப் புரட்சிகளும் அதை விட முக்கியமானவை.

ஆதார ஆசிரியரின் வாழ்க்கை போக வாழ்க்கையா? யோக வாழ்க்கையா? (Missionary zeal or Pleasure-Profit pursuit?)

ஆதார ஆசிரியருக்கு ஒரு திடமான, தெளிவான வாழ்க்கைக் குறிக்கோள் அவசியம். தம் வேலை மூலம் தாம் விரும்புவது யோக வாழ்க்கையா அல்லது போக வாழ்க்கையா என்று ஆசிரியர் உறுதிசெய்துகொள்ள வேண்டும். குறிக்கோள்களைச் சரிவர நிர்ணயித்துக் கொள்ளாத ஆசிரியர் தம் வேலையைச் செவ்வையாய்ச் செய்ய இயலாது.

தொண்டும், உழைப்பும், எளிய ஊதியமும் எதிர்பார்க்கப்படும் ஆதாரக் கல்வித் திட்டத்தில் போக வாழ்க்கைக்கு இடமில்லை. வாழ்க்கையிலுள்ள பலவகை இன்பங்களைத் துய்க்க ஆசிரியரின் சொற்ப ஊதியம் இடந்தரரது. குழந்தைகளோடு இனிமையாகப் பழகுவதும், அவரவர்களுக்குப் பயிற்சி அளிப்பதும், அவர்களது தனித் திறமைகளைக் கண்டுபிடித்து அவற்றைப் பயிற்ற முயலுவதும் ஆகிய வேலைகளையே இன்பமாகக் கருதுபவரே ஆதார ஆசிரியப் பயிற்சிப் பள்ளிக்குத் தகுதியுள்ளவராவார்.

மாணவர்களுக்குத் தோழனாகவும், வழிகாட்டியாகவும், அநுபவமிக்க அண்ணனாகவும் சேவை செய்யும் வாழ்க்கையையே யோக வாழ்க்கை என இங்குக் குறிக்கிறோம். அதிக ஊதியம் பெறும் பிற தொழிலாளிகளோடு தம் பொருளாதார நிலையை ஒப்பிட்டு மனச்சோர்புறுபவர்கள் ஆதாரப் பள்ளிக்கு வருவது தற்கால நிலையில் உசிதமில்லை.

பயிற்சியாளர் பயிற்சி பெறும்போதே சம்பாதிக்குந் திறன் பெறவேண்டும். பணக்காரர்கள் கூட வேலைசெய்து பணம் சம்பாதித்தல்வேண்டும். பேச்சைக் குறைத்துக்கொண்டு வேலையை இயன்ற அளவு நிறையச் செய்யவேண்டும்.

'தொழிற் கல்வி,' 'தொழில் மூலம் கல்வி,' 'தொழிலும் கல்வியும்' என்ற முறைகளின் அடிப்படை வேறுபாடுகளை நன்கு அறிந்துகொள்ளவேண்டும். ஆதாரக் கல்வி என்பது **தொழில் மூலம் கல்வியே** ஆகும்.

தொழில்பற்றிய கீழ்க்கண்ட நான்கு தத்துவங்களைப் பயிற்சியாளர் அறியவேண்டும்:

(1) தொழிலாளி நம்பிக்கைக்குப் பாத்திரமாகிறான்.

(2) தொழிலால் விஞ்ஞான மனப்பான்மையை வளர்க்க வசதி மிகுதி.

(3) ஆசிரியருக்குத் தொழிலில் திறமை அதிகம் தேவை. தொழிலைத் தெரிந்திருந்தால் மட்டும் போதாது.

(4) தொழில் லாபத்திற்கல்ல; உற்பத்திப்பொருள்களைப் பயன்படுத்துவதற்கு.

ஆசிரியர்க்கான பயிற்சியில் குழந்தைகளுடன் பழகி ஒவ்வொரு குழந்தையைப்பற்றியும் குறிப்பு வைப்பது, இயைபு முறையில் பாடம் போதிப்பது ஆகியவை போன்றவை மிக முக்கியமானவை. தவிர விளையாட்டு, கலைப் பயிற்சி, சித்திரம் வரைதல், வர்ணம் தீட்டுதல் ஆகியவற்றிலும் அவர் பயிற்சிபெறுதல் வேண்டும்.

ஆசிரியருக்கான பயிற்சியில் கீழ்க்கண்டவற்றைக் கற்பிக்கவேண்டும் எனக் கருதப்படுகிறது:

1. குழந்தை உளநூல்
2. ஆதாரக் கல்வித் தத்துவங்களும் திட்டமும்
3. ஆதாரக் கல்விப் பயிற்சி முறை
4. கல்வியின் வரலாறு
5. விளையாட்டு
6. உடற் பயிற்சி
7. கலைப் பயிற்சி (இசை, நடனம் நாடகம், சித்திரம் வரைதல், வர்ணம் தீட்டுதல்)
8. நாட்டுப் பற்று

ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் இவையெல்லாம் கற்பிக்கப்படுகின்றன.

நாட்டுப் பற்று: இதுவும் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் முக்கியமான இடம்பெற்றிருக்கிறது. பற்று என்பது இயல்பூக்கங்களில் ஒருமைப்பாடாகும். நாட்டுப் பற்று ஏற்படுத்தக் கிராம சேவை, கொடி வணக்கம், தேசீய விழாக்கள் ஆகிய செயல்கள் உதவும்.

"பயிற்சிக் காலத்தில் ஒவ்வொருவரும் 100 கிராமங்களைப் பார்வையிட்டிருக்கவேண்டும். 10 கிராமங்களில் தொண்டு செய்திருக்கவேண்டும். ஒரு கிராமத்தைச் சிறப்பாக மாற்றியமைத்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் நாட்டுப் பற்று ஏற்படும்." நாட்டுப்பற்று என்றால் நாட்டு மக்களின்பால் பற்று எனப் பொருள் கொள்ளலாம்.

இரு வாரங்களுக் கொருமுறை கிராமசேவை செய்யலாம்.

வாரந்தோறும் நடக்கும் கொடி வணக்கத்தின் மூலமும் நாட்டுக்கு உழைத்த பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறி ஊக்கம் அளிக்கலாம்.

உதவிஆசிரியர்களின் கடமைகள்

இவற்றைப் பின்வருமாறு கூறலாம் :

1. தாம் வேலைசெய்யும் பள்ளியின் சட்டதிட்ட நிலைமைகளுக்குத் தம்மை அநுசரித்துக்கொள்ள வேண்டும்.

2. ஆண்டு, மாதக் காலப் பகுதிகளுக்கேற்ற திட்டத்தை முன்கூட்டியே தயாரித்துக்கொள்ள வேண்டும். நடைமுறையில் அதைப் பின்பற்றி நடக்கச் செயல்திட்டம் எழுதிவரவேண்டும்.

3. மாணவர்களுடன் கலந்து திட்டமிட வேண்டும்.

4. உபகரணங்கள், படங்கள், கட்டுரைகள் முதலியவற்ருல் போதனையை வளப்படுத்தவேண்டும்.

5. வகுப்பறைத் துப்புரவு, வகுப்பு அலங்காரம், குடிநீர் வசதி இவற்றை நாள்தோறும் கவனிக்க வேண்டும்.

6. விதிகளுக்கிணங்கத் தாம் வைக்கவேண்டிய ரிஜிஸ்தர்களையும், பிற பதிவுகளையும் குறிப்புக்களையும் ஒழுங்காகவும், உண்மையாகவும், கலையாயும் வைக்க வேண்டும்.

7. அவ்வப்போது சோதனைகள் நடத்தித் தம் குறை, மாணவர் குறை ஆகியவற்றைத் திருத்திக் கொள்ள முயலவேண்டும்.

8. மாணவர்களை உற்றுநோக்கி, குறிப்புக்கள் வைத்து, அவர்களின் முழு வளர்ச்சிக்கு அவற்றைப் பயன்படுத்தி, மேல்வகுப்புக்கு அவர்கள் மாற்றப் படும்போது அக்குறிப்புக்களைச் சம்பந்தப்பட்ட ஆசிரியரிடம் ஒப்படைக்கவேண்டும்.

9. திங்கள்தோறும் பள்ளியில் நடக்கும் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தம் பிரச்சினைகளைக் கூறவேண்டும். பிறர் கொண்டுவரும் பிரச்சினைகளை அலசிப் பார்த்து யோசனை கூறவேண்டும். ஐயங்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

10. திங்கள்தோறும் நடக்கும் ஆதாரப் பள்ளி வட்ட ஆசிரியர் கூட்டத்தில் அவ்வாறே பங்கெடுத்துக் கொள்ளவேண்டும்.

11. தம் முன்னேற்றத்திற்கு ஒழுங்காகத் திட்ட மிட்டு ஆவன செய்தவாறே இருக்கவேண்டும்.

12. தலைமை ஆசிரியர், நிர்வாகி, பெற்றோர் ஆகியவருடன் சீரான தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும்.

13. எல்லா அம்சங்களிலும் முன்மாதிரியாக நடந்துகொள்ளவேண்டும்.

14. தம் வளர்ச்சியை அவ்வப்போது அளவு எடுத்துக்கொள்ளவேண்டும்; அதன்மூலம் தம்மைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

15. வகுப்பு மாணவர்களைப்போல் வாரத்திற்கு 2 சிட்டம் நூல் நூற்பதுடன், நூற்பு சம்பந்தமான கணக்குகளையும் முறையாய் வைக்கவேண்டும். இது டைரெக்டர் அவர்களின் உத்தரவு.

தலைமை ஆசிரியரின் கடமைகள் :

தலைமை ஆசிரியர் அறிவிலும் அநுபவத்திலும் மிகுந்தவர். பள்ளி என்ற குடும்பத்திற்கு அவர் தலைவராவார். எண்ணெய் இட்ட இயந்திரப் பகுதிகள் இனிமையாய் இயங்குவதைப்போல் பள்ளியின் பல திறப்பட்ட வேலைகள் இனிதாய் நடக்க ஆவன செய்ய வேண்டியது அவர் பொறுப்பாகும். பள்ளி சம்பந்த மாக அரசினருக்கும், நிர்வாகிக்கும், பெற்றோருக்கும் அவரே பொறுப்பாளி. அவர் உதவி ஆசிரியர்களுடன் சுமுகமாய்ப் பழகவேண்டும். அவர்களது விருப்பமான கூட்டுறவை நிரந்தரமாய்ப் பெற உபாயங்கள் தேடிய வாறே இருக்கவேண்டும். பள்ளி வேலைகளைத் திறம்பட நடத்திப் பள்ளிக்கும் ஊருக்கும் நற்பெயர் வாங்கித்தர முயலவேண்டும். பள்ளியின் நிலை தலைமை ஆசிரியரின் நடத்தையால் பெரிதும் பாதிக்கப்படும். எனவே அவரது வேலை மிகப் பொறுப்புள்ளது. அவர் தலைமைப் பண்புகள் உள்ளவராயிருக்கவேண்டும். தலைமை ஆசிரியரின் கடமைகளைக் கீழ்க்கண்ட மூன்று அம்சங் களில் பிரித்துக் காட்டலாம் :

1. ஆசிரியர் என்ற முறையில்,

2. மேற்பார்வையாளர் என்ற முறையில்,

3. பள்ளி வேலைகளை அமைத்து நடத்துபவர், அதாவது அமைப்பாளர் என்ற முறையில். (மூன்று அம்சங்களும் சேர்ந்தும், தனித்தும் வரும்.)

தலைமை ஆசிரியரும் மாணவர்களுக்குச் செயல் கற்பிக்கும் ஓர் ஆசிரியர். எனவே **ஆசிரியர் என்ற முறையில்** “உதவி ஆசிரியர்களின் கடமைகள்” என்று

முன்னமே விவரிக்கப்பட்ட அனைத்தும் அப்படியே தலைமை ஆசிரியருக்கும் பொருந்தும். தவிர, தலைமை ஆசிரியருக்கு அதிகப்படியான சில பழக்க வழக்கங் களையும் குறிப்பிடவேண்டும்.

அநுபவம் மிகுந்த அவருக்குப் போதனை முறைகளை மேலும் சிறப்பாக்கும் ஆராய்ச்சிகளில் ஆர்வம் இருக்க வேண்டும். தவிர, பள்ளி சம்பந்தமான எந்த வேலைக்கும் அவர் தயாராயிருக்கவேண்டும். அவருடைய ஆர்வம், உற்சாகம், விநயம், மகிழ்ச்சி, உழைப்பு எல்லாம் "ஒட்டுவாரொட்டி" போல உதவி ஆசிரியர்களையும், மாணவர்களையும் பற்றிக்கொள்ளும் வல்லமை பொருந் தியனவாயிருக்கவேண்டும்.

மேற்பார்வையாளர் என்ற முறையில் அவரது வேலை மிகக் கடினமானது; கரடுமுரடானது. இந்த முறையின் கீழ்த் தம் கடமைகளைச் சரிவர அவர் அறியாவிட்டால் பள்ளியின் பெயரும் ஒழுங்கும் பாழ்படும். தோழமை, அன்பு, ஆக்கவேலை, தன்னடக்கம், உறுதி என்ற அடிப் படையில் அவர் மேற்பார்வையிடவேண்டும்.

அவர் மேற்பார்வையிடவேண்டிய அம்சங்களாவன:

1. உதவி ஆசிரியர்களின் வேலைகள்,
2. மாணவர்களின் வேலைகள்,
3. பள்ளித் துப்புரவு, அழகு, ஒழுங்கு, அமைதி;
4. பள்ளிச் சாமான்கள், அறைகள், தோட்டம், கக்கூசு போன்ற இடங்கள் முதலியன.

எதையும் அவர் அதிகார முறையில் மேற்பார்வை யிடக்கூடாது; அன்பு முறையில் நோக்கவேண்டும். ஆக்கம் தரும் முறையில் (Creative Supervision) அவரது யோசனைகள் அமையவேண்டும். "இது

சொத்தை, சொள்ளை ” என்று எப்பொழுதும் குற்றங் காணும் குணம் நல்லதன்று. தாமே குறைகளைத் திருத்திக் காட்டவேண்டும். பிறரது நிறைகளை மன மாரப் பாராட்டுவது மேற்பார்வையிடுவதன் வெற்றி இரகசியம். ஆதாரப் பள்ளியில் பள்ளிச் சமூகம் ஜனநாயக முறையில் அமைக்கப்பட்டிருக்கும். எனவே, அவரது மேற்பார்வை மிகக் கடினமாகும். பிறரது சுதந்திரத்தில் முரட்டுத்தனமாய்க் குறுக்கிடக் கூடாது. பிறர் மனத்தைப் புண்படுத்துமாறு சொல்லவோ, செய்யவோ கூடாது. உதவிஆசிரியர் களின் நம்பிக்கைக்கும் மரியாதைக்கும் பாத்திரமா யிருக்கவேண்டும். காட்சிக்கெளியராயும், கடுஞ்சொல்ல ரல்லராயும் இருக்கவேண்டும்.

ஆனல் காரியத்தில் விதிகளைத் தளர்த்தவோ, அடிப்படைத் தத்துவங்களை மாற்றுவதோ கூடவே கூடாது. அது தலைமைக்குக் கேடு விளைவிக்கும். எல்லா விஷயங்களிலும் சகாக்களையும், மாணவர்களையும் கலந்து திட்டமிடவேண்டும். தம் சிறந்த கருத்துக் களையும், திட்டங்களையும் பிறர் வாயிலிருந்து வருவித்து அவர்களுக்கு ஏற்றமளித்து ஒரு திட்டத்தை உருவாக்கு வது ஒரு தனிக் கலையாகும். தாமே எல்லா வேலையையும் எடுத்துச் செய்யக்கூடாது. உதவி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அப் பொறுப்புக்களைப் பகிர்ந்து அளிப்பதே சிறந்த முறையாகும். ஒவ்வொருவருடைய விருப்பம், வசதி, திறமை முதலியவற்றை அவர் நன்கு அறிந்திருக்கவேண்டும்.

“ இதனை இவனல் இவன்முடிக்கும் எனவாய்ந்து
அதனை அவன்கண் விடல்.”

என்ற வள்ளுவர் வாக்கு தலைமை ஆசிரியருக்கும் பொருந்தும்.

தம் திறமையினால் ஒரு வேலையில் புகழ் வந்தாலுங் கூட "உதவி ஆசிரியர்களின் திறமையாலும், ஒத்துழைப்பாலும் அது கிடைத்தது" என அவர்களைப் பாராட்ட வேண்டும். எதிர்பாராத வண்ணமாய் ஒரு தவறு நடந்துவிட்டால், அதற்கான பழியை உதவி ஆசிரியர்களின்மீது தள்ளப் பார்க்கக்கூடாது. "திட்டமிடும் போது முன்யோசனையின்றி நான் நடந்துவிட்டேன். ஒரு சிறு நுணுக்கத்தை மறந்துவிட்டேன். ஆதலால் குறைக்கு நானே முழுப் பொறுப்பாளி" எனத் தம்மையே குற்றஞ் சாட்டிக்கொள்ளவேண்டும். இது ஒரு தலைவரின் சிறந்த பண்பாகும்.

பள்ளி மாணவர்களிடமும் அன்பாய், ஆனால் உறுதியாய் நடந்துகொள்ளவேண்டும். சட்ட திட்டங்களுக்கு மாணவர்களை உட்பட்டு, அவர்கள் அகத்திலிருந்தே கட்டுப்பாடு உதயமாகுமாறு தலைமை ஆசிரியர் நடந்துகொள்ளவேண்டும்.

பள்ளிக் கக்கூசு, குப்பைக் குழி முதலியவற்றைத் தாமே நேரில் அடிக்கடி மேற்பார்வையிட்டு ஆவன செய்யவேண்டும்.

அமைப்பாளர் என்ற முறையில் தலைமை ஆசிரியரின் கடமைகள் பலதிறப்பட்டன. பின்வரும் தலைப்புக்களில் அவை பரவிக் கிடக்கின்றன :

1. பள்ளிக் கடிதப் போக்குவரத்து.
2. பள்ளி வரவு செலவுக் கணக்கு.
3. பள்ளிப் பொருள்களின் காப்பு.
4. பள்ளி ரிஜிஸ்தர்கள், பதிவுகள்.

5. பள்ளி ஆண்டுத் தணிக்கை, பார்வையாளர் விஜயம், பெற்ரோர் சங்கக் கூட்டம், பொது விழாக் கொண்டாட்டம் முதலியவற்றிற்கு ஏற்பாடு.

6. ஆண்டுத் திட்டங்கள். [போதனை வேலை, விடுமுறை, புத்தகம் தேர்ந்தெடுப்பது, கல்விப் பயணம், வகுப்புக் கால அட்டவணை, பரீட்சைச் சோதனைகள், ஆராய்ச்சிகள் முதலியன.]

7. பள்ளி முழுவதும் செயற்படும் அலுவல்கள். [தினசரி காலைப் பொதுக்கூட்டம், நாடகம் நடத்துதல், கிராம சேவை, பொதுத் துப்புரவு]

8. கண்காட்சி நடத்துவது.

9. நண்பகல் இலவச உணவளிப்பிற்கு உதவுவது.

10. உள்ளூர் வல்லுநர்களைப் பள்ளி வேலைகளுக்கு உதவுமாறு அழைப்பது.

11. ஊரிலுள்ள படிக்க லாயக்குள்ள சிறுவர்களின் கணக்கெடுப்பது.

12. மாதமொரு முறை பள்ளி ஆசிரியர்களைக் கூட்டித் திட்டமிடுவதும், பொது விஷயங்களைப்பற்றி விவாதிப்பதும், உற்பத்தி விஷயங்களைப் பெருக்க வழி வகுப்பதும்.

13. பள்ளியின் பலதிறப்பட்ட வளர்ச்சிக்குத் திட்டமிடுவதும், உதவி நாடுவதும்.

ஒவ்வொன்றையும் சீரிய முறையில் அமைத்து நடத்தி வெற்றியுடன் முடிப்பது தலைமை ஆசிரியரின் பெரும் பொறுப்பாகும். அப் பொறுப்பை அவர் பொறுமையுடனும் தொண்டு மனப்பான்மையுடனும் நிறைவேற்றவேண்டும்.

சுய முன்னேற்றம் : ஆசிரியப் பயிற்சி முடிந்து தேர்வுச் சான்றிதழ் பெற்றதும் ஆசிரியர் புதிதாகக் கற்கவேண்டியவை ஒன்றுமில்லை என எண்ணுவது தவறு உண்மையை ஆராய்ந்தால் மாணவர்களுக்கு நிரந்தரமாய்ப் போதிக்கும் வேலையில் இறங்கும் தருணத்திலிருந்துதான் ஆசிரியர் கற்கவேண்டியவை தொடங்குகிறதென்னலாம். ஆசிரியப் பயிற்சிக் காலத்தில் அவர் பெற்ற பயிற்சியானது கட்டடம் கட்டும் வேலை ஒன்றில் ஓர் இடம் தேர்ந்து அடித்தளம் அமைப்பதை ஒக்கும். மேற்கட்டட வேலை இனித்தான் எழுப்பவேண்டும். பயிற்சிக் காலத்தில் எல்லாப் பகுதிகளையும் கற்றிருக்க முடியாது. கற்ற விஷயங்களில் சில நுணுக்கங்களைக் கற்றிருக்க முடியாது. நடைமுறையில் தொடர்ந்து போதிக்கும்போதுதான் எதிர்பாராத புதிய சிக்கல்கள் எழும். இனிமேல்தான் அவர் பூரண ஆசிரியராக வளர்ச்சி பெறவேண்டும். குருட்டுப் பாதையிலேயே செல்லாமலிருக்க அவர் தம் சுய முன்னேற்றத்தில் கண்ணுங் கருத்துமாய் இருக்க வேண்டும். அவர் மேலும் மேலும் போதனை முறை ஆராய்ச்சியிலும், மாணவர் எனும் பெரும் புதிரைப் புரிந்துகொள்வதிலும் கற்றவாறே, புதிய அநுபவங்கள் பெற்றவாறே யிருக்கவேண்டும். இல்லாவிடில் அவரது போதனை கவர்ச்சி இழக்கும்; தாமும் சோர்வுறுவார்.

சுய முன்னேற்றத்திற்குக் கீழ்க்கண்ட முறைகள் பயன்படும் என அநுபவமூலமாய்க் கண்டறிந்துள்ளனர்.

1. நாட்குறிப்பு எழுதி, அதை மாத முடிவில் படித்துச் சோதித்துக்கொள்வது, மாணவர்கள் எல்லோரும் மாத அறிக்கை தயாரிப்பது, ஆண்டறிக்கை

எழுதுவது போலத் தாமும் அவ்வாறே மாத, ஆண்டறிக்கைகள் எழுதுவது.

2. சுயசோதனை [அடிக்கடித் தம்மைத் தாமே சோதித்துக்கொள்வது.]

3. தம்மைப்பற்றிப் பிறர் கருத்துக்களைக் கேட்டறிவது.

4. பள்ளி ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பங்கெடுத்துக்கொள்வது.

5. வட்ட ஆசிரியர்கள் சங்கக் கூட்டத்தில் பங்கெடுப்பது.

6. புத்துயிர்ப் பயிற்சி நடந்தால் கலந்துகொள்வது.

முதல் மூன்றும் தம் தற்கால நிலையை ஆராய உதவும்; பின் நான்கும் மேலும் முன்னேறும் வழிகளைக் காட்டும்.

7. **இறை வாழ்த்து:** இறை வாழ்த்து மூலம் தம் கடமைகளையும், சுய முன்னேற்றத்தின் அவசியத்தையும் நாள்தோறும் நினைவுறுத்திக்கொள்ளுதல்.

குறிப்பு: **மாதிரிச் சுயசோதனை வினாத்தாள் இரண்டும், ஆசிரியர் இறை வாழ்த்து ஒன்றும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.**

8. கல்விப் போதனைபற்றிய புதிய நூல்கள், பத்திரிகைகளில் வெளியாகும் புதிய கல்விக் கட்டுரைகள், ஆராய்ச்சி வெளியீடுகள் முதலியவற்றைப் படிப்பது.

9. பள்ளி ஆசிரியர் கூட்டத்தைப் பயன்படுத்திக் கொள்வது.

மாதிரி சுய சோதனைத் தாள் — 1

[ஆதார ஆசிரியர் தம்மைத்தாமே சோதித்துக்கொள்ள உதவும்.]

கீழ்க்கண்ட வினாக்களுக்கு "ஆம்" என விடை அளிக்கமுடியுமாவென அடிக்கடி சோதித்துக்கொள்ளவும் :

1. உன்னுடைய வேலையை விரும்புகிறாயா?
2. உன்னுடைய கிராமத்தை விரும்புகிறாயா?
3. உன்னுடைய பள்ளியை விரும்புகிறாயா?
4. (a) உன்னுடைய செயல்களுக்கு ஒழுங்காக முன்தயாரிப்பு செய்கிறாயா?

   (b) உன்னுடைய போதனை

   சுவையுடன் விளங்க,
   மாணவர்கள் மனத்தில் பதிய,
   பயன்பட

   உபகரணங்கள், சார்ட்டுகள், தேசப் படங்கள், உருவ மாதிரிகள், புள்ளிவிவரங்கள், கதைகள், பாடல்கள், சம்பவத் துணுக்குகள் — ஆகியவற்றால் ஜீவகளை கொடுக்கிறாயா?

   (c) உன்னுடைய போதனை முறைகளை அவ்வப்போது ஆராய்ந்து, நிறை குறை காண முயலுகிறாயா?

   (d) குருட்டுத்தனமாக ஏதோ ஒரு வழியைப் பின்பற்றாமல் புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுகிறாயா?

5. நீ பின்வருபவனவற்றில் முன்மாதிரியாய் இருக்கிறாயா?

   (a) உடை, உரை, உடைமை இவற்றில் தூய்மை.
   (b) நிமிர்ந்த நடை.
   (c) குரல், பேச்சு.
   (d) காலந் தவறாமை.
   (e) இன்முகம், முகமலர்ச்சி, இன்சொல்.

(f) காலம், பொருள், முயற்சி இவற்றில் சிக்கனம்.
(g) வெற்றியில் நம்பிக்கை மனப்பான்மை.
(h) விழிப்பு மனப்பான்மை.
(i) நுணுக்கங்களைக் கவனித்தல்.
(j) தொண்டு மனப்பான்மை.
(k) சுறுசுறுப்பான பழக்க வழக்கங்கள்.
(l) மனவெழுச்சியில் சீரான சமநிலை.
(m) ஒவ்வொன்றிலும் பொருத்தம், திருத்தம், வேகம், சுருக்கம், ஒழுங்கு, அழகு.
(n) ஓய்வுநேரத்தை இன்பமாகவும், பயனுறுமாறும் பயன்படுத்திக்கொள்ளுதல்.
(o) வாரமிரு சிட்ட நூல் நூற்பதுடன் அந்நூற்புத் தொழில் சம்பந்தமான கணக்குகள் வைத்தல்.

6. உன் வேலையில் உனக்குள்ள பெருமைப் பற்று:

(a) நீ நாட்குறிப்பு எழுதுகிறாயா? அது உன் முன்னேற்றத்திற்கு உதவும் என நீ எண்ணுகிறாயா?
(b) நீ உன்னையே அவ்வப்போது சோதித்துக் கொள்கிறாயா?

7. (a) உன் வகுப்பு மாணவர்களின் கீழ்க்கண்ட தேர்ச்சி வகையைக் குறித்து ஒழுங்கான குறிப்புக்கள் வைத்திருக்கிறாயா?

உடல்பற்றியவை,
உள்ளப்பற்றியவை,
ஒழுக்கப்பற்றியவை.

(b) மாணவர்களின் முன்னேற்றத்திற்கு அவற்றைப் பயன்படுத்துகிறாயா?

8. ஆசிரியத் தொழில் சம்பந்தமான புள்ளி விவரங்களில் உனக்கு நம்பிக்கை உண்டா? உண்டானால்,

உன் வேலைக்குதவும் புள்ளிவிவரங்களைத் திரட்டுகிறாயா?

9. பெற்றோருடன் தொடர்பு ஏற்படுத்தி வளர்த்து வருகிறாயா?

10. உன் தொழிலோடு சம்பந்தப்பட்ட கீழ்க்கண்ட தொகுப்புக்கள் தயாரித்துவைத்திருக்கிறாயா?

    1. படத் தொகுப்பு.
    2. பத்திரிகையில் வெளியாகும் கட்டுரைத் தொகுப்பு.
    3. ஒரு சிறு நூல்நிலையம்.
    4. ஒரு பொருட்காட்சி.
    5. பிற செய்திகள்.

(அகில இந்திய ஆதாரக் கல்வி மகாநாடு, பிராந்திய ஆதாரக்கல்வி மகாநாடு இவற்றின் நடவடிக்கைகளைப் படிக்கிறாயா?)

11. உள்நாடு வெளிநாடுகளில் புதிது புதிதாக வெளியாகும் கல்வி மனநூல்கள், பத்திரிகைகள், கட்டுரைகள் ஆகியவற்றைப் படித்து உன் அறிவை மேலும் மேலும் அபிவிருத்தி செய்துகொள்கிறாயா?

12. நீ கற்ற மனநூல் உண்மைகளை வகுப்பறை வேலைகளில் பயன்படுத்துகிறாயா?

13. நீ கற்பிக்கும் தொழில்களில் மேலும் மேலும் முன்னேற்றம் அடைய முயலுகிறாயா?

14. வாசிப்புத்தாள், ஆராய்ச்சிக் கட்டுரை முதலியவற்றை நீ தயாரித்திருக்கிறாயா? அவற்றை வெளியிட எண்ணமுண்டா?

குறிப்பு: ஆதார ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டிய பல தகுதிகள் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. விட்டிருப்பனவற்றைப் பொருத்தமான இடத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

மாதிரி சுய

பெயர் :

யோக்யதாம்சம் : போது
சிறப்பு

பண்பு

எண்	தமிழில்	ஆங்கிலத்தில்	குறைவு 1	2	3	பாதகமில்லை 4	5	6
1	தன்னடக்கம்	Self-control						
2	ஆர்வம்	Enthusiasm						
3	நடுவுநிலைமை	Judgment						
4	கவர்ச்சி	Magnetic Personality						
5	கண்ணோட்டம்	Consideration						
6	ஒட்ட ஒழுகல்	Adaptability						
7	பரந்த அக்கரை	Breadth of Interest						
8	நேர்மை	Honesty						
9	சீர்மை	Refinement						
10	தலைமை	Leadership						

இந்த அளவையை

1. இது தன்னைத்தானே அளந்துகொள்ள உதவும் ஒரு கருவி.
2. பிறரை ஒப்பிட்டுப் பார்க்க இதை உபயோகிக்கக்கூடாது.
3. அநுதாபமுள்ள நண்பரிடம் சொல்லி, தன்னை மேற் குறித்துள்ள 10 தலைப்புக்களிலும் அவரறிந்த வரையில் நுட்பமாக அளவிடச் சொல்லி, தன் சுய அளவுடன் ஒப்பிட்டுக்கொள்ளலாம்.

சோதனைத் தாள்–2.

தற்சமயம் செய்யும் வேலை :

முன் அநுபவம் :

வயது :

தரம் :

சாதாரணம்			நலம்			மிக்க நலம்			மொத்தம்
7	8	9	10	11	12	13	14	15	150

உபயோகிக்கும் முறை :

4. ஒவ்வொரு தலைப்பிலும் 5 தரம் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு தரத்திலும் மூன்று உட்பகுதி. மொத்த மார்க்குகள் 150.

5. ஆண்டிற்கு இரண்டு முறை இதனால் அளவிட்டுக் கொள்ளலாம்.

ஆதார ஆசிரியரின் தினசரி இறை வாழ்த்து

அருள்வாயே!

1. பிள்ளையெனும் பெரும்புதிரைப் பிழையறவே நானறிந்து
கள்ளமிலா வுளத்தோடு கடமைசெய்ய அருள்வாயே!

2. உடலுள்ளம் ஆத்துமாவை ஒருசமனுய் உயர்விக்க
நடைமுறைகள் பலவறிந்து நலம்புரிய அருள்வாயே!

3. தனிப்பிள்ளை குறைகளைய தங்கிவாழ் தலமறிந்து
இனித்தபடி செய்வித்து ஏற்றுவிக்க அருள்வாயே!

4. ஆதாரக் கல்வியென்ற அடித்தளத்தைத் திடப்படுத்த
ஆதாரப் பண்புகளை அகத்திருக்க அருள்வாயே!

5. வருங்காலக் குடிகளெனும் வளம்மிகுந்த குழந்தைகளின்
இருள்நீக்கி அருள்விரித்து இதம்பெருக்க அருள்வாயே!

6. உரம்வளர உடல்வளர ஒழுக்கமும்தான் வளர
தரம்வளர தகைவளர தாளாற்ற அருள்வாயே!

7. வழிகாட்டியாயிருக்க வகைகள் பலபின்பற்றிப்
பழிபகை கொள்ளாத பண்புதனை அருள்வாயே!

8. இன்முகமும் இன்சொல்லும் நல்வழியும் நடுநிலையும்
எந்நாளும் துணைகொண்டு செயலாற்ற அருள்வாயே!

9. உடையினிலும் உரையினிலும் உயர்வுமிகு உழைப்பினிலும்
நடையினிலும் நாட்டமுடன் நான்நிற்க அருள்வாயே!

தனிப்பட்ட குழந்தைகளை உற்றுநோக்கல்

ஒரு வகுப்பில் சுமார் 30, 35 மாணவர்கள் இருக்கிருர்கள். அவர்களிடம் பல பொதுவான குணங்கள் காணப்படுகின்றன. வகுப்புப்போதனைக்கு அவை மிகவும் உதவும். மாணவர்கள் கூடிக் குழுவாய் இருக்கும்போது அத்தகைய பொதுவான குணங்களைக் காணலாம். அப்பேர்ப்பட்ட குழுக்களைப் பார்த்துவிட்டு அக்குழுவிலுள்ள தனிப்பட்ட மாணவர்களைப்பற்றிப் பொது அபிப்பிராயங்கள் கூறுவது இயலாது. குழுவிலுள்ள இருவரின் பண்புகள் ஒரே மாதிரியாக இரா. குழுவின் பண்புகள் வேறு; குழு உறுப்பினரின் பண்புகள் வேறு.

ஆதார ஆசிரியர் ஒவ்வொரு மாணவரின் உடல், உள்ள, ஆன்மப் பண்புகளைச் சீராக வளர்க்க உதவ வேண்டும். எனவே, அவர் அந்த நோக்கத்தை நிறைவேற்றக் குழந்தைகளைத் தனித்தனியாய் உற்றுநோக்கிக் குறிப்பெடுத்து, அக்குறிப்புக்களின்மீது மேல் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இது ஆதார ஆசிரியரின் முக்கிய அலுவல் ஆகும்.

தனிப்பட்ட குழந்தைகளைப்பற்றி அறியும் முறை :

தனிப்பட்ட குழந்தையைப்பற்றி அறியக் கீழ்க் கண்டவற்றைக் கவனிக்கலாம் :

1. பிற மாணவர்களோடு வகுப்பில், பொதுச் சபையில், விளையாட்டில், வெளியிடத்தில், பள்ளிப் பயணத்தில், ஆசிரியர்முன், ஆசிரியர் இல்லாதபோது – அவன் எப்படி நடந்து கொள்கிருன் ?

2. பள்ளி உடல்நலக் குறிப்பேடு.

3. செயலில் திறமை.

4. படிப்பில் திறமை.

5. தேர்வில் கிடைத்த மதிப்பீடு.

6. இல்ல வாழ்க்கையிலுள்ள சூழ்நிலை.

ஆகவே, மாணவர்களை மேற்சொன்னவாறு பல இடங்களில் உற்றுநோக்கவேண்டும். அவர்களுக்குத் தெரிந்தும், தெரியாமலும் உற்றுநோக்கவேண்டும். அவர்களோடு நெருங்கிப் பழகி அவர்களுடைய **வளர்ச்சி, பற்று, மனப்போக்கு, தனித் திறமை** ஆகியவற்றை நுட்பமாகக் காணவேண்டும்.

நீண்டகாலம் தொடர்ந்து உற்றுநோக்கிய பின்னரே ஒரு மாணவனைப்பற்றிய முடிவுக்கு வரவேண்டும்.

மாணவனின் திறமைகளையும், ஆளுமை வளர்ச்சியையும் உயர்விக்க அக்குறிப்புக்களைப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் உற்றுநோக்கல் வேலை வீணாகும். மேலும், மேல்வகுப்புக்கு மாணவர்கள் மாற்றப்பட்டுப் போகும்போது உற்றுநோக்கிய குறிப்புக்களையும் அவ்வகுப்பு ஆசிரியருக்கு அனுப்பவேண்டும். அவர் அவற்றைத் தொடர்ந்து தம் குறிப்புக்களையும் எழுதவேண்டும். இவ்வாறு பள்ளியிலிருந்து ஒரு மாணவன் விலகும்போது அவனைப்பற்றிய தொடர்ந்த, பூரணமான, எழுத்துபூர்வமான வளர்ச்சிக் குறிப்புக்கள் கிட்டும்.

உற்றுநோக்கவேண்டியவற்றைக் கீழ்க்கண்ட மாதிரி நமூனாவில் காண்க:

உற்றுநோக்கல் குறிப்பு :
வகுப்பு

1. மாணவர் பெயர்
2. பதிவெண்
3. பிறந்த தேதி
4. இருப்பிடம்
5. தகப்பனார் பெயர்
6. அவரது மாத வருமானம்.

(i) உடல்பற்றியவை :

1. வயது

உயரம் } மாதந்தோறும்
எடை } அளப்பதன் மூலம்

2. உடல், அங்க ஊனம் அல்லது வேறு குறைபாடு

(ii) துப்புரவும், உடல்நலமும் பற்றியவை :

(அ) உடல் துப்புரவு

உடைத் துப்புரவு

(ஆ) பொது உடல்நலம்

உட்பட்ட நோய்

உண்ணுதல், உறங்குதல், படித்தல் ஆகிய வற்றைப்பற்றிய பழக்க வழக்கங்கள்

(iii) உள்ளம்பற்றியவை :

1. புத்திக்கூர்மை
2. ஞாபக சக்தி
3. விஞ்ஞான மனப்பான்மை
4. விஷய கிரகிப்பு
5. வெளியிடும் திறன்

(iv) சமூகம்பற்றியவை :

1. நடந்துகொள்ளும் முறை :
   முதியோர் முன்
   ஆசிரியர் முன்
   விருந்தினர் முன்
   சமமானவர் முன்
2. கூட்டத்தில்
3. பள்ளிக் கட்டடத்தில்
4. பொதுத் துப்புரவில்
5. தலைமை தாங்கும் பொறுப்பு
6. இறை வழிபாட்டில்

(v) இல்ல வாழ்க்கைபற்றியவை :

1. இல்லத்தின் நிலை — பொருளாதார நிலை பெற்றோர் கல்வி நிலை.
2. புத்தகப் படிப்பு
   வேலை செய்தல்
   விளையாட்டு
3. மற்ற உறுப்பினரிடம் தொடர்பு எப்படியிருக்கிறது ?

(vi) பாடசாலை வாழ்க்கைபற்றியவை :

1. வேலை (a) வேலை மனப்பான்மை
   (b) செயல்களில் திறமை
   (c) கூட்டுறவு உணர்ச்சி

2. படிப்பு (a) மொழியில் வன்மை
(b) பள்ளிப் பாடங்களில் தேர்ச்சி
(c) வகுப்பில் கவனம்.

3. விளையாட்டு: நியாயம்.
நேர்மை
கூடிவிளையாடும் தன்மை
தலைமை

(vii) தனிப்பட்ட திறமைகளும், குறிக்கோள்களும் :

* * *

நூல்நிலையமும் ஆசிரியர் முன்னேற்றமும்

ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்கு உதவும் வேறொரு வலிமையுள்ள முறை அருகிலுள்ள நூல் நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்ளுதல் ஆகும். இங்கு முன்னேற்றம் என்பதில் **பொது அறிவு, போதனைத்திறன், ஊதியம்** ஆகிய மூன்றையும் குறிக்கிறோம். ஆசிரியர்கள் தங்கள் பொது அறிவையும், போதனைத் திறனையும் பெருக்கிக்கொண்டே போக வேண்டும். இல்லாவிடில் அவரது வேலையில் புதுமையும் கவர்ச்சியும் இரா.

பொது அறிவை வளர்க்க அவர் பல நூல்களைப் படிக்கவேண்டும்; காவியங்கள், கவிதைகள், நாடகங்கள், எளிய விஞ்ஞான நூல்கள், பிரயாணக் கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள், கல்வியின் வரலாறு, மொழியின் வரலாறு முதலிய பலவகை நூல்களைப் படிக்கவேண்டும்; அன்றாடச் செய்தித்தாளைப் படித்து நடைமுறை விஷயங்களை அறியவேண்டும்.

போதனை முறைபற்றி உலகில் ஆராய்ச்சிகள் ஆங்காங்கு நடந்தவாறு இருக்கின்றன. அவற்றிலிருந்து கண்ட உண்மைகளை ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலமாகப் பத்திரிகைகளில் அவ்வப்போது வெளியிடுகிறார்கள். [உதாரணம்] "மாணவர்கள் கோள்சொல்வதை எங்கள் பள்ளியில் எப்படி நிறுத்தினோம்," "நாங்கள் கையெழுத்துப் பத்திரிகை வெளியிட்ட வரலாறு," "பள்ளியில் நான் கண்ட கொடுமைகள்," "செயல் செய்வதால் அறிவு வளருகிறதா?" என்பவை போன்ற அரிய உண்மை அநுபவக் குறிப்புக்கள் நிறைந்த கட்டுரைகளைப் படிப்பது ஆசிரியரின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பெரிதும் பயன்படும்.

போதனை முறைகள்பற்றி வெளிவரும் புதுப் புது நூல்களை அவர் படித்துப் பயன்பெறவேண்டும். தங்கள் படிப்பு நிலையை உயர்த்திக்கொள்ளவும், ஊதியத்தை அதிகரித்துக்கொள்ளவும் மற்றொரு சிறப்பான வசதியை ஆசிரியர்களுக்குமட்டும் அரசினர் அளித்திருக்கிறார்கள். எட்டாம் வகுப்பு முடித்த ஓர் ஆசிரியர் மூன்று ஆண்டுகள் பணிசெய்த பின் யாதொரு பள்ளியிலும் படிக்காமலே S. S. L. C. பொதுத்தேர்வுக்குத் தனி நபராக உட்கார்ந்து தேர்வு பெறலாம். அப்படித் தேறியவர்கள் மூத்தோர் பயிற்சித் தேர்வுக்கு [Senior Basic] உட்கார்ந்து வெற்றிபெறலாம். அதனால் அவரது அந்தஸ்தும் ஊதியமும் உயரும். அதைப்போலவே S. S. L. C. படித்து முடித்த ஆசிரியர்கள் கல்லூரியில் படிக்காமலே தனி நபராய் இண்டர்மீடியட் [Intermediate], பி. ஏ. [B. A.] தேர்வுக்கு உட்காரலாம். B. A. தேர்வில் வெற்றிபெற்றபின் மூன்று திங்கள் குறுகிய போதனைப் பயிற்சிக்குப் பின் B. T. தேர்வு பெறலாம்.

இவ்வாறு அறிவு, அந்தஸ்து, வருவாய் ஆகியவற்றில் ஆசிரியர்கள் தம்மை உயர்த்திக்கொள்ளலாம். இது ஆசிரியர்களுக்கான தனிச் சலுகையாகும். இச் சலுகையின் உதவியால் சில ஆசிரியர்கள் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளார்கள். சிற்றூர்களிலுள்ள ஆசிரியர்களுக்கு மேற்குறித்த வகையில் பயன்படும் நூல்நிலையம் இராமல் இருக்கலாம். அருகிலிருக்கும் உயர்தரப் பள்ளி நூல்நிலையத்தையோ, மாவட்டக் கிளை நூலகங்களையோ பயன்படுத்திக்கொண்டு அவர்கள் முன்னேறப் பாடுபடவேண்டும்.

தற்காலத்தில் அஞ்சல் மூலம் மேற்கூறிய தேர்வுகளுக்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. அத்தகைய வசதிகளையும் ஆசிரியர் பயன்படுத்திக்கொண்டு தம் தரத்தை உயர்த்திக்கொள்ள முயலவேண்டும்.

பள்ளி ஆசிரியர் சங்கம்

ஓர் ஆதாரப் பள்ளியில் வேலைசெய்யும் ஆசிரியர்கள் அனைவரும் தம்மை ஒரு சங்கமாக அமைத்துக்கொள்ள வேண்டும். திங்களுக்கு ஒரு முறையாவது அவர்கள் எல்லோரும் கூடவேண்டும். திட்டங்கள் தீட்டவும், வகுப்பறைப் பிரச்சினைகளைத் தீர்க்கவும், போதனை முறைகளைச் சர்ச்சை செய்யவும், பள்ளி வேலைகளை இன்னும் திறம்படச் செய்ய வழி வகைகளை ஆராயவும் அக்கூட்டங்களில் கவனிக்கவேண்டும்.

தம் முன்னேற்றத்தில் விருப்பமுள்ள ஒவ்வோர் ஆசிரியரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு, சர்ச்சைகளில் ஈடுபட்டுச் சிறந்த பயன் அடையக்கூடும். நேரிடையான அன்றாடப் பள்ளி வாழ்க்கைப் பிரச்சினைகளை மட்டும் இங்கு விவாதிப்பதால் ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்கு இக்கூட்டங்கள் பெரிதும் பயன்படும்.

3. ரிகார்டுகளும் ரிஜிஸ்தர்களும்

ஆதாரப் பள்ளிகளில் வைக்கப்பட்டுள்ள ரிகார்டுகளையும் ரிஜிஸ்தர்களையும் பயிற்சியாளர் உற்று நோக்குங்கால் கீழ்க்குறித்துள்ள வினாக்கள் பெரிதும் உதவும்:

1. ஆதாரப் பள்ளிகளில் என்னென்ன ரிகார்டுகளும் ரிஜிஸ்தர்களும் வைக்கிறார்கள்?

2. அவற்றுள் ஆசிரியர்கள் வைக்கவேண்டியன யாவை? மாணவர்கள் வைக்கவேண்டியன யாவை?

3. ஆதாரப் பள்ளிகளில் வைக்கவேண்டிய சிறப்பான ரிஜிஸ்தர்கள் யாவை?

4. ரிஜிஸ்தர்களில் பதிவுசெய்யும்போது கவனிக்க வேண்டியன யாவை?

5. என்னென்ன ரிஜிஸ்தர்களில், என்னென்ன பதிவுகள் செய்கிறார்கள்?

6. ரிஜிஸ்தர்கள் வைப்பதால் ஏற்படும் நன்மைகள் யாவை?

7. ஆதாரப் பள்ளிகளில் வைக்கவேண்டிய எல்லா ரிஜிஸ்தர்களின் நமூனா ஒன்று தயாரித்து வரவும்.

ரிகார்டுகளும் ரிஜிஸ்தர்களும் வைப்பதன் அவசியம் :

ஓர் ஆதாரப் பள்ளிக்கு அங்கீகாரமும் பண உதவியும் கோரும் விண்ணப்ப மனுவிலேயே பள்ளியில் வைக்கவேண்டிய ரிஜிஸ்தர்களையும் பதிவேடுகளையும் பற்றி ஒரு நிபந்தனைக்குட்படுவதாகப் பள்ளி நிர்வாகி கையொப்பமிடவேண்டும். அரசினரால் குறிப்பிடப்

பட்ட ரிஜிஸ்தர்களைப் பள்ளியில் வைக்கவேண்டும்; பள்ளி ஆய்வாளர் கேட்கும்போதெல்லாம் அவற்றைக் காட்டவேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

பள்ளியில் நடக்கும் வேலைகளின் அளவு, தரம், ஒழுங்கு, தொடர்ச்சியான முயற்சி (quantity, quality, regularity, continuity) ஆகியவற்றைப் பள்ளி வேலைகளுடன் நெருங்கிய தொடர்புகொண்டவர்கள் எல்லோருக்கும் எளிதாயும், ஐயந்திரிபு இன்றியும் தெரிவிக்கவே மேற்குறித்துள்ள ரிஜிஸ்தர்கள் தேவைப்படுகின்றன.

பள்ளி வேலையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அரசினர் எனப் பலர் சம்பந்தப்படுகின்றனர். பள்ளி வேலை சம்பந்தமாக நினைவில் வைத்துக்கொண்டு குறித்த காலத்தில் செய்யவேண்டிய விஷயங்கள் பல உள்ளன. தவிர, பல ஆசிரியர்களின் வேலைகளை இணைத்தல், பலரின் கூட்டுறவு பெறுதல், பள்ளியின் நோக்கத்திற்காக எல்லோரும் சேர்ந்து பாடுபடுதல், பள்ளி வேலைக்காகத் திட்டமிடுதல்போன்ற பல பிரச்சினைகள் எழுகின்றன. இவற்றை யெல்லாம் எளிதாகச் சமாளிக்கவே ஒழுங்கான, முறையான, உண்மையான, அவசியமான குறிப்புக்களை அந்தந்த ரிஜிஸ்தரில் உடனுக்குடன் எழுதிவைக்கவேண்டியிருக்கிறது.

நாளடைவில் இந்த ரிஜிஸ்தரிலுள்ள குறிப்புக்களின் உதவியால் முன்னரே குறிப்பிட்டபடி பள்ளி வேலைகளின் அளவு, தரம், ஒழுங்கு, தொடர்ச்சியான முயற்சி முதலிய அம்சங்களைத் திருத்தமாயும், அதிகார பூர்வமாயும் கணக்கிட்டு, தொடர்ந்து ஆவன செய்ய

இயலுகிறது. எனவேதான் பள்ளி வேலையில் ரிஜிஸ்தர்களை முறையாக வைக்கவேண்டிய வேலை முதன்மை பெற்றுள்ளது. குறிப்பிட்ட சில ரிஜிஸ்தர்களைக் கட்டாயம் ஒவ்வொரு பள்ளியிலும் வைக்கவேண்டுமென அரசினர் நிர்ணயித்துள்ளனர். அவற்றைத் தவிர, பள்ளி வேலை சம்பந்தமான ஒவ்வொரு நுணுக்கத்தைப்பற்றியும் எழுத்து பூர்வமான பதிவுகள் வைப்பதன் அவசியத்தையும் அரசினர் வற்புறுத்தியுள்ளனர்.

எல்லாப் பள்ளிகளிலும் வைக்கவேண்டிய **ரிஜிஸ்தர்கள்:** ஆரம்பப் பள்ளிகளுக்கெனக் குறிப்பிட்ட கீழ்க்காணும் ரிஜிஸ்தர்கள் ஆதாரப் பள்ளிகளிலும் வைக்கப்படவேண்டும்.

எண்	ரிஜிஸ்தர் பெயர்	பொறுப்பாளர்
1.	மாணவர்களின் சேர்க்கை ரிஜிஸ்தர்	தலைமையாசிரியர்
2.	மாணவர்களின் ஆஜர்ப்பதிவு ரிஜிஸ்தர்	வகுப்பு ஆசிரியர்
3.	ஆசிரியர்களின் ஆஜர்ப்பதிவு ரிஜிஸ்தர்	தலைமையாசிரியர்
4.	ஆசிரியர்களின் சம்பளப் பட்டியல்	தலைமையாசிரியர்
5.	தணிக்கையாளரின் குறிப்புப் புத்தகம்	தலைமையாசிரியர்
6.	பார்வையாளரின் குறிப்புப் புத்தகம்	தலைமையாசிரியர்
7.	அபராத ரிஜிஸ்தர்	தலைமையாசிரியர்
8.	(A) ரிகார்டு ஷீட்டுகளின் ரிஜிஸ்தர்	தலைமையாசிரியர்
	(B) BASIC School-Leaving Certificate Register.	தலைமையாசிரியர்

குறிப்பு: எட்டாவது வகுப்பு (கிரேடு) முடித்துப் பள்ளியை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு ஒரு தனிச் சான்றிதழ் கொடுத்து அனுப்பவேண்டும். அதற்கு BASIC SCHOOL - LEAVING CERTIFICATE எனப் பெயர். அதன் நகல்களை ஒரு ரிஜிஸ்தராக வைத்துக்கொள்ளவேண்டும்.

9. (கட்டாயக் கல்வி அமுலில் இருந்தால்)
பள்ளிக்கு வரத் தவறியவர்களின் ரிஜிஸ்தர் — தலைமையாசிரியர்

ஆதாரப் பள்ளிகளில் வைக்கவேண்டிய சிறப்பான ரிஜிஸ்தர்கள்: ஒவ்வோர் ஆதாரப் பள்ளியிலும் ஓர் ஆதாரத் தொழில் உண்டு என்றும், அதை நடத்தத் தேவையான தொழிற் கருவிகளை அரசினரே வழங்கு கிறார்கள் என்றும் உங்களுக்குத் தெரியும். ஆதாரப் பயிற்சி பெற்ற ஒவ்வோர் ஆசிரியருக்கும் ரூ. 300-க்கு மேற்படாவண்ணம் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அது வழங்கப்படுகிறது. ஆதாரத் தொழில் நடத்தும்போது ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு மாதமும் நடைமுறைச் செலவுகளுக்கு ஈடுசெய்யும் வகையில், அதாவது சுயதேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் மாதம் எவ்வளவு குறைந்தபட்ச நிகர லாபம் காட்டவேண்டுமென்று அரசினர் விதிகள் ஏற்படுத்தி யுள்ளார்கள்.

அரசினர் அளிக்கும் பணஉதவி வீணாகாமல் பயன்படும் முறையில் உபயோகப்படுகிறதா என்று சோதிக்கத் தனிப்பட்ட ரிஜிஸ்தர்களை ஒவ்வோர் ஆதாரப் பள்ளியிலும் வைக்கவேண்டும் என அரசினர் விதித்துள்ளனர். அவை மிக மிக முக்கியமானவை என்று சொல்லத் தேவையில்லை.

அவையாவன:

எண்	ரிஜிஸ்தரின் பெயர்	பொறுப்பாளர்
10.	நிரந்தரப் பொருள்களின் கையிருப்புப் பட்டியல்	தலைமையாசிரியர்
11.	மூலப்(கச்சா)பொருள்களின் கையிருப்புப் பட்டியல்	தலைமையாசிரியர்

12.	வகுப்பு உற்பத்திக் கணக்குச் சுருக்கம்	வகுப்பு ஆசிரியர்
13.	மாதந்தோறும் ஒவ்வொரு மாணவரும் சமர்ப்பிக்கும் நூற்பு அறிக்கை	மாணவர்கள்

பிற பதிவேடுகள்: இவற்றைத் தவிர, கீழ்க்காணும் பதிவேடுகளை ஆரம்பப் பள்ளிகளில் வைக்கவேண்டுமென விதிகள் ஆங்காங்கு கூறுகின்றன. அவையெல்லாம் ஆதாரப் பள்ளிகளுக்கும் அவ்வாறே பொருந்தும்.

அவையாவன:

எண்	பதிவேட்டின் பெயர்	பொறுப்பாளர்
14.	பள்ளி வரலாற்றுக் குறிப்புப் புத்தகம்	தலைமையாசிரியர்
15.	மாணவர்களின் மார்க்குப் புத்தகம்	தலைமையாசிரியர்
16.	தலைமையாசிரியர் மேற்பார்வைப் புத்தகம்	தலைமையாசிரியர்
17.	பள்ளி வயது மாணவர்களின் கணக்கு ரிஜிஸ்தர்	தலைமையாசிரியர்
18.	பள்ளி வரவு செலவுக் கணக்குப் புத்தகம்	தலைமையாசிரியர்
19.	பிராவிடெண்டு நிதிக் கணக்கு ரிஜிஸ்தர்	தலைமையாசிரியர்
20.	ஸ்காலர்ஷிப் பட்டுவாடா ரிஜிஸ்தர்	தலைமையாசிரியர்
21.	பள்ளி மரச் சாமான்கள், உபகரணங்கள் இவற்றின் பட்டியல்	தலைமையாசிரியர்

(குறிப்பு: அரசினரின் பண உதவி கொண்டு வாங்கியவற்றைத் தனி ரிஜிஸ்தரில் குறித்துவைக்கவேண்டும்.)

22.	தேக்க ஜாபிதா	வகுப்பு ஆசிரியர்
23.	ஒவ்வொரு மாணவனுக்கும் ரிகார்டு ஷீட்டு	வகுப்பு ஆசிரியர்
24.	பெற்றோர் சங்கக் கூட்டக் குறிப்பு	சங்கச் செயலாளர்

ஆதாரப் பள்ளிகளில் வைக்கவேண்டிய பிற சிறந்த பதிவேடுகள்: ஆதாரப் பள்ளிகளில் ஆதாரத்

தொழில் (நூற்பும் நெசவும்)பற்றி வைக்கவேண்டியவை தவிர வேறு பதிவேடுகளும் உள்ளன. அவை யாவும் முக்கியமானவையே.

ஆதாரப் பள்ளிகளில் கற்பிக்கவேண்டுவன யாவும் செயல் மூலமாகக் கற்பிக்கப்படுகின்றன.

''ஆள்வினையும் ஆன்ற அறிவும்என விரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.''

என்ற வள்ளுவர் மொழிக்கிணங்க, செயலினால் (வினை) அறிவும், அறிவினால் செயல்திறனும் வளம்பெற்று வளரவேண்டும். அதற்குப் பிரதி செயலிலுமுள்ள ஒவ்வொரு நுணுக்கத்தையும் நன்றாக ஆராய்ந்து அறிந்து ஒவ்வொன்றிலும் திறமைபெறவேண்டும். செயல்களை இயந்திர ரீதியாகச் செய்வதில் பயனில்லை. அதனால் அறிவு வளராது. ஒவ்வொரு வேலை நுணுக்கத்திலுமுள்ள **ஏன், எப்படி** என்ற செய்திகளையும் ஐயந்திரிபறக் கற்கவேண்டும். செயலை முன்னிலும் திருத்தமாயும், வேகமாயும், பொருத்தமாயும் செய்ய அவ்வறிவு பயன்படவேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு செயலிலிருந்தும் அறிவு வளருவதோடு நல்ல பழக்க வழக்கங்களும், திறமைகளும், சில மனப்பான்மைகளும் வளரவேண்டும் என வற்புறுத்தப்படுகிறது.

ஒவ்வொரு செயலிலும் மாணவர்களிடம் எதிர் பார்க்கப்படும் அறிவு, திறமை, பழக்க வழக்கங்கள், மனப்பான்மை இவை சீராக வளருகின்றனவா எனச் சோதிப்பது ஆசிரியரின் கடமையல்லவா? எனவே, இதற்காகச் சில பதிவேடுகள் ஒவ்வொரு வகைச் செயலுக்கும் வைக்கவேண்டுவது ஆதாரப் பள்ளிகளில் மிக

அவசியமாகிறது. இவ்விஷயத்தில் சில பதிவேடுகளை ஆசிரியர்கள் வைக்கவேண்டும்; மாணவர்களும் சில பதிவேடுகளை வைக்கவேண்டும். இது ஆதாரக் கல்வியின் ஒரு சிறந்த அம்சமாகும்.

ஆசிரியர்களும் மாணவர்களும் வைக்கவேண்டிய தனித்தனிப் பதிவேடுகளைச் செயல்வாரியாகக் கவனிப்போம்.

ஆசிரியர்கள் வைக்கவேண்டியன :

துப்புரவு, உடல்நலப் பயிற்சி

25. துப்புரவு, உடல்நலப் பயிற்சிப் பதிவேடு — வகுப்பு ஆசிரியர்

ஆதாரத் தொழில் (நூற்புத் தொழில், தோட்டவேலை)

26. தொழிற் பயிற்சிப் பதிவேடு — வகுப்பு ஆசிரியர்

சமூகப் பயிற்சி, கலைப் பயிற்சி (விளையாட்டு உள்பட)

27. சமூகக் கலை, விளையாட்டுப் பதிவேடு — வகுப்பு ஆசிரியர்

பள்ளி ஆசிரியர் சங்கக் கூட்டம் (School Staff Council)

28. பள்ளி ஆசிரியர் சங்கக் கூட்ட நடவடிக்கைக் குறிப்புப் புத்தகம் (இதற்கு, சாதாரண நோட்டுப் புத்தகம் போதுமானது.) — தலைமையாசிரியர்

ஒவ்வோர் ஆதாரப் பள்ளியிலும் தலைமையாசிரியரும் உதவி ஆசிரியர்களும் அடிக்கடி கூடி விவாதித்துத் திட்டமிட்டு வேலைகளைத் தொடங்க வேண்டும். செய்து முடித்த செயல்களின் நிறை குறைகளையும் ஆராய்ந்து, பின் திட்டவேண்டிய திட்டங்களுக்கு அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். இவ்வாறு மாதமொருமுறையாவது ஆசிரியர்கள் கூட வேண்டும். இது ஜனநாயக முறையுங்கூட.

அக்கூட்டங்களின் நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் இந்தப் புத்தகத்தில் உடனுக்குடன் எழுதிவர வேண்டும்.

29. ஒவ்வொரு மாணவரையும் உற்றுநோக்கித் தயாரித்த முழுவிவரப் பதிவேடு (Cumulative record) —தலைமையாசிரியர்

ஆதாரப் பள்ளியில் ஒவ்வொரு மாணவரின் உடல், உள்ள, ஆன்மப் பண்புகளைச் சீராக வளர்க்கத் திட்டமிட்டிருக்கிறோம். ஆனால் ஒத்த வயதினராயிருந்த போதிலும் எந்த இரண்டு மாணவர்களும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பது நாம் அறிந்ததே. அதாவது, குழந்தைக்குக் குழந்தை வேறுபடுகிறது. உடலமைப்பு, நிறம், உடற்கட்டு, உடலுறுதி, வேலைசெய்யும் ஆற்றல், குரல், பேசும் முறை ஆகிய வேறுபாடுகள் மட்டும் நம் கட்புலனுக்குத் தெரிகின்றன.

அதைப்போலவே விஷயத்தைக் கிரகிக்கும் திறன், நினைவுபடுத்திக்கொள்ளும் திறன், பகுத்தறியும் திறன், தொகுக்கும் திறன், சுருக்கிக்கூறும் திறன், விரித்துக் கூறும் திறன் ஆகிய மன வேலைகளிலும் குழந்தைக்குக் குழந்தை வேறுபடுகிறது. ஆனால் அவை நமக்கு வெளிப்படையாகத் தெரிவதில்லை. தவிர, கவர்ச்சி, பற்று ஆகியவற்றிலும் வேறுபாடு காணப்படுகிறது. ஒவ்வொரு மாணவரிடமும் வெவ்வேறு தனித் திறமை இருக்கிறது.

இவ்வேறுபாடுகளுக்குக் காரணங்கள் பல. அவ் வேறுபாடுகளை அறிந்து, அவற்றிற்கேற்பப் போதனையை

மாற்றியமைத்தால்தான் மாணவர்களின் தனித் திறமை மலர முடியும். அதற்காகவே, ஆதாரப் பள்ளி களில் வகுப்பிலுள்ள குழந்தைகள் ஒவ்வொருவரையும் பள்ளியிலும், வீட்டிலும், பிற இடங்களிலும் கண்டும் காணுமலும் உற்றுநோக்கிக் குறிப்புக்கள் வைக்கிருர் கள். இவை மிக முக்கியமானவை.

மாணவர்கள் வைக்கவேண்டியன

ஆதாரத் தொழில் :

1. நூற்புத் தொழில் விவரக் கணக்கு	இதில் பருத்தி சுத்தம், அரைத்தல், உடைத்தல், நூற்றல் ஆகிய எல்லா உட்பகுதிகளுக்கும் விவரம் உண்டு.
2. மாத நூற்புக்கணக்கு	முன்னரே குறித்துள்ள நமூனு 13-ல் ஒவ்வொரு மாணவனும் பிரதி மாத மும் கொடுக்கவேண்டும்.
3. சிட்டத்தில் செருகும் சீட்டுக் குறிப்பு	இதைத் தயாரிக்க நூற்றல் தொழில் விவரக் கணக்கு அடிப்படையாகும்.

இம் மூன்றையும் ஒவ்வொரு மாணவனும் வைக்கவேண்டும். கீழ் வகுப்புக்களில் ஆசிரியரே கவனித்துக்கொள்ளவேண்டும்.

தோட்டவேலை :

1. தோட்டவேலைக் குறிப்பு 2. காலநிலைக் குறிப்பு (காற்று) 3. காலநிலைக் குறிப்பு (தட்பம், வெப்பம்) 4. இயற்கைப் பஞ்சாங்கம்	மேல்வகுப்பு மாணவர் ஒவ்வொருவரும் வைக்கவேண்டும்.

சமூகப் பயிற்சி :

நாட் குறிப்பு —ஒவ்வொரு மாணவனும்

மாதவாரி அமைச்சர் பெயர்ப் பட்டியல்	—முதலமைச்சர்
கொடி வணக்க விவரக் குறிப்பு	—கலையமைச்சர்
கல்விப் பயண விவரக் குறிப்பு	—கலையமைச்சர்
விழா, களியாட்ட விவரக் குறிப்பு	—கலையமைச்சர்
கிராம சேவை விவரக் குறிப்பு	—கலையமைச்சரும், துப்புரவு அமைச்சரும்
அமைச்சர்களின் அறிக்கைகள்	—பிரதி அமைச்சரும்
பொதுமன்ற நடவடிக்கைக் குறிப்பு	—தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவாளர்
பாலர் நீதிமன்ற நடவடிக்கைக் குறிப்பு	தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவாளர்
மாத அறிக்கை	—ஒவ்வொரு மாணவனும்
ஆண்டு அறிக்கை	—ஒவ்வொரு மாணவனும்

துப்புரவு, உடல்நலம் :

எடை, உயரம் விவரக் குறிப்பு	—துப்புரவு அமைச்சர்
நோய் விவரக் குறிப்பு	—துப்புரவு அமைச்சர்

முக்கிய குறிப்பு : இரண்டாவது வகுப்பு இறுதியிலேயே மாணவர்கள் தாமே நூற்புத் தொழில் விவரங்களைப் பதியவும், தோட்டக் குறிப்புக்களைப் பதியவும், நாட்குறிப்பு எழுதவும் கற்கத் தொடங்கி, III-வது வகுப்புக்கு வரும்போது நல்ல தேர்ச்சி பெற்றிருக்கவேண்டுமென்று பாடத்திட்டம் கூறுகிறது.

ரிஜிஸ்தர்கள், பதிவேடுகள் இவற்றுக்குப் பொறுப்பாளி யார்? — தலைமையாசிரியர் வைக்கவேண்டிய ரிஜிஸ்தர்கள் யாவை, வகுப்பு ஆசிரியர்கள் வைக்க வேண்டியவை யாவை, மாணவர்கள் வைக்கவேண்டியவை யாவை என்னும் செய்தியை ஒவ்வொரு ரிஜிஸ்தரின் பெயர் இறுதியில் குறிக்கப்பட்டுள்ளது. அந்தந்த

ரிஜிஸ்தர்களைப் பாதுகாப்பதும், அதில் அவ்வப்போது தாமும் பிறரும் பதிவதும் அவரவர் பொறுப்பாகும். தலைமை ஆசிரியரே எல்லா ரிஜிஸ்தர்களுக்கும் பதிவேடுகளுக்கும் பொறுப்பாளியாவார்.

பதிவுகள் செய்யும்பொழுது கவனிக்கவேண்டிய முக்கிய விதிகள்: ரிஜிஸ்தர்களில் பதிவுசெய்யும்போது கீழ்க்கண்டவற்றைக் கவனிக்கவேண்டும்:

1. பதிவுகள், அடித்தல் திருத்தல் இல்லாமலிருக்கவேண்டும்.

2. ஒரு பதிவு தவறுகிவிட்டால் அதை அடித்துவிட்டு, அதற்கு மேலே சரியான பதிவைச் செய்து, கையெழுத்துக் குறிப்புப் போடவேண்டும். அதைக் கத்தியால் சுரண்டுதல் கூடாது.

3. பதிவுகளை உடனுக்குடன் மையினாலேயே செய்யவேண்டும்.

4. உண்மைக்குப் புறம்பான பதிவுகளைச் செய்தல் கூடாது.

5. ஆதாரப் பள்ளிகளில் கலைப்பயிற்சியே ஒரு வேலைத் திட்டமாகும். எனவே, எல்லாப் பதிவேடுகளும், குறிப்பேடுகளும் கலையாக இருக்கவேண்டுமென்று கூறத் தேவையில்லை.

6. ஒவ்வொரு பதிவேடும் அதது இருக்கவேண்டிய இடத்தில் ஒழுங்காக இருக்கவேண்டும்.

7. தேவையானபொழுது எதையும் உடனடியாக எடுத்துவரச் சாதகமாக ஒவ்வொன்றிற்கும் பெரிய எண் சீட்டு ஒட்டி, பெயர் எழுதிவைத்திருப்பது நலம்.

8. **சில ரிஜிஸ்தர்களை அச்சு நமூனுக்களில் குறிப் பிட்ட அளவில்தான் வைக்கவேண்டும்.**

9. **ரிஜிஸ்தர்களிலுள்ள பக்கங்களுக்கு வரிசை எண் கொடுக்கவேண்டும்.** *ரிஜிஸ்தர்களிலிருந்து தாள் களைக் கிழித்து எறியக்கூடாது.*

10. ஒவ்வொரு வகை ரிஜிஸ்தரையும் எத்தனை ஆண்டுகளுக்குப் பாதுகாத்துவைக்கவேண்டுமென்று அரசினர் விதி இயற்றியிருக்கின்றனர். அதை யறிந்து அந்தந்த ரிஜிஸ்தர்களைக் குறித்த காலம்வரை காப்பாற்றி வைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ரிஜிஸ்தர்களினுலும் பதிவேடுகளினுலும் ஏற்படும் நன்மைகள்: *அரசினர் பணஉதவி, பெற்ருேரின் உதவி, ஆசிரியருடைய திட்டம், மாணவர்களுடைய சாதனை ஆகியவற்றின்* **அளவு, தரம், பயன்** *முதலியவற்றைக் கணக்கிட்டுக் காட்ட ரிஜிஸ்தர்களும் பதிவேடுகளும் அதிகார பூர்வமான அடிப்படையாகும். அவற்ருல் அரசினருக்கும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் நன்மைகள் உள்ளன. அவற்றைத் தனித்தனியே கவனிப்போம்.*

அரசினருக்கு: *(1) ரிஜிஸ்தர்களிலிருந்து தயாரிக்கப் படும் மாதாந்தரக் கணக்குப் புள்ளிவிவரங்களைக் கொண்டு ஆதாரப் பள்ளிக்கு அரசினர் அங்கீகாரம் அளிக்கிருர்கள். (2) பள்ளி வேலைகளுக்கு உதவப் பல வகைகளில் பணம் வழங்கவும் அவை பயன் படுகின்றன. (3) மாநிலக் கல்வி முன்னேற்றத்தை ஆண்டுதோறும் கணக்கிட அவை உதவிபுரி கின்றன. (4) புதுக் கல்வித்திட்டம் தீட்டவும்*

அவை துணைபுரிகின்றன. (5) பிற அரசியல் திட்டங்களுக்கும் அவை உதவுகின்றன.

ஆசிரியர்களுக்கு: (1) பள்ளியின் வளர்ச்சி, தளர்ச்சி வரலாற்றை இவை எடுத்துக்காட்டுகின்றன. எனவே, தம் தொண்டின் நிறை குறைகளைக் கண்டு, ஆவன செய்ய ரிஜிஸ்தரிலுள்ள பதிவுகள் துணைபுரிகின்றன. (2) மாணவர்களின் முன்னேற்றம், தனித் திறமை, சாதனைகள் இவைபற்றி அறியச் சில பதிவேடுகள் துணைபுரிகின்றன. (3) மாணவர்களைத் தரம் பிரிக்கவும், மேல் வகுப்புக்கு மாற்றவும் சில பதிவேடுகள் உதவியா யிருக்கின்றன. (4) மாணவர்களின் வயதுபற்றிய அதிகார பூர்வமான பிரதம தஸ்தவேஜி சேர்க்கை விடுக்கை ரிஜிஸ்தரே.

மாணவர்களுக்கு: (1) தம் வளர்ச்சியைக் காட்டப் பதிவுகள் உதவுகின்றன. (2) பதிவேடுகள் வைப்பதன் அவசியத்தையும், வைக்கும் முறையையும் அறிகிறார்கள்.

பொதுமக்களுக்கு: ஆதாரக் கல்வி வேலைத் திட்டத்தின் சிறப்பை யறிய ரிஜிஸ்தர்கள் பேருதவி புரிகின்றன.

ஆகவே, பள்ளி ரிஜிஸ்தர்களும் பதிவேடுகளும் சாதனைகளை அளவிடும் **அளவுகோலாகவும்,** புதிய ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்தும் **நெம்புகோலாகவும்,** புதுத் திட்டங்கள் உருவாகப் பயன்படும் **திறவுகோலாகவும்** உதவுகின்றன.

பதிவேடுகளின் பெருக்கமும் ஆசிரியரின் நடுக்கமும்: ஆதாரப் பள்ளிகளில் வைக்கவேண்டிய பதிவேடு

களின் எண்ணிக்கை சற்றுப் பெரிதானதுதான். அதைக் கண்டு ஆசிரியர்கள் நடுங்குவது இயற்கையே. ஆனால் இது புள்ளிவிவர யுகம். மாதாந்தர அறிக்கை, வார அறிக்கை என ஒவ்வொரு துறையிலும் அறிக்கை களின் எண்ணிக்கை வளர்ந்துவருவதைக் காணலாம். ஆகவே, கல்வித் துறைக்கும் இது புதிதன்று.

இந்த ஜனநாயக யுகத்தில் எழுத்து பூர்வமான புள்ளிவிவரங்களே எந்த ஆராய்ச்சிக்கும், எந்தத் திட்டத்திற்கும், எந்த ஆக்க வேலைக்கும் அடிப்படை. அவற்றை அடிப்படையாகக்கொண்டுதான் லட்சக் கணக்கான பணம் ஒதுக்கப்படுகிறது; புதுப் புதுத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. பள்ளிப் பதிவேடுகள் இன்றியமையாத அளவுகோலாகவும், நெம்புகோலாக வும், புதுத் திட்டம் தீட்ட உதவும் திறவுகோலாகவும் பயன்படுகின்றன என்று முன்னரே அறிந்துள்ளோம்.

தவிர, கூர்ந்து நோக்கின் எல்லாப் பதிவேடுகளி லும் தினசரி எழுதவேண்டியிராது. எல்லாவற்றையும் ஒரே ஆசிரியரே வைக்கவேண்டுவதுமில்லை; சிலவற்றை மாணவர்களே பூர்த்தி செய்யவேண்டும்.

எனவே, பதிவேடுகளின் அவசியத்தை ஆசிரியர் நன்கு அறிந்து, அவற்றில் பதியும் முறைகளையும் செவ்வையாய்க் கற்றுக்கொண்டால் பதிவேடுகளில் அவ்வப்போது எழுதுவது பளுவாயிராது. நாளடைவில் அது தம் போதனை வேலையையொட்டிய ஓர் இலகுவான, இன்றியமையாத வேலை என அவர் அறிவார்.

முக்கிய ரிஜிஸ்தர்களின் மாதிரி நமூனுக்கள் : முக்கிய ரிஜிஸ்தர்கள், பதிவேடுகள் இவற்றின் மாதிரி நமூனுக்கள் தனியே பிரசுரிக்கப்பட்டுள்ளன.

4. திறமை அடிப்படையில் குழுக்கள் அமைப்பதும், வகுப்பு மாற்றலும்

ஆதாரப் பள்ளிகளில் திறமை அடிப்படையில் குழுக்கள் அமைப்பதும், வகுப்பு மாற்றலும்பற்றிப் பயிற்சியாளர் உற்றுநோக்குங்கால் கீழ்க்கண்ட வினக்கள் உதவும்:

1. எந்த அடிப்படையில் அங்கு வகுப்பு அமைக்கிறார்கள்?

2. வகுப்பாக அமைத்துப் போதிப்பதில் உள்ள நிறை குறைகள் யாவை?

3. அக்குறைகளை நீக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள்?

4. மாணவர்களை மேல் வகுப்புக்கு மாற்ற என்ன ஏற்பாடு உள்ளது?

அது ஆதாரக் கல்வித்திட்டக் குறிக்கோள்களுக்கு ஒத்து இருக்கிறதா?

ஆதாரப் பள்ளிகளில் இருவகை:

ஜூனியர் பேசிக், ஸீனியர் பேசிக் பள்ளி

ஆதாரக் கல்வி கலைத் திட்ட விஷயங்களை எட்டு ஆண்டுகளில் கற்பித்து முடிக்கவேண்டுமென வரையறை செய்துள்ளார்கள். படிப்படியாக அவற்றைக் கற்பிக்க அவ்விஷயங்களை எட்டு வகுப்புக்களுக்கும் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி ஒவ்வோர் ஆதாரப் பள்ளியிலும் எட்டு வகுப்புக்கள் இருக்க வேண்டும்.

முதல் 5 வகுப்புக்கள் கொண்ட ஓர் ஆதாரப் பள்ளியை **ஜூனியர் பேஸிக் பள்ளி** என்றும், ஐந்துக்கு மேற்பட்டு 6, 7, 8 வகுப்புக்கள் கொண்ட ஒரு பள்ளியை **ஸீனியர் பேஸிக் பள்ளி** என்றும் சொல்கிறோம்.

இவ்வாறு ஆதாரப் பள்ளிகளில் மாணவர்களை வகுப்பு வகுப்பாகப் பிரித்துக் கற்பிக்கத் திட்டமிட்டிருக்கிறோம். வகுப்பு ஒன்றில் 25 மாணவர் அல்லது 30 மாணவர்கள் இருக்கலாம். வகுப்பு முறைப் போதனையில் நன்மைகளும் உண்டு, தீமைகளும் உண்டு.

வகுப்பு முறைப் போதனையிலுள்ள நன்மைகள்:

1. வகுப்பு முறைப் போதனையில் காலமும், பணச் செலவும், ஆசிரியரின் உழைப்பும் சிக்கனப்படுகின்றன. ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாய்ப் போதித்தால் எவ்வளவு நேரம் பிடிக்கும், செலவு ஆகும், கஷ்டம் ஏற்படும் என்று யோசித்துப் பாருங்கள்.

2. வகுப்புமுறை, மாணவர்களின் குழு ஊக்கத்திற்கு ஈடு செய்கிறது. தவிர, தன்னெடுப்பு ஊக்கமும், பணி ஊக்கமும் வேலைசெய்ய வகுப்புமுறைப் போதனை சிறந்தது. ஆதாரப் பள்ளி வகுப்பு ஒரு ஜனநாயக சமூகம் அல்லவா?

3. மாணவர்களின் மனத்தில் கவர்ச்சி, ஆர்வம் ஆகியவற்றை எழுப்ப வகுப்புமுறை ஆற்றல் வாய்ந்தது. ஆர்வம் 'ஒட்டுவாரொட்டி போன்றது' என்று சொல்வதுண்டு. ஆசிரியரின் உற்சாகம் வகுப்பிலுள்ள மாணவர்களைப் பற்றும். சில மாணவர்களின் உற்சாகம் ஏனைய மாணவர்களைப் பற்றும். ஒரு வகுப்பின் உற்சா

கம் மற்ெருரு வகுப்பையுங்கூடப் பற்றுவதை நாம் பார்த்திருக்கிறேம்.

வகுப்புமுறைப் போதனையிலுள்ள தீமைகள் :

1. வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனும் மற்ற ஒவ்வொரு மாணவனின்றும் பல அம்சங்களில் வேறுபடுகிறன். சம வயதுள்ளவர்கள் அல்லது ஏறத்தாழ சம அறிவு உடையவர்கள், சமத் திறமை உடையவர்கள் என்ற அடிப்படையில் வகுப்பு அமைத்து, அவ் வேறுபாடுகளை விலக்க முயலுகிறேம். அவ்வாறு வகுப்பு அமைத்துக் கல்வி போதித்து, பின்பு அவர்களுடைய தேர்ச்சியைச் சோதித்தால் அம்மாணவர்களுள்ளும் பரந்த வேறுபாடுகளைக் காண்கிறேம்.

2. பலதிறப்பட்ட உடல் அமைப்பு, அறிவு, பழக்க வழக்கங்கள், திறமைகள், மனப்பான்மைகள் கொண்ட மாணவர்கள் ஆசிரியர்களின் முன் இருக்கிறர்கள். ஒவ்வொருவரின் இல்லச் சூழ்நிலையும் வெவ்வேறனது. ஆசிரியர் எல்லோருக்கும் சேர்ந்தே போதிக்கவேண்டியிருக்கிறது. வேலையிலும், செயலிலும் சேர்த்தே ஈடுபடுத்தவேண்டியிருக்கிறது. இதனல் மிகுந்த கெட்டிக்கார மாணவர்களுக்கும், மிகுந்த மட்டமான மாணவர்களுக்கும் கேடு நேருகிறது. ஆசிரியர்கள் வகுப்பிற்குப் பொதுவாகக் கொடுக்கும் வேலை, **அளவிலும் தன்மையிலும்** கெட்டிக்கார மாணவர்களுக்குப் போதாது. மட்டமான மாணவர்களுக்கோ அதே வேலை சிக்கலாகவும், சிரமமாகவும் காணுகிறது. இவ்விரு திறத்தாரும் வகுப்புமுறைப் போதனையால் தீங்குறுகிறர்கள். வகுப்பு முழுமைக்கும் பொறுப்புள்ள ஆசிரியர் இவர்களுக்கு மட்டும் தொடர்ந்த தனிக் கவனம்

செலுத்த இயலுவதில்லை. வகுப்புமுறைப்போதனையில் மிக்க தீங்கிழைக்கும் அம்சம் இதுதான்.

ஒரு வகுப்பு மாணவர்கள் சர்க்காவில் நூல் நூற்கிறார்கள். ஆனால் எல்லாரும் சம வேகமாய் நூற்பதில்லை. அதிவேகமாக நூல் நூற்கும் மாணவனை ஊக்கி இன்னும் வேகமாய் நூற்கச் செய்யவோ, அதிகக் குறைவாக நூற்கும் மாணவர்களைக் கவனித்துத் திருத்தவோ வகுப்புமுறைப் போதனையில் போதிய நேரமும் அவகாசமும் இருப்பதில்லை.

சர்க்காவில் நூற்கும் முறைபற்றிய நுட்பங்களை எல்லாரும் சமமாக அறிவதில்லை. சிலருக்கு நூலை வீசனத்தில் முறையாய் வீசத் தெரிவதில்லை. நூற்கும் போது சிலர் சரியான ஆசனத்தில் அமருவதில்லை.

வகுப்பு முழுவதும் பொதுவாய்ச் சேர்ந்து செவ்வையாய்ச் செய்யும் வேலை ஒன்று வகுப்பு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் திருத்தமாயும், தெளிவாயும், பூரணமாயும் தெரிந்திருக்கும் என உறுதியாய்க் கூறமுடியாது. உதாரணமாக, வகுப்பு மாணவர்கள் எல்லாரும் சேர்ந்து "ஜனகணமன" என்ற தேசீய கீதத்தைப் பாடிவிடுவார்கள். இராகத்திலோ, பாட்டின் வரிகளிலோ ஒரு பிழையுமிராது. ஆனால் ஒன்றிரண்டு மாணவர்களைத் தனியாக அழைத்துப் பாடச் சொன்னால் சிலருக்கு முழுப் பாட்டே தெரிந்திராது. சிலருக்குப் பண் தெரியாது. வகுப்பு முறைப் போதனையில் இம்மாதிரியான குறைபாடு இருக்க இடமிருக்கிறது.

3. வகுப்புமுறை வேலையில் ஒரு சிலர் யாதொரு வேலையும் செய்யாமல் வாளாவிருந்துவிடுவர். சிலர்

வேலைசெய்வதுபோல் பாவனைசெய்வர். சிலர் அரை குறையாய்ச் செய்வர். இவற்றின் பயனாய்ச் சிலர் அளவிற்கு மிஞ்சிய வேலைசெய்ய நேரிடும். வகுப்பு முழுவதையும் ஒரு வேலையில் ஈடுபடுத்தும்பொழுது ஓராசிரியர் எல்லாருடைய முயற்சியையும் தனித்தனி யாகப் பார்த்து, நிறை குறை காண்பது எளிதல்ல. ஒவ்வொருவராக உற்றுநோக்கினால்தான் பல நுணுக் கங்களில் அவர்கள் தவறு செய்வதைக் கண்டுபிடிக்க இயலும்.

வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனின் உடல் உள்ள, ஆன்மப் பண்புகளின் வளர்ச்சிக்கும் ஆசிரியர் பாடுபடவேண்டும். ஆனால் மேற்கூறிய காரணங்களால் பிரதி மாணவனுக்கும் தனித்தனியாகப் பாடுபட முடியாது. ஆகையால் வகுப்புமுறைப் போதனையி லுள்ள குறைபாடுகளை நீக்க ஏற்பாடு செய்வதே நடைமுறைக்கேற்ற விவேகமான செயலாகும்.

குழுக் குழுவாகப் பிரித்தல் :

வகுப்பு முறைப் போதனையிலுள்ள குறைபாடுகளை நீக்க வகுப்பைச் சில குழுக்களாகப் பிரித்து வேலையளித் துக் கற்பிப்பது நலம். வகுப்பைச் சமத் திறமையுள்ள சிறுவர்களடங்கிய சிறு சிறு குழுவாகப் பிரிப்பதால் ஒவ்வொரு குழுவினருக்கும் தனிக் கவனம் செலுத்த ஆசிரியருக்கு வாய்ப்பு அதிகம் ஏற்படும். வகுப்பிலோ மிகக் கெட்டிக்கார மாணவர்களுக்கும், மிக மட்டமான மாணவர்களுக்கும் உள்ள வேறுபாடு அகன்றிருக்கும். ஒரு வகுப்பைச் சில குழுக்களாய்ப் பிரிப்பதால் வகுப் பைத் தரப்பிரிக்க முடிகிறது. குழுவிலுள்ள சிறுபான் மையான மாணவர்களோடு ஆசிரியர் நெருங்கிப் பழகி

அவர்களுடைய வேலைகளில் நிறைகுறைகளைக் காண முடிகிறது. குழுவிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறைவா யிருக்குமாதலால் மாணவர்களும் தத்தம் முயற்சியையும், தனிப் பண்புகளையும் காட்ட வசதி ஏற்படுகிறது.

நேர் எதிரெதிரான முழு வகுப்பிற்கும் தனிப்பட்ட ஒருவருக்கும் இடையில் குழுக் குழுவாய்ப் போதிக்கும் உபாயம் ஒரு சிறந்த சமரச ஏற்பாடு போன்றது. குழுக் குழுவாய்ப் போதிப்பதில் வகுப்புமுறைப் போதனை, தனிப்பட்டவருக்குப் போதனை ஆகிய இரண்டிலுள்ள நன்மைகளை அடைய முடிகிறது; இரண்டிலுமுள்ள தீமைகளையும் விலக்கமுடிகிறது.

குழு வேலையில் கூட்டுறவுப் பண்பு நன்கு வளரும். ஆகையால் குழுக் குழுவாகப் பிரித்துப் போதிப்பது சிறந்த முறை. ஆனால் குழு முறையே ஒரு 'சர்வரோக சஞ்சீவி' என நினைப்பது தவறு. சில தருணங்களில் இது ஒரு கைகண்ட முறை என ஆசிரியர்கள் நன்கறிய வேண்டும்.

திறமை அடிப்படையில் குழுப் பிரிப்பது :

குழுக்களை எந்த அடிப்படையில் பிரிக்கவேண்டும் என்பது அடுத்த பிரச்சினை. ஆதாரப் பள்ளிகளில் செயல்கள் மூலமாகக் கற்பிக்கிறோம். ஆகவே, செயல்களை ஒட்டிய திறமைகளின் அடிப்படையில் மாணவர்களைக் குழுவாய்ப் பிரிப்பதுதான் பொருத்த மானது.

ஒவ்வொரு செயலிலும் ஆற்றல், நோக்கத்தில் வலிமை, செயலில் நம்பிக்கை, தலைமைப் பொறுப்பு,

பிறரை உடன் அழைத்துச் செல்லுதல், ... செயலில் ஊக்கம், ஆர்வம், ... திட்டம் வகுத்து, ... ஒழுங்கமைத்து நடத்துவது போன்ற பல உட் பகுதிகள் உள்ளன. எனவே, திறமைகளிற் கீழ்க் குறித்துள்ள வகைகளைக் கூறலாம். உதாரணமாக,

1. பேசும் திறமை
2. எழுதும் திறமை
3. பாடும் திறமை
4. கதை சொல்லும் திறமை
5. நடிக்கும் திறமை
6. உணர்ச்சியுடன் செய்யுள் ஒப்பிக்கும் திறமை
7. கணக்கு வைக்கும் திறமை
8. பொருள் திரட்டும் திறமை
9. சித்திரம் வரையும் திறமை
10. கோலம் போடும் திறமை
11. அலங்கரிக்கும் திறமை
12. நூற்கும் திறமை
13. துணிநெய்யும் திறமை
14. தோட்டவேலையில் திறமை

என நீளமாக எழுதிக்கொண்டேபோகலாம்.

பள்ளியில் செயல்களை நடத்துகிறோம். ஒவ்வொரு செயலை யொட்டியும் துப்புரவு, அலங்காரம், பாச் சாற்று (பஜனை), நாடகம், களியாட்டம், தொழிலைச் செய்துகாட்டுதல், சொற்பொழிவு செய்தல், கதை

சொல்லுதல் போன்ற பல வேலைகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் தனித்தனித் திறமைகள் செயற்படுகின்றன. ஆகவே, திறமைகளின் அடிப்படையில் துப்புரவுக் குழு, அலங்காரக் குழு, பஜனைக் குழு, நடனக் குழு, களியாட்டக் குழு, பேச்சாளர் குழு, தொழில் செய்துகாட்டும் குழு, கதை சொல்லும் குழு, கையெழுத்துப் பத்திரிகைக் குழு என வகுப்பு மாணவர்களைப் பிரித்துக்கொள்வது எவ்வளவு பொருத்தமுள்ளது, பயனுள்ளது, நல்லது என்று காணலாம். அது மாணவர்களுக்கும் மிகப் பிடித்தமான முறையாகும்.

இம்முறையிலுள்ள நன்மைகள்: இம்முறை ஆசிரியர், மாணவர் ஆகிய இருதிறத்தாருக்கும் நல்லது.

அவரவர்களுக்கு எதெதில் ஆற்றலும் விருப்பமும் இருக்கின்றதோ, அந்தக் குழுவில் மாணவர்கள் தாமே விருப்பமுடன் சேருவார்கள். அக்குழுவில் முழுமனத்துடன் வேலைபுரிவார்கள். அவரவர்களது திறமை, அந்தந்த இயற்கைச் சூழ்நிலையிலிருந்து குவிந்து மலரும். மாணவர்களிடம் கவனக்குறைவும் சோர்வும் ஏற்படமாட்டா. ஆசிரியரும் மாணவரும் மகிழ்ச்சியுடனும் சுறுசுறுப்புடனும் வேலைசெய்வார்கள். இவ்விரண்டும் ஆதாரப் பள்ளியின் உரைகல் ஆகும் அல்லவா?

ஒரு வகுப்பைச் சேர்ந்த மாணவன் பிற வகுப்பு மாணவர்களோடு ஒரு குழுவில் சேர்ந்து செயல்புரிய இம்முறையில் வாய்ப்பு உண்டு. (உ-ம்) இவ்வேற்பாட்டின்படி நன்ருய்ப் பாடும் திறமையுள்ள நான்காம் வகுப்பு மாணவன் ஒருவன் பள்ளி முழுவதற்குமான பாச்சாற்றுக் குழுவில் (பஜனைக் குழு) இடம்பெறக்

கூடும். இது டால்டன் திட்ட வேலையிலுள்ள அம்சத்தை ஒத்திருக்கிறது.

வேலையின் தன்மை, அளவு, காலம், வேலைசெய்ய வேண்டிய இடம், தேவைப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றிற்கேற்ப ஒரு குழுவில் எத்தனை மாணவர்கள் சேரலாம் எனக் கணக்கிட்டுக் கொள்ளலாம். ஒரு குழுவில் இரண்டு பேரும் இருக்கலாம்; பாதி வகுப்பும் இருக்கலாம். திறமை அடிப்படையில் பிரிப்பதால் மாணவர்களுக்கு வெற்றி எளிதில் கிட்டுகிறது. எதிர்பாராத வகையில் புகழும் பாராட்டும் கிடைக்கின்றன. அவர்களது ஆளுமை வளருகிறது.

வகுப்பு மாற்றல் : அடுத்தபடியாக நாம் கவனிக்க வேண்டியது வகுப்பு மாற்றல் ஆகும். ஓர் ஆண்டின் இறுதியில் ஒரு வகுப்பிலிருந்து மாணவர்களை மேல் வகுப்புக்கு மாற்றும் வேலை நடைபெறுகிறது.

ஆரம்பப் பள்ளிகளில் வகுப்பு மாற்றல் : சாதாரண ஆரம்பப் பள்ளிகளில் வகுப்பு மாற்றல் பின்வருமாறு நடக்கிறது. ஓராண்டில் பிரதி பாடங்களிலும் மூன்று முறை தேர்வுகள் நடக்கும். ஆண்டின் இறுதியில் நடக்கும் தேர்வில் குறிப்பிட்ட மார்க்குகளுக்குக் குறையாமல் வாங்கும் மாணவர்களை மேல் வகுப்பிற்கு மாற்றுவார்கள். ஒருவன் அத்தேர்வில் தவறியிருந்தால் முன் நடந்த காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் பெற்ற மார்க்குகளையும் கவனித்து, அவனை மேல் வகுப்பிற்கு மாற்றுவதும் உண்டு. இது தவிர, மிகக் கெட்டிக்கார மாணவர்களை அரையாண்டுத் தேர்வையொட்டி மேல் வகுப்பிற்கு மாற்றுவதை விதிகள் அனுமதித்துள்ளன. அங்கு, பாடங்களுக்குத்தான் மார்க்கும் தேர்வும் உண்டு.

விளையாட்டு, தொழில், நாடகம் நடித்தல், பொதுமக்கள் சேவை போன்ற பள்ளிப் பாடத்திட்டத்திற்குப் புறம்பான செயல்களுக்குத் தேர்வுமில்லை; மார்க்குமில்லை.

ஆதாரப் பள்ளிகளில் அளவிடவேண்டிய புது அம்சங்கள்

ஆதாரப் பள்ளிகளிலும் வகுப்பு மாற்றல் ஆண்டின் இறுதியில் நடைபெறுகிறது. அது ஆதாரக் கலைத்திட்டக் குறிக்கோள்களுக்கிணங்க நடத்தப்படும். இங்கு **அறிவை** மட்டுமன்றித் **திறமைகள், பழக்க வழக்கங்கள், மனப்பான்மைகள்** ஆகியவற்றை வளர்க்கவும் திட்டமிட்டுள்ளோம். ஆகவே மேல் வகுப்பிற்கு மாற்றும்போது இவ்வனைத்திலும் மாணவர்களின் வளர்ச்சியைச் சோதித்து அளவிட-வேண்டியிருக்கிறது. இங்கு, பாடத்திட்டத்திற்குப் புறம்பான பாடம் என்பதே கிடையாது; எல்லாம் பாடத்திட்டத்திற் குட்பட்டவையே. எனவே, எல்லாவற்றிலும் சோதனைகள் உண்டு. மற்றொரு வேற்றுமையையும் எடுத்துக்காட்ட-வேண்டும். "அங்கு எல்லாம் பாடங்கள்; இங்கு எல்லாம் செயல்கள்." எனவே, செயல்களில் சோதனைகள் நடத்தவேண்டும்.

ஆதாரப் பள்ளியில் படிக்கும் ஒருவன் எட்டாண்டு இறுதியில் ஒவ்வொரு தலைப்பின்கீழும் என்ன அறிவு, திறமைகள், பழக்க வழக்கங்கள், மனப்பான்மைகள் அடைந்திருக்கவேண்டுமென்று கலைத் திட்டத்தில் தனியாய்க் காட்டியுள்ளார்கள். ஒவ்வொரு வகுப்பிற்கும் உள்ள பாடத்திட்டத்தை யொட்டி அந்தந்த வகுப்பில் ஆண்டு இறுதியில் மாணவனிடம் ஏற்படவேண்டியவற்றை அந்தந்த ஆசிரியர் நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். அவற்றைக்கொண்டு மாணவர்களின் வளர்ச்சிகளை ஒப்பிட்டு மதிப்பிடவேண்டும்.

அவற்றை அளவிடும் முறைகள்

வினுக்களுக்கு விடை எழுதச்சொல்லி வழக்கம் போல் அறிவைச் சோதிக்கலாம். செயல் செய்யும்போது கற்ற அறிவை மாணவன் எப்படி உபயோகிக்கிருன் எனவும் சோதிக்கலாம். இது அவ்வளவு கடினமான தன்று. ஆனல் திறமைகள், பழக்கவழக்கங்கள், மனப் பான்மைகள் ஆகியவற்றைச் சோதிப்பதற்கு வினு விடை முறை சரியானதன்று. இவற்றை அளவிட நீண்ட காலத் தொடர்பு வேண்டும். அப்போதுதான் அது உண்மையான அளவாகும். ஆகவே, ஆண்டு முழுவதும் மாணவர்கள் செய்யும் வேலைகள், அவற்றின் வாயிலாக அவர்கள் பெறும் தேர்ச்சி, திறமை, பழக்க வழக்கங்கள், உடல், உள்ள, ஆன்ம வளர்ச்சி ஆகியவை பற்றி ஆசிரியர் குறித்துவைக்கவேண்டும். அவ்வப் போது காணும் குறைகளை உடனுக்குடன் நீக்க முயல வேண்டும். மாணவர்கள் எழுதும் நாட்குறிப்பு, திங்கள் அறிக்கை, நூற்புக் கணக்கு, தோட்டவேலைப் பதிவேடு கள், பிற பதிவேடுகள் முதலானவை அவர்களுடைய தேர்ச்சியை அவ்வப்போது காட்டவல்லன. இவ்வாறு இவற்றை அளவிட மாணவர்களைப்பற்றி வைக்க வேண்டிய குறிப்புக்கள் மிக முக்கியமானவை எனச் சொல்லத் தேவையில்லை. மாணவர்களின் வளர்ச்சி, தேர்ச்சிபற்றி வைக்கவேண்டிய குறிப்புக்களையும், ரிஜிஸ்தர்களையும்பற்றி "ஆசிரியர்" என்ற அத்தியா யத்திலும், "ரிகார்டுகளும் ரிஜிஸ்தர்களும்" என்ற அத்தியாயத்திலும் விவரித்துள்ளோம்.

அக்குறிப்புக்களின் உதவிகொண்டும் மாணவர்களை மேல்வகுப்பிற்கு மாற்றவேண்டும்.

இங்கு அரையாண்டுத் தேர்வின்மீது வகுப்பு மாற்றல் உண்டா?

இங்கு அரையாண்டுத் தேர்வையொட்டி ஒரு மாணவனை மேல்வகுப்பிற்கு மாற்றலாமா, கூடாதா என ஆதாரக் கல்விக் கலைத்திட்டம் திட்டவட்டமாகக் கூறவில்லை. செயல், தொழில் என்ற அடிப்படையில் இங்கு வகுப்பு வேலைகள் நடைபெறுகின்றன. அவற்றில் அடுத்த வகுப்பிற்கு மாற்றத் தகுந்த சிறந்த தேர்ச்சியை ஒரு மாணவன் பெற்றிருந்தால் மேலதிகாரிகளுக்கு எழுதிக் கேட்டு அவர்கள் உத்தரவின்படி நடக்க வேண்டும்.

---

5. ஆதாரப் பள்ளிக் கலைத் திட்டம்பற்றிய தத்துவங்கள்

ஆதாரப் பள்ளிகளில் நடத்தப்படும் வேலைத் திட்டங்கள், கற்பிக்கப்படும் விஷயங்கள், அவ்விஷயங்களில் ஒவ்வொரு வகுப்பிலும் கற்பிக்கப்படவேண்டிய அளவு, அவற்றைக் கற்பிக்கும் முறை ஆகியவற்றைக் குறித்துப் பயிற்சியாளர் உற்றுநோக்குங்கால் கீழ்க் கண்ட வினாக்கள் உதவும்:

1. *ஆதாரப் பள்ளிகளில் மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கான விஷயங்களை யார் நிர்ணயித்திருக்கிறார்கள்?*

2. (a) *கற்பிக்கவேண்டிய விஷயங்களை நிர்ணயிப்பதில் (கலைத் திட்டம் அமைப்பதில்) என்னென்ன தத்துவங்களைக் கவனித்திருக்கிறார்கள்?*

(b) *அவ்விஷயங்களை எவ்வாறு கற்பிக்கவேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறார்கள்?*

3. என்னென்ன பாடங்களைக் கற்பிக்கவேண்டுமென நிர்ணயித்திருக்கிறார்கள்?

4. 'கலைத் திட்டம்' என்று எதற்குப் பெயர்?

5. 'பாடத் திட்டம்' என்று எதற்குப் பெயர்?

6. கலைத்திட்டத்திற்கும் பாடத்திட்டத்திற்கும் உள்ள வேற்றுமை யாது?

7. ஆதாரப் பள்ளிக் கலைத்திட்டத்தில் மாறுதல் ஏற்பட்டுள்ளதா?

8. கலைத்திட்டம் அமைக்கவேண்டியதன் தத்துவங்களை ஆசிரியர்கள் அறியவேண்டிய அவசியம் யாது?

மேற்கூறிய வினாக்களுக்கு விடை சேகரிப்பதுடன் சாதாரண ஆரம்பப் பள்ளிகள் சம்பந்தமானவையும், இதே நோக்கங்கொண்டவையுமான கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை விசாரித்துக் குறித்துவருவது நம் காரியத்திற்குப் பெரிதும் உதவிபுரியும்.

1. ஆரம்பப் பள்ளிக்கான கலைத் திட்டத்தை யார் நிர்ணயித்திருக்கிறார்கள்?

2. அதில் மாறுதல் ஏற்பட்டது உண்டா? எப்பொழுது மாறுதல் ஏற்பட்டது? மாறுதல் ஏற்படக் காரணம் என்ன?

3. தற்போது ஆரம்பப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாடங்கள் யாவை?

4. அக்கலைத்திட்டத்தை அமைத்தபோது கவனித்த தத்துவங்கள் யாவை?

கலைத் திட்டம் என்றால் என்ன?

ஆரம்பக் கல்வி நோக்கங்களுக்கிணங்க ஆரம்பப் பள்ளிகளிலுள்ள எட்டு வகுப்புக்களில் கற்பிக்கப்பட வேண்டிய மொத்த விஷயங்களுக்கும் **ஆரம்பப் பள்ளிக் கலைத் திட்டம்** என்று பெயர் (Curriculum).

பாடத்திட்டம்:

ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாடத்திலும் கற்பிக்கப்படவேண்டிய விஷயங்களைக் குறிப்பிட்டுக் காட்டும் பகுதிக்குப் **பாடத்திட்டம்** என்று பெயர்.

ஆரம்பப் பள்ளிகளுக்கான கலைத் திட்டம் உருவான வரலாறு:

1939-ஆம் ஆண்டிலேயே ஏதோ ஒரு சில ஆதாரப் பள்ளிகள் நம் மாநிலத்தில் தோன்றின. எனினும், 1948-லிருந்துதான் ஆதாரக் கல்வி இங்கு வேரூன்றிப் பரவத் தொடங்கியது. ஆகவே, அதற்கு முன்னரே நம் ராஜ்யத்தில் அமுலிலிருந்த ஆரம்பப் பள்ளியிலிருந்தே நம் பிரச்சினையைத் தொடங்குவது பொருத்தமாகும்.

1939-க்கு முன்பிருந்த ஆரம்பக் கலைத்திட்டத்தின் பிரகாரம் ஆரம்பப் பள்ளிகளில் படித்தல், எழுதுதல், கணக்குப் போடுதல் என்ற முப்பாடங்களே முக்கியத்துவம் பெற்றிருந்தன. அவற்றை ஆங்கிலத்தில் சுருக்கமாக 3 R's எனக் குறிப்பிடுவதுண்டு. Reading (படித்தல்), Writing (எழுதுதல்), Arithmetic (கணக்கு) என்ற மூன்று ஆங்கிலச் சொற்களின் முதல் உச்சரிப்புத் தொனியிலிருந்து 3 R's என்ற சுருக்கம் ஏற்பட்டது.

காலப்போக்கில் சமூகத்தேவைகள் விரிவடைந்தன. ஆரம்பப் பள்ளிச் சிறுவர்களுக்கு முப்பாடங்களை

மட்டும் கற்பிப்பது போதாது. அவை 'எழுத்தறிவு' என்ற குறுகிய நோக்கமுடையவை. சிறுவர்களின் உடல், மனம், நடத்தை ஆகிய மூன்றையும் பயிற்றத் தகுந்த பாடங்களையெல்லாம் அவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். வாழ்க்கைக்குத் தயாரிக்கும் ஒரு தொழில் கூட அவர்களுக்குக் கற்பிக்கவேண்டியது அவசியம் என நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி விரிவான கலைத் திட்டம் ஒன்றை அரசினர் தயாரித்து 1939-ல் வெளியிட்டனர்.

அத்திட்டத்திலும் ஏற்பட்ட மாறுதல்கள் :

திருத்தப்பட்ட அந்தக் கலைத்திட்டத்திலும் 1941, 1943, 1953, 1955 ஆகிய ஆண்டுகளில் அரசினர் மாறுதல்களை ஏற்படுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அஃமாறுதல்களின் விவரம் பின்வருமாறு :

1941-ல் **பூகோள பாடத்தை** மாற்றியமைத்தார்கள்.

1943-ல் '**அரசியல் முறை**' என்ற பாடத்தை '**அரசியலும் சுகாதாரமும்**' என விஸ்தரித்தார்கள். அதில் 'செஞ்சிலுவைச் சங்கம்'பற்றிய பாடங்களைச் சேர்த்தார்கள்.

1953-ல் கலைத் திட்டத்தில் விஞ்ஞான பாடத்தைக் கட்டாய பாடமாக்கினார்கள். அப்பாடத்திட்டத்தையும் திருத்தியமைத்தார்கள்.

1955-ல் சரித்திரம், பூகோளம், அரசியல் என்ற மூன்று பாடங்களைச் 'சமூக அறிவு நூல்' என்ற புதிய பெயருடன் மாற்றியமைத்தார்கள்.

அத்திட்டத்தின்படி தற்போது கற்பிக்கப்படும் பாடங்கள்:

ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தின் பிரகாரம் தற்போது அமுலில் உள்ள பாடங்கள் பின்வருமாறு:

பாடத்திட்டம்:

I முதல் V வகுப்புக்களுக்கு

கட்டாய பாடங்கள்

1. தாய்மொழி
2. ஆரம்ப கணிதம்
3. இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்
4. சரித்திரம், பூகோளம்
5. அரசியலும் சுகாதாரமும் (சிறுமிகளுக்கு வீட்டுவேலை, தையல்வேலை உள்பட)
6. உடற்பயிற்சி
7. சங்கீதம்
8. கைத்தொழில்கள்

இஷ்ட பாடங்கள்

1. சித்திரம்
2. முதற் சிகிச்சை
3. முஸ்லிம் பாடசாலைகளிலும், இருமொழிகள் வழங்கும் பிரதேசங்களிலும் இரண்டாவது மொழி
4. சன்மார்க்க போதனையும், மதபோதனையும்

VI, VII, VIII வகுப்புக்களுக்கு

கட்டாய பாடங்கள்

1. தாய்மொழி
2. ஆரம்ப கணிதம்
3. விஞ்ஞான நூல் (சிறுமிகளுக்குக் குடும்ப நூல் உள்பட)
4. சமூக நூல்
5. உடற்பயிற்சி
6. கைத்தொழில் ஆயத்த வேலை (கிராம உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் அநுபவத் தோட்ட வேலை உள்பட)

இஷ்ட பாடங்கள்

1. ஆங்கிலம்
2. சங்கீதம்
3. இரண்டாவது பிரதேசமொழி (முஸ்லிம் பாடசாலைகளிலும், இருமொழிப் பாடசாலைகளிலும்)
4. சன்மார்க்க போதனையும், மதபோதனையும்
5. சித்திரம்

புது அம்சங்கள் :

திருத்தப்பட்ட இப்பாடத்திட்டத்தில் பாடங்களைக் கட்டாய பாடங்கள் எனவும், இஷ்ட பாடங்கள் எனவும் பாகுபடுத்தியிருப்பது ஒரு புது அம்சம். இது கவனித்தற்குரியது. ஒவ்வொரு பாடத்திலும் அநுபவ வேலை என்று ஒரு பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. அதுவும் ஒரு புது அம்சம்.

ஒவ்வொரு வகுப்பிலும் ஒவ்வொரு பாடத்தையும், ஒரு வாரத்திற்கு எவ்வளவு பீரியடுகள் நடத்தவேண்டும் என்றும் நிர்ணயித்து வெளியிட்டுள்ளார்கள். ஓராண்டில் 220 நாட்கள் வேலைசெய்யவேண்டும் என்றும் நிர்ணயித்துள்ளார்கள்.

ஆரம்பக் கல்வித்திட்டத்தில் 1942-ல் மற்றொரு முக்கியமான மாறுதலும் ஏற்படுத்தப்பட்டது. 1941-ம் ஆண்டுவரை ஆரம்பப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு படித்து முடித்த சிறுவர்களுக்கு மாநில அடிப்படையில் அரசினரால் நடத்தப்படும் யாதொரு பொதுப் பரீட்சையும் இல்லை. அப்பள்ளிகளைக் கண்காணிக்கும் ஆய்வாளர்களே அவ்வப் பள்ளிகளிலுள்ள எட்டாம் வகுப்புச் சிறுவர்களுக்குத் தேர்வு நடத்தித் தேர்வுச்சான்றிதழ் வழங்கிவந்தனர். 1942-ம் ஆண்டு முதல் அம்முறை திருத்தியமைக்கப்பட்டது. அவ்வாண்டுமுதல் அரசினரே மாநில முழுவதற்குமான ஒரு பொதுத் தேர்வை எட்டாம் வகுப்பு முடித்த மாணவர்களுக்கு ஏற்படுத்தியுள்ளனர். அது இப்போதும் அமுலில் இருந்துவருவது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே.

கலைத்திட்டத்தை அமைத்தபோது கவனிக்கப்பட்ட கொள்கைகள் :

மேலே விவரித்தவற்றிலிருந்து ஆரம்பப் பள்ளிகளில் கற்பிக்கப்படவேண்டிய விஷயங்களைச் சமூகத் தேவைகளுக்கேற்ப அவ்வப்போது மாற்றி யமைக்கவேண்டியிருந்த அவசியத்தை அறியலாம். அக் கலைத்திட்டம் அமைத்தபோது கருதப்பட்ட கொள்கை களைப் பின்வருமாறு கூறலாம் :

1. கல்வியின் நோக்கங்களுக் கிணங்கக் கலைத்திட்டம் அமைக்க வேண்டும்.

2. பள்ளியில் கற்பிக்கும் விஷயங்கள் வெளி உலக வாழ்க்கை யுடன் தொடர்புகொண்டிருக்கவேண்டும். பிற்கால வாழ்க்கைக்குச் சிறுவர்களைத் தயாராக்க முயலவேண்டும். அதற்குத் தற்காலச் சிறுவர் வாழ்க்கையைச் சரியாக வாழப் பயிற்றவேண்டும். அப்படிச் செய்தால் தான் சிறுவர்களுக்குக் கவர்ச்சி ஏற்படும். அதனால் அவர்கள் தற்கால வாழ்வைச் செவ்வையாய் வாழக் கற்று, பிற்காலத்தைய சிக்கலான வாழ்விற்குத் தயாராக முடியும்.

3. பள்ளியில் கற்பிக்கும் விஷயங்கள் சிறுவர்களின் உடல், மனம், நடத்தைப் பண்புகள் வளர்வதற்கு உதவவேண்டும்.

4. சிறுவர்களுக்குக் கைத்திறனும், அதன் மூலம் அறிவுத் தெளிவும் வளருமாறு ஒரு தொழில் அல்லது கைவேலையைப் பள்ளியில் கற்பிக்கவேண்டும்.

5. எட்டு ஆண்டுகள் படித்து முடித்துத் தேர்வுபெற்ற ஒரு சிறுவன் தன் கிராமச் சூழ்நிலையில் எளிதாய், போதிய திறமையுடன் பூரண வாழ்வு வாழக் குறைந்தபட்ச விஷயங்களைக் கற்றிருக்க வேண்டும்.

கலைத்திட்டம் – அதன் விரிந்த பொருள் :

கலைத்திட்டத்திற்கு இப்போது பொருள் விரிந்துள்ளது. கல்வியின் குறிக்கோள்களைச் சிறுவர்கள்

அடைவதற்குப் பள்ளி அளிக்கக்கூடிய எல்லா வகை **அநுபவங்களுக்கும்** மொத்தமாகக் கலைத்திட்டம் என்று பெயர். வகுப்பறை, விளையாட்டிடம், பொது மன்றம், பள்ளிப் பயணங்கள் ஆகிய எல்லாப் பகுதிகளிலிருந்தும் கிடைக்கும் அறிவு, பழக்க வழக்கங்கள், திறமைகள், மனப்பான்மைகள் ஆகியவற்றை யெல்லாம் கலைத் திட்டம் என்ற சொல் குறிக்கும். அது வெறும் அறிவுப் பகுதியை மட்டும் குறிப்பது அன்று.

ஆதாரப் பள்ளிக்கான கலைத் திட்டம் :

ஆதாரப் பள்ளிகளுக்கென ஒரு கலைத் திட்டம் இருப்பதுபோல் ஆதாரப் பள்ளிகளுக்கும் ஒரு தனிக் கலைத் திட்டம் உள்ளது. அதை '**ஆதாரப் பள்ளிக் கலைத் திட்டம்**' எனக் கூறுவர். ஆதாரக் கல்வி நோக்கங்களுக்கிணங்க, ஆதாரப் பள்ளிகளில் படிக்கும் சிறுவர் சிறுமியர்களுக்கு எட்டு வகுப்புக்களிலும் கற்பிக்க வேண்டிய ஒவ்வொரு பாடத்தின் அளவும் அதில் காட்டப்பட்டுள்ளது. அந்த அளவைத்தான் பாடத் திட்டம் என்கிறோம். ஒவ்வொரு வகுப்பிற்கும் வகுக்கப்பட்டுள்ள பாடத்தை அவ்வகுப்பிலேயே முடித்துவிடவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லை. ஆனால் எட்டாண்டின் இறுதியில் எல்லா விஷயங்களும் கற்பிக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஆரம்பப் பள்ளிக் கலைத் திட்டத்திற்கும், ஆதாரப் பள்ளிக் கலைத் திட்டத்திற்கும் நிரம்ப வேற்றுமைகள் உள்ளன: அதன் அமைப்பில், பள்ளியை ஜனநாயக சமூகமாக அமைப்பதில், கால அட்டவணை அமைப்பதில், போதனை முறையில், தேர்வுகள் நடத்திச் சிறுவர்களின் தேர்ச்சியைக் கணக்கிடுவதில், ஆசிரியரின்

பெயரை 'அண்ணு' என மாற்றியிருப்பதில், ஆசிரியர் களுக்கும் சிறுவர்களுக்கும் விடுதலை அளித்திருப்பதில், இன்னும் பல அம்சங்களில் வேறுபாடுகள் உள்ளன.

இக்கலைத் திட்டத்தை உருவாக்கித் தந்தவர்கள், இந்தியாவின் பல பகுதிகளைச் சேர்ந்த கல்வி நிபுணர்கள் ஆவர்; நாட்டு முன்னேற்றத்தில் நாட்டங் கொண்டவர் கள். **ஸ்ரீமதி ஆஷா தேவி, ஸ்ரீ அரியநாயகம், ஸ்ரீ ஏ. எம். போஸ், டாக்டர் ஸக்கீர் ஹுஸேன், டாக்டர் ஸையிடீன்** போன்றவர்களை இங்குக் குறிப்பிடலாம்.

ஆதாரப் பள்ளிக் கலைத் திட்டம் உருவான வரலாறு:

ஆதாரப் பள்ளிக் கலைத்திட்டம் உருவாகி வளர்ந்த வரலாறு பின்வருமாறு:

டிஸம்பர், 1937 – இந்தியக் கல்வித் துறையில், சரித்திரப் புகழ்பெற்ற ஸக்கீர் ஹுஸேன் கமிட்டியாரின் அறிக்கை வெளியாயிற்று. அதனோடு இணைந்து ஏழு வகுப்புகளுக்குரிய கலைத் திட்டம் ஒன்றும் வெளியாயிற்று. அத்தருணத்தில் ஆதாரக் கல்வி அளிக்கவேண்டிய காலம் ஏழாண்டுகளாக நிர்ண யிக்கப்பட்டிருந்தது. ஆகையால் கலைத்திட்டத்தில் ஏழு வகுப்புக்களே குறிக்கப்பட்டிருந்தன.

இதுவே முதல் கலைத்திட்டம். இதற்கு முன் ஆதாரப் பள்ளியே இல்லையாதலால் இத்திட்டத்திற்கு அநுபவ பிற்புலம் யாதொன்றும் இல்லை. இந்திய தேசியக் கல்வியை உருவாக்க எண்ணிய சில கல்வி நிபுணர்கள் காந்திஜியின் ஆதரவில் கூடி முடிவு செய்தபடி இந்தக் கலைத் திட்டம் உருவாகியது.

பிப்ரவரி, 1938 – ஹரிபுராவில் நடந்த காங்கிரஸ் மகா சபை ஆதாரக் கல்வியைப்பற்றிய தீர்மானத்தை நிறைவேற்றியது. அந்தத் தீர்மானம் ஸக்கீர் ஹுஸேன் கமிட்டியாரின் அறிக்கையையே அடிப் படையாகக்கொண்டு உருவாகியது. ஆனால் அதிலுள்ள சுயதேவைப் பூர்த்தி அம்சத்தை மட்டும் காங்கிரஸ் சபை தீர்மானத்தில் விலக்கப் பட்டிருந்தது. அக்கலைத்திட்டத்தையே எல்லா ராஜ்யங்களும் பின்பற்றின.

ஜனவரி, 1945 – ஆதாரக் கல்விக் காலத்தை ஏழிலிருந்து எட்டாண்டுகளாக உயர்த்தினர்கள். சேவா கிராமத்தில் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம் நடத்தி வந்த ஆதாரப் பள்ளி வேலைகளின் அநுபவத்தின் மீதும், பல ராஜ்யங்களில் நடந்துவந்த ஆதாரப் பள்ளி வேலைகளின் அடிப்படைமீதும் முதல் கலைத்திட்டத்தை மாற்றியமைக்கத் தீர்மானித் தனர்.

1947 – மேற்கூறிய தீர்மானத்தின் விளைவாய் I முதல் V வரை உள்ள வகுப்புக்களுக்கு மட்டும் திருத்தப் பட்ட கலைத்திட்டம் வெளியாயிற்று.

மே, 1949 – பெரியநாயக்கன்பாளையத்தில் நடந்த அகில இந்திய ஆதாரக் கல்வி மகாநாட்டில் ஆதாரக் கல்வியின் அடிப்படைக் குறிக்கோள்கள் திருத்தி யமைக்கப்பட்டு இரண்டாக வெளிவந்தன.

1950 – திருத்தப்பட்ட I–VIII வகுப்பு ஆதாரக் கல்விக் கலைத்திட்டம் வெளிவந்தது. அதைத்தான் சென்னை அரசாங்கம் ஏற்று நம் மாநில ஆதாரப்

பள்ளிகளுக்கு அளித்துள்ளது. ஆங்கிலத்தி லுள்ள அந்தக் கலைத்திட்டத்தைக் கீழ மூங்கிலடி காந்தி ஆசிரமத்தார் தமிழில் மொழிபெயர்த் துள்ளனர்.

இவ்வாறு ஆதாரக் கல்விக் கலைத் திட்டத்தை உருவாக்குவதும், மாற்றியமைப்பதும் தற்போது ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தாரின் பொறுப்பி லிருக்கிறது.

கலைத்திட்ட அமைப்புக் கொள்கைகள்

1. சிறுவர்களின் அநுபவங்களே கலைத்திட்டத்தின் அடித்தளம் :

சிறுவர்களின் உடல், உள்ள, ஆன்ம வளர்ச்சிக்கு முறையான வழி வகை செய்யும் ஏற்பாடே கலைத் திட்டம் ஆகும். சிறுவர் வாழும் சூழ்நிலைக்குத் தக்க வாறு அநுசரித்து நடந்து பொருந்தச் செய்வதுதான் கலைத்திட்டத்தின் முதல் வேலையாகும். தற்காலத்தில் உள்ள சூழ்நிலையை மட்டுமன்றிச் சிறுவன் பெரிய வனாகிப் பின்னர் நற்குடியாக வாழப்போகும் சூழ்நிலைக் குத் தக்கவாறு வாழக் கற்பிப்பதும் கலைத் திட்டத்தின் வேலையாகும்.

குழந்தை பிறந்தது முதல், அதற்கும் அது வாழும் சூழ்நிலைக்கும் பரஸ்பர வினையும் பிரதிவினையும் நடந்த வாறே யிருக்கின்றன. அவற்றின் பயனாகச் சிறுவனுக் கும் பல அநுபவங்கள் கிட்டுகின்றன.

சூரிய உதயம், மறைவு, இரவு பகல், சந்திரனது ஒளியிலும் உருவத்திலும் மாறுதல்கள், மேகம், மழை, பயிர் வளருதல், பருவகால மாறுதல்கள் முதலிய வற்றைக் காணுவதிலிருந்து சிலவகை அநுபவங்கள்

சிறுவனுக்குக் கிடைக்கின்றன. அவற்றைத்தான் நாம் பூகோள அறிவு என்று கூறுகிறோம். ஆனால், சிறுவனுக்கு அந்தக் கலைச் சொல் தெரியாது.

பழங்கட்டடங்கள், பழங்கால உடைகள், போக்குவரத்துச் சாதனங்கள், பழங்காலச் சிலைகள், படங்கள் முதலியவற்றைப் பாலன் பார்க்கிறான்; தற்காலச் சாதனங்களையும், கருவிகளையும் பார்க்கிறான்; இரண்டு வகைப் பொருள்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறான். இவ்வகையான சிறு சிறு அநுபவங்களே பின்பு நாட்டின் சரித்திர நூலைப் படிப்பதற்கு அடிப்படையாகின்றன.

தன் குடும்ப உறுப்பினர்கள், நாட்டுப்புற மக்கள், பட்டண மக்கள், தொழிலாளிகள், கூலிக்கு உழைப்பவர், வணிகர் ஆகியவர்களை நாள்தோறும் பல சந்தர்ப்பங்களில் பாலன் பார்க்கிறான். அவர்கள் எல்லாரும் வெவ்வேறு வகையில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உழைக்கிறார்கள் எனச் சிறிது சிறிதாக அறிகிறான். சமூகத்திலுள்ள கட்டுப்பாடு, விதிகள், கூட்டுறவு, கடமைகள், உரிமைகள் முதலியவற்றை அறிகிறான். சமூகத் தொடர்புக்கும், ஆட்சி முறைக்கும் அவ்வநுபவங்களே அடிப்படையாயிருக்கின்றன.

பாலனுடைய அன்றாட வாழ்க்கையில் பொருள்களை எண்ணவும், கழிக்கவும், பெருக்கவும், வகுக்கவும், பண்டங்களை நிறுக்கவும், நீளங்களை அளக்கவும், பொருள்களுக்கு விலை கொடுக்கவும், வேலைக்குக் கூலி வழங்கவும் வேண்டிவருகிறது. இயற்கையில் காணும் பல உருவங்களையும், வடிவங்களையும் பாலன் அறிய நேரிடுகிறது. இவ்வநுபவங்களிலிருந்து எண்ணறிவு,

உருவ அறிவு, அளவை அறிவு முதலியவை அடங்கியுள்ள கணித நூலுக்கு அடிப்படை உண்டாகிறது.

இவ்வாறு அன்றாட வாழ்க்கை வாயிலாகவே சிறுவர்கள் இயற்கையிலிருந்தும், சமூகத்திலிருந்தும் எண்ணிறந்த, நேரடியான அநுபவங்களைப் பெறுகிறார்கள். இவற்றையெல்லாம்தான் நாம் பாகுபடுத்தி விஞ்ஞானம், தாவர நூல், உயிர் நூல் என்று பெயர் கொடுத்துள்ளோம்.

இந்த அநுபவங்களை யெல்லாம் ஆரம்ப நிலையாகவும், அடித்தளமாகவும்கொண்டு கலைத்திட்டம் உருவாகவேண்டும். பள்ளிப் பாடபோதனை வேலையும் அவற்றிலிருந்தே தொடங்கவேண்டும். பள்ளிக்குப் புறம்பான வாழ்வில் சிறுவர்கள் பெறும் இத்தகைய நேரடியான, ஜீவன் நிரம்பிய, தாமே பங்குகொண்ட அநுபவங்களைக் கலைத்திட்டம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இன்றேல், கல்வி பொருளற்று ஏட்டுச் சுரைக்காய் ஆகும்.

சிறுவர்களின் அநுபவங்களை வளர்த்து ஒழுங்குபடுத்திக் கலைத்திட்டம் அமைக்கவேண்டும்.

மேற்சொன்னவாறு வெளிவாழ்க்கையில் இயற்கைச் சூழ்நிலையிலும், சமூகச் சூழ்நிலையிலும் சிறுவர்களுக்கு ஏதோ சிறிது அறிவு கிட்டுகிறது. ஆனால், அந்த அநுபவங்கள் உதிரியானவை; தனித்தனியாய் ஏற்படுபவை; பாகுபாடு செய்யப்படாதவை; சந்தர்ப்ப வசமாய்க் கிடைப்பனவேயன்றி முன்யோசனையுடன் திட்டமிட்டுப் பெறுபவை அல்ல. ஆகையால் அவற்றிலிருந்து சிறுவர்கள் பெறும் அறிவில் தெளிவோ, திருத்தமோ, தொடர்போ இருப்பதற்கில்லை.

கலைத்திட்டம் இத்தகைய இயற்கை, சமூகச் சூழ்நிலை அநுபவங்களை இணைத்துப் பாகுபாடு செய்து, ஒழுங்குபடுத்தி, அவற்றை மேலும் மேலும் விருத்தி செய்யவேண்டும். அநுபவங்களைச் சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம் என்று அறிவின் பல பகுதிகளாகக் காட்டி, சிறுவர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்கவும், அவர்கள் முன்னிலும் சிறந்த, பூரண வாழ்க்கை வாழவும் உதவவேண்டும்.

உதாரணமாக, பாலன் நாள்தோறும் ஒரு இரயில் ஸ்டேஷனைப் பார்க்கிறான் என வைத்துக்கொள்வோம். அங்கு நடைபெறும் அலுவல்களைக் கவனிக்கிறான். அங்கு வேலைசெய்யும் பல தொழிலாளிகளையும், பிரயாணம் செய்யும் மக்களையும் பார்க்கிறான். அதனால் அவனுக்குப் பல அநுபவங்கள் கிட்டுகின்றன. எனினும், இரயில்வே ஸ்டேஷனில் நடக்கும் வேலைகளைப்பற்றிய எல்லா அறிவையும் போதனையின்றிப் பாலன் அறிந்துகொள்ளமுடியாது. அதைச் செய்வதுதான் பள்ளியின் வேலை.

இரயில்வே நிலைய வேலைகளைப்பற்றிப் பாலனுக்குக் கற்பிக்கவேண்டுமென்றால், திட்டமிட்டு அவ்வநுபவங்களுக்குத் தொடர்பு கொடுத்துப் பொருளுரைக்கவேண்டும். பல அநுபவங்களைப் பாகுபடுத்தி அறிவு விஷயங்களைக் கற்பிக்கவேண்டும்.

உதாரணமாக,

1. டிக்கெட் வாங்குமிடம்.
2. பண்டகசாலை.
3. பிரயாணிகளுக்குச் சுகாதார வசதிகள்.

4. தந்தி, தொலைபேசி வேலைகள்.

5. இரயில் வண்டி வரும்போது நடக்கும் வேலைகள்.

6. கைகாட்டி, கொடி, விளக்கு, ஊதல் ஆகிய வற்றின் உபயோகம்.

7. மக்களுக்கான பிரசார அறிக்கைகள்.

என்ற சில தலைப்புக்களில் அறிவை விளைவித்துத் தொடர்புறுத்தி இரயில்வே நிலையத்தில் நடக்கும் பல வேலைகளைத் தெளிவாக அறியச்செய்யவேண்டும். இதே அறிவுதான் பின்னர்ப் பூகோளம், வரலாறு, ஆட்சி முறை, பொருளாதாரம், சமூக நூல், விஞ்ஞானம், என்ற அறிவுக் கிளைகளாகக் கூறப்படுகின்றன.

கலைத்திட்டம் செயலாய் அமையவேண்டும்.

சிறுவன் எப்பொழுதும் துருதுரு என்று இருக்கிறான். சிறிதுநேரங்கூடச் சும்மா இருப்பதில்லை. ஏதாவது ஒரு செயலில் ஈடுபட்ட வண்ணமாக இருக்கிறான். அவன் காணும் பொருள்களை எடுத்து ஆட்டி, குலுக்கி, உடைத்து, மீண்டும் பொருத்திப் பார்த்து ஏதாவது ஆராய்ச்சி செய்தவண்ணமா யிருக் கிறான். எதையும் தானே சோதித்து அறிய விரும்பு கிறான். இதைப்பற்றி நாமெல்லோரும் அறிவோம். இந்த ஆக்க அழிவுச் சோதனைச் செயல்களையும், அவற்றை யொட்டிய ஏன், எப்படி என்ற வினாக் களையும் ஆராய்ந்த மனநூல் அறிஞர்கள் குழந்தைகள் எல்லோரும் பெரிய விஞ்ஞானிகள் என்றும், புதுநாடு காண்போர் போன்றவர்கள் என்றும் புகழ்ந்து கூறு கிறார்கள். எதையும், தாமே செயல் மூலமாகக்

கண்டறிய விரும்புவது சிறுவர்களுக்கு இயற்கையாய் அமைந்த ஒரு சக்தி; ஓர் இயற்கை மூலதனம்; மிக்க வலிமையுள்ள ஒரு சக்தி.

கலைத் திட்டம் இந்தச் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்; இதைப் புறக்கணிக்கக்கூடாது.

நடைமுறையில் இந்தச் சக்தியைப் பின்வருமாறு உபயோகிக்கவேண்டும். விஷயங்களைக் கருத்து உருவான சொல்லால் விளக்காமல், வேலைசெய்யும்பொழுது எழும் பிரச்சினைகள் வாயிலாக அறியச்செய்யவேண்டும். எனவேதான் பாடத்திட்டம் என்று சொல்லாமல் 'வேலைத் திட்டம்' அல்லது 'செயல் திட்டம்' என்று ஆதாரப் பள்ளிகளில் குறிக்கிறோம். ஆகவே, பள்ளிகளைச் **சொற்பொழிவு மண்டபம்** ஆக்காமல் சிறுவர்கள் வேலைசெய்யும் **பட்டறைகளாகவும், வேலைப் பண்ணைகளாகவும்,** தாமே பொருள்களையும் விஷயங்களையும் சோதித்து உண்மையை அறியும் **சோதனாலயங்களாகவும்** மாற்றவேண்டும் என்று ஆதாரக் கல்விக் கலைத் திட்டம் கூறுகிறது.

குறிப்பான நல்ல மனப்பான்மைகளைக் கலைத்திட்டம் வளர்க்கவேண்டும்.

சிறுவர்களுக்கு வெறும் அறிவு விஷயங்களை மட்டும் போதிப்பது ஆதாரக் கல்வியின் நோக்கமன்று. கல்விபெற்ற ஒருவனையும், கல்விபெறாத ஒருவனையும் வேறுபடுத்திக் காட்டுவது அவர்களது நடத்தையே.

" ... ... **கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக** " என்கிறார் **வள்ளுவர்**. சாலையின் நடுவில் ஒரு கண்ணாடித் துண்டு கிடக்கிறது. சாலைமீது போகும் எவனொருவன்

அதைக் கவனித்து யாதொரு தூண்டுதலுமின்றித் தானே அப்புறப்படுத்துகிருனே அவனே உண்மைக் கல்விபெற்றவன். எவனெருவன், கல்விபெற்றிருந்த போதிலும், அக்கண்ணுடித் துண்டைப் பொருட் படுத்தாது மேலும் நடந்து செல்கிருனே அவன் கல்வி பெற்றவனுகக் கருதப்படமாட்டான். முன்னவனிடம் நல்ல சமூக மனப்பான்மை ஏற்பட்டு வளர்ந்திருக்கிறது; பின்னவன் வெறும் ஏட்டுக் கல்வியே கற்றுள்ளான். அவன் பெற்ற கல்வி அவனது நடத்தையை மாற்றி அமைக்கவில்லை. நடத்தையைக் கல்வி மாற்றியமைக்க வேண்டும். அதுவே உரைகல்.

கலைத்திட்டமானது சிறுவர்களிடம் குறிப்பான சில **சமூக** மனப்பான்மைகளையும், **அறிவு** மனப்பான்மை களையும், **ஒழுக்க** மனப்பான்மைகளையும் ஏற்படுத்த வேண்டும். மனப்பான்மை வளர்ச்சியானது பள்ளி வாழ்க்கையால் மட்டும் திடப்படுவதன்று என்பது உண்மையே. முற்கூறிய மனப்பான்மைகள் வளரச் சிறுவர்களின் வீட்டு வாழ்க்கையும் பொறுப்புள்ளது. எனினும், கலைத் திட்டத்தைச் சரியான முறையில் அமைப்பதாலும், சரியான விஷயங்களை அதில் சேர்ப்ப தாலும் அவனது மனப்பான்மையை வளர்க்கலாம். கலைத்திட்டத்தில் உள்ள பாடங்களைக் கட்டடத்தின் சாளரங்களுக்கு ஒப்பிடலாம். அச் சாளரங்கள் வாயி லாகப் பாலன் உலகத்தைப் பார்க்கிருன். அவற்றின் மூலம் மொத்தமான காட்சி சிறுவனுக்குக் கிட்டுகிறது. அதன்பின், அக்காட்சி அவனது வாழ்க்கையைப் பாதிக்கிறது.

சரியான மனப்பான்மைகளை ஏற்படுத்துவதன் வாயிலாகத்தான் சிறுவர்கள் பிற்காலத்தில் விவேக முள்ள, படைப்பு வன்மையுள்ள, சுறுசுறுப்பான, கூட்டுறவு மனப்பான்மையுள்ள நற்குடியாக ஆக முடியும். இந்த நோக்கத்துடனேயே கலைத்திட்டத்தி லுள்ள ஒவ்வொரு பாடத்தையும் என்ன இலட்சியங் களோடு கற்பிக்கவேண்டும் என்று சாகீர் ஹுஸேன் கமிட்டியார் மிக்க அழகாக எடுத்துக்காட்டியுள்ளனர். உதாரணமாக, சரித்திர போதனை மூலம் தனிப்பட்ட அரசர்களின் சுயநலப் போர்களுக்கும், வெற்றிகளுக்கும் அழுத்தம் கொடுத்துக் கல்வி போதித்தால் சிறுவர் களிடம் அத்தகைய யுத்த மனப்பான்மையே உதயமாகி வளரும். அதற்குப் பதிலாகச் சரித்திரத்தை மக்களின் கூட்டுமுயற்சியால் ஆக்கப்பட்ட ஒரு ஆக்கவேலை வரலாருகவும், பண்பாட்டு வளர்ச்சியின் வரலாருகவும் கற்பித்தால் வேண்டத்தக்க மனப்பான்மைகளைச் சிறுவர்களிடம் வளர்த்தல் இயலும்.

நமது இந்தியப் பிரதமர் **ஜவாஹர்லால் நேருஜி** எழுதியுள்ள சரித்திர வரலாறுகள் சீரான போதனை முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். தன்னலத் துடன் போர்தொடுத்து வெற்றிபெற்றவர்களின் பெரு மைகளைவிடச் சமாதான தூதர்களின் பெருமுயற்சிகளை எடுத்துக்காட்டுமாறு சரித்திரம் போதிக்கப்பட்டால் உலக சகோதர மனப்பான்மையையும் உலக சமாதான மனப்பான்மையையும் சிறுவர்களிடம் விளைவிப்பது எளிதாகும். பாடங்களையும் இவ்வாறே அந்தந்தப் பாடத்தின் இலட்சியத்திற்கேற்பக் கற்பிக்கவேண்டும்.

கலைத்திட்டத்தில் பாடங்களைச் சேர்க்கும்போது கவனிக்கவேண்டிய தத்துவங்கள் :

1. குழந்தையின் வளர்ச்சிப் படிகளுக்கிணங்கப் பாடத் திட்டம் அமையவேண்டும். குழந்தைகளின் சக்தி, இயற்கைக் கவர்ச்சிகள், இயல்பூக்க ஆற்றல்கள், வளர்ந்து விரிந்துகொண்டேபோகும் அநுபவங்கள் ஆகியவற்றையொட்டி அமைத்தால்தான் குழந்தை, மையக் கல்வி ஆகும். கலைத்திட்டத்தில் சேர்க்க விருக்கும் பாடமானது குழந்தையின் வளரும் அநுபவத்தோடும், அதன் தேவைகளோடும் இயற்கையாய் இணையவேண்டும். குழந்தைகளின் தேவைகளை உடல் தேவை, அறிவுத் தேவை, உணர்ச்சி – சமூகத் தேவை என மூன்று வகைப் படுத்தலாம். கலைத்திட்டம் இம் மூன்றிற்கும் ஈடுசெய்யவேண்டும்.

2. கலைத்திட்டமானது அந்தந்தப் பிராந்தியத்தின் தனிப்பட்ட தேவைகள், தொழில்கள், பூகோளக் கூறுகள், சமூக மரபுகள், சுற்றுப்புறச் சமூக மோதல்கள் ஆகியவற்றிற்கு இணங்க உருவாக்கப் படவேண்டும். எல்லோருக்கும் ஒரே கலைத் திட்டத்தை வழங்குவது உசிதமாகாது. ஆதாரக் கல்விக் கலைத் திட்டத்தில் எல்லாப் பிராந்தியங் களுக்கும் பொருந்தும் அடிப்படை விஷயங்களை மட்டும் குறித்திருக்கிறார்கள். அந்தந்தப் பிராந்தி யத்திற் கேற்றவாறு ஆதாரத் தொழில்களைத் தேர்ந்தெடுப்பதிலும், கலைத்திட்ட உட்பகுதிகளைச் சற்று மாற்றி அமைத்துக்கொள்வதிலும் சுதந்திர மளித்திருக்கிறார்கள்.

3. நாம் உருவாக்கவிருக்கும் புதுச் சமுதாயத்தைப் படைக்க ஏதுவான நோக்கங்களுக்குக் கலைத் திட்டம் அழுத்தங் கொடுக்கவேண்டும். உதாரணமாக, சரித்திர போதனை மக்களின் கூட்டு முயற்சியை வற்புறுத்தவேண்டும்; மக்களின் பண்பாட்டு வளர்ச்சியை வற்புறுத்தவேண்டும்; விஞ்ஞானம், கலை, சிற்பம், தொழில், கவிதை, இயந்திரம் போன்ற எண்ணிறந்த நன்மைகளைத் தந்த மக்களின் முயற்சிகளுக்கு அழுத்தங் கொடுக்கவேண்டும்; சமாதான வாழ்க்கையை வற்புறுத்தவேண்டும். இலக்கிய போதனையானது உண்மை, இன்னு செய்யாமை, ஒழுக்கம், அன்பு, சகோதரத்துவம் ஆகியவற்றை வற்புறுத்த வேண்டும்; விஞ்ஞானத்தை மக்களின் நலத்திற்கும் ஆக்கவேலைக்கும் பயன்படுத்தவேண்டும்; அழிவு வேலைக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற மனப்பான்மையை வளர்க்கவேண்டும். விஞ்ஞான நுணுக்கங்களை மட்டும் கற்றால் போதாது. ஆதாரக் கல்வியானது சுரண்டலற்ற, வர்க்கபேதமற்ற, வகுப்பு பேதமற்ற ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்கத் திட்டமிட்டிருக்கிறது. உண்மை, இன்னு செய்யாமை அடிப்படையில் அது அமைக்கப்படும். அங்கு எல்லோரும் கூட்டுறவு முறையில் உழைப்பார்கள். கலைத்திட்டம் இவற்றிற்கு ஏற்ப அமையவேண்டும்.

4. கலைத்திட்டமானது மனத்தின் ஒருமைப்பாட்டை மதித்து அதற்காவன செய்யவேண்டும். சம்பந்தப் படாத பல பாடங்களைக் கலைத்திட்டத்தில் புகுத்தி ஒவ்வொன்றிற்கும் உயர்ந்த பீடம் அளித்துச்

சிறுவர்களின் மனத்தைக் குழப்பக்கூடாது. உலக வாழ்க்கையில் சரித்திரம், பூகோளம், இலக்கியம் என்ற தனித்தனிக் கூறுகள் இல்லை. அவையெல்லாம் நாம் பிரித்துப் பெயர் கொடுத்தவையே. ஒவ்வொன்றிலும் இவை கலந்தேதான் காணுகின்றன. சிறுவனும் அவ்வாறேதான் உணருகிறான்.

எனவேதான், இயைபுமுறை ஆதாரக் கல்வித் திட்டத்தில் தனியிடம் பெற்றுள்ளது. சரித்திரம், பூகோளம், தாய்மொழி, கணிதம் என்று தனித்தனியாய்ப் பாடம் கற்பிக்க முயலாமல் ஒரு செயலை எடுத்துக்கொண்டு அதை நடத்தும்போது இயல்பாக இயைந்துவரும் சரித்திர, விஞ்ஞான, கணித, தாய்மொழி அறிவுகளைக் கற்பிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர்.

5. இக்காலத்தில் மக்களுக்கு ஓய்வு அதிகம். சிறப்பாக நீண்டநேரம் வேலைசெய்யும் தொழிலாளிகளுக்கும் போதிய ஓய்வு அளிக்கவேண்டும் எனச் சட்டங்களும் இயற்றப்பட்டுள்ளன. போதிய ஓய்வு நேர வசதி அமைத்தால் தொழிலாளியின் வேலையின் திறன் அதிகரிக்கிறது என்பது மனநூல் ஆராய்ச்சியாளர் கண்டுள்ள முடிவு. ஆகவே, ஒவ்வொருவருக்கும் தற்காலத்திலும் பிற்காலத்திலும் கிடைக்கக்கூடிய ஓய்வுநேரத்தை இன்பத்துடனும் பயனுடனும் செலவழிக்கக் கற்பிக்கக் கலைத் திட்டம் ஏற்பாடு செய்யவேண்டும்.

கலைத் திட்டத்தை நிறைவேற்ற ஆதாரப் பள்ளிகளில் கற்பிக்கவேண்டியவை :

மேற்கூறிய கொள்கைகளை அநுசரித்து, ஆதாரப் பள்ளிகளில் கீழ்க்கண்ட பாடங்களைக் கற்பிக்கக் கலைத் திட்டம் ஏற்பாடு செய்துள்ளது :

1. துப்புரவு, ஆரோக்கியம் (பால் கல்வி உள்பட).

2. தொழில் – (a) நூற்றலும் நெசவும், தோட்ட வேலையும் விவசாயமும், உலோக வேலை என்ற மூன்றில் உள்ளூர்ப் பிராந்தியத்திற்கேற்ற ஓர் ஆதாரத் தொழில்.

(b) எதை ஆதாரத் தொழிலாகத் தேர்ந்தெடுத் தெடுத்தாலும் I முதல் V வகுப்பு வரை நூற்பும், தோட்ட வேலையும் கட்டாயம் கற்பிக்கவேண்டும்.

(c) பிற உப தொழில்கள்.

3. பொது விஞ்ஞானம்.

4. சமூகப் பயிற்சியும், சமூகப் பாடங்களும்.

5. தாய்மொழி.

6. கணிதம்.

7. கலை (விளையாட்டு உள்பட) [ஒவ்வொரு தொழிலிலும் தன்னம்பிக்கைப் பயிற்சியும் உள்ளடங்கி யுள்ளது. ஆகவே தனியாய்க் குறிக்கப்படவில்லை].

8. ஆங்கிலம்
9. ஹிந்தி
} **VI, VII, VIII** வகுப்புக்களுக்கு மட்டும்.

இக்கலைத் திட்டத்தின் தனி அம்சம் :

1. ஆதாரப் பள்ளியில் எட்டாம் வகுப்புப் படித்த சிறுவர்களுக்கு அரசாங்கப் பொதுத் தேர்வு கிடையாது.

அவர்கள் VI, VII, VIII வகுப்புக்களில் ஆங்கிலம் கற்றிருந்தால் வேறு தனிச் சோதனையின்றி IV-வது படிவத்தில் சேர அரசாங்கத்தினர் அனுமதித்துள்ளனர். IV-வது படிவம் படிக்க விரும்பாதவர்கள் ஆங்கிலம் கற்கவேண்டியதில்லை.

2. இஷ்ட பாடம் என்று யாதொன்றும் கிடையாது.

3. நாடகம் நடித்தல், கையெழுத்துப் பத்திரிகை நடத்துதல், கிராம சேவை, பள்ளிப் பயணம், விழாக் கொண்டாடுதல் போன்றவையெல்லாம் ஆரம்பப் பள்ளிகளில் பாடத்திட்டத்திற்குப் புறம்பானவை என்று சொல்லப்படுகின்றன. இத்திட்டத்தில் அவ்வாறு இல்லை. எல்லாப் பாடங்களும் பாடத் திட்டத்திற்குட்பட்டவையே.

4. முதல் வகுப்பிலிருந்தே ஒவ்வொரு சிறுவனும் ஓரளவு சுயதேவைப் பூர்த்திக் குறிக்கோளுக்கு உழைக்கத் தூண்டப்படுகிறான்.

கலைத் திட்டத்தை யமைக்க மூன்று மையங்கள் :

கலைத் திட்டத்தை அமைப்பதற்கு மிகப் பொருத்தமான மூன்று மையங்களைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

அவையாவன :

1. **இயற்கைச் சூழ்நிலை**
2. **சமூகச் சூழ்நிலை**
3. **ஆதாரத் தொழில்**

சிறுவர்களின் அநுபவங்களையும், அவர்களது இயற்கையான செயல் புரியும் ஆவலையும் அடித்தளமாகக்கொண்டு கலைத் திட்டம் உருவாகவேண்டும் என

முன்பு சொன்னேமல்லவா? அவர்களது பெரும் பாலான அநுபவங்களும், செயல்களும் எங்கிருந்து உதயமாகின்றன என்று கவனித்துப் பாருங்கள். அவை யெல்லாம் மேலே குறிப்பிட்ட மூன்றிலிருந்தும் சிறுவர் களுக்குக் கிடைக்கின்றன எனத் தெளிவாகும்; புத்தகங் களிலிருந்து அன்று. ஆகையால் அம்மூன்றும் மிகப் பொருத்தமானவையே.

பிறந்தது முதல் சிறுவன் இயற்கை விந்தைகள், இயற்கைச் சக்திகள் நிரம்பிய இயற்கைச் சூழ்நிலையால் சூழப்படுகிறான். ஆகவே, பிறந்தது முதல் இயற்கைச் சூழ்நிலையால் அவன் பாதிக்கப்படுகிறான். எனவே, சிறுவன் இயற்கைச் சூழ்நிலைக்கேற்றவாறு தன்னை அனுசரணை செய்துகொள்ளக் கற்கவேண்டும். அறிவு, உணர்ச்சி, செயல் என்ற மூவகை மன வேலைகளாலும் பாலன் தன் இயற்கைச் சூழ்நிலைக்கு அனுசரணை செய்துகொள்ளவேண்டும். வெறும் அறிவு அம்சத் தால் மட்டும் அனுசரணை செய்ய முயன்றால் அந்த அனுசரணை பூரணமாகாது. உதாரணமாக, சாதாரண ஆரம்பப் பள்ளிகளில் புத்தகம் மூலம் கற்பிக்கும்போது அறிவு அம்சத்திற்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கப் படுகிறது.

இயற்கைச் சூழ்நிலையைப்பற்றிப் புத்தகங்கள் மூலம் அறிவு புகட்டப்படுகிறது. அதைத்தான் "ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்கிறோம். ஆதாரப் பள்ளிக் கலைத் திட்டத்தில் செயல்கள் மூல மாக அறிவு, உணர்ச்சி, முயற்சி அனுசரணையை வளர்க்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

மேலே கூறிய மூன்று மையங்களையும் இங்குத் தனித்தனியாகக் கவனிப்போம்.

இயற்கைச் சூழ்நிலை :

இந்தச் சூழ்நிலையிலிருந்து கிடைக்கும் அநுபவங்களிலிருந்து 'பொது விஞ்ஞானம்' என்னும் கிளையும், 'பூகோள' நூலின் விஞ்ஞானப் பகுதியும் உதயமாகின்றன. செயல் மூலமாகக் கற்கும்போது பௌதிகம், ரசாயனம், உயிர்நூல், வானநூல், பூகோளம், தாவர நூல் என்ற தனித்தனித் தலைப்பில் வழக்கம்போல் முறையாக இவற்றைப் படிப்பதில்லை. தோட்டவேலை, கல்விப் பயணம், பருவகால விழாக் கொண்டாட்டம் ஆகிய செயல்களைச் செய்வதிலிருந்தும், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மேகம், விலங்குகள், பறவைகள், பூச்சிகள், காய்கனிகள் இவற்றை உற்றுநோக்குவதிலிருந்தும், பதிவுகள் வைப்பதிலிருந்தும் ஒன்றிவரும் அறிவு விஷயங்களைச் சிறுவர்கள் தாமே கண்டறிகிறார்கள். நாளடைவில் அவ்வறிவைச் சிறுகச் சிறுக வான நூல், தாவர நூல், உயிர் நூல் என்று பாகுபாடு செய்து காட்டுகிறோம். விஞ்ஞானம் கற்பிப்பதற்கு இதுவே சிறந்த முறை; இயற்கையை ஒட்டிய முறையுமாகும்.

சமூகச் சூழ்நிலை :

சமூகச் சூழ்நிலையில் சிறுவனுக்குக் கிடைக்கும் அநுபவங்களிலிருந்து 'சமூகப் பாடங்கள்' என்னும் கிளை உண்டாகிறது. அக்கிளை மக்களின் அலுவல்களைப் பற்றியும், அவர்களால் நிறுவப்பட்ட நிறுவனங்களைப் பற்றியும் சிறுவனுக்கு அறிமுகப்படுத்துகிறது. முற்காலத்தில் இக்கிளை சரித்திரம், பூகோளம், ஆட்சிமுறை

என்ற மூன்று தனித்தனிப் பெயர்களோடு தனித்தனிப் பாடங்களாயிருந்தன.

கூர்ந்து உற்றுநோக்கலால் பெற்ற விஞ்ஞான சக்தியாலும், உழைப்பாலும் இவ்வியற்கை யுலகத்தை மனிதன் மாற்றியமைத்திருக்கிறான்; அரிய பெரிய ஆக்க வேலைகளைச் செய்துள்ளான்; பண்பாடு அடைந்துள்ளான். அவற்றைப்பற்றிப் படிப்பதுதான் "சமூகப் பாடங்கள்" எனப்படும்.

சூழ்நிலையில் இடத்தைக் குறிக்கும்போது பூகோளம் எனவும், காலத்தைக் குறிக்கும்போது சரித்திரம் எனவும் கூறுகிறோம். பரந்த பூமியின்மீது ஆங்காங்கு உள்ள வெப்பதட்ப நிலைக்கும், இயற்கைச் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு தன் வாழ்க்கை, பழக்கவழக்கங்கள், உணவு, உடை, தொழில் முதலியவற்றை மக்கள் அமைத்துக் கொள்வதைப்பற்றிக் கற்பிப்பதே 'பூகோள நூல்' ஆகும்.

சமூகமாகவும், சிக்கல் நிறைந்த பொருளாதார அபிவிருத்தியுடனும், பண்பாட்டுடனும் மக்கள் இனம் வளர்ச்சியுற்ற வரலாறுதான் 'சரித்திரம்.' கூடி வாழ்ந்ததன் அடிப்படையில் நற்குடிப் பண்புகளை அநுபவமூலம் கற்றுக் கடமைகளையும், உரிமைகளையும் நிர்ணயித்துச் சமூக நிறுவனங்கள் நிறுவி, சமாதானம் நிறைந்த கூட்டுவாழ்க்கை உருவான விவரமே 'ஆட்சி முறை' யாகும்.

சமூகப் பாடங்களைப் படிப்பதன் வாயிலாகச் சீரிய சமூக மனப்பான்மைகள் வளரவேண்டும். வெறும் விஷயங்களைத் திரட்டுவதற்காகச் சமூகப் பாடநூல் படிப்பதில்லை. அன்பு, சமாதானத்தில் ஆவல், நட்புணர்ச்சி, சகிப்பு, பரந்த நோக்கு, குறுகிய

நோக்கத்திலிருந்து விடுதலைபோன்ற போற்றத்தக்க நற்பண்புகளைச் ‘ சமூகப் பாடங்கள் ’ வாயிலாக மட்டும் தான் ஏற்படுத்தி வளர்க்கமுடியும்.

ஆதாரத் தொழில் :

தொழில் இயற்கைச் சூழ்நிலைக்கும், சமூகச் சூழ் நிலைக்கும் பாலம்போல அமைந்துள்ளது. முன்னதன் வளங்களை (உதாரணம் : பருத்தி, மரம், தோல், நிலம்) பின்னதிலுள்ள மக்களுக்குப் பயன்படுத்த உதவுவது தொழிலேயாகும். (உதாரணம்: துணி, மரச் சாமான், செருப்பு, பயிர்) புத்தக மூலமே கல்வி கற்ற ஒரு சிலருக்குத் தொழிலுக்குக் கலைத் திட்டத்தில் இடம் ஏது என்ற ஐயம் பிறக்கிறது. ஆதாரக் கல்வித் திட்டத்தில் ஓர் ஆதாரத் தொழிலுக்கு மைய ஸ்தானத்தைக் கொடுத்திருப்பதை அவர்கள் அறிந்த வுடன் அவர்களது சீற்றம் மிகுகிறது. கல்வி என்னும் கோயிலைத் தொழில் என்னும் பாடத்தால் மாசுபடுத்தி விட்டதாக எண்ணி மனம் புழுங்குகிறார்கள். புத்தகப் படிப்பிலே திளைத்து உருவானவர்களுக்கு அத்தகைய துடிப்பு ஏற்படுவது இயல்பானதே.

ஆதாரப் பள்ளியில் தொழிலின் ஸ்தானத்தைச் சரிவர அறிந்துகொண்டால் அந்த ஐயம் தானே விலகிப் போகும். ஆரம்பப் பள்ளியிலும், தொழிலுக்கு ஒரு ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று ஆரம்பப் பள்ளிக் கலைத் திட்டத்தைப்பற்றிப் பேசும்போதே சொல்லப்பட்டுள்ளது. கைத்திறனால் உள்ளத்திறன் எளிதில் வளரும் என்ற உண்மையின்மீது அங்குத் தொழிலுக்கு இடம் கிடைத்தது. ஏனைய பாடங் களோடு தொழிலையும் அதிகப்படியான தொன்றாகக்

கற்பிக்க அதில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில், பள்ளியில் தொழில் கற்பிப்பதால் சிறுவர்களுக்குச் சமூகத்திறன் ஏற்படுகிறது என்று டூயி என்பவர் ஆராய்ச்சி மூலம் கூறியுள்ளார். ஆனால், ஆதாரப் பள்ளியில் ஓர் ஆதாரத் தொழிலைத் தேர்ந்தெடுத்து, அதை நடுநாயகமாக வைத்து, அதன் மூலமாகவே உடல், உள்ள, ஆன்மப் பண்புகளைச் சீராக வளர்க்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். தொழிலுக்கு இங்கு மிகச் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. மன நூல் அடிப்படையிலும், குழுநூல் அடிப்படையிலும், பொருள் நூல் அடிப்படையிலும், கல்விநூல் நோக்கிலிருந்தும் ஆதாரத் தொழிலுக்கு முதல் மையஸ்தானம் அளித்திருப்பது சரியே என்று அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இங்குத் தொழிலை இயந்திர ரீதியாகக் கற்பிப்பது இல்லை. தொழிலின் ஒவ்வொரு உட்பகுதியின் நுணுக்களின், 'இது ஏன்? இது எப்படி?' என்ற விஞ்ஞான முறையில் கற்பிக்கப்படுகிறது.

தொழில் மூலம் பொருண்மை கொடுப்பது, செயலைச் செய்வது, ஆராய்ச்சி, சமயோசித புத்தியை வளர்ப்பது, உடல் வேலையை இழிவாகக் கருதாத மனப்பான்மையை ஏற்படுத்துவது போன்ற பண்புகள் கலைத் திட்டத்தின் பிற பகுதிகளுக்கும் பரவவேண்டும் என்பது துணிபு.

கருவிப் பாடங்கள் :

ஆதாரப் பள்ளிக் கலைத் திட்டத்தில் ஆதாரத் தொழில், சமூகப் பாடங்கள், பொது விஞ்ஞானம் இம் மூன்றும் முக்கிய பாடங்களாகும்.

அப்படியானால் இதில் வாழ்க்கைக்கு மிக அவசிய மான தாய்மொழி, கணிதம் ஆகிய இரண்டிற்கும் இடம் இல்லையா என்ற கேள்வி எழுகிறது.

தாய்மொழி, கணிதம் ஆகிய இரண்டும் முக்கிய மான கருவிப் பாடங்களாக இங்குக் கருதப்படுகிறது.

தாய்மொழி :

கருத்துக்களை வெளியிடவும், தனக்குத் தேவை யான அறிவைத் திரட்டவும் தாய்மொழி ஓர் அரிய கருவிப் பாடமாய் அமைந்துள்ளது. நமது பண்பாட்டின் முக்கியத்துவத்தைத் தாய்மொழி மூலம்தான் நாம் அறியமுடியும்; அறியவும் வேண்டும்.

ஆதாரக் கல்விக் கலைத்திட்டத்தில் எட்டாண்டு களிலும் தாய்மொழியே போதனை மொழியாகும் சிறப்புப்பெற்றுள்ளது. பேச, எழுத, படிக்கப் பயன் படும் லாபகரமான கருவியாக அது ஆவதுடன் இலக்கிய இன்பங்களை ரசிக்கவும் பயன்படுமாறு கலைத் திட்டத்தில் அதற்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையை வாழ்வதன்மூலம் கிடைக்கும் அநுபவங் களின்மீதே தாய்மொழிப் பயிற்சி அளிக்கக் கலைத் திட்டம் முறை வகுத்திருக்கிறது.

கணிதம்:

அன்றாட வாழ்க்கைக்குப் போதுமான அளவுக்குக் குறையாமலும், விஞ்ஞான பாடம், நூற்பு, நெசவு, தொழில், தோட்ட வேலை, விவசாயம்போன்ற வேலை களுக்குப் போதுமான அளவிலும் எண்ணறிவு, இட அறிவு, க்ஷேத்திர அறிவு கலைத்திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளன.

வாழ்க்கைப் பயனுடன் கணித நூலிற்கே சிறப்பான பண்பாட்டுப் பயனையும் (திருத்தமான அறிவு, காரண காரியத் தொடர்பு) கலைத்திட்டம் கவனித்துள்ளது.

ஆதாரக் கல்வி தேசியக் கல்வி அல்லவா? தேச மொழியான இந்துஸ்தானிக்கும் கலைத்திட்டத்தில் இடம் அளிக்கவேண்டுமல்லவா? நம் இந்திய நாட்டின் பொது மொழியென்று நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்தி மொழியைக் கற்காவிடில் அரசியல், பொருளாதாரம், வாணிபம், பண்பாடு ஆகிய துறைகளில் முன்னேற்றம் காண்பது கடினமாகும். எனவே VI, VII, VIII வகுப்புச் சிறுவர்களுக்கு மட்டும் இந்தி கற்பிக்கத் திட்டம் ஏற்பாடுசெய்திருக்கிறது.

பேசவும், எளிய முறையில் எழுதவும், பிறர் பேசுவதைப் புரிந்துகொள்ளவும், கடிதம் எழுதவும் போதுமான குறைந்தபட்ச இந்தி அறிவு கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

VI, VII, VIII வகுப்புக்களுக்கு மட்டும் ஆங்கிலம் கற்பிக்கப்படும். ஆதாரக் கல்வி முடித்து, **IV**-வது படிவம் சேர விரும்புவோருக்கு இது உதவும்.

சித்திரம், வர்ணம் தீட்டுதல், அலங்காரக் கலைகள், விளையாட்டு ஆகிய யாவும் கலைத் திட்டத்தில் பள்ளி வாழ்க்கைத் தேவைகளோடு இணைத்துக் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கலைத் திட்டமும் அநுபவ வேலையும் :

ஆரம்பக் கல்வித் திட்டத்தில் ஒவ்வொரு தலைப்பின் கீழும் அநுபவ வேலை என்று தனியாகக் காட்டியிருப்

பதுபோல் ஆதாரக் கல்விக் கலைத் திட்டத்தில் காட்டத் தேவையில்லை. ஏனென்றால், இங்கு அநுபவ வேலை கொண்ட செயல்கள் மூலமாகவே எல்லாம் கற்பிக்கப் படுகின்றன; அங்குப் பாட போதனை சொல்லால் நடக்கிறது. சொல்லாலான கருத்துப் பொருளை விளக்க அங்கு அநுபவ வேலை தேவைப்பட்டது. இங்கு அநுபவ வேலையிலிருந்துதான் சிறுவர்கள் கற்கிறார்கள்.

உள்ளூர் நிலைமைகளைப்பற்றிய ஆராய்ச்சி :

ஆங்காங்குள்ள நிலைமைகளுக்கேற்ப கலைத் திட்ட உட்பகுதிகளை மாற்றியமைத்துக்கொள்ளவும், பொருத்தமான ஆதாரத் தொழிலைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் சுதந்திரம் உண்டு என்று முன்னரே குறிக்கப்பட்டது.

அந்தச் சலுகையைப் பயன்படுத்திக்கொள்ளுமுன் உள்ளூர், அதன் சுற்றுப்புற நிலைமைகளைப்பற்றிய ஆராய்ச்சி நடத்தவேண்டும். ஆதாரத் தொழில் உள்ளூர் நிலைமைகளுக்குப் பொருத்தமாயிருக்கிறதா, அதற்குத் தேவையான மூலப் பொருள்கள் தட்டின்றி ஒழுங்காய்க் கிடைக்குமா, உற்பத்திப் பொருள்களுக்கு உள்ளூரில் செலவும், சந்தையும் உள்ளனவா, தொழில் கற்பிக்கவும், இசை, கலை முதலியன கற்பிக்கவும் வல்ல வல்லுநர்கள் உள்ளூரில் யார் யார் இருக்கிறார்கள், வேறு என்னென்ன வசதிகள் உள்ளன, உள்ளூர்ச் சமூகத்தி லுள்ள பிரமுகர்களையும், வள்ளல்தன்மை உடையவரையும், பிறரையும், இதர உள்ளூர் வசதிகளையும் எவ்வாறு பள்ளி வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளலாம், உள்ளூர்த் தேவைகளுக்கிணங்க என்னென்ன மாறுதல் கலைத் திட்டத்திலும், பள்ளி நேரத்திலும், கால

அட்டவணையிலும் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்பன போன்ற பல பிரச்சினைகளை ஆராயவேண்டும்.

வேறு புதிய விஷயங்கள் கற்பிக்க இடமிருக்கிறதா என்றும் ஆராயலாம்.

கலைத் திட்டம் உள்ளூர் நிலைமைகளுக்குப் பொருத்தமாயிருக்கிறதா, உள்ளூர் நிலைகளின் அடிப்படையில் கலைத் திட்டத்தை எவ்வளவு தூரம் நிறைவேற்றலாம் என்பதே ஆராய்ச்சியின் நோக்கமா யிருக்க வேண்டும்.

கலைத் திட்டக் கொள்கைகளைப்பற்றி ஆசிரியர் அறிய வேண்டுவதேன் ?

கலைத் திட்டத்தை அமைப்பவர்கள் கல்வி நிபுணர்கள். அதை அமைக்கும் வேலையில் ஆசிரியர்களுக்கு யாதொரு பங்குமில்லை; அத்திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளவற்றை நடத்துவதே தமது வேலை; ஆகையால் கலைத் திட்டக் கொள்கைகளைப்பற்றித் தாம் அறிந்து கொள்ளவேண்டுவது அவசியமில்லை எனச் சில ஆசிரியர்கள் கருதுகிறார்கள். அக்கருத்துத் தவறானது.

தனித்தனிப் பாடங்களுக்குச் சிறப்புக் கொடுக்கும் ஆரம்பப் பள்ளியில் பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்குக்கூட ஆரம்பப் பள்ளிக்கான கலைத் திட்டத் தத்துவங்களைப்பற்றியும், அதில் ஒவ்வொரு பாடத்தின் ஸ்தானத்தைப்பற்றியும் தெரிந்திராவிடில் அவருடைய போதனை சிறக்காது எனவும், கலைத்திட்ட நோக்கங்கள் நிறைவேறா என்றும் நிபுணர்கள் கூறுகிறார்கள். அப்படியிருக்க, பல அம்சங்களில் புரட்சிமிக்க ஆதாரப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஆதாரப் பள்ளிக்

கலைத் திட்டக் கொள்கைகளைப்பற்றித் தெரிந்திருக்க வேண்டுவது மேலும் அவசியமாகிறது.

ஆதாரக் கல்வித் திட்டம் புரட்சிகரமான நோக்கங் களின்மீது உருவாக்கப்பட்டுள்ளது. ஓர் ஆதாரத் தொழிலை நடுநாயகமாய் அமைத்து, அதன் வாயிலாகவே எல்லாப் பாட விஷயங்களும், பழக்க வழக்கங்களும், மனப்பான்மைகளும் வளர்க்கப்படுகின்றன.

ஐம்பெரும் வேலைத்திட்டங்களை அமைத்து நடத்து வதிலும், பள்ளியை ஒரு ஜனநாயக சமூகமாக அமைப் பதிலும், பள்ளியையும் சமூகத்தையும் இணைப்பதிலும், பள்ளியில் கலை நிகழ்ச்சிகளை அமைத்து நடத்துவதி லும், தொழில் மூலம் சுயதேவைப் பூர்த்தி அம்சத்தை ஓரளவு நிறைவேற்ற முயலுவதிலும், பற்பல பாடங் களின் ஒருமைப்பாட்டை வற்புறுத்திப் போதிப்பதி லும், ஆசிரியர் அண்ணுக மாறுவதிலும், பாட போதனையில் இயைபுமுறையைப் பின்பற்றுவதிலும், பாடப் புத்தகம் ஒன்றே கதி என்ற நிலையை மாற்றிப் பல வாசிப்புப் புத்தகங்களைப் படிக்கவைப்பதிலும் புரட்சிகரமான மாறுதல்கள் உள்ளன. கல்வி நூல், குழு நூல், மன நூல், அரசியல்போன்ற பல நூல்களின் கொள்கைகள் எவ்வளவோ இச் செயல்களில் பொதிந்து கிடக்கின்றன.

அவற்றையெல்லாம் அறியாது கிராமபோனின் இசைத்தட்டுப்போல் ஆசிரியர் கல்வி போதிப்பாரே யானுல் ஆதாரக் கல்வியின் நோக்கம் நிறைவேருது.

தவிர, புரட்சிகரமான எத்தகைய மாறுதலுக்கும் எதிர்ப்பு ஏற்படுவது இயல்பே. ஆகையால் ஆதாரக் கல்வித் திட்டத்திற்கும் எதிர்ப்பு இருப்பது இயல்பே

யாகும். எல்லா நுணுக்கங்களைப்பற்றியும் தெளிவாய்த் தெரிந்திருந்தால்தான் எதிர்ப்பை ஆசிரியர் சமாளிக்கக் கூடும்.

பின்னும் ஒரு காரணமும் கூறலாம். ஆசிரியர் ஒரு சமூக உறுப்பினர் அல்லவா? அந்த முறையில் அவர் கலைத் திட்டக் கொள்கைகளைப்பற்றி அறியவும், அவற்றின் நிறைகுறைகளைச் சீர்தூக்கிப் பார்க்கவும் அவருக்கு உரிமை உண்டு. எனவேதான் புதுக் கலைத் திட்டம் அமைக்கு முன்னர் ஆசிரியர் சங்கங்களைக் கலந்து ஆலோசிப்பது வழக்கமா யிருந்துவருகிறது.

கலைத் திட்டம் என்ற சொற்றொடரும் இப்போது புதிய பொருள் பெற்றுள்ளது. அதை ஆசிரியர்கள் அறியவேண்டும். கலைத் திட்டக் கொள்கைகளை ஒட்டியேதான் போதனைமுறை அமையவேண்டும். எனவே கலைத் திட்டக் கொள்கைகளை ஆசிரியர் நன்கு அறிந்திருக்கவேண்டும்.

ஆதாரப் பள்ளிக் கலைத் திட்டக் கொள்கைகள் :

கலைத் திட்டக் கொள்கைகளைக் கீழ்க் கண்டவாறு சுருக்கிக் கூறலாம் :

1. வளரும் சிறுவனைத் தன்னுடைய சூழ்நிலைக்குப் பொருத்துவதற்கும், அச் சூழ்நிலையிலுள்ள வளங்களையும், வசதிகளையும் கல்வி வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கும் கலைத் திட்டம் முயலவேண்டும்.

2. பிள்ளைப் பருவத்தினுடைய தொடர்பில்லாத, ஆனால் வளமுள்ள நேர்முக அநுபவங்களை ஆரம்ப நிலையாகக்கொண்டு அவற்றையெல்லாம் ஒன்றோடொன்று இணைத்து, படிப்படியாக அவற்றிற்கு ஒழுங்கும் தொடர்பும் பொருளும் உண்டாக்கி, நேர்முக

அநுபவங்களுக்கும் புத்தக அறிவிற்குமுள்ள இடைவெளியைக் குறைக்கவேண்டும்.

3. ஏதோ சில பாடங்கள் மூலம் சில அறிவு விஷயத்தைப் புகுத்துவதையே அது நோக்கமாகக் கொள்ளக்கூடாது. ஆனால், பல்வேறு செயல்கள் மூலம் சிறுவர்களுக்கு அறிவுபெறச் செய்வதோடு சமூக, விஞ்ஞான, நன்னெறி மனப்பான்மைகளையும் வளர்க்கவேண்டும்.

4. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவாறு பல பாடங்களைக் கற்பிக்க முயலுவதற்குப் பதிலாக இயல்பாய்த் தொடர்புகொண்ட சில தொகுதிப் பாடங்களாகப் போதிக்க முயலவேண்டும். (உ-ம்) சமூகப் பாடங்கள், பொது விஞ்ஞானம். மேலும் பல பாடங்களின் ஒருமைப்பாட்டை கலைத்திட்டம் வலியுறுத்த வேண்டும்.

5. போதிக்கவேண்டிய முக்கியமான விஷயத்தை வாழ்க்கையை வாழ்வதன் மூலம் கற்பிக்க முயல வேண்டும்.

6. கல்வி போதிக்க வசதியுள்ளதும், பயன்தரக் கூடியதுமான ஓர் ஆதாரத் தொழில் வாயிலாகவே சிறுவர்களின் உடல் – உள்ள – ஆன்மப் பண்புகளை வளர்க்கத் திட்டமிடவேண்டும்.

7. சிறுவர் மனநூல் அடிப்படையிலும் (அதாவது சிறுவர்களின் உடல், உள்ள, சமூகத் தேவைகளுக்கேற்பவும்), சமூக நூல் அடிப்படையிலும் உருவாகி, குழந்தைக் கல்வியில் வேண்டத்தக்க புரட்சிகரமான மாறுதலைக் கலைத்திட்டம் உண்டாக்க முயல வேண்டும்.

8. சீரான பூரண வாழ்க்கை வாழப் பயிற்சியளிக்கவேண்டும்.

6. செயல் திட்டங்கள்

ஆதாரப் பள்ளிகளில் நடைபெறும் போதனை முறைகளைப்பற்றிப் பயிற்சியாளர்கள் உற்று நோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

1. ஓராண்டுக்கான திட்டத்தை எவ்வாறு தீட்டுகிறார்கள்?

2. அதையொட்டிச் செயல் திட்டங்களை எவ்வாறு வகுக்கிறார்கள்?

3. செயல் திட்டம் வகுக்கும்போது எவற்றையெல்லாம் கவனிக்கிறார்கள்?

4. செயல் செய்து பாட விஷயங்களை எவ்வாறு இயைபுபடுத்துகிறார்கள்?

5. செயல் நடத்துவதையொட்டி என்ன எழுத்துக் குறிப்புக்கள் வைக்கிறார்கள்?

6. வகுப்புக்களில் எப்படிப்பட்ட புத்தகங்களை உபயோகிக்கின்றனர்?

7. செயல் திட்ட போதனையில் புத்தகங்களின் இடம் யாது?

8. கால அட்டவணை அமைக்கும் விஷயத்தில் கவனிக்கப்பட்ட விஷயங்கள் யாவை?

9. ஒரே ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புக்களை நடத்துகிறாரா? அவருடைய தனிப் பிரச்சினைகள் யாவை? அவர் அந்நிலையை எவ்வாறு சமாளிக்கிறார்?

10. கல்வி சம்பந்தமாகச் சிறுவர்களைப் பள்ளிக்கு வெளிப்புறம் அழைத்துச் செல்லுகிறாரா? எங்கு? திங்களுக்கு எத்தனை தடவை?

11. அத்தகைய பயணங்களை எவ்வாறு திட்டமிட்டு நடத்துகிறார்கள்?

12. குறிப்பிட்ட வினாக்களுக்கு விடை யெழுதிவர வீட்டு வேலை யாதேனும் கொடுக்கிறார்களா?

13. சிறுவர்களுக்கு வேறு வகை வீட்டு வேலை கொடுக்கிறார்களா? எத்தகைய வேலை கொடுக்கிறார்கள்?

14. வீட்டில் செய்துவரவேண்டிய வேலையைச் சிறுவர்கள் முடித்துவருகிறார்களா? முடித்துவராவிடில் அவர்களுடைய பிரச்சினைகள் யாவை?

ஓராண்டுத் திட்டம் :

எட்டு வகுப்புக்கள் கொண்ட ஓர் ஆதாரப் பாடசாலை முழுமைக்கும் உரிய கலைத் திட்டத்தைப்பற்றியும், அதில் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு தலைப்பின் கீழ் என்னென்ன கற்பிக்கவேண்டும் என்று காட்டும் மொத்தமான பாடத்திட்டத்தைப்பற்றியும் கவனித்தோம். ஒவ்வொரு வகுப்புக்குரியனவற்றை எவ்வாறு பிரித்துக்கொண்டு கற்பிக்கவேண்டுமென்று இப்பொழுது ஆராய்வோம்.

முதலில் ஆதாரப் பள்ளியிலுள்ள ஒவ்வோர் ஆசிரியரும் தம் பொறுப்பிலுள்ள வகுப்பிற்குரிய பாடத்திட்டத்தை நன்றாக ஆராய்ந்து அறியவேண்டும். தம் உள்ளூர் நிலைமைகளுக்கேற்ப என்ன என்ன பகுதிகளை விலக்கலாம், புதிதாய் என்ன என்ன சேர்க்கலாம் என நிர்ணயித்துக்கொள்ளவேண்டும். இத்தகைய சேர்க்கையும் நீக்கலும் ஆதாரக் கல்வி அடிப்படைத் தத்துவங்களுக்கு முரணாயிருத்தற்கூடாது. இதைப்பற்றித் தலைமை ஆசிரியருடன் கலந்து முடிவுசெய்துகொள்ள

வேண்டும். அந்த வகுப்புக்கெனக் குறிக்கப்பட்ட பாடத்திட்டத்தில் சில விஷயங்களை அந்த வகுப்பில் கற்பிக்கமுடியாது எனத் தீர்மானித்தால் அவற்றை விட்டுவிடலாம். அதேமாதிரி சில தருணங்களில் மேல் வகுப்புக்குரிய பாடத் திட்ட விஷயங்களைக் கீழ் வகுப்புக் களிலேயே நடத்தும் நிலைமை ஏற்பட்டாலும் ஏற்பட லாம். தானே வந்த சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் அதைக் கீழ்வகுப்பிலேயே கற்பிக்கலாம். பாடத்திட்டம் என்பது ஆசிரியர்களுக்கு ஒரு **வழிகாட்டியேயன்றி** மாற்றக்கூடாததொரு சட்டம் எனக் கருதுவது சரியன்று.

எத்தனை செயல்கள் :

வகுப்புக்குரிய பாடத்திட்ட விஷயங்களைச் சாதாரணமாக ஓராண்டில் முடிக்கவேண்டும். ஆதாரப் பள்ளிகளில் பாடத்திட்டதைச் செயல்களாகவே நடத்த வேண்டும் என்று முன்னரே படித்தோம். ஓராண்டில் ஒரு பள்ளி 220 நாட்கள் வேலைசெய்யவேண்டும். ஒரு வாரத்தை அலகாகக்கொண்டால் அக்காலத்தில் சுமார் 40 வாரங்கள் கிடைக்கும். வாரத்திற்கு ஒரு செயலாக நடத்தினால் ஓராண்டில் 40 செயல்கள் நடத்தலாம். திட்டமிட்டபடி ஒவ்வொரு வகுப்பிலும் 40 செயல் களையும் நடத்த முயலவேண்டும். அப்பொழுதுதான் வகுப்பிற்கெனக் குறிக்கப்பட்ட பாட விஷயங்களை முழுவதும் போதிக்கமுடியும்.

செய்த செயல்களைச் செவ்வையாய்ச் செய்தால் நாற்பதில் ஒன்றிரண்டு குறைந்தாலும் பாதகமில்லை. பாடத்திட்டம் ஏக மத்திய முறையில் அமைக்கப் பட்டிருப்பதால் ஒரு வகுப்பில் விடப்பட்ட விஷயம் அடுத்த மேல்வகுப்பில் வந்துவிடும்.

ஒரு செயலுக்குரித்தான காலம்:

பெரும்பாலான செயல்களை ஒரு வார காலத்தில் முடிக்கலாம். ஒரு சிலவற்றிற்கு ஒரு வாரத்திற்கு மேற்பட்ட காலம் பிடிக்கலாம். அதைப்போலவே சில செயல்களுக்கு 2, 3, 4 நாட்களே போதும். அந்தந்தச் செயலுக்கேற்றபடி காலத்தை வரையறுத்துக் கொள்ளவேண்டும்.

செயல்களைத் தேர்ந்தெடுப்பது எப்படி?

மேற்குறித்த 40 செயல்களையும், இயற்கைச் சூழ்நிலை, சமூகச் சூழ்நிலை, ஆதாரத் தொழில் ஆகிய மூன்றிலொன்றைச் சார்ந்திருக்குமாறு தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த மூன்று கேந்திரங்களையும், ஐம்பெரும் வேலைத்திட்டமாய் அமைத்துத் தந்திருக்கின்றனர் ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தார் என்று முன்னரே கூறியுள்ளோம். எனவே, மேற்கூறிய 40 செயல்களும் அந்த ஐம்பெரும் வேலைத்திட்டங்களாகிய

1. துப்புரவாகவும், ஆரோக்கியமாகவும் வாழ்தல்;
2. தன்னம்பிக்கை பெறுதல்;
3. ஆதாரத் தொழிற் பயிற்சி;
4. குடிமைப் பயிற்சி;
5. கலைப் பயிற்சி

முதலியவற்றில் ஒன்றின் பகுதியாய் அமையும்; தன்னம்பிக்கை பெறுதலும், குடிமைப் பயிற்சியும் எல்லாச் செயல்களிலும் இணைந்தே வரும்.

ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனிச் செயல்திட்டம்:

ஒவ்வொரு வகுப்பிற்கும் தனித்தனியாக மேற்கூறியவாறு * 40 செயல்களைத் தேர்ந்தெடுத்துக்

* "ஆதாரக் கல்வி செயல்களும் திட்டங்களும்" என்ற தனி நூலைப் படித்தறியவும்.

கொள்ளவேண்டும். கீழ் வகுப்புக்களில் செய்த செயல்களில் சிலவற்றை மேல் வகுப்புக்களில் மீண்டும் மீண்டும் செய்ய நேரிடும். ஆனால், மேல்வகுப்புக்களில் அச் செயல்களை யொட்டி இயைபுபடுத்தவேண்டிய விஷயங்கள் விரிந்தும், ஆழமாயும் இருக்கும்.

மாதவாரியாகவும், வாரவாரியாகவும் வகுத்துக் கொள்ளல்:

தேர்ந்தெடுத்த 40 செயல்களையும் திங்கள்வாரியாகவும், ஒவ்வொரு திங்களிலும், வார வாரியாகவும் பிரித்துக்கொள்வது அடுத்த அலுவலாகும். அவ்வாறு பிரித்துக்கொள்வதில் பின் குறித்தனவற்றை மனத்திற் கொள்ளவேண்டும்:

1. விடுமுறை நாட்கள் பட்டியல், காலாண்டு, அரையாண்டு, ஆண்டிறுதித் தேர்வுகள் ஆகியவற்றிற் கிணங்கப் பிரிக்கவேண்டும்.
2. ஒரு திங்களில் கூடியமட்டும் மேற்கூறியவகையில் ஒவ்வொன்றிலிருந்தும் ஒவ்வொரு செயலைத் தேர்ந்தெடுத்து நடத்தல் நன்று; ஒவ்வொரு வகையாக முடிக்கலாமென நினைக்கக்கூடாது.
3. அந்தந்தப் பருவகாலத்திற்கேற்ற பருவ வேலைகளை அந்தந்தக் காலத்தில் நடத்துமாறு செயல்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். உதாரணமாக 'விதைத்தல்' ஆடியிலும், அடுத்த பட்டத்திற்கான "முற்றின விதைகளைத் தேர்ந்தெடுத்தல்" என்னும் செயலை அதற்குரிய மாதத்திலும், "காந்தி ஜயந்தி"யை அக்டோபர் முதல் வாரத்திலும் நடத்தத் திட்டமிடுதல் நன்று. அதாவது செயல், இயற்கைச் சூழ்நிலை, சமுகச் சூழ்நிலை ஆகியவற்றை ஒட்டி அமையவேண்டும்.

4. பல வாரங்களுக்குப் பிற்பாடு, நடத்தத் திட்ட மிட்டிருந்த செயல் ஒன்றை முன்கூட்டியே நடத்த வேண்டிய நிலை வகுப்பறைப் பிரச்சினைகளுக் கேற்ப ஏற்பட்டால் அப்படியே நடத்தலாம். (உ-ம். அறுந்த நூலைப் பிணைத்தல், கண்வலிக்குச் சிகிச்சை.)

5. திங்கள்தோறும் காட்டவேண்டிய உற்பத்தி அளவு எக்காரணத்தைக்கொண்டும் குறையக்கூடாது. அதற்கேற்பச் செயல்களைச் செய்யவேண்டும்.

குறிப்பு: சுய தேவையைப் பூர்த்திசெய்ய ஆதாரத் தொழிலிலிருந்தும், பிற வேலைகளிலிருந்தும், திங்கள்தோறும், ஒவ்வொரு வகுப்பு மாணவனும் சம்பாதிக்கவேண்டிய நிகர லாபத் தொகையை அரசினர் நிர்ணயித்துள்ளனர். அது பின்வருமாறு :

	(ஒரு மாணவனின் மாதாந்திர லாபம்)
1-ம் வகுப்பு	1 அ
2-ம் ,,	3 ,,
3-ம் ,,	5 ,,
4-ம் ,,	8 ,,
5-ம் ,,	16 ,,
6-ம் ,,	24 ,,
7-ம் ,,	32 ,,
8-ம் ,,	48 ,,

செயல்களைப் பிரிக்கும் விஷயத்தில் எடுத்துக் காட்டாக, பெரியநாயக்கன்பாளையம் ஆதாரப் பள்ளி யில் IV-ம் வகுப்பிற்கு ஓராண்டுத் திட்டச் செயல்களில் நடத்தி முடித்த செயல்களைத் தலைப்புவாரியாகவும், மாதவாரியாகவும் பிரித்து, மாதிரியாகக் கீழே கொடுக் கப்பட்டுள்ளது.

ஆண்டிற்குத் திட்டமுள்ள செயல்கள்

நான்காம்

1	2	3
மாதம்	துப்புரவாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்தல்.	ஆகாரத் தொழிற் பயிற்சி.
ஜுன்	உடல் துப்புரவும் உடல்நலமும்	இராட்டை நூற்பு, திரிமணையில் அரைத்தல்
ஜுலை		
ஆகஸ்டு		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		பலகை மணையில் பருத்தி அரைத்தல்
டிசம்பர்		
ஜனவரி		ஒரே எண்ணுள்ள நூல் நூற்றல், மூங்கில் வில் செய்தல், பஞ்சு கொட்டுதல், பட்டை போடுதல்
பிப்ரவரி		
மார்ச்சு	வீட்டார் உதவியுடன் சமைத்தல்	
ஏப்ரல்	குப்பைகளைப் பத்திரப் படுத்தல்	

— திங்கள்வாரி, தலைப்புவாரியாக.

வகுப்பு

4	5	6
தோட்ட வேலை.	களியாட்டம், விழாக் கொண்டாட்டங்கள்.	பிற செயல்கள்.
நிலத்தைப் பண்படுத்தல்		துணி தைத்தலும் பெரிய மாலைக் கயிறு திரித்தலும்
விதை விதைத்தல்	சுதந்திர தினம்	
	கிருஷ்ண ஜயந்தி, விநாயக சதுர்த்தி	
செடிகளை நடுதலும், பாதுகாத்தலும்		கையெழுத்துப் பத்திரிகை தயாரித்தல்
		காட்சிப்பொருள் சேகரித்தல்
காலநிலைக் குறிப்பு வைத்தல்		
	பொங்கல் விழா	
ஈரிழை முறுக்குதலும் பாவு போடுதலும்	கலவை உரம் தயாரித்தல்	
	பாலர் சபை	
	பள்ளி ஆண்டு விழா	

குறிப்பு: ஒவ்வொரு செயலிலும் தன்னம்பிக்கைப் பயிற்சியும், கலைப் பயிற்சியும், சமூகப் பயிற்சியும் ஊடுருவிவரும் என்று சொல்லத் தேவையில்லை.

செயல் திட்டம் தீட்டுதல்: செயல்களை வார வாரியாகப் பிரித்துவிட்டபின் ஒவ்வொரு செயலுக்கும் செயல்திட்டம் தீட்டுதலும், இயைபு விவரம் எழுதுதலும் அடுத்த வேலையாகும்.

செயல்		பாட்டு	
நோக்கம்		கதை	
தேவைப்படும் கருவிகள்		சித்திரம்	
பொது விஞ்ஞானம்		நாடகம்	
துப்புரவு, உடல்நலம்		கல்விப் பயணம்	
குடிமைப் பயிற்சியும் சமூகப் பயிற்சிகளும்		விளையாட்டு	
தாய்மொழி		எதிர்பார்க்கும் திறமைகளும் மனப்பான்மைகளும்	
கணிதம்		விளையாட்டு	

இது ஆசிரியருடைய முக்கிய வேலை. செயல் நடத்த வேண்டிய நாட்கள், செயல் நடத்தவேண்டிய இடம், தேவையான மூலப் பொருள்கள், தேவையான உபகரணங்கள், ஒவ்வொரு செயலிலிருந்தும் என்னென்ன விஷயங்களை இயைபுபடுத்திக் கற்பிக்க முடியும் என்பனவற்றைச் செயல்திட்டத்தில் குறிக்க வேண்டும். தேர்ந்தெடுத்த ஒவ்வொரு செயலுக்கும் *196*-ம் பக்கத்தில் காணும் தலைப்புக்களில் சுருக்கமாக எழுதவேண்டும்.

பாடத்திட்டத்திலுள்ள எல்லா விஷயங்களையும் கற்பிக்கமுடியுமா எனத் தாமே சோதித்து அறியவும், பிறர் சோதித்தறியவும் இது பயன்படும்.

பாடக் குறிப்பு :

ஒவ்வொரு செயல் நடத்துவதற்கு முன்னும் ஆசிரியர் பாடக் குறிப்புக்கள் எழுதவேண்டும். பாடக் குறிப்பு எழுதாமல் வகுப்பிற்குப் போகும் ஆசிரியர் நல்லாசிரியர் ஆகார். பாடக்குறிப்பை அவர் உடன் எடுத்துச்சென்று போதனையில் பயன்படுத்தவேண்டும். வகுப்பு நேரத்தை வீணாக்காமலும், ஒன்றன்பின் ஒன்ருக என்ன செய்யவேண்டுமென்பதைத் தயக்க மின்றி எடுத்துக்காட்டவும், முன்னாள் நடந்தது எது என எடுத்துக்காட்டி, இன்று நடத்தவேண்டியது யாது என்ற தொடர்ச்சியை ஏற்படுத்தவும் பாடக்குறிப்பு இன்றியமையாதது. அன்ருடப் பாடபோதனை விரிவைக் காட்ட உதவும் எழுத்து பூர்வமான தஸ்தாவேஜியே அதுவாகும்.

உபயோகிக்கவேண்டிய உபகரணங்கள், இடங்கள், கேட்கவேண்டிய வினுக்கள், வாசிப்புப் புத்தகங்கள் முதலியன அதில் இடம்பெற்றிருக்கவேண்டும். இத்தகைய குறிப்பு இல்லாவிடில் வகுப்பு அறையில் செயல் நடத்துங்கால் குறைபாடுகள் நிகழும்; கற்பிக்க வேண்டிய சில விஷயங்கள் நின்றுவிடும்; கால விரயம் ஏற்படும்; வாரத் திட்டவேலை பூர்த்தியாகாது; எடுத்துக் கொண்ட செயலிலிருந்து பெறச்செய்யவேண்டிய அறிவு முழுவதும் மாணவர்களுக்குக் கிட்டாது.

பாடக் குறிப்பு எழுத நீண்ட நேரம் பிடிக்காது. நாள் ஒன்றுக்கு அரைமணி நேரம் போதுமானது. ஒரு வாரத்திற்குரிய செயல்திட்டத்தையொட்டி ஒவ்வொரு நாளும் செய்யவேண்டியவற்றை அது பூரணமாய் விளக்கவேண்டும். இல்லாவிடில் அதனுல் பயன் இராது. ஆதாரக் கல்வி முறையில் பாடங்களைத் தனித் தனியாய்க் கற்பிக்காமல் இயைபுபடுத்திக் கற்பிக் கிறேம். இயைபுமுறை ஒரு புது முறை; புரட்சிகரமான முறை. ஆகவே, பாடக்குறிப்பில் இயைபு விஷயங் களும் இடம்பெறுதல்வேண்டும்.

நிறைவேறிய வேலைபற்றிய குறிப்பு (Record of work done):

மாத, வார வாரியான செயல் திட்ட விவரம், 'பாடக் குறிப்பு' ஆகிய குறிப்புக்களைத் தவிர, 'நிறைவேறிய வேலைபற்றிய குறிப்பு' ஒன்றும் ஒவ்வோர் ஆசிரியரும் எழுதிவரவேண்டும். அதில், வாரமொரு முறை வகுப்புவாரியாகவும், ஒவ்வொரு வகுப்பிலும் தலைப்புவாரியாகவும், அந்தந்த வாரத்தில் செய்த

வற்றைப்பற்றி ஒழுங்காகக் குறிப்பு எழுதிவரவேண்டும். பாடக் குறிப்பு வேறு, நிறைவேறிய வேலைக் குறிப்பு வேறு. வகுப்பில் செய்ய எண்ணியவற்றைப் பாடக் குறிப்பில் விவரமாகக் காணலாம். நிறைவேறிய வேலைக் குறிப்பில், நிறைவேற்றியவற்றை மட்டும் சுருக்கமாகக் காணலாம். ஆசிரியருக்கும், தணிக்கையினர்க்கும் போதனையின் **அளவு, தரம், தொடர்ச்சி** ஆகியவற்றைக் காட்ட இது அவசியமாகும். இது நாட்குறிப்பு எழுதுவதை யொக்கும்.

திங்கள் அறிக்கையும் ஆண்டு அறிக்கையும் :

சிறுவர்கள் திங்கள் அறிக்கை எழுதுவதைப் போலவே ஆசிரியரும் திங்கள்தோறும் ஓர் அறிக்கை எழுதிவரவேண்டும்; ஆண்டிறுதியிலும் ஓர் அறிக்கை எழுதவேண்டும். ஆதாரக் கல்வியின் ஆரம்ப நிலையில் இத்தகைய ஆண்டு அறிக்கை மிகவும் பயன்படும். பெரியநாயக்கன்பாளையத்தில் ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயத்தில், கலாநிகேதன் என்ற ஆதாரப் பள்ளியில், நான்காம் வகுப்பில் ஓராண்டில் நடத்தி முடித்த வேலை பற்றிய அறிக்கை ஒன்றை அச்சடித்துள்ளனர். ஆதாரப் பள்ளிகளில் வேலைசெய்வோர்க்கு அது மிகவும் பயன்படும்.

இத்தகைய ஆண்டு அறிக்கைகளை ஆசிரியர் சங்கக் கூட்டத்திலும், ஆசிரியர்கள் மகாநாட்டிலும் விவாதித்து வேலையை மேலும் செவ்வையாய்ச் செய்யக் கற்கலாம்.

ஆதாரப் பள்ளிகளில் பாடப் புத்தகங்களின் இடம் :

சாதாரண ஆரம்பப் பள்ளிகளில் பாடப் புத்தகங்களுக்கு முதன்மையான இடம் உண்டு. அத்திட்டத்தி

லுங்கூடப் பாடப் புத்தகங்கள் உபயோகிப்பதைப்பற்றி ஒரு தெளிவான எச்சரிக்கையை அரசினர் விடுத்துள்ளனர். அரசினர் வெளியிட்டுள்ள 'சென்னை ஆரம்பக் கல்விக் கைப்புத்தகம்' என்னும் நூலில் அதை விவரமாகக் காணலாம்.

புத்தகத்தைக் குருட்டுத்தனமாய் அப்படியே பின்பற்றவேண்டியதில்லை. ஒருபொழுதும் மாணவர்களும் ஆசிரியர்களும் பாடப் புத்தகங்களுக்கு அடிமையாகக்கூடாது. கல்வி போதனை வாழ்க்கையைச் சார்ந்திருக்கவேண்டும்; சுவையாயிருக்கவேண்டும் என்பதே அதன் சாரம்.

ஆதாரப் பள்ளிகளில் செயல்கள் மூலம் கல்வி கற்பிக்கிறோம். செயல்மூலம் செயல்களோடு இணைந்து வரும் விஷயங்களை மட்டும் இயைபுபடுத்திக் கற்பிக்கிறோம். தாய்மொழி, கணிதம், சமூகப் பாடங்கள், பொது விஞ்ஞானம் ஆகியவற்றையெல்லாம் இவ்வாறே இயைபுபடுத்திக் கற்பிக்கிறோம். இவ்வாறு சிறுவர்களின் நேர்முக அநுபவங்களின்பேரில் போதனை திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆகையால் பாடப்புத்தகங்களும் இம்முறைக்குப் பொருந்தி அமைந்திருந்தால் அவை ஆதாரப் பள்ளிகளுக்குப் பயன்படும். ஆனால் தற்போதுள்ள பாடப் புத்தகங்கள் அவ்வாறு எழுதப் படவில்லை. அவற்றின் அமைப்பைச் சற்று விரிவாகக் கவனிப்போம்.

1. பாடப் புத்தகத்தில் சிறுவர்களின் நேரடி அநுபவத்திற்குப் பொருந்திய தொடர்பு இருப்பதில்லை.

2. ஒரு பாடத்திற்கும் அடுத்த பாடத்திற்கும் அதில் எவ்விதத் தொடர்பும் இருப்பதில்லை.

3. சிறுவர்களின் அன்ருட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு விடையளிக்கும் வகையில் அதிலுள்ள பாட விஷயங்கள் அமைக்கப்படுவதில்லை.

4. **கதை, கட்டுரை, கவிதை, கடிதம்** என்ற வகைவகையான பாடங்களைச் சேர்க்கவேண்டுமென்ற மொழிப் பயிற்சி நோக்கத்தில் அது எழுதப்படுகிறதேயன்றிச் சிறுவர்களின் உடனடித் தேவைகளுக்கு அது ஈடுசெய்ய முடிவதில்லை. பாடங்கள் எழுதப்பட்டு அமைக்கப்பட்ட நோக்கங்கள் வேறு. பாடங்கள் எழுதப்படும் நடையும், அதில் ஆளப்பட்டிருக்கும் சொற்களும் ஒரு தனித்த நோக்கத்துடனேயே கையாளப்பட்டுள்ளன. ஆகவே அத்தகைய பாடப் புத்தகங்கள் செயலுக்கும் நேர்முக அநுபவங்களுக்கும் அழுத்தம் கொடுக்கும் ஆதாரப் பள்ளிகளுக்கு உதவுவதில்லை.

ஆகவே, பல அம்சங்களில் புரட்சி மிகுந்த ஆதாரக் கல்வி, நேர்முக அநுபவங்களுக்கு ஈடுசெய்யாததும் சிறுவர்கள் விரும்பாததும் ஆன அத்தகைய பாடப் புத்தகங்களுக்கு ஆதாரப் பள்ளிகளில் இடந்தரவில்லை. அதனுல் அவற்றில் பயிலும் சிறுவர்களுக்குப் புத்தகமே தேவையில்லை எனப் பொருள்கொள்ளுவது முற்றிலும் தவறு. அவர்கள் விரும்பக்கூடியவையும், அன்ருட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குப் பயன்படக்கூடியவையுமான பல வாசிப்புப் புத்தகங்கள் (Reading Sheets) அவர்களுக்குத் தேவை. பாடப் புத்தகம் என்ற ஒரு புத்தகத்திற்கு அவர்கள் அடிமையாகக்கூடாது. ஒரு பாடப் புத்தகத்திற்குப் பதிலாகப் பல புத்தகங்களை அவர்கள் படிக்கவேண்டும்.

தவிர, இந்த வாசிப்புப் புத்தகங்கள் முற்றிலும் புதிய முறையில் அமைந்திருக்கும்.

(1) அவை செயலையொட்டி எழுதப்பட்டிருக்கும். உதாரணம்:

''எங்கள் பள்ளியில் 'காந்தி ஜயந்தி', - 'பாய் நெய்வதெப்படி! - 'எங்கள் தோட்டம்', - ''விளையாட்டாக வேட்டியும் சட்டையும்'', - 'சந்தையைச் சுற்றிப் பார்த்தோம்', - 'செக்கடியிலே சில மணி நேரம்'-

ஒவ்வொன்றும் ஒரு தலைப்பை யொட்டியே எழுதப் பட்டிருக்கும்.

(2) ஒவ்வொன்றிலும் தொடர்ச்சியுள்ள 7, 8 பாடங்கள் இருக்கும். சம்பந்தமில்லாத வேறு வகைப் பாடங்கள் அதில் இடம்பெறமாட்டா.

(3) ஒவ்வொரு புத்தகமும் வகுப்பிற்கேற்றவாறு, அதாவது அவ்வகுப்புச் சராசரி வயதிற்கேற்றவாறு நடை, அமைப்பு, அச்சு உள்ளதாயும், சுமார் 16 முதல் 32 வரை பக்கங்கள் கொண்டதாயும், பொருத்தமுள்ள பாடங்கள் நிறைந்ததாயும், கவர்ச்சிகரமாயும் இருக்கும்.

(4) மொழி வளர்ச்சியே பிரதானம் எனக் கொள்ளாமல் சிறுவர்களைப் பிரதானமாகக்கொண்டு எழுதப் பட்டிருக்கும். அதாவது, மொழியைக் கருவியாய்ப் பயன்படுத்திக் குழந்தையிடம் கொண்டுபோகும்; குழந்தையை மொழியிடம் கொண்டுபோக முயலாது.

(5) ஓராண்டில் I, II, III, IV, V வகுப்புக்களில் உள்ள ஒவ்வொரு சிறுவனும் 10, 12 புத்தகங்களைப் படித்து முடித்திருப்பான்.

(6) முதல் வகுப்புச் சிறுவர்களுக்குத் தனிப் புத்தகம் என்று யாதொன்று மிராது.

புத்தகத்திற்குப் பதிலாக அவ்வகுப்புக்குக் கையால் எழுதப்பட்ட வாசகத் தாள் (படிப்புத் தாள்) ஒன்று பின்வருமாறு தயாரிக்கப்படும்:

(i) தம் அநுபவங்களைச் சிறுவர்கள் வாயால் சொல்லுவார்கள்.

(ii) சிறுவர்களே உபயோகித்த சொற்களைக் கொண்டு எளிய, திருத்தமான 5, 6 வாக்கியங்களைப் பலகையில் ஆசிரியர் எழுதுவார்.

(iii) சிறுவர்கள் அவற்றைப் படிப்பார்கள்.

(iv) பிறகு எழுத முயலுவார்கள்.

(v) மறு நாள் உபயோகத்திற்கு ஒரு பெரிய தனித் தாளிலும் அப்பாடத்தைப் பெரிய எழுத்துக்களில் ஆசிரியர் எழுதிவைப்பார்.

(vi) சிறுவர்களின் நோட்டுப் புத்தகத்திலும் அவர் எழுதிக்கொடுப்பார். அதுதான் அவர்களுடைய புத்தகம். வீட்டில் படிக்க அது அவர்களுக்குப் பயன் படும்.

ஆசிரியருக்கான கைப்புத்தகம்:

சிறுவர்களுக்கெனப் புதுமுறையில் வாசிப்புப் புத்தகங்கள் தயாரிக்கத் திட்டமிட்டிருப்பதுபோல் ஆசிரியர்க்கெனத் தனியாகக் கைப் புத்தகம் ஒன்றும் இருக்கும். அதில் வாசிப்புப் புத்தக தத்துவம், அதை உபயோகிக்கவேண்டிய முறை, தாய்மொழிப் பாட நோக்கங்கள் முதலியன எழுதப்பட்டிருக்கும். கலைத்திட்ட விளக்கம், செயல் திட்டம், இயைபுமுறைப் போதனை பற்றிய குறிப்புக்கள் போன்றவையும் இருக்கும்.

போதனைச் சாதனங்கள், சார்ட்டுகள்பற்றியும் அதில் குறிப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

மாணவர்க்கான வாசிப்புப் புத்தகங்களை எப்படி உபயோகிப்பது?

மேற்சொன்ன வகையில் தயாரிக்கப்பட்ட வாசிப்புப் புத்தகங்கள் [ஒவ்வொன்றிலும் 3 அல்லது 4 பிரதிகள்] வகுப்பு நூல்நிலையத்தில் வைக்கலாம்.

1. செயல்களைச் செய்யுமுன், செய்யும் முறை நுணுக்கங்களைப்பற்றிச் சிறுவர்கள் அவற்றிலிருந்து படித்து அறியலாம்.

2. செயல் செய்தபின் செயல் விளக்கம் எழுத அவற்றைப் படித்து அறியலாம்.

3. செயல் செய்யும்போது எழும் ஐயங்களைத் தீர்க்கும்பொருட்டும் படிக்கலாம்.

4. விழாக்களில் பங்கெடுக்க விஷயம் திரட்டவும் படிக்கலாம். கையெழுத்துப் பத்திரிகைகளுக்குக் கட்டுரை எழுத விஷயங்களைத் திரட்டவும் அவற்றைப் படிக்கலாம்.

5. ஒரு குழுவாகக் கூடி அப்புத்தகங்களைப் படித்து விவாதிக்கலாம்.

இவ்வாறு ஆதாரக் கல்வித் திட்டத்தில் வாசிப்புப் புத்தகம், சிறுவர்களின் உடல், உள்ள, ஆன்ம, உணர்ச்சி — சமூகத் தேவைகளுக்கிணங்கத் தயாரிக்கப் பட்டு ஒரு சிறந்த தனி இடம் பெற்றிருக்கும். மொழி நடையினாலோ, இலக்கணத்தினாலோ, தொடர்பில்லாத விஷயச் சேர்க்கையினாலோ பாடப் புத்தகம் சுவை இழக்காது. ஆறு, ஏழு, எட்டு வகுப்புக்களுக்கும்

இவ்வகையான புத்தகங்கள் அமையும். தங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க மேல்வகுப்பு மாணவர்கள் வேறு பல நுட்பமான நூல்களைப் படிக்கவேண்டியிருக்கும். அவையெல்லாம் வகுப்பு நூல்நிலையத்தி லிருக்கும்.

ஆதாரப் பள்ளியில் கால அட்டவணை :

ஆதாரப் பள்ளிக் கால அட்டவணை, ஆதாரக் கல்வி நோக்கங்களுக்கு ஏற்ப அமைந்திருக்கும். இங்குச் செயல்கள் முக்கியம்பெற்றிருக்கும். ஒரு வாரம் வரை நீடிக்கும் செயல்களை நடத்தவேண்டியிருப்பதாலும், அவற்றையொட்டியே கல்வி கற்பிக்கவேண்டியிருப்பதனாலும், ஆசிரியர்களும் மாணவர்களும் ஒருவகைச் சுதந்திரச் சூழ்நிலையில் வேலை நடத்துவதாலும், சந்தர்ப்ப போதனைக்குச் சிறப்புத் தந்திருப்பதாலும், கால அட்டவணையை அப்படியே கெட்டியாக இறுக்கிப் பிடித்துக்கொண்டு அதையே பின்பற்றாமல் அதைச் சற்று நெகிழ்த்திக்கொள்ளலாம் என்று கூறப்படுகிறது. இதனால் சிலர் ஆதாரப் பள்ளிகளுக்குக் கால அட்டவணையே தேவையில்லை எனக் கருதுகிறார்கள். அது முற்றிலும் தவறான கருத்து ஆகும்.

நற்குடிப் ப்யிற்சிக்குத் திட்டமிட்டுள்ள ஆதாரக் கல்வி நான்காம் வகுப்பிலிருந்தே, ஒவ்வொரு மாணவனும் தன் இல்லத்தில் துயிலெழுவதிலிருந்து இரவில் படுக்கும் வரையில் பின்பற்றவேண்டிய தினசரி வேலைக் கிரமக் குறிப்பு (கால அட்டவணை) ஒன்று தயாரித்து, அதைக் கூடியமட்டும் பின்பற்றவேண்டுமெனக் கூறு கிறது. ஆதலால் மாணவர்களும் ஆசிரியர்களும் வேலை செய்யும் ஆதாரப் பள்ளியில் கால அட்டவணைக்கு அவசியம் இல்லை என்பது ஆதாரக் கல்விக்

கொள்கைக்கே முரணானது. காலம், இடம், அளவு ஆகியவற்றையொட்டி ஒரு அலுவலைச் செய்வதே ஒரு பயிற்சியாகும். அதற்குக் கால அட்டவணை உதவுகிறது.

கால அட்டவணைக்கு ஆசிரியர் அடிமையாகக் கூடாது. சந்தர்ப்ப போதனையில் சில தருணம் ஒரு பாட வேளை போதாமல் அடுத்த பாட வேளையிலிருந்து நேரம் எடுக்கவேண்டியிருக்கலாம். ஒரு வேளை அந்தப் பாட வேளை முழுவதும் உபயோகிக்கலாம். அதாவது, கால அட்டவணையை வகுப்பு வேலைச் சந்தர்ப்பங்களுக் கேற்பச் சற்று நெகிழ்த்திக்கொள்ளலாம். இத்தகைய கால அட்டவணையை நெகிழ்த்திக்கொள்ளக்கூடிய கால அட்டவணை (Flexible Time Table) எனக் கூறுவது வழக்கம்.

புரட்சி அம்சங்கள் நிறைந்த ஆதாரப் பள்ளிக்கான கால அட்டவணை தயாரிப்பது கடினமானதொரு காரியம். இங்குப் பாடத்திட்டத்திற்குப் புறம்பான செயல்கள் எனத் தனியாக இல்லை. துப்புரவு வேலை, செய்தித்தாள் படித்தல், நாடகம் நடித்தல், கொடி வணக்கம், கிராம சேவைபோன்ற செயல்களை எல்லாம் கால அட்டவணையிலேயே காட்டலாம்.

கால அட்டவணை தயாரிப்பதில் நான்கு விஷயங் களைக் கருத்தில் கொள்ளவேண்டும்:

1. பள்ளியில் நடைபெறுவது வகுப்பாசிரியர் முறையா? அல்லது வெவ்வேறு வேலைகளுக்கு வெவ்வேறு ஆசிரியர் என்ற முறையா? (நூற்புக்கு ஓர் ஆசிரியர், கலைப் பயிற்சிக்கு வேறொருவர், துப்புரவுக்கு மற்றொருவர் என்றபடி) என்னும் விஷயம்.

2. செயல் அல்லது பாடத்தின் **முக்கியத்துவம்**, செயலி லிருந்து இயைபுபடுத்தவேண்டிய **விஷயங்கள்**, ஒவ்வொரு செயலிலும் உள்ள **கடுமை** ஆகியவை யும், ஒவ்வொரு செயலுக்கும் கால அட்டவணையில் கொடுக்கவேண்டிய **நேர அளவும்**.

3. செயல்களின் கடினத்தன்மையை யொட்டியும், மாறிக்கொண்டே இருக்கும் சிறுவர்களின் உடல், உள்ள நிலைகளை யொட்டியும், தினசரிப் பாடவேளை வரிசையில் அவற்றை எவ்வாறு அமைத்தால் சிறந்த முறையில் கற்பிக்க முடியும்.

4. ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புக்களுக்கு ஓர் ஆசிரியர் போதிக்க நேரிட்டால், அவர் கற்பிக்கும் வகுப்புக் களின் எண்ணிக்கை.

வகுப்பாசிரியர் முறை :

ஆதாரப் பள்ளிகளில், சிறப்பாக I–V *வகுப்புக் களுள்ள இளையோர் பள்ளிகளில் ஒரு வகுப்பு முழு மைக்கும் ஓர் ஆசிரியர்தான் இருக்கவேண்டும். ஆதாரப் பள்ளிகளில் முழுமையான தொகு கல்வி* (Integrated Teaching) *தர முயலுகிறார்கள். கணிதம், பொது விஞ்ஞானம், சமூகப் பாடங்கள் என்ற பாகு பாட்டு முறையைக் கண்டித்து, அறிவின் ஒருமையை* (Unity) *வற்புறுத்துகிறார்கள். எனவே, இங்கு ஒரு வகுப்பில் கற்பிக்கவேண்டிய பல செயல்களுக்கு வெவ்வேறு ஆசிரியர்கள் கற்பித்தல் பொருந்தாது.*

ஒரு வகுப்பிற்கு அதிகப்பட்ட பல வகுப்புக்களுக்கு ஓராசிரியர் போதிக்க நேரிட்டாலும், அவ்வெல்லா

வகுப்புக்களுக்குமான முழுப் பொறுப்பை ஒருவரே ஏற்றுப் பயிற்றுவது பொருத்தமாகும்.

ஒவ்வொரு செயலுக்கு ஒவ்வொருவராக ஒரு வகுப்புக்குப் பல ஆசிரியர்கள் போதிக்க நேரிட்டால் போதனை சிதறும்; பாடங்கள் இணைக்கப்படமாட்டா. ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் உள்ள தொடர்பைச் சிறுவர்கள் அறியமுடியாது; நேரமும் முயற்சியும் சேதப்படும்; பயன் குன்றும்.

எனவேதான் துப்புரவு வேலை, நூற்புவேலை, கலைப் பயிற்சி, தோட்டவேலை, இயைபுவேலை ஆகிய எல்லா வேலைக்கும் ஒரே ஆசிரியர் போதிப்பது சிறந்த முறையாகும். மேல்வகுப்புக்களுக்கு மட்டுமே செயல்வாரி ஆசிரியர் பயன்படலாம்.

பள்ளி நாட்களும் விடுமுறை நாட்களும் :

ஆதாரப் பள்ளிகள் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு 220-நாட்கள் வேலைசெய்யவேண்டும் என்பது அரசினர் விதி. ஒரு வாரத்தில் $5\frac{1}{2}$-நாட்கள் வேலைசெய்வது நலம். வார விடுமுறை சாதாரணமாகச் சனி பிற்பகலும், ஞாயிறு முழுவதுமாக இருப்பது வழக்கம். எனினும், உள்ளூர் நிலைமையையொட்டி வேறு நாட்களிலும் வார விடுமுறை வைத்துக்கொள்ள விதிகளில் சலுகை தரப்பட்டிருக்கிறது.

உள்ளூரிலோ, அருகிலோ புதன்கிழமைதோறும் வாரச் சந்தை நடக்கிறதென்றால் மாணவர்கள் பெற்றோர்களுக்கு உதவியாகச் சந்தைக்குப் போகவேண்டியிருக்கும். அதனால் பள்ளியில் ஆஜர் குறையும். ஆகையால் புதன்தோறும் வார விடுமுறை விட்டு,

அதற்குப் பதிலாக ஞாயிறு முழுவதும் வேலைசெய்ய லாம். தவிர, பெற்றோருக்குதவுவதும், பெற்றோருடன் சந்தைக்குப் போய்வருவதும் ஒரு நல்ல பயிற்சியே.

அரசினர் பணஉதவி பெறும் பள்ளிகளுக்கு 220 நாட்களை ஜனவரி முதல் தேதி முதல் டிசம்பர் 31-ஆம் தேதி முடியக் கணக்கிடுவார்கள். மற்ற ஸ்தல ஸ்தாபனம், அரசினர் பள்ளிகளுக்குப் பள்ளிக்கூட ஆண்டுக்கு (ஜூன் திங்கள் முதல் கோடைக்கால விடுமுறை தொடங்கும் வரை) கணக்கிடுவது வழக்கம்.

ஒரு வாரத்தில் ஆறு நாட்கள் தொடர்ந்து எப் பள்ளியும் வேலைசெய்யக்கூடாது என்று விதிகள் திட்டவட்டமாய்க் கூறுகின்றன.

பொது விடுமுறை நாட்கள் :

சாதாரண ஆரம்பப் பள்ளிகளில் விநாயக சதுர்த்தி, திருமகள் பூஜை, குடியரசு நாள், காந்தி ஜயந்திபோன்ற நாட்களில் பள்ளிகளுக்கு விடுமுறை அளிப்பது வழக்கம். ஆதாரப் பள்ளிகளில் இவற்றை வேலை நாட் களாகக் கருதுகிறார்கள். பலவகை விழாக்களைப் பள்ளி களில் கூட்டாகக் கொண்டாடி, ஒவ்வொன்றின் தத்து வம், அவசியம், நடத்தும் முறை ஆகியவற்றை அறி கிறார்கள். நாகரிக முன்னேற்றத்திற்கேற்ப விழாக் கொண்டாட்டங்களுக்குப் புதுப் பொருள் தேடுவதும், பொருத்தமான புது முறைகளைப் பின்பற்றுவதும் ஆதாரப் பள்ளிகளில் முயலப்படுகிறது.

ஒரு நாளுக்கு எத்தனை மணி நேரம் வேலை ?

ஆரம்பப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில் இதைப் பற்றிய விதிகள் தெளிவாக உள்ளன. நாளொன்றுக்கு

ஐந்து மணி நேரத்திற்குக் குறையாமல் மதச் சார்பற்ற பாடபோதனை நடக்கவேண்டும். இந்தப் போதனை நேரத்திற்குள் பாடத்திட்டத்திற்குப் புறம்பான செயல்களும், இடைவேளை நேரமும் சேரா. ஆதாரப் பள்ளிகளுக்கு அரசினரால் ஏற்கப்பட்டுள்ள ஹிந்துஸ்தானி தாலிமி சங்கம் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்தில் இத்தகைய விதிகள் திட்டவட்டமாய்க் குறிக்கப்படவில்லை. நாளொன்றுக்கு இரண்டு மணி நூற்பு வேலை நடக்கவேண்டுமென்ற குறிப்பு மட்டும் உள்ளது. எனினும், ஆரம்பப் பள்ளிகளைப்போலவே ஆதாரப் பள்ளிகளிலும் ஐந்து மணி நேரத்திற்குக் குறையாமல் வேலை நடந்துவருகிறது.

ஆதாரப் பள்ளிகளில் திங்கள்தோறும் ஒவ்வொரு மாணவனும் பொருள் உற்பத்தி காட்டவேண்டும். அதன் மதிப்பு அரசினர் விதிகளில் குறித்துள்ள குறைந்தபட்ச அளவுக்குக் குறையக்கூடாது. எனவே, நாள்தோறும் 5 மணி நேர வேலை போதாது எனச் சிலர் நினைக்கிறார்கள். துப்புரவு, கொடி வணக்கம் போன்ற செயல்களும் சேருவதால் நாடோறும் 6-மணி நேரம் வேலைசெய்யவேண்டும் என அவர்கள் கூறுகிறார்கள். இதைக் குறித்து மாநில மாநாட்டில் சர்ச்சை செய்து இனித்தான் வரையறை செய்யவேண்டும்.

கால அட்டவணை அமைக்கும் முன் ஒரு நாளுக்கு எவ்வளவு மணி நேரம் வேலை, எத்தனை பாட வேளை (Period), ஒவ்வொரு பாட வேளைக்கும் உரிய நேரம் முதலியவற்றை முடிவுகட்டிக்கொள்ளவேண்டும்.

எந்தப் பாடம் அல்லது செயலுக்கு அன்றாட வேலைக்கிரமத்தில் முதன்மை கொடுப்பது, ஒவ்வொன்

றுக்கும் எவ்வளவு நேரம் ஒதுக்குவது என்பது அடுத்த பிரச்சினை. கலைத் திட்டத்தை யொட்டி இவற்றை ஒழுங்குபடுத்தவேண்டும். கலைத் திட்டத்தில் துப்புரவுக்கு முதலிடம் கொடுத்துள்ளனர். ஆகையால் கால அட்டவணையிலும் அதுதான் முதல் வேலையாயிருப்பது சிறந்தது. அடுத்தபடியாக வருவது ஆதாரத் தொழில். அது ஒரு புதிய பாடம். புதிய பாடத்திற்கு நீண்ட நேரம் கொடுக்கவேண்டும். ஆனால் புதிய பாடங்கள் எப்போதும் புதியனவாயிருப்பது நல்லதன்று.

ஒவ்வொரு நாளும் சிறுவர்களின் உடல்நிலையும், மனநிலையும் முதல் ஒன்றிரண்டு பாட வேளைகளில் கற்றலுக்கு மிக ஏற்றதாயிருக்கும். அவர்கள் அப்போது மிகச் சுறுசுறுப்பாயும், மிக இன்பமாயும் இருப்பார்கள். அதனால் எந்தக் கடினமான பாடமும், செயலும் அப்போது அவர்களுக்குக் கடினமாகத் தோன்றாது; விருப்பம் இருப்பதால் களைப்பும் உண்டாகாது. ஆகவே முதல் இரண்டு பாட வேளைகளில் கடினமான பாடங்களைக் கால அட்டவணையில் அமைக்கவேண்டும்.

நேரம் ஆக ஆகச் சிறுவர்களின் சுறுசுறுப்பும் விருப்பும் குறைவது இயல்பு. அவற்றை மீண்டும் தூண்ட இரண்டாம் பாட வேளைக்குப் பின் 10-நிமிட நேரம் கொண்ட சிறு இடைவேளை அமைக்கவேண்டும். இடைவேளையில் மாணவர்கள் வகுப்பறையை விட்டு வெளிப்புறம் போய்வருவார்கள். தொடர்ந்து உட்கார்ந்திருக்கும் சூழ்நிலையை மாற்றிக்கொள்ளவும், சிறுநீர் கழிக்கவும், குடிநீர் பருகவும் அந்நேரம் பயன்படும். தவிர, காற்றோட்டம் செவ்வையாயுள்ள வெளிப்புறத்

தில் போய்வருவதால் சிறுவர்கள் புத்துயிர் பெறுவார்கள். எந்த வசதியுள்ள நிலையிலும் மூன்ருவது, நான்காவது பாட வேளைகளில் மாணவர்களின் சுறுசுறுப்பும், விருப்பும் முதல் பாட வேளைக்கு முன் இருந்த நிலைபோல் இராது.

கால அட்டவணையில் பாட் வேளைகளின் ஆரம்ப, முடிவு நேரத்தைக் குறிக்கவேண்டும்.

முற்பகலா ? பிற்பகலா ?

மேலே விவரித்த காரணங்களினுல், பிற்பகலைவிட முற்பகலில் சிறுவர்கள் மிகச் சுறுசுறுப்பாயும், ஜீவன் நிறைந்தும் இருப்பார்களென்று சொல்லத் தேவையில்லை. எனவே, கடின பாடங்களை முற்பகலிலேயே கற்பிப்பது வழக்கம். பிற்பகலிலும், இரண்டாம் வேளைக்குப் பின்னும் மாணவர்கள் வெளியே போய் வரச் சிறு இடைவேளை அமைப்பது நன்மை தரும்.

கீழ் வகுப்பும், மேல் வகுப்பும் :

கீழ் வகுப்பு மாணவர்கள் எளிதில் களைப்புறுவார்கள். எனவே, கீழ் வகுப்புச் சிறுவர்களுக்கு நீண்ட நேரப் பாடங்கள் கூடாது. செய்முறை வேலைகளில் அவர்களை அதிகமாக ஈடுபடுத்தவேண்டும்.

களைப்பைக் குறைத்தல் :

சிறுவர்களிடம் களைப்பு ஏற்படப் பல காரணங்கள் இருக்கலாம். இட வசதியின்மை, காற்ருேட்டமின்மை, வெளிச்ச வசதியின்மை, போதனைக் கவர்ச்சியின்மை, தொடர்ந்த நீண்ட நேரப் போதனை, கால அட்டவணைக் குறைபாடுகள், சிறுவர்களின் உடல்நிலை என்ற பல

காரணங்களால் களைப்பு ஏற்படலாம். களைப்பு எதனால் ஏற்படுவதாயிருந்தாலும் அதைத் தடுக்க உடனே முயலவேண்டும். களைப்பு ஏற்பட்டால் பாடமோ, செயலோ பயன்தராது.

கால அட்டவணையைச் சரிவர அமைக்காததால் ஏற்படக்கூடிய களைப்பை ஆசிரியர் எளிதில் குறைக்க முடியும். அதற்கான உபாயங்கள் பின்வருமாறு:

1. பாடங்களையும், செயல்களையும் சீரான முறையில் கால அட்டவணையில் அமைத்தல். அதாவது அவற்றை முற்பகலிலும், பிற்பகலிலும் சரியான பாட வேளையில் அமைத்தல்.
2. இரண்டு பாட வேளைக்குப் பின், முற்பகலிலும் பிற்பகலிலும் 5 அல்லது 10 நிமிட இடை வேளை அமைத்தல்.
3. செயல்களையும், படிக்கும் வேலை அல்லது எழுதும் வேலையையும் மாற்றி மாற்றி அமைத்தல்.
4. தோட்டவேலையை அதிகாலையில் அல்லது பிற்பகல் இறுதியிலோ அமைத்தல்.
5. செயல்களுக்கு அதிக நேரம் ஒதுக்குதுல்.
6. வேலைக்கும் பாடங்களுக்கும் தக்கவாறு 10, 30, 35, 40-நிமிஷங்களை ஒதுக்குதல்.
7. I, II வகுப்புக்களில் சில மாறுதல்கள் செய்து கொள்ளவேண்டும். கதை, பாட்டுக்களுக்கு அதிகப் பாட வேளைகள் தரவேண்டும்.
8. மௌன நூற்பிற்குப் பிற்பகலில் முதற் பாட வேளையை ஒதுக்கிக்கொள்ளவேண்டும்.

மௌன நூற்பை முற்பகலுக்கு மாற்றலாம் எனச் சிலர் சொல்வர். ஆதாரக் கல்வி அன்பர்கள் அனைவரும் அதை வேள்வியாகக் கருதி வேலைசெய்கிறார்கள். நாட்டிலுள்ள எல்லாப் பள்ளிகளிலும் அதே நேரத்தில் அதைச் செய்வது என்ற பழக்கம் ஒன்று ஏற்பட்டுவிட்டது. வேறு இடங்களிலுள்ள சகோதரர்கள் எல்லோரும் அதே வேளையில் அதே வேலையில் ஈடுபடுகிறார்கள் என்பதை நினைத்து நூற்பது ஊக்கமூட்டவல்லது; ஆத்மீக பலத்தை வளர்ப்பதுமாகும்.

மாதிரிக் கால அட்டவணை :

கால அட்டவணையில் பாட வேளையின் நேரத்தைக் குறிப்பிடவேண்டும். மாதிரிக் கால அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அது ஒரு மாதிரியே யன்றி மாற்றக்கூடாதது அன்று. அதை வழிகாட்டியாகக் கொண்டு, அவ்வவ்விடங்களுக் கேற்றவாறு கால அட்டவணையை மாற்றி அமைத்துக்கொள்ளலாம்.

மாதிரிக் கால அட்டவணை—பாட வேளை, நேரம் காட்டும் சுருக்கம்

	பாட வேளை	நேரம் நிமி.	ம. நிமி.
ஆதாரத் தொழிலும் செயலும்	17	40	11 - 20
இயைபுப் பாடங்கள் (தாய்மொழி, கணிதம், பொது விஞ்ஞானம், சமூகப் பாடம், சரித்திரம், கதை, பாட்டுக்கள், பாலர் சபை முதலியன	11	60	11 - 0
தோட்டவேலை, விளையாட்டு	5	60	5 - 0
பதிவுகள், மாலை கீதம்	5	10	0 - 50
காலை வழிபாடு, துப்புரவு வேலை, துப்புரவுச் சோதனையும் வினாக்களும். செய்தித்தாள் படித்தல், கொடி வணக்கம், பாச்சாற்று	6	30	3 - 0
காலை, மாலை, இடைவேளை 11 × 10 நிமி.			1 - 50
மொத்தம் ...	44		33 - 00

மாதிரிக் கால அட்டவணை

I to V வகுப்பு

<table>
<tr><th rowspan="3">கிழமை</th><th colspan="4">முற்பகல்</th><th colspan="4">பிற்பகல்</th></tr>
<tr><th>1</th><th>2</th><th>3</th><th>4</th><th>5</th><th>6</th><th>7</th><th>8</th></tr>
<tr><th>9-00—9-30</th><th>9-30—10-10</th><th>10-10—10-20</th><th>10-20—11-20</th><th>11-20—12-00</th><th>2-00—2-40</th><th>2-40—3-40</th><th>3-40—3-50</th><th>3-50—4-50</th><th>4-50—5-00</th></tr>
<tr><td>திங்கள்
செவ்வாய்
புதன்
வியாழன்
வெள்ளி</td><td rowspan="2">கடவுள் வழிபாடு, துப்புரவு வேலை, துப்புரவு வினாக்கள், கொடி வணக்கம், செய்தித் தாள் படித்தல், பஜனை.</td><td rowspan="2">நூற்பு வேலை</td><td rowspan="2">வெளியே போய்வருதல்</td><td rowspan="2">இயைபுப் பாடங்கள்</td><td rowspan="2">நூற்பு வேலை அல்லது பிற செயல்</td><td>மௌன நூற்பு</td><td>இயைபுப் பாடங்கள்</td><td>வெளியே போய்வருதல்</td><td>தோட்ட வேலை அல்லது விளையாட்டு</td><td>பதிவுகள், மாலை கீதம்</td></tr>
<tr><td>சனி</td><td colspan="5">விடுமுறை</td></tr>
</table>

குறிப்பு: 1. இயைபுப் பாடங்களைப் பிரித்துக்காட்டுவது பொருத்தமில்லையெனச் சொல்வதால் பிரித்துக்காட்டப் படவில்லை.

2. ஒவ்வொரு வகுப்புக்கும் தனித்தனிக் கால அட்டவணை இருக்கவேண்டும்.

3. I, II, III வகுப்புக்களுக்குக் கதை, பாட்டுக்கான பாட வேளைகளை அதிகரித்துக்கொள்ளவேண்டும்.

4. போதனை நேரம் நாளொன்றுக்கு 5 மணிக்கு அதிகமாய் இருப்பதைக் கவனிக்கவும்.

5. கொடி வணக்கம் திங்கட்கிழமையிலும், பஜனை வெள்ளிக் கிழமையிலும் முதல் பாடவேளையில் வைத்துக்கொள்ளலாம்.

6. பாலர் சபைக்குத் திங்கள், வெள்ளி ஆகிய இரண்டு நாட்களிலும் ஆருவது பாட வேளையில் ஒவ்வொன்ருக வைத்துக் கொள்ளலாம். திங்கட்கிழமையில் களியாட்டத்திற்குத் திட்டமிட்டு வாரம் முழுவதும் பழகி, வெள்ளிக்கிழமை பாலர் சபையில் அதை நடத்தலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புக்களுக்குப் போதித்தல் :

மேலே குறிக்கப்பட்ட கால அட்டவணை ஒரு வகுப்பு முழுமைக்கும் ஓர் ஆசிரியர் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆனல் நடைமுறையில் பல பெரிய ஊர்களில் மட்டுமே ஐந்து வகுப்புக்களுக்கு ஐந்து தனித்தனி ஆசிரியர்கள் இருப்பார்கள். பெரும்பாலான ஆதாரப் பள்ளிகளில் இத்தகைய அநுகூலமான நிலைமை இராது. ஒரே ஆசிரியர் ஒன்றுக்கு மேற்பட்ட வகுப்புக்களுக்குக் கற்பிக்க நேரிடும். இதைப் **பன்மை வகுப்புப் போதனை** என்று சொல்வர். இம் மாதிரியான பள்ளிகளில் ஒழுங்கான போதனையும், மாணவர் தேர்ச்சியும் இருக்கமுடியாது. **உற்பத்தித் தரமும்** குறைந்துவிடும். ஆதாரப் பள்ளிகளில் சுய தேவைப் பூர்த்தித் தத்துவத்தோடு ஒட்டிய பயிற்சி முக்கியமானது. ஆகையால், ஆதாரப் பள்ளிகளில் பன்மை வகுப்பு ஆசிரியரின் வேலை மிகக் கடினமாகும்.

இத்தகைய நிலையில் ஆசிரியர் கால அட்டவணையை ஒரு தனி முறையில் சிறப்பான கவனத்துடன் அமைத்துக்கொள்ளவேண்டும். அவர் இரு வழிகளில் பாட போதனை நடத்தலாம்.

(1) எல்லா வகுப்புக்களையும் சேர்த்து ஒருமித்துப் பாடம் கற்றுக்கொடுக்கலாம். இந்த முறையில் எல்லாப் பாடங்களையும் கற்பிக்க இயலாது. சில செயல்களே இம்முறைக்குப் பொருந்தும். அவையாவன :

1. ஆதாரத் தொழில்
2. செய்தி வாசித்தல்
3. பாட்டுக்கள் பாடுவது
4. கதைகள் சொல்வது
5. துப்புரவு வேலை
6. பாலர் சபை, பொது மன்றம்
7. கலை நிகழ்ச்சிகள்
8. பஜனை
9. பள்ளிக் கொண்டாட்டங்கள்
10. விளையாட்டு
11. தோட்டவேலை
12. சித்திரம் வரைதல்

முதலியனவாம்.

(2) இரண்டாவது முறைப்படி, ஒரு வகுப்பிற்கு நேரிடையாகப் பாடம் நடத்துவதும், மற்ற வகுப்புக் களுக்கு மாணவர்கள் தாமாகவே செய்யக்கூடிய வேறு வேலைகள் கொடுப்பதுமாக ஆசிரியர் பாடம் நடத்தலாம்.

நேரிடையாகப் பாடம் நடத்தாத வகுப்புக்களை ஆசிரியர் அவ்வப்போது கண்காணிக்கவேண்டும். அவற்றை மேற்பார்வையின்றி மனத்திலிருந்தும் கண் களிலிருந்தும் அகற்றக்கூடாது. இடையிடையே சென்று மாணவர்கள் வேலைகளில் ஈடுபட்டிருக்கின்ற னரா என்று கவனித்துக்கொள்ளவேண்டும். இல்லா

விடில் அவ்வகுப்பு மாணவர்கள் வீணுகப் பேசிக் கொண்டும், கொடுத்த வேலையைச் செய்யாமல் காலத்தை வீணுக்கிக்கொண்டு மிருக்கக்கூடும்.

பல வகுப்புக்களைச் சேர்த்துக் கற்பிக்க முடியாத பாடங்கள்:

(i) இயைபுப் பாடங்களான தாய்மொழி, கணிதம், பொது விஞ்ஞானம், சமூகப் பாடங்கள்.

(ii) படித்தல் முதலியன.

பன்மை வகுப்புப் போதனையின் வெற்றி ரகசியம்:

ஒரு வகுப்பிற்கு ஆசிரியர் போதிக்கும்போது பிற வகுப்புக்களில் அமைதியாகவும், பிறர் சார்பற்றதுமான வேலை நடக்கவேண்டுமென்பதே பன்மை வகுப்புப் போதனையின் வெற்றி ரகசியம். இத்தகைய வேலை களில் பின்வருவனவற்றைக் கூறலாம்:

1. பின்பு செய்யவேண்டிய செயலுக்கு விஷயம் தேடுதல்; நோக்கத்துடன் அமைதியாக வாசிப்புப் புத்தகங்களைப் படித்தல்.

2. தேசப் படங்கள் வரைதல்.

3. கதை, கட்டுரை, அறிக்கை, நாட்குறிப்பு, சித்திரம் முதலியவற்றில் ஈடுபடுதல்.

3. பாலர் சபை நிகழ்ச்சிகளுக்குத் தயாரித்தல் போன்றவை.

ஓர் எச்சரிக்கை:

ஒவ்வொருவனும் ஏதாவது குறிப்பிட்ட வேலையில் ஈடுபடவேண்டும். பாடவேளை இறுதியில் குறிப்பிட்ட

அளவு முடித்திருக்கவேண்டும். அவர்களுடைய வேலைகளை ஆசிரியர் அவ்வப்போது மேற்பார்வையிடுவதுமின்றி, செய்தவேலையைச் சோதித்துச் சாதனைகளை மதிப்பிடல் மிக அவசியமாகும். ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒரு கரும்பலகை தேவை. மாணவர் என்ன செய்ய வேண்டும் என்று ஆசிரியர் கரும்பலகையில் முன் கூட்டியே எழுதிவைக்கவேண்டும். பாடங்களை ஆசிரியர் அதிகக் கவனத்துடன் தயார்செய்துகொள்வதும் இன்றியமையாதது.

கல்விப் பயணம் :

மாணவர்களுக்குப் பள்ளி ஒரு சோதனைலயமாயும், ஒரு வேலைப் பட்டறையாயும் அமையவேண்டுமென முன்னரே கூறியுள்ளோம். அதைப்போல மாணவன் வாழும் இயற்கைச் சூழ்நிலையும் மனிதர்களும் இணைந்துள்ள சமூகம் கல்வி கற்க மற்றோர் அரிய சோதனைலயம் ஆகும். இந்தச்சூழ்நிலையிலிருந்து மாணவன் எவ்வளவுக்கெவ்வளவு அர்த்தமுள்ள நேர்அநுபவங்கள் பெறுகிருனே அவ்வளவுக்கவ்வளவு அவன் தெளிவாகக் கற்க முடியும். அதனுடன் பள்ளியில் புத்தகங்களில் படிக்கும் விஷயங்களுக்கு வாழ்க்கைத் தொடர்பும் அறிந்துகொள்ளமுடியும்.

அருகிலுள்ள இயற்கைச் சூழ்நிலையைப்பற்றியும், அங்குக் கிடைக்கும் கச்சாப் பொருள்களைப்பற்றியும், அவற்றை மக்கள் உபயோகிக்கும் முறையைப் பற்றியும், மக்கள் வாழ்க்கையில் ஒருவர் மற்றொருவருக்குள்ள தொடர்புபற்றியும், அர்த்தமுள்ள நேரடி அநுபவங்கள் மாணவர்களுக்குத் தேவை. இவையெல்லாம் பள்ளி வேலைகளுக்கு உதவும்.

உணவு, உடை, உறைவிடம், போக்குவரவு, பந்தோபஸ்து, இன்ப வாழ்வு ஆகிய நம் ஒவ்வொருவரின் முக்கியமான தேவைகள் சம்பந்தமான முழு விவரங்களைப்பற்றிப் பள்ளிச் சிறுவர்கள் அறிய ஆவற்படுவது இயல்பே. இந்தப் பெரிய வாழ்க்கைச் சக்கரத்தில் தான் எங்கு, எவ்வாறு பொருத்தப்பட்டிருக்கிறான் என்றும் சிறுவன் அறிய விரும்புவான். தம் பள்ளியைச் சூழ்ந்துள்ள இயற்கை, சமூகச் சூழ்நிலைகளை ஆராய்வதன் மூலம் மேற்கூறியவற்றைப்பற்றிய அறிவுக்கு வித்திடலாம்.

குழந்தைகள் ஐம்புலன்கள் மூலமாகக் கண்டும், கேட்டும், தொட்டும், முகர்ந்தும், ருசித்தும் நேரிடை அநுபவங்கள் பெறுகிறார்கள். சற்றுப் பெரிய குழந்தைகள் செய்யும் முறைகள், பொருள்கள், சாதனங்கள் ஆகியவற்றைப் பார்த்து, வினாக்கள் கேட்டு, தாமும் செய்து பார்த்து அநுபவம் பெறுகிறார்கள்.

இவ்வாறு சுற்றுப்புறத்திலுள்ள சமூகத்தில் மறைமுகமாகவுள்ள எண்ணிறந்த கல்வி வசதிகளைப் பள்ளி வேலைகளுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் ஏற்பாடே **கல்விப் பயணம்** ஆகும். இதைப் பள்ளிப் பயணமென்றும் சொல்லுவார்கள்.

கல்விப் பயணம் வேறு; இன்பச் செலவு என்று சொல்லப்படும் உல்லாசப் பிரயாணம் வேறு. அது அண்டைப்புறத்தில் இன்பமாய்ப் போய்வருவதைக் குறிக்கும். இது, அதே இடத்திலிருந்து கல்விப் பயன் பெற்றுவருவதைக் குறிக்கும். இரண்டிற்கும் நோக்கம் வேறுபட்டது.

கல்விப் பயண வகைகள் :

சமூகப் பாடங்கள், தோட்ட வேலைகள், நூற்புத் தொழில், கலைப் பயிற்சி முதலிய வேலைகள் சம்பந்தமாக நம் அண்டையிலுள்ள இடங்களுக்குக் கல்விப் பயணம் போகலாம். பார்வையிடும் இடம் அல்லது போக வேண்டிய தூரம், போய்ப் பார்த்துவரப் பிடிக்கும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் கல்விப் பயணங் களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம். அவையாவன :

1. பள்ளி நாட்களில் வகுப்பு நேரத்தில் அருகிலுள்ள இடங்களுக்கு நடந்து போய்வரும் பயணங்கள்.

2. சற்றுத் தொலைவான இடங்களுக்குப் போய் வரும் கல்விப் பயணங்கள்.

அருகிலுள்ள இடங்களுக்குக் கல்விப் பயணம் :
(Walking trips, School outings, School trips)

பட்டணத்திலுள்ள பள்ளியாயிருந்தாலும், கிராமத்திலுள்ள பள்ளியாயிருந்தாலும் இவ்வகைப் பயணங்கள் அதனதன் சூழ்நிலைக்கேற்பப் பள்ளி வேலைகளுக்கு உதவப் பயன்படும். கிராமப் பள்ளியாயிருந்தால், சிறுவர்கள் வகுப்பு நேரத்தில் நடந்துபோய், நடை தூரத்திலுள்ள கழனி, ஆறு, பண்ணை, மண் வகை, பாறை வகை, பூக்கள், விலங்குகள், பூச்சிகள் ஆகியவற்றைப் பார்த்துவரலாம். சுற்றுப்புறத்தில் கிராமத் தொழிலாளர்கள் வேலைசெய்யும் இடத்திற்கு நடந்து சென்று, அங்கு நடக்கும் வேலைகளைப் பார்த்து வரலாம். (உ-ம்) கொல்லன் உலைக்களம், பானை செய்யுமிடம், செக்கு, செங்கற் சூளை, கரும்பாலை

முதலியவை. பட்டணமாயிருந்தால் பூங்கா, அஞ்சல் அலுவலகம், அச்சகம், தொழில்கள் நடக்கும் ஆலைகள் போன்ற அதன் சூழ்நிலைக்கேற்ற இடங்களுக்குப் போய்ப் பார்த்துவரலாம். இவற்றிற்குப் பள்ளி நேரத்திலேயே போகலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட நோக்கம் இருத்தல்வேண்டும்; பள்ளி வேலையைத் தொடர்ந்ததாகவோ, முன் தயாரிப்பாகவோ இருக்கவேண்டும்.

சற்றுத் தொலைவான இடங்களுக்குப் போய்வரும் கல்விப் பயணம் :

இந்த வகைப் பயணத்திற்கும் ஒரு தெளிவான, குறிப்பிட்ட, திட்டவட்டமான நோக்கம் தேவை. பள்ளி வேலைத் தேவைகளை யொட்டியும், பயணம் போகும் சிறுவர்களின் தேவைகளை யொட்டியும் அந்த நோக்கம் அமையவேண்டும். பயணம் போகவேண்டிய இடத்தைத் தேர்ந்தெடுத்தால் மட்டும் போதாது.

அங்குப் போவது:

(1) பொதுவானதோர் ஆராய்ச்சிக்கா?

(மியூசியம் என்ற கண்காட்சிச்சாலை, புகைவண்டி நிலையம், கல்லுடைக்கும் மலைச்சாரல், மாதிரி வீடு)

(2) குறிப்பிட்ட கேள்விகளுக்கு விடைகள் காணவா?

(பால் பண்ணை, கலைப் பொருட்காட்சி, ரேடியோ நிலையம், துறைமுகம்)

(3) வேலை முறைகளைக் கவனிக்கவா?

(பஞ்சாலை, சர்க்கரை ஆலை, செஞ்சிலுவைச் சங்கம், சட்ட சபை, சந்தை, குடிநீர் இறைக்கும் இயந்திர நிலையம்)

எனத் தீர்மானித்துக்கொள்ளவேண்டும். பயணங்கள் போய்வருவது ஒரு நவீன மோஸ்தர் (Fashion) என்ற எண்ணத்துடன் போகக்கூடாது.

மேற்குறித்த நோக்கங்களுடன் அருகிலுள்ள இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கு மாணவர்களை அழைத்துவர, சம்பந்தப்பட்டவரின் முன்அநுமதி பெறவேண்டும். பெற்றோரின் அநுமதியையும் பெறுவது இன்றியமையாததாகும்.

நோக்கமும் திட்டமும் :

கல்வி நோக்குடன் பள்ளிப் பயணங்கள் நடத்தப் படுவதால் இவற்றை நடத்தும் முறைகளைச் செவ்வை யாய் அறியவேண்டும். ஒவ்வொரு பயணத்திற்கும் தெளிவான நோக்கம் தேவை. அது எல்லா மாணவர் களுக்கும் தெரிந்திருக்கவேண்டும். பள்ளிப் பயணம் நடத்துவதும் ஒரு செயல்தானே! ஆகவே இதற்கும் ஒரு திட்டம் வேண்டும். இத் திட்டத்தில் நான்கு அம்சங்கள் உண்டு. அவையாவன:

(i) ஒவ்வொரு பயணத்திற்கும் விவரமான முன்தயாரிப்பு.

(ii) பயணத்தைத் திறமையாக நடத்துதல்.

(iii) போய்வந்த பிறகு பயண நோக்கம் நிறை வேறியதா என மதிப்பிடல்.

(iv) பின் வேலைகள்.

இந்த அம்சங்களைக் கவனிக்காவிட்டால் கல்விப் பயணம் வெறும் இன்பப் பயணமாகப் போய்விடும். இனி ஒவ்வொன்ருகக் கவனிக்கலாம்.

(i) **விவரமான முன்-தயாரிப்பு:**

முதலில் எந்த இடம் போவது, எங்கிருந்து, எப்போது புறப்படுவது, எப்படிப் போவது என்ற விஷயங்களை மாணவர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவுசெய்துகொள்ளவேண்டும். பிறகு குறிப்பிட்ட இடத்திற்கு ஆசிரியரும் சில மாணவ அமைச்சர்களும் ஒன்றிரண்டு நாள் முன்கூட்டியே சென்று பார்த்து வரவேண்டும்.

மாணவர்கள் எந்த விஷயங்களைப் பார்க்க வேண்டும்; என்னென்ன குறிப்பு எடுக்கவேண்டும்; பார்த்துவர எவ்வளவு நேரம் பிடிக்கும்; மாணவர்களின் பிற தேவைகளுக்கு (கை, கால், முகம் கழுவ, குடிநீர் குடிக்க, உணவு உண்ண, சிறுநீர் கழிக்க, ஓய்வு எடுத்துக்கொள்ள) அங்கு வசதி இருக்கிறதா போன்ற விஷயங்களை முன்கூட்டியே அறிந்துவருதல் நலம்.

மீண்டும் மாணவர்களுடன் கலந்து பேசி, பயண விஷயங்களைப்பற்றிய முன்னறிவு ஏற்படுத்தவேண்டும். அவர்கள் கவனித்துவரவேண்டிய முக்கியமான விஷயங்களை யொட்டி ஒரு சுருக்கமான வினுத்தாள் தயாரித்துக் கொடுக்கவேண்டும். அதனுடன் புறப்படும் நேரம் பற்றிய குறிப்பு முதலியவை குறித்துக்கொடுக்கலாம். பிறகு மாணவர்களைக் குழுக் குழுவாய்ப் பிரிக்க வேண்டும். அந்தந்தக் குழுவின் கடமைகளை விளக்க

வேண்டும். இருபது மாணவர்களுக்கு ஒரு தலைவன் என ஏற்பாடு செய்யலாம். மாணவர்களைக் கூட்டிச்செல்லப் பெற்றோர்களின் அநுமதி பெறவேண்டும்.

(ii) பயணத்தை நடத்துதல்:

1. குறித்த நாளில், குறித்த காலத்தில், குறித்த இடத்திலிருந்து ஆசிரியருடன் மாணவர்கள் புறப்பட வேண்டும். மாணவர்களின் பெயர் ஜாபிதா ஒன்று உடன் எடுத்துச்செல்லவேண்டும்.

2. எல்லோரும் ஒரேவிதமான தூய ஆடை (கதர் ஆடை பொருத்தமானது) அணிந்து செல்வது சிறந்தது. அதனால் சகோதர மனப்பான்மை வளரும்; பார்ப்பதற்குக் கலையாக இருக்கும்; பொது மக்களிடம் மதிப்பு ஏற்படும்.

3. ஒவ்வொருவரிடமும் முன்னரே கொடுக்கப் பட்ட வினாத்தாள் அடங்கிய கைப் புத்தகம் ஒன்று இருக்கவேண்டும்.

4. வகுப்பில் கற்ற வழிநடைப் பாடல்கள் பாடிய வாறே போகலாம். இது சிரமத்தைக் குறைக்கும்; ஊர் மக்களுக்கு விருப்பமாயிருக்கும்; சிறப்பாக, ஒழுங்கினத்தை அறவே ஒழிக்கும்; பிரசாரத்திற்கும் பயன்படும்.

5. ஊர்த் தெருக்களில் மூன்று அல்லது நான்கு மாணவர்கள்கொண்ட வரிசையில் எறும்புச்சாரி முறையில் இடப் புறமாகப் போகவேண்டும். பட்டணங்களில் நாற்சந்தியை ஜாக்கிரதையாகக் கடக்கவேண்டும்.

6. பார்க்கவேண்டிய இடம் சேர்ந்ததும், கை, கால், முகம் கழுவி, உரியவருக்கு மரியாதை செலுத்த வேண்டும்; அறிமுகம் செய்துகொள்ளவேண்டும்.

7. பார்க்கவேண்டியவற்றை முறையாகக் கவனிக்கவேண்டும்.

8. எந்தப் பொருளேயும் உத்தரவின்றி எடுப்பது தவறு.

9. கையாண்டு சோதிக்க அநுமதிக்கப்பட்டுள்ள எந்தப் பொருளேயும் பழுதாக்கக்கூடாது.

10. கூடிய மட்டும் வினக்களுக்கு அவ்வப்போதே விடை கேட்டு அறியவேண்டும்.

11. விஜய சம்பந்தமான வேறு சில வினக்கள், புள்ளிவிவரங்கள், அநுபவக் குறிப்புக்கள், அக்கம் பக்கத்தில் பார்க்கக்கூடிய பிற இடங்கள் முதலியவற்றைப்பற்றியும் கேட்டுத் தெரிந்துகொள்வது பாராட்டத்தக்கது; பயணங்களின் முக்கியமான அம்சமும்கூட. அவ்வாறு செய்வதால் பயணத்தின் பொருளும் அவசியமும் அறிய முடிகிறது; பிறருடன் பழகப் பயிற்சி கிடைக்கிறது; பிற்காலத்தில் வாழ்க்கைக்குத் தேவையான சில பண்புகள் வளருகின்றன.

12. பணவசதி இருந்தால் புகைப்படம் எடுக்கலாம். அங்கங்கே புள்ளிவிவரங்கள், படங்கள் கேட்டுச் சேகரிக்கலாம்.

13. போகும்போதும் திரும்பிவரும்போதும் பொருட்காட்சிச் சாலேக்குப் பொருள்களேச் சேகரித்து வரலாம்.

14. திரும்பும் முன் எல்லாரும் கூடி உரியவரிடம் விடைபெற்றுவரவேண்டும்.

15. திரும்பும்போது உடன் எடுத்துச் சென்ற பொருள்களைச் சரிபார்த்துக்கொள்ளவேண்டும்.

16. திரும்பிவந்த மறுநாளே நன்றிக் கடிதம் அனுப்பவேண்டும்.

(iii) பயன்களை மதிப்பிடுதல் :

இது மிக முக்கியமான வேலை. திரும்பிவந்த ஒன்றிரண்டு நாட்களுக்குள்ளேயே இந்த வேலையை முடித்துவிடவேண்டும்; காலந் தாழ்த்தவே கூடாது. பின்வரும் வினாக்களுக்குக் கிடைக்கும் விடைகளைப் பற்றிச் சர்ச்சை செய்து பயணத்தின் பயனை மதிப்பிடலாம்:

1. பயணம் திருப்திகரமா?

2. எதை மிகவும் ரசித்தீர்கள்?

3. நாம் போட்டிருந்த திட்டம் சரியாய் இருந்ததா?

4. திட்டமிட்டபடி எல்லாம் செய்துமுடித்தோமா?

5. நம் வினாக்கள் அனைத்துக்கும் விடை கிடைத்ததா?

6. பயணத்தைப்பற்றி அறிக்கை எழுதவும், பார்த்தனவற்றைப்போல் சித்திரம் வரையவும், மாதிரிகள் தயாரிக்கவும் தேவையான எல்லா விஷயங்களும் புள்ளி விவரங்களும் திரட்டப்பட்டனவா?

7. பயணத்தில் நாமெல்லோரும் ஒழுங்காக நடந்து கொண்டோமா?

8. திட்டத்தில் என்ன குறைகள் இருந்தன?

9. அடுத்த முறை திட்டம் தீட்டும்போது நாம் வேறு என்ன விஷயத்தைக் கவனிக்கவேண்டும்?

(iv) பின் வேலைகள் :

இவையும் முக்கியமானவை. பள்ளி வேலையின் தொடர்பாய் நடத்தப்பட்ட கல்விப் பயணம் அவ் வேலையை மேலும் வளப்படுத்தி, அதற்கு ஜீவன் அளித்துப் பூரணமாக்கவேண்டும். பயணத்தைப்பற்றி அறிக்கை ஒன்று எழுதவேண்டும். மிகவும் பிடித்தமான வற்றைப்பற்றிப் பாட்டுக்கள் கட்டலாம்; பார்த்த வற்றைப்போல் சித்திரம் வரையலாம்; மாதிரிகள் செய்யலாம்; திரட்டிவந்த பொருள்களைப் பொருட்காட்சி யில் சேர்க்கவேண்டும்; போய்வந்த திசை, தூரம், இடம் இவற்றைக் காட்டும் படம் ஒன்று வரையலாம். சுருக்கமாகக் கூறினால், பாடபோதனையில் கல்விப் பயணத்தை இயைபுபடுத்தவேண்டும்.

பள்ளிப் பயணத்தினால் ஏற்படும் நன்மைகள்:

1. பாட விஷயங்கள், சமூகப் பயிற்சி, சொல்விரிவு போன்ற பள்ளி வேலைகளுக்கு உதவுகிறது.
2. ஆசிரிய - மாணவ உறவைத் திடப்படுத்துகிறது.
3. தன்னம்பிக்கையும் சகோதரத்துவமும் வளரு கின்றன.
4. இயற்கையை நேரடியாகக் கண்டு களிக்க உதவு கிறது.
5. புத்தகங்களிலிருந்தும் செயலிலிருந்தும் மட்டு மல்லாமல் பரந்த உலகிலிருந்தும் கற்கப் பழக்கம் கிடைக்கிறது.

6. மனித சமூகத்தைப்பற்றிப் பரந்த அறிவு பெற உதவுகிறது.

7. பெரியோரின் நினைவுச் சின்னங்களைப் பார்வையிட்டு ஊக்கம் பெற முடிகிறது.

8. பயிர்த்தொழில், கைத்தொழில், சாலை அமைத்தல், பிற தொழில்கள் சம்பந்தமான வேலைகளைக் கவனிக்க உதவுகிறது.

9. உள்ளூரில் கிடைக்காத தாவரங்கள், மண் வகைகள் முதலியன சேகரிக்க உதவுகிறது.

10. வெளிப்புறத்திலுள்ள தூய காற்றின் மூலம் உடல் வலியும், உடல்நலமும், உள மகிழ்வும் பெற உதவுகிறது.

11. பிற்கால வாழ்வில் ஒரு விடுமுறை நாளை மகிழ்வுடனும் பயனுடனும் விவேகமாயும் செலவிடப் பயிற்சி ஏற்படுகிறது.

வீட்டு வேலை :

புத்தகத்தைப் பார்த்து ஒரு பக்கம் வீட்டில் எழுதிவருதல், சில வினாக்களுக்கு விடை எழுதிவருதல், நான்கைந்து புதிய கணக்குகள் போட்டுவருதல், தேசப் படம் ஒன்று வரைந்து, அதில் சிலவற்றைக் குறித்து வருதல் போன்ற சில **எழுத்து வேலை**களாக வீட்டுவேலை கொடுப்பது நீண்ட காலமாக நடந்துவரும் பள்ளிப் பழக்கம் ஆகும். **படிக்கும் வேலை**யாகவும் வீட்டு வேலை கொடுப்பதுண்டு. உதாரணமாக, ஒரு பாடத்தை வகுப்பில் நடத்துமுன் முன்கூட்டியே படித்துவருதல், அதையே மீள்பார்வையாகப் படித்துவருதல், செய்யுளை மனப்பாடம் செய்தல், கணித வாய்பாடுகளை மனப்

பாடம் செய்தல் ஆகிய சில படிப்பு வேலைகளையும் வீட்டு வேலையாகக் கருதவேண்டும்.

நோக்கங்கள் :

இவற்றிலிருந்து வீட்டு வேலையின் நோக்கங்களைக் கீழ்க்கண்டவாறு கூறலாம்:

(i) பள்ளி வேலைகளை வீட்டிலும் தொடர்ந்து செய்து, கற்றவற்றில் உறுதியும் நம்பிக்கையும் பெறச் செய்ய.

(ii) **தானே, தனியாகப் பிறர் சார்பற்றுப்** படிக்க, எழுத, கணக்குப் போட, ஒரு செயல் செய்ய மாணவர்களைப் பயிற்ற.

(iii) சிலவற்றில் பழக்கமும் மனப்பான்மையும் ஏற்படுத்த.

(iv) வீட்டில் ஓய்வுநேரத்தை வீணாகக் கழிக்காமல் பயன்படும் முறையில் செலவிட.

இவ்வாறு மாணவர்களின் முன்னேற்றத்தை மனத்தில் கொண்டுதான் வீட்டு வேலை கொடுக்கப் படுகிறது. வீட்டு வேலை கொடுக்கும் நோக்கங்கள் சிறந்தவையாயிருந்தாலும் நடைமுறையில் அதனால் தீமைகள் ஏற்படாமல் இல்லை.

தீமைகள் :

வீட்டு வேலையினால் தீமைகள் இல்லாமலில்லை. அவற்றைப் பின்வருமாறு கூறலாம் :

மாணவர்களின் இன்பகரமான ஓய்வு நேரத்திற் குறுக்கிட்டு அவர்களுடைய மகிழ்ச்சியைக்குறைப்பதால் மாணவர்களுக்கு வீட்டு வேலையில் விருப்பம் இருப்ப

தில்லை. கொடுத்துள்ள வீட்டு வேலையை முடிக்க மாணவர்களுக்கு அவகாசம் கிடைப்பதில்லை. அதைச் செவ்வையாகச் செய்யச் சிற்றூர்களிலுள்ள சில இல்லங்களில் போதிய வசதிகள் இருப்பதில்லை. சில தருணம் வீட்டு வேலை கடினமாயும் அதிகமாயும் இருப்பதால் மாணவர்கள் அதைத் தாமாகச் செய்ய முடிவதில்லை. அவர்கள் பெற்றோர்களின் உதவியை நாடவேண்டியிருக்கிறது. அவ்வாறு பெற்றோர்கள் மாணவர்களுக்கு உதவும்போது அவர்கள் கையாளும் போதனைமுறை பள்ளியில் கற்பிக்கப்படும் முறைகளுக்கு ஒத்தனவாய் இருப்பதில்லை. அதனால் சில எதிர்பாராத இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன. மாணவர்களின் மனத்தில் குழப்பம் உண்டாகிறது. அந்த நிலையை ஆசிரியர்கள் அறிந்ததும் மாணவர்கள் தவறுதலாகவும், சீரற்ற முறையிலும் கற்றுள்ளார்கள் என வருந்துகிறார். இவ்வாறு வீட்டு வேலையினால் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தொல்லைகள் ஏற்படுகின்றன.

வீட்டு வேலை கொடுக்கலாமா? கூடாதா?

வீட்டு வேலையினால் விளையும் நன்மைகளைவிட அதனால் ஏற்படும் தீமைகள் மிகுதியாயிருப்பதால், எந்த வகுப்பு மாணவர்கட்கும் வீட்டு வேலையே கொடுக்கக்கூடாது எனச் சிலர் கருதுகின்றனர். கீழ் வகுப்புக்களில் வீட்டு வேலை கொடுப்பது கூடவே கூடாது; மேல் வகுப்புக்களில் மட்டுமே கொடுக்கலாம் எனச் சிலர் கூறுகின்றனர்.

ஆனால் மேற்கூறிய நோக்கங்களைக் கூர்ந்து நோக்கினால் வீட்டு வேலை அவசியம் என்பது நன்கு புலனாகும்.

ஆசிரியரின் உதவியோ, மேற்பார்வையோ இன்றி ஒரு வேலையைத் தனியாகச் செய்து முடிப்பது ஒரு நற்குடிப் பயிற்சியாகும். ஆகவே, தீமைகளை விலக்கும் பொருத்தமான முறையில் வீட்டு வேலை கொடுத்தால் அறிவு வளரும்; பொறுப்புணர்ச்சி வளரும்; மாணவனின் ஆளுமையும் வளரும்.

ஆதாரக் கல்வித் திட்டத்தில் வீட்டு வேலை:

ஆதாரப் பள்ளிகளில் விஷயங்களோடு திறமைகள், பழக்கவழக்கங்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றை வளர்க்க முயலுகிறோம். பிற்கூறிய மூன்றும் பள்ளியில் மட்டுமன்றி வீட்டிலும் வளர்ந்து உரமடைய வேண்டும். எனவே, ஆதாரப் பள்ளிகளில் வீட்டு வேலைக்கு முக்கிய இடமுண்டு; வீட்டு வேலைபற்றிய நவீனக் கருத்துக்களை மனத்துட்கொண்டு பொருத்தமான வீட்டு வேலைகளை ஆதாரப் பள்ளிகளில் கொடுக்கலாம்.

ஆதாரப் பள்ளிகளில் செயல்மூலம் கல்வி கற்பிக்கப் படுகிறது. ஆகையால், ஆதாரக் கல்வித்திட்டத்தின் குறிக்கோள்களை யொட்டிச் சில வீட்டு வேலை கொடுக்கலாம். வீட்டு வேலை செய்துவர இல்லத்தில் நேரமும் வசதியும் இருக்கவேண்டும். அதைச் செய்துவருவதில் யாதொரு தொல்லையும், யாருக்கும் ஏற்படக்கூடாது. வீட்டுவேலை செய்வதால் மாணவர்கள் தவறுதலான முறைகளில் கற்க இடமிராமல் இருக்கவேண்டும். வீட்டு வேலையில் மாணவர்களுக்கு விருப்பம் இருக்கவேண்டும். இந்த நிபந்தனைகளைத் திருப்திசெய்தால் கீழ்க்கண்ட வகைகளில் வீட்டு வேலை கொடுக்கலாம்:

(i) பஞ்சுக் கழிவைப் பொம்மைகளாகத் தைத்துவரலாம்.

(ii) தக்ளியில் மிக நயமான நூல் நூற்றுவரலாம்.

(iii) பள்ளிக் கையெழுத்துப் பத்திரிகைக்குக் கதை, கட்டுரை, சித்திரம் எழுதிவரலாம்.

(iv) பொருட்காட்சிக்குப் பொருள் திரட்டிவரலாம்.

(v) பள்ளி வேலைகளுக்கு (காந்தி விழா, மரம் நடுவிழா, பொங்கல் விழா, நாற்று நடுதல், விதைத்தல், அறுந்த நூல் பிணைத்தல், கயிற்ருலான பை போடுதல்) உதவப் பெற்ருேர்களிடம் விவரம் கேட்டுவருதல்.

(vi) அவரவர் இல்லத்தில் துப்புரவு, சமையல், தோட்ட வேலை, சந்தைக்குப் போய்வருதல், மாட்டுத் தொழுவ வேலை போன்ற அன்ருட எளிய வேலைகளில் பெற்ருேருக்கு உதவுதல்.

(vii) நாட் குறிப்பு எழுதலாம்.

(viii) தன் இல்லச் சூழ்நிலைக்கேற்ற கைவேலை செய்து வரலாம். (இலை தைத்தல்)

(ix) தொகுப்புக்கள் (Album) தயாரித்தல்.

(x) பள்ளித் தோட்ட வேலைக்கு நல்ல விதைகள் சேகரித்து வரலாம்.

வசதிகளில்லாவிடில் வீட்டு வேலை கொடுக்கவே கூடாது.

இவ்வாறு ஆதாரப் பள்ளிகளில் வீட்டு வேலை ஒவ்வொருவருக்கும் வெவ்வேருயிருக்கும்; இன்பகரமா யிருக்கும்; இல்ல நிலைக்கு ஏற்றதாயிருக்கும். வீட்டு வேலையின் நேரத்தைப்பற்றிய பிரச்சினை எழவே எழாது; அவரவர் இல்ல வசதியை யொட்டி அவரவரே தேர்ந்தெடுத்துக்கொண்டதா யிருக்கும்.

மாணவர்கள் இத்தகைய வீட்டு வேலையை விளையாட்டாகக் கருதுவார்கள். ஆனால் அதிலிருந்து

முன்னரே விவரமாகக் கூறப்பட்ட நற்பண்புகளும் ஆளுமையும் சுலபமாக, இயல்பாக வளரும்.

ஒவ்வொரு மாணவனையும் அவன் செய்த வீட்டு வேலையைப்பற்றியும், அதைச் செய்து முடிக்க ஆகும் நேரத்தையும் (முடியுமானால்) நாட்குறிப்பில் குறிக்கச் செய்யவேண்டும். அதிலிருந்தும், மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்தும் இல்ல வசதிகளைப்பற்றி ஆசிரியர் அறியலாம்.

ஓர் எச்சரிக்கை :

செய்துவந்த வீட்டு வேலையைச் சோதித்துப் பாராட்டுதலோ, ஆலோசனையோ கூறவேண்டும். வீட்டு வேலையை ஆசிரியர் பார்க்காவிடில் மாணவர்கள் வீட்டு வேலை முடித்துவருவதைக் கைவிட்டுவிடுவார்கள்.

---

7. பள்ளிகளின் கூட்டுறவு

ஓர் ஆதாரப் பள்ளி அருகிலுள்ள ஆதாரப் பள்ளிகளுடன் கூட்டுறவுகொள்ளும் முயற்சிகளைப்பற்றிப் பயிற்சியாளர் ஆராயுங்கால் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

(1) ஒவ்வோர் ஆதாரப் பள்ளியும் அதன் அருகில் உள்ள பிற பள்ளிகளுடன் தொடர்பும் கூட்டுறவும் கொண்டுள்ளதா ?

(2) அப்படிப்பட்ட கூட்டுறவின் அவசியம் என்ன ?

(3) எந்தெந்த முறைகளில் அக் கூட்டுறவை ஏற்படுத்துகிறார்கள் ?

(4) விளையாட்டு விழா எப்படி நடத்துகிறார்கள் ?

(5) ஆசிரியர் சங்கம், ஆசிரியர்கள் மகாநாடுகள் இவற்றை ஆசிரியர்கள் எவ்வாறு பயன்படுத்துகிறூர்கள் ?

(6) ஆசிரியர் சங்கங்களுக்கும் ஆசிரியர் யூனியன் களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

(7) ஆசிரியர் சங்கக் கூட்டங்களிலும் மகாநாடு களிலும் நடத்தப்படும் கண்காட்சியின் நோக்கம் யாது ?

(8) சில செயல்களைச் செய்முறையாய்ச் செய்து காட்டுவதன் நோக்கம் என்ன ?

(9) ஆதாரப் பள்ளி வேலைகளைக் குறித்த பிரச்சினை களைப்பற்றிய ஆராய்ச்சிகள் எங்கு, எவ்வாறு நடத்து கின்றனர் ?

பல பள்ளிகளின் கூட்டுறவிற்கான வாய்ப்புக்கள் :

ஒவ்வோர் ஆதாரப் பள்ளியும் அருகிலுள்ள பிற ஆதாரப் பள்ளிகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும். உள்ளூரிலேயே அல்லது ஒன்றி ரண்டு மைல் தொலைவிலுள்ள பள்ளிகளுடன் அத்தகைய கூட்டுறவு வைத்துக்கொள்வது எளிது. அதற்கான வாய்ப்புக்கள் எழும்போது அவற்றைக் கைநழுவ விடக்கூடாது.

திங்கள்தோறும் நடக்கும் ஆசிரியர் சங்கக் கூட்டத் தில் ஏறத்தாழ முப்பது பள்ளிகளின் ஆசிரியர்கள் கூடுகிறூர்கள். ஆசிரியர்களின் கூட்டுறவை விஸ்தரிக்க அது பொன்னை தருணம் ஆகும்.

தவிர, நம் மாநிலத்திலுள்ள இரு கல்வி டிவிஷன் களிலும் தனித்தனியாக ஓர் ஆதாரக் கல்வி மகா நாட்டை ஆண்டுதோறும் அரசினரே நடத்துகின்றனர். சில ஆதாரப் பள்ளி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து,

அந்தந்த டிவிஷன் மகாநாட்டிற்கு அனுப்புகின்றனர். அவர்கள் எல்லாரும் கூடி அங்கு ஆதாரப் பள்ளிப் பிரச்சினைகளை விவாதிக்கலாம்; எந்த ஆக்க யோசனைகளையும் கூறலாம். இவ்வாறு ஆசிரியர்களின் கூட்டுறவு அகன்றுகொண்டே போக வசதிகள் உள்ளன.

பல பள்ளிகள் கூட்டுறவாகவே வேலைசெய்யவேண்டுவதன் அவசியம் யாது?

(1) எல்லாப் பள்ளிகளும் ஒரே இலட்சியத்திற்காகத் தொண்டாற்றும் நிறுவனங்கள் ஆகும். கூட்டுறவாக உழைக்கும் நற்குடிகள் கொண்ட ஒரு புதிய சமுதாயத்தை நாட்டில் படைக்க அவையெல்லாம் தனித்தனியாக உழைக்கின்றன. எனவே தாமும் கூட்டுறவாக இயங்கவேண்டுவது இன்றியமையாததாகிறது. அவற்றில் தொண்டாற்றுபவர்கள் எல்லாரும் சகோதர உழைப்பாளர்கள். அவர்கள் அடிக்கடி கூடிப் பொது விஷயங்களை விவாதிப்பது அவசியம்.

(2) ஒவ்வொரு பள்ளியும் தத்தம் உள்ளமைப்பில் கூட்டுறவாக வேலைசெய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்கிணங்க, பிற பள்ளிகளுடனும் கூட்டுறவாக வேலைசெய்யவேண்டுவது பொருத்தமும் அவசியமும் ஆகிறது.

(3) ஆதாரக் கல்வி புதியது; புரட்சிகரமானது; நோக்கம், போதனைமுறை முதலியவற்றில் அருகிலுள்ள திட்டத்திற்கு முற்றிலும் மாறானது; பழைய அநுபவங்கள் நிறைந்ததன்று. எனவே, அவரவர் பெற்ற புதுப் புது அநுபவங்களைப் பரிமாறிக்கொள்வதற்கும், ஓரிடத்துப் பிரச்சினைகளுக்குப் பலர் கூடி வழிவகை

கள் காணுவதற்கும் கூட்டுறவு அவசியமாகிறது. எனவே, அத்தகைய ஆராய்ச்சிக்கும் சோதனைக்கும் கூட்டுறவு சிறந்தது.

(4) உற்பத்தியைப் பெருக்க முயலுதல், சுய தேவைப் பூர்த்தி, வாசிப்புப் புத்தகங்கள் தயாரித்தல், இயைபுப் போதனை, வேலைகளை மதிப்பிடுதல் முதலிய புரட்சிகரமான அம்சங்களில் பலர் கூடி ஆராய்ச்சி செய்வதற்கு மேலே விவரித்த கூட்டுறவு மிக அவசிய மாகிறது.

(5) கூட்டுறவாக வேலைசெய்தால் மாணவர் களைச் சேர்க்கும் விஷயத்திலும் பள்ளிகளுக்குள் போட்டியும் சச்சரவும் ஏற்படமாட்டா.

(6) பலவகை நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளிகளில் தொண்டாற்றுபவர்களைச் சந்திக்க முடி கிறது.

(7) புதுத் திட்டம்பற்றிய ஏச்சு, எதிர்ப்பு முதலியவற்றைச் சமாளிக்க நானாவித அநுபவக் குறிப்புக்கள் பெற ஆசிரியர்களின் கூட்டுறவு உதவும்.

எனவே, பள்ளி நலன்களை உத்தேசித்தும், மாண வர்களின் நலன்களை உத்தேசித்தும் பல பள்ளிகளின் கூட்டுறவு அவசியமாகிறது.

கூட்டுறவு முறைகள் :

இக் கூட்டுறவை ஏற்படுத்தப் பல முறைகளைக் கையாளலாம்:

(1) மாணவர் மூலமும்,

(2) ஆசிரியர்கள் மூலமும்,

(3) மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகிய இருவகையினரின் மூலமும்

தொடர்பையும் கூட்டுறவையும் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு பிரதேசத்திலுள்ள பல பள்ளிகளில் பயிலும் குழந்தைகளைக் கூட்டி விளையாட்டு விழா நடத்துவதாலும், கதம்ப நிகழ்ச்சிகள் நடத்துவதாலும் கூட்டுறவு இயல்பாக உண்டாகி வலுப்பட்டு வளரும்.

விளையாட்டு விழா :

முன்பெல்லாம் பள்ளிகளுக்குள் மாணவர்களின் விளையாட்டுப் **போட்டிகளை** ஆண்டுக்கொருமுறை அமைத்து நடத்தி, வெற்றி பெறுபவர்க்குப் பரிசுகள் கொடுத்துவந்தனர். அத்தகைய போட்டிகளாலும் பரிசுகளாலும் வேண்டத்தகாத போட்டி மனப்பான்மையும் பொறுமையும் ஏற்படுகின்றனவென்றும், அவற்றால் நன்மைக்குப் பதிலாகத் தீமைகளே உண்டாகின்றன என்றும் அறிஞர்கள் கண்டார்கள். ஆதலால் வேண்டத்தக்க கூட்டுறவு மனப்பான்மையை வளர்க்கும் பொருட்டு விளையாட்டுப் போட்டிகளுக்குப் பதிலாக **விளையாட்டு விழா** ஒன்றை ஆண்டுக்கொருமுறை நடத்தத் திட்டம் தீட்டித் தந்திருக்கிறார்கள். அது ஆதார ஆரம்பப் பள்ளி ஆசிரியர்க்குப் புதியது. ஆகையால் அதன் நோக்கம், அதை நடத்தும் முறை ஆகியவை பற்றி அரசினர் திட்டவட்டமான விதிகள் வகுத்துள்ளனர். அவை பின்வருமாறு :

(i) **நோக்கம் :** விளையாட்டுப் போட்டிகளைவிட விளையாட்டு விழா மாணவர்களுக்கு மிகுந்த

மகிழ்ச்சியையும் கல்விப் பயன்களையும் அளிக்கிறது. ஆதலால், அது ஆதாரப் பள்ளிகளுக்கு மிகச் சிறந்தது.

(ii) **செலவு :** ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படும் பள்ளி ஒன்றுக்கு ரூ. 10-க்கு மேற்படாமல் ஆரம்பக் கல்வி நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள அரசினர் அநுமதி அளித்துள்ளனர். செலவில் 90 சதவீதம் மாணவர்களுக்குச் சிற்றுண்டி அளிப்பதற்கும், மீதி 10 சதவீதம் ஏனைச் செலவிற்கும் பயன்படுத்தவேண்டும். இந்த விகிதத்தை மாற்ற அதிகாரம் கிடையாது.

(iii) **முன் ஆலோசனை :** கல்வி அதிகாரிகளைக் கலந்து ஆலோசித்து விளையாட்டு விழாவிற்குத் திட்டமிட வேண்டும்.

(iv) **முக்கிய அம்சங்கள் :** விழாவிற்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

(அ) போட்டி இல்லாத கூட்டு விளையாட்டுக்கள், பாட்டுடன் கூடிய உடற்பயிற்சி(Music drill), கும்மி, கோலாட்டம், நாட்டு நடனங்கள், பல மாணவர்கள் ஒரே காலத்தில் சேர்ந்து செய்யக் கூடிய தாளக்கட்டு விளையாட்டுக்கள் போன்ற விளையாட்டுக்களை நடத்தவேண்டும்.

(ஆ) **விளையாட்டு விழாவிற்கான மொத்த நேரம்:** விழா இரண்டு மணி நேரத்திற்குமேல் நீடித்துப்போகக்கூடாது. [‘**விளையாட்டு நாள்**’ என்பது ஒரு நாள் முழுமைக்குமான நிகழ்ச்சிகள் கொண்டது. அது வேறு.]

(இ) இங்கு, போட்டி மனப்பான்மைக்கு இடமேயில்லை. எனவே, பரிசு அளிப்பதே கூடாது. அனைவருக்கும் சிற்றுண்டி மட்டுமே அளிக்கலாம்.

(v) **அமைப்பு விதிகள் :**

(அ) 4-ம், 5-ம் வகுப்பு மாணவர்கள் மட்டுமே விளையாட்டு விழாவில் பங்கெடுக்கலாம்.

(ஆ) விழா நடத்தப் பரந்த திறந்தவெளியும் இடவசதியுமுள்ள ஒரு மையமான ஊரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். அதைச் சுற்றி 3-மைல் தொலைவிலுள்ள பள்ளிகள் மட்டுமே விழாவில் சேரலாம்.

(இ) மழைக் காலத்திலோ, காலநிலை அசௌகரியமான பருவத்திலோ விழா நடத்தக்கூடாது.

(ஈ) ஒவ்வொரு மாணவனின் பெற்றோருடைய அநுமதி பெறவேண்டும்.

(உ) விழா நடத்தவிருக்கும் ஊரிலுள்ள பெரியார்களின் கூட்டுறவைப் பெறவேண்டும். விழாவிற்கு அவ்வூரிலுள்ள எல்லாப் பெற்றோருக்கும் அழைப்பு அனுப்பவேண்டும். விளையாட்டு விழாத் திட்டத்திற்கு, சம்பந்தப்பட்ட பள்ளி ஆய்வாளர்களின் சம்மதமும் அநுமதியும் பெறவேண்டும்.

(vi) **நிகழ்ச்சி முறை :**

(1) விழாவில் கீழ்க்கண்ட எளிய விளையாட்டுக்கள் விளையாடலாம் :

நொண்டி போன்ற தொடும் விளையாட்டுக்கள்.

பறவைகள், விலங்குகள் போல் நடக்கும் விளையாட்டுக்கள்.

மோட்டார், இரயில், ஆகாய விமானம் போல் ஓடும் விளையாட்டுக்கள்.

பாட்டுடன் ஆடும் விளையாட்டுக்கள்.

பாட்டுடன் கூடிய உடற்பயிற்சி.

(2) மேற்கூறிய வகைகளிலிருந்து ஒரு மணிக்குப் போதுமான 12 நிகழ்ச்சிகளை மட்டுமே தேர்ந்தெடுத்துக்கொள்ளவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அவ்விளையாட்டுக்களை எல்லாப் பள்ளிகளுக்கும் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும். விழாவிற்கு முன் அந்தந்தப் பள்ளியில் அந்தந்த ஆசிரியரின் தலைமையில் எல்லா மாணவர்களும் தொடர்ந்த பயிற்சி பெற வேண்டும். ஒரு குழுவிற்கு ஓர் ஆசிரியர் தேவை. ஒரு குழுவிற்குப் பதினறு மாணவர்கள்.

(3) ஒவ்வொரு நிகழ்ச்சியும் குறிப்பிட்ட சமிக்ஞையுடன் (ஊதுதல்) தொடங்கிக் குறிப்பிட்ட சமிக்ஞையுடன் முடிவுபெறவேண்டும்.

(4) விளையாட்டிடத்தை முன்கூட்டியே துப்புரவு செய்து, பொலிவு செய்து, கயிற்றால் காபந்து படுத்தவேண்டும்.

(vii) **பரிசுகள் :** யாருக்கும் தனிப்பட்ட முறையில் எந்தப் பரிசும் அளிக்கக்கூடாது. விழாவில் பங்கெடுக்கும் ஆசிரியர்களுக்கும், மாணவர்கள்

ஒவ்வொருவருக்கும் உள்ளூரில் கிடைக்கும் வறுத்த வேர்க்கடலை, சுண்டல், உப்பிட்டு அடுப்பில் இலேசாகப் புரட்டப்பட்ட முளைவிட்ட கடலை, ஒரு வாழைப்பழம், சுத்தமான குடி நீர் போன்றவற்றைச் சிற்றுண்டியாக அளிக்க வேண்டும்.

உள்ளூர்ப் பெரியார்களின் பொருளுதவி கிடைத்தால் குடிநீருக்குப் பதில் நீர்மோரும், வாழைப்பழத்திற்குப் பதில் ஆப்பிள் அல்லது ஆரஞ்சுப் பழமும் கொடுக்கலாம். எவ்வகைச் சிற்றுண்டியாயினும் பருப்பு, தானியம், கடலை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட சிற்றுண்டியாக இருக்கவேண்டும். அதாவது, அது சத்துள்ளதா யிருக்கவேண்டும். 4, 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து விளையாட்டு விழா வெற்றிகரமாக நடந்துவந்தால் 'ரோலிங் ஷீல்டு' ஒன்று ஏற்பாடு செய்யலாம்.

சிற்றுண்டி வழங்குவதில் ஓர் ஒழுங்கும், அழகும் வேண்டும். எல்லோரும் கைகளைக் கழுவிக்கொள்ள வசதி செய்திருக்கவேண்டும்.

ஒவ்வொரு குழுவிலுமுள்ள 16 மாணவர்களுக்கும், ஓர் ஆசிரியருக்கும் சேர்த்து 17 தனித்தனிப் பொட்டலங்களாகக் குறித்த சமிக்ஞைக்குப் பின் வழங்க வேண்டும். எல்லாக் குழுக்களுக்கும் ஒரே நேரத்தில் வழங்கப்படவேண்டும். விநியோகஆரம்ப முதல் சிற்றுண்டி அருந்திக் கை கழுவும் வரை ஆகும் நேரம் ஒரு மணிக்கு மிஞ்சக்கூடாது.

(viii) **நிகழ்ச்சிகளை முடித்தல் :**

தலைவரைச் சில சொற்களைப் பேசச் சொல்லவேண்டும். முடிவில் தேசிய வாழ்த்துடன் விழா நிகழ்ச்சிகள்

முற்றுப்பெறவேண்டும். குளிர்காலமானல் மாலை 4 மணிக்குள்ளும், வேறு காலமானல் மாலை 5 மணிக்குள்ளும் விழா நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்துவிடவேண்டும். இருட்டுமுன் ஒவ்வொரு மாணவனும் அவனவன் கிராமத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடவேண்டும்.

(ix) **பொது**: விளையாட்டுக்களைத் திறமையாக நடத்த அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் வேலைசெய்யும் உடற்பயிற்சி ஆசிரியர்களின் உதவியைப் பெறவேண்டும். விழாவின் வெற்றி, விழா நடக்கும் ஊரிலுள்ள ஆசிரியர்களின் ஆர்வத்தையும், ஒழுங்காக அமைக்கப்பட்ட திட்டத்தையும் பொறுத்திருக்கிறது.

மேலும், பிரதேச உடற்பயிற்சி அதிகாரிகளை அணுகி, அவர்களுடைய ஆலோசனையும் பெறலாம்.

இவ்வாறு விளையாட்டு விழா பல ஆதாரப் பள்ளிகளின் கூட்டுறவை இன்பகரமான சூழ்நிலையில் மாணவர்கள் மூலம் சாதிக்கச் செய்கிறது.

களிப்பூட்டும் நிகழ்ச்சிகளும், கேளிக்கைகளும் :

விளையாட்டு விழாவைப்போல் இவற்றையும் திட்டமிட்டே நடத்தவேண்டும். அதற்கெனத் தனி விதிகள் இல்லை. இவற்றையொட்டிய எந்த வகைச் செலவையும் அரசினர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

குடியரசு நாள், சுதந்திரத் திருநாள், உலக உடல்நல நாள், மரம் நடு விழா, ஐக்கிய நாடுகளின் நிறுவன நாள் போன்ற சிறப்பு நாட்களில் ஊரிலுள்ள எல்லாப்

பள்ளிகளுமே சேர்ந்து பின்வரும் நிகழ்ச்சிகளை நடத்திப் பொதுமக்களுக்குக் காட்டலாம்:

(1) பாடிக்கொண்டே ஊர்வலம் வருதல்.

(2) ஊராரின் அகண்ட நூற்புத் திட்டத்தில் கலந்துகொள்ளுதல்.

(3) பஜனை செய்தல் (காந்தி பிறந்த நாள்).

(4) பொதுக் கூட்டங்களில் பொருத்தமான கதம்ப நிகழ்ச்சிகள் நடத்துதல்.

(5) ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் கதம்ப நிகழ்ச்சிகள் நடத்துதல் (இசை, உரையாடல், சொற்பொழிவு, நடனம் முதலியன).

(6) பிற தருணங்களில் கலந்துகொள்ளுதல்.

(7) கூட்டான ஆரோக்கியப் பிரசார வேலை, கிராம சேவை முதலியன.

அந்தந்த ஊரின் நிலைமைக்கேற்ப அந்தந்த நாளுக்கு முன் அததற்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளை நடத்த முன்-பயிற்சி அளிக்கவேண்டும். பல பள்ளிகள் கூடி இத்தகைய கதம்ப நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலமும் பள்ளிகளின் கூட்டுறவு வலிவுற வழியிருக்கிறது.

நிகழ்ச்சிகள் மட்ட ரகமாக இருக்கக்கூடாது. பிறரை ஏளனம் செய்யும் வகையிலோ, பிற சமயங்களைத் தாக்கும் வகையிலோ, பிறர் மனத்தைத் துன்புறுத்தும் வகையிலோ இராமலிருக்க எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

தொழில் வேலையின் அடிப்படையில் பள்ளிகளை வரிசைக்கிரமப்படுத்தல் :

ஆதாரப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் திங்கள் தோறும் நூற்சிட்டம் உற்பத்தியாகிறது; தோட்டக் காய்கறிகள் உற்பத்தியாகின்றன. பாய் முடைதல், நார்வேலை, ஓலைவேலை போன்ற பிற வேலைகளிலிருந்தும் பொருள்கள் உற்பத்தியாகின்றன. உற்பத்திப் பொருள் களின் **தரம், எண்ணிக்கை, மதிப்பு** ஆகியவை பள்ளிக்குப் பள்ளி அதனதன் சந்தர்ப்பங்கள், வசதி களுக்கேற்ப வேறுபடும். பள்ளியிலுள்ள மாணவர் களின் எண்ணிக்கையை யொட்டியும் உற்பத்தி வேறு படும். எனினும், சுயதேவையை ஓரளவு பூர்த்திசெய்ய ஒரு பொது அளவுகோலை அரசினர் வகுத்திருக்கின்ற னர் அல்லவா? அதன்படி திங்கள்தோறும் ஒவ்வொரு பள்ளியின் நிகர லாபம் கணிக்கப்பட்டு மேலதிகாரி களுக்கு அறிக்கை அனுப்பப்படும் அல்லவா ? அதை யொட்டியே அவர்கள் பள்ளியின் வேலைத் திறமையை மதிப்பிடுவார்கள். ஆகையால் ஒவ்வொரு ஆதாரப் பள்ளியும் அந்தக் குறைந்தபட்ச எல்லைக்குக் குறையாத உற்பத்தி காட்ட முயலவேண்டும்.

இவ்வாறு திங்கள்தோறும் மேலதிகாரிகளுக்கு அனுப்பப்படும் ஒவ்வொரு நூற்பு அறிக்கையையும் அவர்கள் நுட்பமாகப் பரிசீலனை செய்வார்கள். ஒவ் வொரு பள்ளியிலுமுள்ள நிறைகுறைகளை விமரிசனம் செய்வார்கள். உற்பத்தித் தரம் உயரவும், கழிவு குறைய வும் ஆக்க யோசனை அளிப்பார்கள். அதனுடன் ஒரு வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு பள்ளியின் உற்பத்தித் தரத்தையும், அதனுடன் தொடர்புள்ள பிற புள்ளி

விவரங்களையும் ஒப்பிட்டுக் காட்டும் அறிக்கை ஒன்றைத் தயாரித்து, ஒவ்வொரு பள்ளிக்கும் அதன் நகலை அனுப்புவார்கள். அவ்வட்டாரத்திலுள்ள ஒரு பள்ளி சாதித்துள்ள சிறந்த உற்பத்தித்தரத்தை எல்லாப் பள்ளிகளுக்கும் எடுத்துக்காட்டி, பிற பள்ளிகளும் அதை அடைய ஊக்குவதே இந்த ஒப்பிடலின் நோக்கம். அந்த ஒப்பிடலைப் பின்வரும் நமூனாவில் காணலாம்:

நூற்பு அறிக்கைமீது விமரிசனம்

வரிசை எண்	பள்ளியின் பெயர்	ஆசிரியர்களின் எண்ணிக்கை	ஆண் / பெண் மாணவர்களின் எண்ணிக்கை	உற்பத்தி					உபயோகித்த மூலப் பொருள்களின் கிரயம்	விற்ற கழிவுப் பொருள்களின் கிரயம்	நிகர வருவாய்	தலா வரும்படி	சரா
				நூற்ற நூல் இட்ட எண்ணிக்கை		நெய்த துணி	உற்பத்தி செய்த காய்கறி						
				ஆசிரியர்களால்	மாணவர்களால்	சதுர கஜம்	பவுண்டு	பிற இனம்					

சங்கக் கூட்டங்களுக்குத் திங்கள்தோறும் ஆசிரியர்கள் வரும்போது ஒவ்வொரு தலைமை ஆசிரியரும் மேற்கூறிய அறிக்கையையும் கொண்டுவருவார். அங்கு, பள்ளிகளின் ஆய்வாளரின் தலைமையில், சராசரி நிகர வரும்படியின் இறங்கு வரிசையில் வட்டாரத்திலுள்ள பள்ளிகளின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும். நிகர வருமானம் குறைந்து கண்டால் அந்நிலைக்கான ஆசிரியரிடம்

தரக் குறைவின் காரணம்பற்றிச் சர்ச்சை செய்யப் படும். நூற்பு வேகம், உற்பத்தி, தோட்டவேலை வாயிலாக வரும்படியை அதிகரித்தல், பிற தொழில் களைச் செய்ய முயலுதல் போன்ற பிரச்சினைகள் தீர்த்துக்கொள்ளப்படும். அவ்வகைச் சர்ச்சையின் பயனாக அடுத்த திங்களில் உற்பத்தித் தரம் பெருக வேண்டும். அதுவே இந்தச் சர்ச்சையின் வெற்றிக்கு உரைகல் ஆகும்.

எட்டாம் வகுப்புப் பொதுத்தேர்வுகள் வெளியான பின் மாவட்டக் கழகத் தலைவர்கள் அம் மாவட்டத்தி லுள்ள பள்ளிகளின் சாதனையைச் சதவீதமாக்கி, இறங்கு வரிசைப்படுத்தி, எல்லாப் பள்ளிகளுக்கும் நகல் அனுப்பி, அடுத்த ஆண்டில் சிறந்த சாதனை காட்டத் தூண்டுவது வழக்கத்தி லிருந்துவருகிறது. அதைப்போன்றதே இந்த ஏற்பாடும்.

ஆராய்ச்சிக் குழாம்:

முன்னரே கூறியபடி ஆதாரக் கல்வி புதிதாகை யால் பழைய அநுபவத்திரட்டு நமக்குக் குறைவு. நம்முன் இருக்கும் பிரச்சினைகளோ பல உள. பிரச்சினைகளும் புரட்சிகரமானவை.

கலைத்திட்ட அமைப்பு, இயைபுப் போதனை, மாணவர்களின் வேலைகளை மதிப்பிடுதல், மாணவர் களுக்கு வாசிப்புப் புத்தகங்கள் தயாரித்தல், நூற்பில் வேகம், உள்ளூர்ப் பிரச்சினைகள், அம்பர் சர்க்கா, புதிய தொழில் நுணுக்கங்கள் முதலியவற்றைச் சில உதாரணங்களாகக் கூறலாம். இவற்றையெல்லாம்பற்றி ஆசிரியர்கள் கூடி விவாதித்து அநுபவம்பெற்று முன்னேறவேண்டும். எனவே, பல பள்ளி ஆசிரியர்கள்

கூடி ஆராய்ச்சிக் குழு ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும். எந்தெந்தத் தலைப்புக்களில் எந்தெந்த ஆசிரியர்களுக்கு விருப்பமும் ஆர்வமும் இருக்கின்றனவோ அவர்கள் அந்தந்த விஷயத்தை எடுத்து விவாதித்து, முடிவில் ஓர் அறிக்கை தயாரித்து, அதை ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் சமர்ப்பித்து, மேலும் விவாதித்து ஒரு நடைமுறை முடிவிற்கு வரலாம். அதை எல்லா ஆசிரியர்களும் பின்பற்றலாம். தனிப்பட்ட ஆசிரியர் இவ்வாறு செய்யமுடியாது. எனவே, குழவி நிலையிலிருக்கும் ஆதாரக் கல்விக்கு ஆசிரியர் ஆராய்ச்சிக் குழாம் ஒன்று நிறுவவேண்டுவது இன்றியமையாததாகும்.

ஆசிரியர் சங்கங்கள் :

முப்பது, நாற்பது ஆதாரப் பள்ளிகள் வேலைசெய்யும் ஒரு வட்டாரத்தில் ஓர் ஆசிரியர் சங்கம் அமைக்க வேண்டும் என அரசினர் விதிகள் வகுத்துள்ளனர்.

பல பள்ளிகளின் கூட்டுறவை வலுப்படுத்த இத்தகைய ஆசிரியர் சங்க அமைப்புக்கள் பெரிதும் உதவுகின்றன. ஓர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் பல வகை நிறுவனங்களில் தொண்டாற்றும் ஆசிரியர்களைச் சந்திக்கமுடியும். எனவே, அங்குக் கொண்டுவரப்படும் ஒரு பிரச்சினையை வெவ்வேறு நோக்கிலிருந்து ஆராய முடியும். தவிர, அங்கு அநுபவம் முதிர்ந்த ஆசிரியர்களிடமிருந்து புது ஆசிரியர்கள் நல்ல உதவி பெறமுடியும்.

ஆசிரியர் சங்கங்கள்பற்றி அரசினர் இயற்றியுள்ள விதிகள் பின்வருமாறு:

நோக்கம் :

1. ஆசிரியப் பயிற்சி முடிந்தபின் போதனை முறையில் இனிக் கற்கவேண்டியது ஒன்றுமில்லை என எண்ணுமல், போதிக்கும் திறமையில் மேலும் மேலும் முன்னேற்றம் பெறச்செய்யும் நோக்கத்துடன் ஆசிரியர் சங்கங்கள் ஆங்காங்கு நிறுவப்படவேண்டும்.

2. கல்வி சம்பந்தமான பிரச்சினைகளைச் சங்கம் விவாதித்து, தீர்மானங்களைக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பலாம்.

3. கல்வி சம்பந்தமற்ற பிரச்சினைகளையோ, அரசியல் பிரச்சினைகளையோ விவாதிக்கச் சங்கத்திற்கு உரிமை கிடையாது.

விதிகள்: ஓர் ஆதார ஆசிரியப் பயிற்சிப் பள்ளியைச் சுற்றியுள்ள சுமார் 30 ஆதாரப் பள்ளிகளும் ஓர் ஆதார அடைப்புத் தொகுதி (Basic Compact Area) என்று பெயர்பெறும். அதற்கென ஒரு தனிப் பள்ளி ஆய்வாளர் இருப்பார். அந்த முப்பது பள்ளிகளில் வேலைசெய்யும் ஆசிரியர்கள் அனைவரும் அச்சங்கத்தின் உறுப்பினர்கள் ஆவார்கள். அவர்கள் எந்த வகை நிறுவனத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும், சங்கத்தில் கட்டாய உறுப்பினர்கள் ஆவார்கள். பள்ளிகளின் ஆய்வாளரே அச்சங்கத்தின் நிரந்தரத் தலைவர் ஆவார். உறுப்பு ஆசிரியர்களில் ஒருவர் சங்கச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். அவருக்கு உதவியாக ஒரு செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்படும். செயலாளரே மாதச் சங்கக் கூட்டங்களைத் திறம்பட நடத்துவதற்கும், கூட்ட நடவடிக்கைகளைப்பற்றிய குறிப்பு வைப்பதற்கும், மாதக் கூட்டத்திற்குப் பின்பும் ஆண்டிறுதியி

லும் சங்க வேலைகளைப்பற்றிய ஓர் அறிக்கை தயாரித்துக் கல்வி அதிகாரிகட்கு அனுப்புவதற்கும் பொறுப்பாளி ஆவார்.

மேற்சொன்ன தொகுதியிலுள்ள ஆசிரியர்கள் சுமார் 100-க்கு அதிகப்பட்டு இட வசதியோ, பிற வசதியோ இல்லாமற்போகலாம். சங்க வேலைகள் திறமையுடன் நடக்கும்பொருட்டு அந்த நிலையில் இரண்டு தனிச் சங்கங்கள் அமைத்துக்கொள்ளலாம்.

ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஆண்டுச் சந்தா அணு எட்டு. அதை இரண்டு தவணைகளாகக் கட்டி ரசீது பெறவேண்டும்.

சங்கக் கூட்டம் மாதமொருமுறை நடைபெறும். அது ஆதார ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் நடத்தப்பட வேண்டுமென அரசினர் உத்தரவிட்டுள்ளனர். அப் பள்ளியுடன் இணைக்கப்பட்டிருக்கும் மத்தியப் பண்டக சாலையிலிருந்து (Central Craft Store) நூற்புக் கருவிகளையும், பஞ்சு, பருத்தி போன்ற கச்சாப் பொருள்களை வாங்கிப்போவதற்கும், நூற்ற நூல் சிட்டங்களை அங்குச் சேர்ப்பதற்கும் அந்த ஏற்பாடு உதவுகிறது. தவிர, புதிய, புரட்சிகரமான இயைபுப் போதனையில் திறமையை வளர்த்துக்கொள்வதற்கும் அத்தொடர்பு பெரிதும் உதவும்.

ஒவ்வோர் ஆசிரியரும் ஒவ்வொரு சங்கக் கூட்டத்திற்கும் தவறாமல் ஆஜராகவேண்டும்; வரமுடியாமற் போனால் சிறு விடுதி பெறவேண்டும். தொடர்ந்து இரண்டு கூட்டங்களுக்கு விடுதியின்றி வரத் தவறினோர் அந்தந்த நிர்வாகியால் தண்டிக்கப்படலாம். ஆசிரியர்

சம்பந்தப்பட்ட மட்டில் சங்கக் கூட்ட நாளானது ஒரு வேலை நாளாகும்.

சங்கக் கூட்டமானது மாதமொருமுறை வீதம் மே மாதம் தவிர ஆண்டில் 11 முறை கூடும். ஒவ்வொரு கூட்டத்திற்கும் பள்ளி ஆய்வாளர் தலைமை தாங்குவார். அவர் வர இயலாவிடில் ஓர் ஆசிரியரை அன்றையத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கூட்டத்தை நடத்தலாம்.

ஆண்டு முதற் கூட்டத்திலேயே (ஜூன் மாதக் கூட்டத்திலேயே) ஆண்டுக்கான ஒரு திட்டத்தைத் தீட்டிக்கொள்ளவேண்டும். அத்திட்டத்தில் ஆதாரப் பள்ளி வேலை சம்பந்தமான பல பிரச்சினைகளைத் தீர்க்க மாதவாரித் திட்டம் வகுத்துக்கொள்ளவேண்டும். அத்திட்டத்தின்படி கீழ்க்கண்ட அம்சங்கள் இடம் பெறலாம் :

1. மாதிரி இயைபுப் போதனை (ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களாலும், அநுபவமுள்ள பிற ஆசிரியர்களாலும்).
2. பன்மை வகுப்புப் போதனைபற்றிய ஆலோசனைகள்.
3. செயல் திட்டம் தயாரித்தல்.

   பாடக் குறிப்பு எழுதுதல்.

   கால அட்டவணை அமைத்தல்.

   வகுப்பு மாற்றல், அரை ஆண்டுத் தேர்வுகள்.

   பெற்றோர் சங்கம் / நண்பகல் உணவு } முதலிய பள்ளி நிர்வாகப் பிரச்சினைகள்.

   தொழில் உற்பத்தித் தரத்தின் அடிப்படையில் பள்ளிகளை வரிசைப்படுத்தி, சர்ச்சை செய்து, உற்பத்தித் தரத்தை உயர்த்த முயலுதல்.
4. சொற்பொழிவு.

5. ஆராய்ச்சிகள் – ஆராய்ச்சிக் குழு அறிக்கைகள்மீது விவாதம்.
6. உபகரணம் தயாரித்தல்.
7. செய்ம்முறைக் காட்சிகள் (தொழில், உபதொழில், அஸ்ஸாம் நெசவு, அம்பர் சர்க்காவினுல் நூற்றல், மகன் சர்க்காவினுல் நூற்றல்).
8. ஆண்டு விழா.
9. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், ஆசிரியர்களின் கலை நிகழ்ச்சிகள்
10. ஆசிரியர்களுக்குப் புத்துயிர்ப் பயிற்சிகள். (சிறப்பாக விடுமுறைக் காலத்தில்)
11. அவ்வப்போது ஆதாரப் பள்ளிகள் சம்பந்தமாக அரசினர் வெளியிடும் விதிகளைப்பற்றிப் பள்ளிக் கல்வி ஆய்வாளர் விளக்குவார். அரசினர் அனுப்பும் சுற்றறிக்கைகளும் அங்கு வாசிக்கப்படும்.

இச் சங்கக் கூட்டங்கள் சாதாரணமாக $2\frac{1}{2}$ முதல் 3 மணி நேரம் வரை நடைபெறும். ஒவ்வோர் ஆசிரியரிடமும் ஒரு குறிப்புப் புத்தகம் இருக்கவேண்டும். அதில் உடனுக்குடன் குறிப்புக்கள் எழுதிக்கொள்ள வேண்டும்.

கால் ஆண்டு மகாநாடு :

ஆதாரக் கல்வித் திட்டத்தில் ஆதார ஆசிரியர்களின் கால் ஆண்டு மகாநாடு ஒரு சிறப்பு அம்சம் ஆகும்.

மேற்கூறிய வண்ணம் ஆசிரியர்கள் மாதம் ஒருமுறை 2, 3 மணி நேரம் ஓரிடத்தில் கூடி விவாதித்து விட்டுப் பின் பிரிந்துபோவதால் புரட்சிகரமான ஆதாரக் கல்வித் திட்டத்தின் ஆரம்ப நிலைக்குத் தேவையான முழுப் பலன் கிடைப்பதில்லை. எனவே, அரசினர் ஒரு முக்கியமான மாறுதலைச் செய்துள்ளனர். மூன்று மாதத்திற்கு ஒருமுறை மேற்சொன்ன ஆசிரியர்கள்

எல்லோரும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் ஒரு நாள் முழுவதும் தங்கி, விஷயங்களை விவாதிக்கவேண்டுமெனப் புதிய விதிகள் இயற்றியுள்ளனர். இது ஆதாரக் கல்விக்கு மட்டும் சிறப்பானது. பயிற்சிப் பள்ளியிலேயே அவர்களுக்கு இலவச உணவும் அளிக்கப்படும். அதற்காக ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாய்க்கு மேற்படாத செலவை அரசினரே ஏற்றுக்கொண்டுள்ளனர். இது ஒரு புரட்சிகரமான மாறுதலாகும். இந்த வசதியை ஆதார ஆசிரியர்கள் முற்றிலும் பயன் படுத்திக்கொள்ளவேண்டும்.

இதில் நடத்தவேண்டிய வேலைத்திட்டம் :

1. எல்லா ஆதார ஆசிரியர்களும் முன்னிரவே பயிற்சிப் பள்ளியில் வந்து படுத்துக்கொண்டு மறுநாள் விடியற்காலையிலேயே சமூக வேலைக்குத் தயாராகிவிடவேண்டும்.
2. ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் மகாநாட்டில் பங்கெடுத்துக்கொண்டு உதவிபுரியவேண்டும்.
3. மகாநாட்டில் நடக்கவேண்டியவை:

   (அ) வழக்கமான சமூகச் செயல்கள் (துப்புரவு, மௌன நூற்பு, கலை நிகழ்ச்சிகள், உணவு விநியோகம் முதலியன.)

   (ஆ) ஆதாரக் கலைத்திட்ட விளக்கம்; பாடத்திட்ட நுணுக்க ஆராய்ச்சி.

   (இ) இயைபுப் போதனையில் மாதிரிப் பாடங்கள் நடத்துதல்.

   (ஈ) ஆதாரத் தொழிலில் முதிர்ந்த பயிற்சியும் சோதனைகளும்.

   (உ) உற்பத்தியைப் பெருக்கும் உபாயங்களை ஆராய்தல்.

   (ஊ) ஆதாரச் கல்வித் திட்டத்தை விளக்கும் பிற பொருத்தமான விஷயங்கள்.

   (எ) கண்காட்சி, மகாநாட்டின் இன்றியமையாத ஓர் உறுப்பாக இருத்தல்வேண்டும்.

(ஏ) ஆசிரியர்கள் குழுக் குழுவாக வேலைசெய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

உதாரணமாக, ஒரே வகுப்பு எடுக்கும் ஆசிரியர்கள் ஒரு குழுவாய் அமையலாம். அவர்களுக்குரிய பிரச்சினைகளை விவாதிக்கலாம். (வாசிப்புத் தாள் தயாரிப்பது, ரிகார்டுகள் வைப்பது போன்றவை.) முடிவில் ஓர் அறிக்கை தயாரித்துப் பிற்பகலில் பொதுச் சபையில் சமர்ப்பிக்கவேண்டும். அங்கு அது விவாதிக்கப்பட்ட பின் தீர்மானமாக நிறைவேற்றப்படும். இவ்விதமே பிற பிரச்சினைகளையும் குழுக் குழுவாக (Committees) விவாதித்துப் பின் பொதுச் சபையில் முடிவுகாண வேண்டும்.

பொதுவாக, இயைபுப் போதனை வேலையிலும், ஆதாரத் தொழிலைத் திறமையாகக் கற்பிக்கும் வேலையிலும் முன்னேற்றமடைவதற்கான முறைகளைக் கால் ஆண்டு மகாநாடு விவாதித்து முடிவுகாணவேண்டும். இனி, ஆண்டுதோறும் நடைபெறும் பிரதேச மகாநாட்டைக் கவனிப்போம்.

பிரதேச ஆதார ஆசிரியர் ஆண்டு மகாநாடு :

இது ஆண்டுக்கொருமுறை மாநிலத்தின் வெவ்வேறு இடத்தில் நடைபெறும். ஒவ்வோர் ஆதார அடைப்புத் தொகுதியிலிருந்தும் (Basic Compact Area) ஓர் ஆதார ஆசிரியர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கு அரசினர் செலவில் அனுப்பப்படுவார்.

அங்கு ஆதாரப் பள்ளிப் பிரச்சினைகள் மட்டுமன்றி, ஆதாரக் கல்வித் திட்டத்திலுள்ள பிற பெரும் பிரச்சினைகளும் விவாதிக்கப்படும். எனவே, அங்குச் செல்லும் பிரதிநிதி - ஆசிரியர் தம் சம்பந்தப்பட்ட

பிரச்சினைக்கு வழிகாணுவது மட்டுமன்றி, ஆதாரக் கல்வித் திட்டத்தின் ஒரு சாயலை முழுவதாகப் பார்க்க முடியும். இது ஓர் அரிய வாய்ப்பு. அங்கு அமைக்கப் படும் கண்காட்சி பெரிதும் பயன்படும்.

ஆசிரியர் யூனியன்: சென்னைக் கார்ப்பரேஷன், மாவட்டக் கழகம் (District Board), முனிசிபாலிடி ஆகிய தன்னாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் தனித்தனியாக ஆசிரியர் யூனியன் ஒன்று அமைத்துக்கொள்ளலாம். [(உ-ம்.) சேலம் மாவட்டக் கழக ஆதார ஆசிரியர் சங்கம், மதுரை நகராட்சி ஆதார ஆசிரியர் சங்கம்.] அவ்வாறு அமைக்கப்படு வதற்கு முன், சம்பந்தப்பட்ட சுய ஆட்சி நிறுவன ஆணையரின் அநுமதிபெற்றுக் கல்வித் துறைத் தலைவருக்கு விண்ணப்பம் அனுப்பவேண்டும். யூனியன் அமைத்துக்கொள்ள அவர் அநுமதி தந்த பின், ஒரு யூனியன் அமைத்துக்கொண்டு வேலைசெய்யலாம்.

அரசினரின் பணஉதவி பெறும் பள்ளிகளில் (Aided School)வேலைசெய்யும் ஆசிரியர்கள் இத்தகைய யூனியன்களில் சேரக்கூடாது; அரசினரின் உத்தரவுக் கிணங்க அமைக்கப்படாத வேறெந்தச் சங்கத்திலும் உறுப்பினராகச் சேரவும் கூடாது.

நோக்கம் :

1. உறுப்பினரின் சம்பள உயர்வு, விடுதி (லீவு), பிற சலுகை முதலியவைபற்றிய தீர்மானங்களைக் கல்வி அதிகாரிகளுக்கு அனுப்பலாம்.

2. கல்விப் பிரச்சினைகளை ஆராய்ந்தும் கருத்துக் களைத் தெரிவிக்கலாம்.

3. எந்த அரசியல் விஷயத்தையும்பற்றி விவாதிக்கக்கூடாது.

4. சமூகம் அல்லது அரசியல் செயல்களில் சங்கம் என்ற முறையில் ஈடுபடக்கூடாது.

நடைமுறை : ஒவ்வொரு யூனியனும் செயலாளர் ஒருவரையும், செயற்குழு ஒன்றையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். தேவைப்பட்டபோது யூனியன் கூடி விஷயங்களை விவாதிக்கலாம்.

செயலாளர் ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைகளையும் குறிப்பெடுத்து, கூட்டத் தலைவரின் கையெழுத்துப் பெற்று, மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்புதல்வேண்டும். தீர்மானங்களின் நகல் ஒன்றைச் சம்பந்தப்பட்ட நிறுவன நிர்வாக அதிகாரிக்கும் அனுப்பவேண்டும்.

ஆண்டிறுதியிலும் ஓர் அறிக்கை தயாரித்து மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்பவேண்டும். அதன் வேறு (படி) பிரதி ஒன்றைச் சம்பந்தப்பட்ட நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். ஆசிரியர் சங்கங்களுக்கும், ஆசிரியர் யூனியன்களுக்கும் உள்ள வேறுபாட்டை நன்ருக அறிந்துகொள்ளவேண்டும்.

கண்காட்சிகளும், செய்ம்முறைக் காட்சிகளும் :

ஆசிரியர் சங்கக் கூட்ட வேலைத்திட்டத்தில் கண்காட்சி ஒன்று நடத்தவேண்டும் என்று முன்னரே குறிக்கப்பட்டது. பள்ளிகளின் கூட்டுறவு விஷயத்தில் அத்தகைய கண்காட்சி மற்ருெரு சாதனமாகும்.

கண்காட்சிகள் இருவகைப்படும். பெற்ருேர் சங்கக் கூட்டத்தில் ஆசிரியர், மாணவர்கள் ஆகிய இருதிறத்

தாரின் கைவேலை உற்பத்திப் பொருள்களைக் கண்காட்சியாக அமைக்கலாம் என்று முன்னரே குறித்துள்ளோம். அது ஒரு வகை. ஆசிரியர் சங்கக் கூட்டங்களிலும், ஆசிரியர் மகாநாட்டிலும் கண்காட்சி அமைக்கலாம் அது வேறு வகை. இரண்டு வகையின் நோக்கங்களும் வேறுபட்டவை என்பதை ஆதார ஆசிரியர்கள் நன்கறியவேண்டும்.

பெற்றோரிடம் பள்ளி வேலைகளைப்பற்றிப் பிரசாரம் செய்யும் நோக்கத்துடன் அங்குக் காட்சி நடத்தப்பட வேண்டும்.

இங்கு, ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் வைக்கும் கண்காட்சியின் நோக்கம் முற்றிலும் மாறுனது. இங்கு வெறும் பிரசாரத்திற்கு மட்டும் மாணவர்களின் வேலைகளைக் காட்டுவதில்லை. அவற்றிலிருந்து மாணவர்களின் அறிவு, உற்றுநோக்கும் பயிற்சி, கற்பனை, கைத்திறன் முதலியன ஒவ்வொன்றும் எவ்வாறு வளர்ந்துள்ளது என்று காட்டவே கண்காட்சி வைக்கப்படுகிறது. அதாவது, பள்ளியில் நடக்கும் வேலைத்திறனையும், ஆசிரியர்களின் முயற்சியின் பெருக்கத்தையும் அவை எடுத்துக்காட்டவேண்டும்.

செய்ம்முறைக் காட்சிகள் :

ஆசிரியர் சங்கக் கூட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு செய்ம்முறைக் காட்சி ஏற்பாடு செய்வது ஆதாரத் தொழிலை விருத்திசெய்வதற்கும், பிற உப தொழில்களைக் கற்றுக்கொள்வதற்கும், புதுக் கருவிகளில் ஆராய்ச்சி செய்வதற்கும் பயன்படும். தவிர, செயல் நுணுக்கங்களைக் கற்பிப்பதற்கும் அவை பயன்படும்.

பின்வரும் செய்ம்முறைகளைக் காட்டலாம்:

1. (உயர்ந்த எண்) நுண்ணிய நூல் நூற்றுக் காட்டல்.

2. மிக வேகமாக நூற்றுக் காட்டல்; குறித்த எண்ணுள்ள நூல் நூற்றல்.

3. தறி நெசவு.

4. அஸ்ஸாம் தறியில் நெசவு.

5. கயிற்றினால் பை பின்னுதல்.

6. அட்டை வேலை.

7. நார் வேலை.

8. பானை மூடியில் ஓவியம் வரைந்து வர்ணம் தீட்டுதல்.

9. பழுதடைந்துள்ள தக்ளி, சர்க்கா, திரிமணை ஆகிய நூற்புக் கருவிகளைச் சீர்செய்து காட்டுதல்.

10. அம்பர் சர்க்காவில் நூற்றல்.

11. மகன் சர்க்காவில் இரண்டு கைகளாலும் நூற்றல்.

12. தக்ளியால் இரு கைகளாலும் பல முறைகளில் நூற்றுக் காட்டல்.

13. இரண்டு மணி நேர அகண்ட நூற்பில் ஒரு சிட்டம் நூற்றுக் காட்டல்.

14. பாலர் சபை நடத்திக் காட்டுதல்.

15. பாலர் நீதிமன்றம் நடத்திக் காட்டுதல்.

---

8. பள்ளியும் சமூகமும்

ஆதாரப் பள்ளி தன்னைச் சுற்றியிருக்கும் சமூகத்தோடு கொண்டிருக்கும் உறவைப்பற்றிப் பயிற்சியாளர் உற்றுநோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

1. உற்றுநோக்கும் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களின் பெற்றோர்களுடன் தொடர்புகொண்டிருக்கிறார்களா ?

2. பள்ளியில் ஒரு பெற்றோர் சங்கம் உள்ளதா ?

3. அதன் நோக்கம் யாது? அதன் அமைப்பும் வேலை முறைகளும் யாவை ?

4. பெற்றோர் சங்கத்தால் பள்ளிக்கு ஏற்பட்டுள்ள நன்மைகள் யாவை ?

5. மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதைத் தவிரச் சமூகத்திற்குப் பள்ளி செய்யும் பிற தொண்டுகள் யாவை ?

6. பள்ளிக்கும் பழைய மாணவர்களுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா? அதனால் அவர்களுக்கு என்ன நன்மை?

7. பள்ளியிலோ, பள்ளியின் ஆதரவில் வேறிடத்திலோ ஊரிலுள்ள முதியோருக்குக் கல்வி அளிக்கப்படுகிறதா ?

8. முதியோருக்குக் கல்வி பயிற்றும் சாதனங்களும் முறைகளும் யாவை?

9. பள்ளியில் விழாக்கள் நடத்துகிறார்களா ? அவற்றை எப்படித் திட்டமிட்டு நடத்துகிறார்கள்?

10. சமூகத்திலுள்ள நபர்களையும் பொருள்களையும் பள்ளி நலத்திற்காக எவ்வெவ்வகைகளில் பயன்படுத்துகிறார்கள் ?

11. பெற்றோர், ஆசிரியர், மாணவர் ஆகிய மூவகையினருக்கும் புத்துயிர் ஊட்டும் வசதிகள் உள்ளனவா? அவை யாவை?

பள்ளி-சமூக உறவின் அவசியம் :

பள்ளி வேலைகளில் ஆசிரியர்களுக்குத் துணையாக உதவக்கூடியவர்கள் பெற்றோர்களேயாவர். தனிப்பட்ட முறையிலும், ஒரு சங்கமாகவும் பள்ளித்தேவைகளுக்கு ஒரு பிரசாரக் கருவியாக உதவக்கூடியவர்களும் அவர்களேயாவர். ஆதலின், ஆசிரியர்கள் பெற்றோர்களோடு நெருங்கிய உறவுகொண்டிருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

பெரும்பான்மை நேரத்தை மாணவர்கள் தமது இல்லத்திலே பெற்றோர்களுடனேயே செலவிடுகின்றனர். பள்ளியில் பெறும் அறிவு, பழக்க வழக்கங்கள், திறமைகள், மனப்பான்மைகள் ஆகியவை எல்லாம், முக்கியமாகப் பின் மூன்றும், இல்லத்தில்தான் உறுதிப்படுதல் கூடும்.

தவிர, மாணவர்கள் இரு வேளைகளிலும் பள்ளிக்கு ஒழுங்காகக் காலத்தில் வருதல், உடலிலும் உடையிலும் தூய்மையாக வருதல், தேவையான புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களுடன் வருதல் முதலிய எளிய தினசரி விஷயங்களிலும் ஆசிரியருக்குப் பெற்றோரின் ஒத்துழைப்பு இன்றியமையாதது.

முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை தொடர்ந்து படிக்குமாறு மாணவர்களை இடையில் நிறுத்தாமல் பள்ளிக்கு அனுப்பும் பெரும் பொறுப்பு பெற்றோரைச் சார்ந்ததே. ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் உற்றுநோக்கவேண்டிய ஆசிரியருக்குப் பெற்றோரின் தொடர்பு அவசியம்.

பள்ளிக்கு வேண்டிய சில உதவிகளைப் பெற்றோர் சங்கம் எளிதில் அளிக்கமுடியும்.

புதிய சமுதாயம் ஒன்றைப் படைப்பதற்காகப் பாடுபடும் ஆதார ஆசிரியர் தம் பள்ளியைச் சுற்றிலும் இருக்கும் சமூகத்திலுள்ள பெற்றோர்களைப்பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும் அல்லவா?

சுருங்கச் சொல்லின், பெற்றோர்களுடன் தொடர்ந்த உறவு இருந்தால் பள்ளி வேலைகளையும் தேவைகளையும் பற்றிப் பெற்றோர்கள் நன்றாய் அறிந்துகொள்வார்கள்; தம்மால் இயன்ற உதவியைச் செய்ய முன்வருவார்கள்; ஆசிரியருடைய வேலைகள் எளிதாகும்.

ஆசிரியர் - பெற்றோர் உறவு ஏற்படுத்துவது எப்படி ?

பெற்றோரின் உதவியைப் பெற ஆசிரியர்கள் இரு முறைகளில் முயலலாம். ஒன்று, ஒவ்வொரு பெற்றோரையும் அவரவர் வீட்டில் பார்த்துப் பேசுதல். இது தனிப்பட்ட முறை எனலாம். மற்றொரு முறை பெற்றோர் சங்கம் ஒன்றை அமைத்துப் பல பெற்றோர்களை ஒரே இடத்தில் சேர்த்துச் சந்திப்பது. இது கூட்டு முறையாகும்.

மாணவர்களின் வீட்டிற்கு ஆசிரியர் அவ்வப்போது போகவேண்டும். பெற்றோரின் நிலை, அவர்கள் வாழும் சூழ்நிலை, மாணவர்களின் உடல்நலம், அவர்களுடைய தினசரி வேலைகள், அவர்களுக்கு வீட்டிலும் அண்டையிலும் உள்ள வசதிகள் முதலியவற்றை நேரில் கண்டறியவேண்டும். மாணவர்கள் ஆஜராகாத காரணம், தாமதித்து வரும் காரணம், உடையில் காணும் குறைபாடுகள், பலகை, நோட்டுப் புத்தகம் முதலியன இல்லாமல் பள்ளிக்கு வருதல், மாணவர்களின் உடற்கூறு சம்பந்தப்பட்ட குறைபாடுகள் முதலியவற்றைப்

பற்றி மாணவர்களின் பெற்ருேரிடம் ஆசிரியர் பேசலாம்.

பள்ளியில் கற்கும் துப்புரவுப் பயிற்சி, சமூகப் பயிற்சி, கலைப் பயிற்சி, உடற் பயிற்சி முதலியன வீட்டிற்குப் பரவுகின்றனவா என ஆராய்ந்துவரலாம். பள்ளிப் போதனைக்கு வீட்டு நிலைமைகள் எவ்வளவு தூரம் துணைபுரிகின்றன எனவும் கண்டறியலாம்.

இவ்வாறு மாணவர்களின் உடல், உள்ள, ஆன்ம, மனப் பண்புகளின் வளர்ச்சியில் தொடர்ந்த அக்கரையை ஆசிரியர் காட்டுவாராஞல் ஊரில் அவரது மதிப்பு உயருவதுடன் அவருடைய முயற்சிகளும் எளிதில் பயன்தரும்.

நாளடைவில், ஊரில் செல்வாக்கு உள்ளவர்களின் உதவியால் நிரந்தரமான பெற்ருேர் சங்கம் ஒன்று ஏற்படுத்தவேண்டும். அதில் எல்லாப் பெற்ருேர்களையும் உறுப்பினராகச் சேர்க்கப் பாடுபடவேண்டும். குழந்தைகள்பால் அன்புள்ளவராகவும், பள்ளியின் முன்னேற்றத்தில் பற்றுள்ளவராகவும், செல்வாக்கு உள்ளவராகவும், தலைமைப் பண்புகள் நிறைந்தவராயும் உள்ள ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். அவருக்கு உதவியாய் ஒரு செயற்குழுவையும் அமைத்துக்கொள்ளவேண்டும். பள்ளித் தலைமை ஆசிரியர் பெற்ருேர் சங்கத்தின் செயலாளராய் இருந்து வரலாம்.

மாதமொருமுறை பெற்ருேர்களைக் கூட்ட வேண்டும். பெரும்பாலான பெற்ருேர்கள் வரக்கூடிய நாளில், பௌர்ணமி அல்லது அமாவாசை நாளில், சங்கக் கூட்டத்தை நடத்துவது நலம். கூட்டத்திற்கு

ஒரு நிகழ்ச்சி நிரல் தயார்செய்து, அதன்படி நடத்தல் பயன்படும். கூட்ட நடவடிக்கைகளைப்பற்றிய ஒரு குறிப்பு ஒழுங்காக எழுதிவைக்கவேண்டும். கூட்டம் பள்ளியிலேயே நடைபெறலாம்.

சங்கக் கூட்டத்தின் ஓர் அம்சமாகப் பள்ளிச் சிறுவர்களின் கதம்ப, கலை நிகழ்ச்சிகள் இருப்பது அவசியமாகும். மாணவர்களைத் தனித்தும் சேர்ந்தும் பாடச் செய்யலாம். உரையாடல், நாடகம் நடித்தல், தமாஷ் பேச்சு நடிப்புப் போன்ற பிற நிகழ்ச்சிகளையும் நடத்தலாம். தம் குழந்தைகளின் ஆற்றலைக் கண்டு பெற்றோர்கள் மகிழ்ச்சிகொள்வார்கள்.

மாணவர்கள் செய்த பொருள்களைக் கண்காட்சி யாக வைத்து, அவற்றையும் பெற்றோர்களுக்குக் காட்டலாம். செய்ம்முறையாகச் சில செயல்களைச் செய்துகாட்டலாம். (உ-ம்.) பாலர் சபை, பாலர் நீதி மன்றம், அமைச்சர் தேர்தல், நூற்றல், நெய்தல், வலைப் பை பின்னுதல், பாய் முடைதல்.

மாணவர்களின் நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிடவேண்டும். பெற்றோர் சங்கக் கூட்டத்தின் முக்கியமான அலுவல்கள் அதற்குப் பிறகுதான் தொடங்கும். பள்ளிக்குத் தேவையான பொருள்கள் பல இருக்கலாம். பள்ளி நூல்நிலையத் திற்குப் புத்தகங்கள், மாணவர்கள் விளையாடச் சாமான் கள், ஏழைச் சிறுவர்களுக்குச் சிற்றுண்டி, உடை போன்ற பல பொருள்கள் தேவைப்படலாம். இவற்றைப்பற்றிப் பெற்றோர் கூட்டத்தில் ஆசிரியர்கள் எடுத்துரைத்து, அவர்களது உதவியைப் பெற முயலலாம். பள்ளியின் பொதுப் பிரச்சினைகளைப்பற்றி அங்கு விவாதிக்கலாம்.

பள்ளியில் அடிக்கடி நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்கும் விழாக் கொண்டாட்டங்களுக்கும் அவர்களை அழைக்கலாம்.

பெற்ருேர் சங்கத்தின் ஒரு பகுதியாகச் சில ஊர்களில், முக்கியமாகப் பெண்களுக்கான பள்ளிகளில், **தாய்மார் சங்கம்** ஒன்று அமைப்பது உண்டு. அதுவும் பெற்ருேர் சங்கத்தைப் போலவே அலுவல்புரிய வேண்டும்.

பள்ளி வேலை நேரத்தில் பள்ளிக்கு வந்து மாணவர் படிப்பதையும், செயல்கள் செய்வதையும், விளையாடுவதையும் பார்க்கப் பெற்ருேர்களுக்கு அநுமதி வழங்கலாம். இதற்கென மாதத்தில் ஒரு நாளில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கலாம்.

பள்ளியில் உற்பத்தியாகும் கதர்த் துணியை விற்றுக்கொடுக்கப் பெற்ருேர் சங்கம் உதவலாம்.

விளையாட்டு விழாவில் பெற்ருேர்களுக்கு அழைப்பு அனுப்பலாம். விழாவில் கலந்துகொண்டு மாணவர்களுக்குச் சிற்றுண்டி அளிக்க உதவுமாறு பெற்ருேர்களில் தனவந்தராயிருப்பவர்களில் சிலரைக் கேட்டுக் கொள்ளலாம்.

பள்ளிக் கட்டட விஸ்தரிப்பு, பள்ளிக்கு விளையாட்டிடம் தேடித் தருதல், பழுதடைந்த பள்ளிக் கருவிகளைச் சீர்திருத்தித் தருதல், பள்ளிக் கலை நிகழ்ச்சிகளுக்கு உள்ளூரிலுள்ள இசை வல்லுநர்களின் உதவியைப் பெறுதல் ஆகிய பிற உதவிகளுக்கும் பெற்ருேர் சங்கம் உதவக்கூடும். இவ்வாறு பெற்ருேர் சங்கம் ஒரு பற்றுக் கோடாகவும், ஆசிரியர்களுக்கு உறுதுணையாகவும்,

பள்ளிக்கூடத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவும் ஒரு பிரசாரக் கருவியாகவும் அமையவேண்டும்.

பள்ளியின் உள்நிர்வாகத்தில் பெற்றோர் சங்கம் தலையிடக்கூடாது.

ஆண்டினிறுதியில் பெற்றோர் சங்க ஆண்டு விழா கொண்டாடலாம். அதையொட்டி ஒரு கண்காட்சியும் அமைக்கலாம். அதில் மாணவர்கள் செய்தவற்றில் சிறந்த காட்சிப் பொருள்களை வைக்கலாம். ஆண்டு அறிக்கை ஒன்று தயாரித்து, பொதுக் கூட்டத்தில் படிக்கலாம். அந்த ஆண்டில் செய்த சாதனைகளையும், வரப்போகும் ஆண்டுக்கான திட்டத்தையும் அவ்வறிக்கையில் குறிக்கலாம்.

பள்ளியின் சமூகத் தொண்டுகள் :

பாலர்களுக்குக் கல்வி போதிப்பதுடன் பள்ளிகள், தாம் அமைந்துள்ள சமூகத்திற்கும் சில துறைகளில் சிறந்த தொண்டு ஆற்ற முடியும்.

நூல்நிலையமும் வாசகசாலையும் :

பள்ளியில் நூல்நிலையம் ஒன்று அமைத்து, புத்தகங்களைப் பெற்றோர்களுக்கு வழங்கி, அவர்களைப் படித்து இன்புறச் செய்யலாம். அவரவர் தொழிலில் முன்னேறப் புது ஆராய்ச்சி முறைகளையும், அவற்றின் நுணுக்கங்களையும் புத்தகங்களிலிருந்து அறியுமாறு செய்யலாம். கிராம மறுமலர்ச்சிக்கு அரசினர் செய்து வரும் அரிய சேவையைப்பற்றிச் செய்தித்தாளில் வருவனவற்றை விளக்கலாம். நாட்டு நடப்புச் செய்திகளையும், பத்திரிகைகளையும் படித்துப் பயன்பெறச் செய்யலாம்.

ஊர்த் துப்புரவு விஷயத்திலும், ஊராரின் ஆரோக்கிய விஷயத்திலும் ஆதாரப் பள்ளிகள் தொண்டுபுரிய இடம் இருக்கிறது. மேல்வகுப்பு மாணவர்கள் வாரந்தோறும் ஒரு முறை கிராமத்தில் அசுத்தங்கள் நிறைந்திருக்கும் பகுதிகளுக்குச் சென்று துப்புரவு செய்யலாம். அவர்களைக்கொண்டு அங்கே குப்பைக் குழிகள் வெட்டுவித்து, குப்பைகளைக் கொட்டச் செய்யலாம். தெருக்களையும், கிணற்றடியையும், பொது இடங்களையும் துப்புரவாக் வைத்துக் கொள்ள உதவலாம். ஆதாரப் பள்ளி திறமையுடன் பணியாற்றுகிறதா என்று சோதிக்க அது அமைந்திருக்கும் ஊர், அதனுல் பாதிக்கப்பட்டு முன்னிலும் துப்புரவாகவும், அழகாகவும் காணப்படுகிறதா என்பதே உரைகல் ஆகும் எனக் காந்திஜி கூறியுள்ளார். எனவே, ஊர்த் துப்புரவு ஒரு பெருந்தொண்டாகும். அது நிர்மாணத் திட்டத்தில் ஒன்ருகும். ஊரில் கொள்ளைநோய்கள் நடமாடும் தருணத்தில் பள்ளி ஆசிரியர்களின் தொண்டு உடல்நலத் துறை அதிகாரிகளுக்குப் பேருதவியாக இருக்கும். பிற தருணங்களிலும் அவ்வதிகாரிகளுக்குப் பலவகைகளில் உதவலாம்.

ஊராரின் தேவைக்கேற்ப, பயிர்த்தொழில் துறை, கால்நடைத் துறை, கூட்டுறவுத் துறை முதலிய துறைகளிலிருந்து உதவிபெறும் மார்க்கத்தை ஊர் மக்களுக்கு எடுத்துக்காட்டலாம். அந்தந்தத் துறை அதிகாரிகளைப் பள்ளிக்கு வரவழைத்து, அததிலுள்ள புது முறைகளையும் ஆராய்ச்சிகளையும் பேச்சு மூலமாகவும், செய்ம் முறைகளாகவும், கண்காட்சிகளாகவும் ஊர் மக்களுக்கு உதவத் தொண்டுபுரியலாம். படக்காட்சிகள் காட்ட உதவிபுரியலாம்.

பள்ளியைப்பற்றிப் பொது மக்களிடம் பிரசாரம் :

பள்ளி வேலைகள் வெற்றிபெறப் பெற்றோர்களின் ஆதரவு ஆசிரியர்களுக்குத் தேவை என முன்பே எடுத்துக்காட்டினோம். ஆகவே பொது மக்களிடை பள்ளியைப்பற்றிப் பிரசாரம் செய்யத் தேவைப் படுகிறது. எந்த வகைப் பிரசாரத்திலும் ஓர் அடிப்படை உண்மை உண்டு. பிரசாரம் செய்வோர் தம் முயற்சியின் வெற்றியில் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். தோல்வி மனப்பான்மைக்கு அவர்கள் மனத்தில் இடமே இருக்கக்கூடாது. ஆசிரியர்களின் பிரசார வேலையிலும் இது முற்றிலும் உண்மையே.

ஆசிரியரின் பிரசார முயற்சி ஒவ்வொன்றிலும் தெளிவான நோக்கம் ஒன்றிரண்டு இருக்கவேண்டும். அது சம்பந்தமான புள்ளிவிவரங்களையும் விஷயங்களை யும் முன்கூட்டியே ஆசிரியர் திரட்டிக்கொள்ள வேண்டும்; பிரசாரத்தில் அவற்றைப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் பிரசாரத்தில் ஜீவகளை இருக்கும். பிறகு பிரசாரத் திட்டம் ஒன்று அமைத்துக் கொண்டு, அதைத் தீவிரமாய்த் தொடர்ந்து நடத்தி வெற்றி காணவேண்டும். உதாரணமாக, ஊரிலுள்ள படிக்க லாயக்குள்ள மாணவர்களைப் பள்ளி வருஷ ஆரம்பத்திலேயே பள்ளியில் சேர்க்க அவர் பிரசாரம் செய்ய விரும்பினால் அது சம்பந்தமான புள்ளிவிவரங்க ளனைத்தும் அவர் கையில் இருக்கவேண்டும். விடு முறைக்குப்பின் பள்ளி திறந்ததும் ஒரு திட்டம் வகுத்து வேலை தொடங்கவேண்டும். 'சேர்க்கை வாரம்' என்று ஒன்று ஏற்பாடுசெய்யலாம். சேர்க்கை சம்பந்தமான பாட்டுக்கள் பாடியவாறே மாணவர்களை ஊர்வலமாக

அழைத்துச் செல்லலாம். பெற்ருேர் சங்கத்தைக் கூட்டி, அதைக் குறித்துப் பேசி, செல்வாக்குள்ளவர்களின் உதவிபெறலாம்.

இவ்வாறே பின்கண்ட விஷயங்களுக்குத் திட்டமிட்ட பிரசாரம் தேவையாயிருக்கும்:

1. மாணவர்கள் இடையிடையே நின்று, மீண்டும் பள்ளிக்கு வருவது.

2. இரண்டு, மூன்று வகுப்புக்கள் படித்து முடித்துவிட்டு மாணவர்கள் பள்ளியை விட்டு விலகுவது.

3. ஒவ்வொரு வகுப்பிலும் ஓராண்டுக்கு மேற்பட்டு மாணவர்கள் தேங்குவது.

4. கட்டாயக் கல்வி அமுலிலுள்ள இடங்களில் மாணவர்களின் ஆஜர் திருப்தியற்றிருப்பது.

5. பிற பள்ளித் தேவைகள் :

நூல்நிலையத்திற்குப் புத்தகங்கள், செய்தித்தாள், பத்திரிகைகள் அளித்தல், ஏழை மாணவர்களுக்கு நண்பகல் உணவு, உடையளிப்பு, விளையாட்டு விழாக்களுக்கு உதவுவது, பள்ளிக்கூட விஸ்தரிப்பு, விளையாட்டிடம் வாங்குவது, தொழிற்கருவிகளைப் பழுதுபார்ப்பது, கலை நிகழ்ச்சிகளுக்கு உதவியளிப்பதுபோன்றவை.

பழைய மாணவர்க்கும் தற்போழுது உள்ளவர்க்கும் வாசகசாலை அமைத்தல்:

பள்ளிப் படிப்பு முடிந்து வெளியேறிய மாணவர்கள் தாம் படித்தவற்றை மறக்காமலிருக்க அவர்களுடனும் ஆசிரியர் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். முக்கியமாக, மேல்படிப்பிற்கு வேறு ஊர்

களுக்குச் செல்ல இயலாமல் உள்ளூரிலேயே ஜீவனம் நடத்தும் பழைய மாணவர்களைச் சேர்த்து ஒரு சங்கம் அல்லது சபை அமைக்கலாம். கிராம நூல் நிலையத்திலிருந்தோ, பள்ளி நூல்நிலையத்திலிருந்தோ அவர்களுக்குப் பொருத்தமான புத்தகங்கள் அதனின்று வாங்கி வழங்கிப் படிக்கச் செய்யலாம்; செய்தித்தாளி லிருந்து அவர்களை நாட்டு நடப்புச் செய்திகளைப் படிக்கச் செய்யலாம்; பத்திரிகைகளிலிருந்து கதைகளும் கட்டுரைகளும் படிக்கச் செய்யலாம். இவற்றை யெல்லாம் வழங்கமுடியாவிடினும் வாரமொருமுறை அவர்களைக் கூட்டி, நாட்டு நடப்புச் செய்திகளை அவர்களே கூறலாம்.

குடிசைத் தொழில், கைத்தொழில்பற்றிய எளிய புத்தகங்களைப் படிக்கச் செய்து, புதுத் தொழில்கள் நடத்த ஊக்கமளிக்கலாம். அரசினர் நடத்திவரும் குடிசைத் தொழிற் பயிற்சி முகாம்களுக்கு அனுப்ப உதவலாம். உள்ளூர்த் துப்புரவில் அவர்களையும் பயன்படுத்திக்கொள்ளலாம். பள்ளி விளையாட்டுக் களில் பழைய மாணவர்களுக்கென ஒரு பிரத்தியேக விளையாட்டு நிகழ்ச்சி ஏற்படுத்தலாம். நூற்பு, நெசவு, பயிர்த்தொழில் ஆகியவற்றில் அவர்களுடைய அநுபவங்களைப்பற்றி மாணவர்களுக்கு எடுத்துச் சொல்லச் செய்யலாம்.

இவ்வாறு, பழைய மாணவர்களைப் பள்ளியின் ஓர் உறுப்பைப்போல் கருதி, அவர்களுக்கு உதவிபுரிய லாம். பழைய மாணவர் சபையை ஆரம்ப நிலையில் ஆசிரியரே பள்ளியில் தொடங்கிவைத்தாலும், நாளடைவில் அது ஒரு தனி உறுப்பாக இயங்க

வேண்டும். பள்ளிக் கட்டடத்தைவிட்டு வேறு இடத்திற்கு அது போகவேண்டும்.

பள்ளியில் படிக்கும் மாணவர்களுக்கும் அந்த நூல் நிலயத்தைப் பயன்படச் செய்யலாம். இவர்களுடைய வயது, பக்குவம், பட்டறிவு முதலியவை குறைவாயிருக்குமாதலின் பழைய மாணவர்களுக்குப் பொருத்தமான புத்தகங்களும், பத்திரிகைகளும் இச்சிறுவர்களுக்கு விளங்கமாட்டா. ஆகவே இவர்களுக்குச் சுவைபடமாட்டா. இக்காலத்தில் சிறுவர்க்கென்றே சிறுவர் பத்திரிகைகளும், சிறுவர் புத்தகங்களும் வெளிவருகின்றன. அவற்றைப் பெற்ருேர் சங்கம் மூலம் வாங்கிச் சிறுவர்களுக்கு வழங்கலாம். பொங்கல் நாள், புத்தாண்டுப் பிறப்பு, தீபாவளி முதலிய சிறப்பு நாட்களையொட்டிப் பத்திரிகைகள் சிறப்பான முறையில் தயாரிக்கப்பட்ட மலர்களை வெளியிடுகின்றன. சிறுவரது பலவகைத் தேவைகளுக்கு ஈடு செய்யும் வகையில் படம், பாட்டு, புதிர் போன்ற சிறப்பு அம்சங்கள் அவற்றில் இடம்பெறுகின்றன. சிறுவர்க்கென எழுதத் தகுதியும் அநுபவமும் வாய்ந்தவர்கள் அவற்றில் கதைகளும் கவிதைகளும் கட்டுரைகளும் வெளியிடுகின்றனர். அத்தகைய மலர்களைச் சிறுவர்களுக்கு வாங்கி வழங்கிப் படிக்கச் செய்யலாம்.

முதியோர் வகுப்புக்கள்:

கிராமங்களிலுள்ள முதியோர்களுள் பெரும்பாலோருக்கு (75 சதவீதம்) படிக்க எழுதத் தெரியாது என்பது யாவரும் அறிந்ததே. ஆதாரக் கல்வியின் நோக்கம் நிறைவேறவேண்டுமானுல் பெற்ருேர்கள் ஆசிரியர்களுடன் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டும்.

அவர்கள் படிக்க, எழுதத் தெரியாத நிலையிலிருப்பதால் ஆசிரியர்களுக்கு அவர்கள் எவ்வாறு ஆக்க உதவி அளிக்கமுடியும்? ஆகவே, ஆதார ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதோடு, அத்தகையோர்க்கும் கல்வி கற்பிக்கவேண்டியதாயிருக்கிறது. இதை அறிந்துதான் ஆதாரக் கல்வித் திட்டத்தின் பல நிலைகளில் **முதியோர் கல்வி**யை அதன் முதற்படியாக அமைத்துள்ளார்கள். ஆகவே, ஊரிலுள்ள முதியோர்களுக்குக் கல்வி கற்பிக்கும் வகைகள், வசதிகள் முதலியவற்றை ஆதார ஆசிரியர் நன்கு ஆராய்ந்து ஆவன செய்தல்வேண்டும்.

ஊரிலுள்ள முதியோர்களைக் கூட்டி, அவர்களுக்கென ஓர் இரவுப் பள்ளி அமைக்கலாம். முதியோர் கல்விபற்றி அரசினர் ஏற்படுத்தியுள்ள சட்ட திட்டங்களுக்கேற்ப அப்பள்ளியை நடத்தவேண்டும்.

பாலர்களின் மனப் பக்குவம், அநுபவம் வேறு; முதியோர்களின் மனப் பக்குவம், அநுபவம் வேறு. ஆகவே, பாலர்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறை வேறு; முதியோர்களுக்குக் கல்வி கற்பிக்கும் முறை முற்றிலும் வேறு. இதை ஆசிரியர் நன்கு உணரவேண்டும். சிறுவர்களுக்குப் போதிக்கும் முறையையும், சிறுவர்களுக்கு உபயோகிக்கப்படும் புத்தகங்களையும் முதியோர் கல்விக்குப் பயன்படுத்துதல் பொருத்தமற்றதாகும். ஆகவே, முதியோருக்குக் கல்வி கற்பிக்கும் முறைகளைக் கற்பிக்கத் தனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை அரசினர் வகுத்து, ஆசிரியர்களை அம்முறையில் பயிற்றுகின்றனர். எனவே முதியோர்களுக்காக ஓர் இரவுப் பள்ளிக்கூடம் திறக்க எண்ணும் ஓர் ஆதார ஆசிரியர் அதற்கெனத் தனிப் பயிற்சிபெறவேண்டும்.

முதியோர் கல்வியில் வெறும் எழுத்து, எண்ணறிவு மட்டும் கற்பித்தல் போதாது. அம்முதியோர்கள் தம் வாழ்க்கையைச் சிறப்பாகவும், பூரணமாகவும் வாழ அக்கல்வி உதவவேண்டும். அதாவது, அவர்கள் ஈடுபடும் தொழிலில் முன்னேற்றம் பெறவும், தொழில் மூலம் அதிக ஊதியம் பெறவும், ஓய்வுநேரத்தை இன்பமாயும் அறிவுடனும் பயன்படுத்தவும், இலாபகரமான புதுத் தொழில்களைக் கற்கவும், குழந்தைகளைச் சீராக வளர்க்கவும், நாட்டு நடப்புச் செய்திகளைத் தொடர்பாக அறியவும், அரசினர் கிராம மக்களுக்குச் செய்துவரும் பலவகை உதவிகள்பற்றியும், கிராம முன்னேற்றத் திட்டங்கள்பற்றியும் முழு விவரங்களை அறியவும், தம் வாக்கைத் தக்கோருக்கு வழங்கவும் முதியோர் கல்வி உதவவேண்டும். ஆகையால், முதியோர் கல்வி இவற்றைத் தழுவி அமைதல்வேண்டும்.

ஆசிரியர் மேற்கூறிய விவரங்களைப்பற்றி நாள்தோறும் கொஞ்சங் கொஞ்சமாக முதியோர்களுக்கு எடுத்துச்சொல்லவேண்டும். செய்தித்தாள்களிலிருந்தும் பத்திரிகைகளிலிருந்தும் பயனுள்ள செய்திகளைப் படித்துக் காட்டி, சிறுகச் சிறுகப் படிப்பதில் ஆர்வத்தையும், ஊக்கத்தையும் ஊட்டவேண்டும். படிப்பறிவு எவ்வளவு தூரம் அவர்கள் வாழ்க்கைக்கு உதவுமென எடுத்துக்காட்டி, படிப்பதில் ஊக்கத்தை உண்டாக்குவதே அவர்களது முதற் பணியாகும்.

அவர்களுக்கு இன்பமூட்டும் வகையில் பாட்டுக் கற்பிக்கலாம்; பாச்சாற்று (பஜனை), விளையாட்டுக்கள் முதலியவற்றையும் கற்பிக்கலாம்.

முதியோர்கள் படிப்பதற்கென அரசினர் ஆதரவில் புத்தகங்கள் தயாராகிவருகின்றன. அவற்றையே முதியோர்களுக்குக் கல்வி கற்பிப்பதிலும் ஆசிரியர்கள் பயன்படுத்தவேண்டும்.

பட விளக்கு:

கல்விப் போதனையில் பட விளக்கு ஓர் அரிய சாதனமாகும். பிரசாரத்திற்கு அது உபயோகமானது. சாதாரணமாக, ஆதாரப் பள்ளிகளில் பட விளக்குகள இருப்பதில்லை. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், சில உயர்நிலைப் பள்ளிகளிலும் பட விளக்கு இருக்கும். அப்பட விளக்குடன் சில படங்களும் சிறிய அளவில் இருக்கும். விளக்கின் உதவியினால் அச்சிறிய படங்களைப் பள்ளிச் சுவர் அல்லது ஒரு வெள்ளைத் திரைமீது பெரிதாக்கிக் காட்டலாம். பொதுச் சுகாதாரம், சரித்திரம், பூகோளம், இயற்கைக் காட்சிகள், முக்கிய நிகழ்ச்சிகள் ஆகியவை குறித்து அப்படங்கள் தயாரிக்கப்பட்டிருக்கும்.

பட விளக்கு உபயோகிக்கும் முறையை அறிந்து கொண்டு இப்பட விளக்கை இரவல் வாங்கிப் பள்ளிச் சிறுவர்களுக்கும், ஊர் மக்களுக்கும், பழைய மாணவர்களுக்கும் காட்டலாம். கட்புலனுக்கு இது ஈடு செய்வதால் எல்லா வகையினரும் படக் காட்சியினை விரும்புகின்றனர். சொல்லால் விவரிக்கப்பட்டிருக்கும் விஷயங்களை இப்படக்காட்சி தெளிவாய் எடுத்துக்காட்டும். காட்டப்படும் படங்களைப்பற்றி ஆசிரியர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். ஆகவே ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் பட விளக்குக் காட்சி முன்கூட்டியே நடத்தப்பெற்று, ஒவ்வொரு ஆசிரியரும் போதுமான முன்னறிவு பெற்றிருக்கவேண்டும்.

சினிமா:

தற்காலத்தில் சினிமாவும் கல்வியில் மிகவும் பயன்படுகிறது. சினிமாப் படங்களில் பேசும் படங்கள் என்றும், அசையும் படங்கள் என்றும் இருவகையுண்டு. முன்பெல்லாம் அசையும் படங்கள் (ஊமைப் படம் என்று கூறப்பட்டவை) காட்டப்பட்டுவந்தன. ஆனால் நாகரிகம் மிக வேகமாக முன்னேறியுள்ள தற்காலத்தில் பேசும் படங்கள் விரைவாக முன்னேற்றமடைந்துள்ளன. பேசும் படம் கண், செவி ஆகிய இருபுலன்களுக்கும் ஈடுசெய்வதால் மிக வல்லமையுள்ள கல்விச் சாதனமாகிவிட்டது.

பள்ளி வேலைகளை விளக்கும் தனி நோக்கம் கொண்ட பேசும் படங்களும், அசையும் படங்களும் இப்போது பெருத்த அளவில் தயாராகிவருகின்றன. மனித இருதயம் எவ்வாறு வேலைசெய்கிறது, இரத்தம் உடலில் எவ்வாறு சுற்றிவருகிறது, வேர்கள் எப்படி மரங்களுக்கு உதவுகின்றன என்றெல்லாம்பற்றிய தத்ரூபமான இயற்கை வர்ணப்படக் காட்சிகளெல்லாம் தயாராகின்றன. மிக நுட்பமான விஷயங்களுக்கெல்லாம் அருமையான படங்கள் தயாராகிவருகின்றன.

சென்னையிலுள்ள மாநிலக் கல்வித்துறைத் தலைவர் அலுவலகத்தில் காட்சிக் கல்விக்கென்றே ஒரு தனி அதிகாரியுள்ளார். அவரிடம் கல்விப் போதனைக்குத் துணைபுரியும் படச் சுருள்கள் பல உள்ளன. சினிமாப் படம் காட்டும் இயந்திரம் (Cinema Projector) ஒன்றைப் பள்ளியில் வாங்கிவைத்துக்கொண்டால் அந்தப் படச் சுருள்களைப் பெற்று, பள்ளியில் தேவைப்பட்ட பொழுது பயன்படுத்தலாம். ஆனால், அந்த இயந்திரம்

வாங்குவதற்குப் பெரிய தொகையும், ஊரில் மின்சார வசதியும் தேவை. ஆகவே, பெரும்பாலான ஆதாரப் பள்ளிகளுக்கு அத்தகைய படச் சுருள்கள் தற்போதைய நிலையில் பயன்படமட்டா. எனினும், அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் இத்தகைய வசதிகள் கிடைக்கும். அவற்றை ஆதார ஆசிரியர் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

தவிர, பிரதேசவாரியாகச் **சமூகக் கல்விப் பிரசார அதிகாரி** ஒருவர் இருக்கிறுர். அவரிடம் இந்த இயந்திரம் பொருத்தப்பட்ட பிரசார மோட்டார் வண்டி ஒன்று உள்ளது. அவர் அவ்வண்டியுடன் ஒரு மாதத்திற்கு ஒரு மாவட்டமாகப் படங்கள் காட்டிக்கொண்டு முதியோர் கல்விப் பிரசாரம் செய்துவருவார். அவரை ஊருக்கு அழைத்துப் படக்காட்சி காட்ட விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

படக்காட்சியை உபயோகிப்பதற்கும் ஒரு முறை உண்டு. முன்னதாகவே ஆசிரியர் படத்தைப் பார்த்திருக்கவேண்டும். அதன் பயனைச் சிறுவர்களுக்குப் படம் காட்டப்படும்போது எவற்றையெல்லாம் கவனிக்கவேண்டுமென்று அவர் முன் கூட்டியே எடுத்துச்சொல்லவேண்டும். அதாவது, சிறுவர்களிடம் ஒருவகை முன்னறிவு ஏற்படுத்த வேண்டும். படக் காட்சி முடிந்த பின் அதன் மூலமாக மாணவர் பெற்ற அறிவை ஆசிரியர் சோதிக்கவேண்டும். பார்த்ததைப்பற்றிச் சுருக்கமான அறிக்கை ஒன்று எழுதச் செய்தல்வேண்டும்.

படக் காட்சி பள்ளிப் போதனை விஷயத்தோடு ஒட்டியதாய் அமையவேண்டும். அவ்வாறில்லாவிடில்

அது ஒரு பொழுதுபோக்காக முடியும்; கல்விப் பயன் கிட்டாது.

ரேடியோ :

இது ஒரு நவீன சாதனம். ஒரு சிறு ரேடியோ பெட்டியை வாங்கிவைத்துக்கொண்டால் பல விஷயங்களை ஒருவர் கற்கலாம். உள்நாட்டுச் செய்திகளையும், வெளி நாட்டுச் செய்திகளையும் அதன் மூலம் உடனுக்குடன் கேட்கலாம். ரேடியோவினுல் மக்களனைவருக்கும் நன்மை உண்டு. இசை வல்லுநருக்கு, அறிஞருக்கு, ஆணுக்கு, பெண்ணுக்கு, சிறுவர்க்கு என ஒவ்வொரு வகையினருக்கும் அதனுல் பெரும் பயன் உண்டு. பிரசாரம், கல்வி, பொழுதுபோக்கு ஆகிய ஒவ்வொரு துறையிலும் ரேடியோ சேவை புரிவதால் அது ஓர் ஒப்பற்ற சாதனம். அது ஒரு பல்சுவைக் கடல். பேச்சு, பாட்டு, கதை, கூத்து, நாடகம், விளையாட்டு ஆகிய பல துறைகளில் ரேடியோ தொண்டுபுரிகிறது.

இதன் சொல்லொணு வல்லமையைக் கண்டு இதைக் கல்விக்குப் பயன்படுத்துகிருர்கள். ஓராண்டுக்கு ஒழுங்காகத் திட்டம் தீட்டிக் கல்வி நிகழ்ச்சிகள் நடத்துகிருர்கள். தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பும் ரேடியோ நிலையங்கள் சென்னையிலும் திருச்சிராப்பள்ளியிலும் உள்ளன. உயர்நிலைப் பள்ளி, நடுத்தரப் பள்ளி, ஆரம்பப் பள்ளி என்ற மூன்று கல்வி நிலைகளுக்கும் தனித்தனி நிகழ்ச்சிகள் வாரத்திற்கு ஐந்து நாட்கள் நடக்கின்றன. பள்ளி வேலைக்கு அநுகூலமான காலத்திலேயே அவை ஒலிபரப்பப்படுகின்றன.

என்னென்ன நாட்களில், என்னென்ன கல்வி நிகழ்ச்சிகள் நடக்கும் என விவரமாய் அச்சிட்டுப்

பள்ளிகளுக்கு அதில் ஒரு பிரதி அனுப்புகிறார்கள். ஆதாரப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்க ஒழுங்கான ஏற்பாடு செய்து கொள்ளலாம். ஒவ்வொரு நிகழ்ச்சியையும் கேட்டபின் ஒரு சிறு குறிப்பு எழுதவேண்டும்.

பள்ளியில் நடைபெறும் கொண்டாட்டங்கள் :

பள்ளி வேலையின் ஓர் அங்கமாகவே ஆதாரப்பள்ளியில் பலவகைக் கொண்டாட்டங்களை நடத்துகிறோம். அவற்றை நடத்துவதன்மூலம் மாணவர்களுக்குப் பல நன்மைகள் கிட்டுகின்றன; மாணவர்களின் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் தனிப்பட்ட திறமை மலர்ந்து வெளியாகிறது; நம் நாட்டின் பண்பாட்டின் மேன்மையைச் சிறுவர்கள் அறியமுடிகிறது; தவிர ஒவ்வொரு கொண்டாட்டத்தைப்பற்றிய வரலாற்று அறிவையும், காலப்போக்கையொட்டி அவற்றைக் கொண்டாடும் முறையில் மாற்றியமைக்கவேண்டிய அவசியத்தையும் அறிய முடிகிறது. பலர் கூடித் திட்டமிடவும், சமூகப் பயிற்சி பெறவும் இக்கொண்டாட்டங்கள் பெரிதும் துணைபுரிகின்றன; வாய்மொழிப் பயிற்சி, எழுத்துப் பயிற்சி இவைகட்கும் உதவுகின்றன. சிறப்பாக, மாணவர்கள் மகிழவும், பெற்றோர்களை மகிழ்விக்கவும் ஓர் அருமையான கருவியாகவும் இக்கொண்டாட்டங்கள் விளங்குகின்றன. ஓய்வுநேரத்தை இன்பமாயும் பயனுடனும் கழிக்க இவற்றின்மூலம் பயிற்சி கிட்டுகிறது.

ஆதாரப் பள்ளிகளில் இத்தகைய கொண்டாட்டங்களைப் பள்ளிக்குப் புறம்பான செயல்களாகக் கருதுவது

இல்லை. அவற்றைப் பயன்படுத்தி மாணவர்களின் உடல், உள்ள, ஆன்மப் பண்புகளை வளர்க்க முயலு கிறோம்.

பள்ளிக் கொண்டாட்ட வகைகள்

அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. பிராந்தியச் சார்புக் கொண்டாட்டம் - (பாரதியார் தினம், வ. உ. சி. தினம், ஓணம்)
2. சமயச் சார்புக் கொண்டாட்டம் - (கிறிஸ்மஸ் தினம், முகம்மது நபி தினம், இராமலிங்க அடிகள் தினம்)
3. தேசிய சம்பந்தம் கொண்டவை- (குடியரசு தினம், சுதந்திர தினம்)
4. சமூக விழா - (பொங்கல் திருநாள், நவராத்திரி)
5. பள்ளி பற்றியவை - (பள்ளி ஆண்டு விழா)
6. விசேஷ நோக்கம் கொண்டவை- (ஐக்கிய நாடுகள் நிறுவிய நாள், மானிட உரிமைப் பிரகடன நாள், உலக சுகாதார நாள், மரம் நடும் விழா, அகில இந்தியக் கூட்டுறவு வார விழா, ஜீவசம்ரட்சண நினைவு நாள்)

திட்டம் அவசியம்:

எந்த வகையான கொண்டாட்டத்திற்கும் ஒரு திட்டம் தேவை. ஆசிரியர்களும் மாணவர்களும் கூடி ஆலோசித்து அதைத் தீட்டவேண்டும். எதெது, எந்தெந்தக் காலத்தில் நடத்தவேண்டுமோ அதனை அந்தந்தக் காலத்தில் கொண்டாடவேண்டும். அததற் கேற்ற பொருத்தமான பேச்சு, பாடல், கதை, கதம்ப நிகழ்ச்சிகளைத் தயாரிக்கத் திட்டமிடவேண்டும். அததற்கு ஏற்ற முறையில் ஒவ்வொன்றையும்

கொண்டாடவேண்டும். அததற்குப் பொருத்தமான பேச்சாளர்களையும் கலைஞர்களையும் அழைத்துவரலாம்.

ஓர் எச்சரிக்கை:

ஒவ்வொரு கொண்டாட்டத்தின் முக்கியமான நோக்கம் கல்விப் பயனாகும். எனவே, விழாக்களைக் கொண்டாடுங்கால் படாடோபமும், ஆடம்பரமும், அர்த்தமற்ற செலவும் தேவையில்லை. உள்ளூரில் கிடைக்கும் பொருள்களைக்கொண்டு மாணவர்களாலேயே தயாரிக்கக்கூடிய எளிய நாடக அரங்கு, மேடை, திரை ஜோடனைகள் ஆகியவற்றைத் தயாரித்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்வதே ஒரு பயிற்சியாகும். இவற்றிற்கு மூங்கில், அட்டை, வர்ணத்தாள், ஜிகினா முதலிய பொருள்களே போதுமானவை.

நடத்தப்படும் விஷயங்களைப்பற்றி ஒரு சில சொற்கள் கூறவேண்டும். அவை மாணவர்களின் வயது, மனப் பக்குவம், வாழ்க்கை ஆகியவற்றோடு தொடர்புகொண்டிருக்கவேண்டும்; அவர்கட்குப் புரியும் விஷயங்களாயு மிருக்கவேண்டும்.

நிகழ்ச்சிகளில் நாசூக்கான நகைச்சுவைக்கு இடமுண்டு. ஆனால் கேலிக்கூத்துக்கும் தமாஷுக்கும் இடம் கிடையாது. அவை நகைச்சுவையாகக் கருதப்படமாட்டா. நகைச்சுவை அம்சங்களில் பிற தூஷணை அறவே கூடாது.

கொண்டாட்டங்களில் ஆசிரியர் வேலை:

கொண்டாட்டங்களுக்குத் தேவையானவற்றையெல்லாம் ஆசிரியர்தாம் கற்பிக்கவேண்டும் என எதிர்

பார்க்கப்படுவதில்லை. ஆனால் மாணவர்களுடைய தனித் திறமைகளை அவர் கண்டறியவேண்டும். அவற்றை வளர்க்கத்தகுந்த வாய்ப்புக்களை ஏற்படுத்தவேண்டும். அவர்களை ஊக்கவேண்டும்; எந்தக் காரணத்தைக் கொண்டும் அத்திறமைகளை நசுக்க முயலக்கூடாது. எல்லா மாணவர்களையும் அவரவர் திறமைக்கேற்ப அவர் ஊக்குவிக்கவேண்டும்.

'நம் கொண்டாட்டம்':

ஒரு சில மாணவர்களை மட்டும் நிகழ்ச்சிகளிற் சேர்த்துக்கொண்டு பெரும்பாலரை விட்டுவிட்டால் பள்ளிக் கொண்டாட்டங்கள் வெற்றிபெறமாட்டா. ஒதுக்கப்பட்டவர்களிற் பலர் நிகழ்ச்சிகளில் அக்கரை காட்டமாட்டார்கள். எவ்வளவுக்கெவ்வளவு அதிக மான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நலம். ஒவ்வொருவரும் இது "நம் கொண்டாட்டம்" என்று எண்ணி, முழு விருப் பத்துடன் உழைக்க இந்த ஏற்பாடு மிக அவசியம்.

சமூகத்திலுள்ள வளத்தைப் பயன்படுத்தல் :

ஒரு நாடு சிறப்புறவேண்டுமாயின் அதன் நீர்வளம், நிலவளம், தாதுவளம், குடிவளம் ஆகிய வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். அதைப்போல் பள்ளி வேலை சிறப்புற, பள்ளியைச் சுற்றியுள்ள சமூக வளத்தை முற்றிலும் பயன்படுத்த முயலவேண்டும்.

சமூகம் என்று இங்குக் கூறும்போது, அண்டையி லுள்ள மக்கள் சூழ்நிலை, இயற்கைச் சூழ்நிலை ஆகிய இவ்விரண்டையுமே குறிக்கிறோம்.

பின்வரும் இரு முறைகளில் ஆதார ஆசிரியர்கள் சமூக வளத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம் :

1. பள்ளி (அதாவது ஆசிரியர்களும் மாணவர் களும் தம்மிடத்திலிருந்து பெயர்ந்து) சமூகத்தினிடம் போகவேண்டும்.

2. சமூகத்தைப் பள்ளிக்குக் கொண்டுவர முயல வேண்டும்.

முதல் முயற்சியைத்தான் கல்விப் பயணம் என்று சொல்லுகிறோம். திட்டமிட்ட கல்விப் பயணம் மூலம் எத்தனையோ விஷயங்களை எளிதில் கற்பிக்கலாம் என்று முன்னரே விரிவாகக் கூறியுள்ளோம். எனவேதான் அருகிலுள்ள இடங்களையும், தொழில்களையும், தொழிலாளிகளையும் வாரமொருமுறை பார்த்துவரப் பள்ளிப் பயணம் நடத்தவேண்டும் எனக் கூறப்படுகிறது.

இரண்டாம் முறை பெற்றோர் சங்கம், பழைய மாணவர் சங்கம் என்ற தலைப்பின்கீழ் முன்னரே விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

ஊரிலுள்ள இசை வல்லுநர்களையும், தொழில் வல்லுநர்களையும் பள்ளி வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறைகளை அங்கே எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

ஊரிலுள்ள பிரமுகர்களைக்கொண்டு குழந்தை களுக்குக் கதைசொல்லச் செய்யலாம்; சொற்பொழிவுகள் நிகழ்த்தச்செய்யலாம்.

விளையாட்டு விழாவிற்கும், இலவசச் சிற்றுண்டிக் கும் பெற்றோர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

இவ்வாறு பள்ளி வேலைகளான கல்வி, கலை, தொழில், விளையாட்டு, இசை, ஓவியம் ஆகிய அம்சங்

களுக்குச் சமூக வளத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

புத்துயிர் ஊட்டும் செயல்களும் வசதிகளும்:

கிராம மக்களின் வாழ்க்கையில் ஓய்வுநேரம் அதிகம். அந்நேரத்தை அவர்கள் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளாமல் வீண் அரட்டையில் காலம் கழிக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. அந்த ஓய்வுநேரத்தை இன்பத்துடன் செலவிட்டுப் புத்துயிர் பெற அவர்களுக்கு ஆதார ஆசிரியர்கள் பலவகையில் உதவக்கூடும்.

பழங்காலத்தில் அந்தந்தக் கிராமச் சூழ்நிலைக்கேற்ப, பலவகைக் கிராம விளையாட்டுக்கள், கிராம நடனங்கள், நாட்டுப் பாடல்கள், கிராமக் கூத்து, வில்லுப் பாட்டு, ஒயில் கும்மி, கதாகாலட்சேபங்கள், பஜனைகள் முதலியன நடைபெற்றுவந்தன. பருவகாலங்களுக்கேற்ப வெவ்வேறு வகைச் செயல்கள் நடந்து வந்தன. கிராம மக்கள் அவற்றிலிருந்து மகிழ்ச்சியும் புத்துயிரும் பெற்றனர். இவை இல்லாமற்போனால் கிராம வாழ்க்கை சுவையற்று வறண்டுவிடும். ஆனால் சினிமா, ரேடியோ முதலிய நவீனப் பொழுதுபோக்கு வசதிகள் பெருகிக் கிராமங்களுக்குப் பரவவே மேற்கூறிய சுவை மிகுந்த,வழிவழிவந்த நிகழ்ச்சிகள் மறைந்து வருகின்றன. எளிய கிராம விளையாட்டுக்களான சடுகுடு, கிளித்தட்டு, கழி விளையாட்டு, சிலம்பு விளையாட்டு, சூரிய நமஸ்காரம், யோகாசனப் பயிற்சி, கும்மி, கோலாட்டம், அம்மானை ஆடுதல், குதித்துப் பாடுதல் முதலியவைகூட மறைந்துவருகின்றன.

பொம்மலாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம் போன்ற சுவைமிகுந்த கிராமக் கேளிக்கைகளும் மறைந்துவருகின்றன.

கிராமங்களை மகிழ்ச்சி மிகுந்த இடமாக்க அரசினர் செய்துவரும் பெரும் முயற்சியில் இச்செயல்களை யெல்லாம் மீண்டும் உயிர்ப்பித்துத் தருவதும் அந்தந்த ஊர் ஆதாரப் பள்ளிகளில் தொண்டாற்றிவரும் ஆசிரியர்களின் கடமைகளுள் ஒன்றாகும்.

மேற்கூறிய செயல்களில் **எளிமை, உயர்ந்த கருத்து, போட்டியற்றுக் கூட்டாக இயங்கும் தன்மை, செயலையே இன்பமாகக் கருதும்** உயர்ந்த **மனப்பான்மை** ஆகியவை மலிந்திருக்கின்றன. ஆனால் வியாபார மனப்பான்மை மிகுந்து, மேனாட்டு நாகரிக மோதலால் வாழ்க்கைத் தத்துவங்கள் மாறிப் பட்டண வாழ்க்கையே நாகரிக மெனவும், கிராம வாழ்க்கை தள்ளுபடியெனவும் கருதும் தற்காலத்தில் மேற்கூறிய செயல்களுக்கு 'மவுசு' குறைந்துவிட்டது என மக்கள் எண்ணுகிறார்கள். அந்த எண்ணம் தவறானது. அந்தந்த ஊர்களில் இருந்து வந்த பழங்காலத்திய இன்பமூட்டிப் புத்துயிர் அளிக்கும் முறைகளைக் கண்டறியவேண்டும். காலப்போக்குக் கேற்ற வகையில் புதுக் கருத்துக்களைப் புகுத்தி, அவற்றை மாற்றியமைத்துக்கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாகக் காந்திஜி, பாரதியார் ஆகிய பெரியோர் வரலாறுகளைக் கதாகாலட்சேபங்களாக நடத்தலாம். குழந்தை வளர்ப்பு, ஆரோக்கிய வாழ்க்கை, நற்குடிப் பண்பு ஆகிய விஷயங்களையொட்டி நாட்டுப் பாடல்கள், கும்மி, கோலாட்டம் முதலியவை அமைக்கலாம். பெற்றோர் சங்கத்தையொட்டி ஒரு சபை நிறுவிக்கொண்டு, இவற்றை வாரமொருமுறை (சனிக்கிழமை இரவு) நடத்தலாம்.

இவ்வாறே ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஆன பழங்காலக் கிராம விளையாட்டுக்களை உயிர்ப்பித்துப் புது மெருகு கொடுக்கலாம்.

ஓய்வு என்பது வேலையிலிருந்து விடுபட்டு வாளா விருப்பது அன்று; ஓர் அலுவலை விட்டு மற்றொரு அலுவலை மேற்கொள்வது என்பதே அதன் தற்கால விளக்கம். கிராம மறுமலர்ச்சிக்காகப் பல பல அரிய புதிய திட்டங்களை அரசினர் வகுத்துவருகின்றனர். அவற்றுள் கிராமக் கைத்தொழில்களிலும், குடிசைத் தொழில்களிலும் பயிற்சி அளிப்பது சிலவாகும். தேனீ வளர்த்தல், பொம்மைசெய்தல், கோழி வளர்த்தல் ஆகியவற்றை இங்குக் கூறலாம். இவற்றில் முறையான பயிற்சிபெற்றால் இவை கிராம மக்களுக்குப் புத்துயிர் ஊட்டுவதுடன் ஊதியமும் கொடுக்கும்.

இவற்றிற்கெல்லாம் ஆதார ஆசிரியர் உதவ முடியும்; உதவவும் வேண்டும்.

---

9. நண்பகல் இலவச உணவளிப்பு

சில ஆதாரப் பள்ளிகளில் மாணவர்களுக்கு நண்பகலில் இலவசமாக உணவளிக்கும் ஒரு சிறந்த ஏற்பாடு இருந்துவருகிறது. அத்திட்டத்தைப்பற்றி அறியப் பயிற்சியாளர் அப்பள்ளிகளை உற்றுநோக்கும்போது கீழ்க்கண்ட வினாக்கள் உதவும்:

1. பள்ளி மாணவர்களுக்கு உணவு அளிக்கப் படுகிறதா?

2. உணவு அளிப்புத் திட்டம் நடைமுறையிலிருந் தால் அதன் அடிப்படை நோக்கங்கள் யாவை?

3. உணவு அளிப்புக்குப் பொறுப்பாளி யார்? [ஒருவரா, பலரா? பெற்றோர் சங்கமா, வேறு சேவா சங்கமா? அரசினரால் நியமிக்கப்பட்ட குத்தகைக்காரரா?]

4. (அ) அத்திட்டத்தில் பள்ளி ஆசிரியரின் பங்கு யாது? [பணம், பொருள் திரட்டுதல்; சமைக்க இடம் தருதல்; பரிமாற உதவுதல்.]

(ஆ) பெற்றோரின் அதிகபட்ச உதவியைப் பெற ஆசிரியர் என்ன செய்கிறார்?

5. உணவு அளிப்பதைப்பற்றி என்னென்ன பதிவேடுகள் உள்ளன? [ஆஜர்ப் பதிவு, தினசரி அளித்த உணவு வகைக் குறிப்பு, மாணவர்களின் வேலைப் பிரிவுக் குறிப்பு, மாணவர்களின் எடை, உயர வளர்ச்சிக் குறிப்பு, பார்வையாளரின் குறிப்புப் புத்தகம்]

6. (அ) என்ன உணவு கொடுக்கிறார்கள்? எவ்வளவு கொடுக்கிறார்கள்? [கஞ்சி, சோறு, பால், மோர், பேரீச்சம்பழம், வாழைப்பழம், வைட்டமின் மாத்திரைகள்; காய்கறி உண்டா?]

(ஆ) சிறப்பு நாட்களில் சிறப்பான உணவு கொடுக்கிறார்களா?

7. பள்ளித் தோட்டத்தில் விளையும் காய்கறிகளைப் பயன்படுத்துகிறார்களா?

8. உணவளிப்பினால் மாணவர்களுக்கு என்ன நன்மை ஏற்பட்டுள்ளது? ஊராருக்கு என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது?

9. நிலவும் நிலையில், உள்ள வாய்ப்பில், கைவசமுள்ள பண வசதியில் இன்னும் சிறப்பாக நடத்த முடியுமா?

10. ஒழுங்கான தினசரி உணவுஅளிப்புத் திட்டம் இயலாத பள்ளிகளில் இதைப்பற்றி வேறு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா?

11. உணவுஅளிப்புத் திட்டம் ஏற்படுமுன் மாண வர்களின் உடலில் காணப்பட்ட குறைகள் யாவை என விசாரிக்கவும். [சோர்வு, மங்கலான பார்வை, பளபளப் பில்லாத பல், மைனுப் புண் என்னும் வாயோரப் புண், நாக்கில் புண், மகிழ்ச்சிக் குறைவு, பிறருடன் கூடி ஆடி ஓடி விளையாடாமல் ஒதுங்கியிருத்தல் முதலியன.]

உணவு விடுதியின் அவசியம்:

ஆதாரக் கல்வியின் அடிப்படை நோக்கங்களில் முதன்மைபெற்றுள்ளவை உடல் வளர்ச்சியும் உடல் நலமும் ஆகும். அம்முதல் நோக்கம் குறைவின்றியும், எளிதாயும், விரைவிலும் நிறைவேறவேண்டுமானுல் ஆதாரப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களும், அங்குத் தொண்டாற்றிவரும் ஆசிரியர்கள் அனைவரும் ஒருங்கு சேர்ந்து பள்ளியின் அருகிலேயே வாழவேண்டும். பள்ளியின் அருகில் அதைச் சேர்ந்தாற்போல் ஓர் உணவு விடுதி அமைந்திருத்தல்வேண்டும். அங்கேயே மாணவர்கள் உணவு சமைப்பதிலும், பரிமாறுவதிலும், அதைச் சார்ந்த பிற வேலைகளிலும் அவர்களின் அகவைக்குத் தகுந்தாற்போல் ஈடுபட்டு உதவவேண்டும்; சத்துள்ள உணவை உண்ணவேண்டும்; உடல் நலத்துக்கு அடிப்படைகளான சத்துள்ள உணவு, உடல்உழைப்பு, ஓய்வு, அளவுள்ள உறக்கம் முதலியன அங்கு முறையாய்ப் பெறவேண்டும். அவ்வாறு அமைந்தால்தான் மாணவர்கள் வலிமைபெற்று, நோயின்றி, உடலுறுதியுடன் வளர இயலும்.

தங்களுக்குத் தேவையான காய்கறிகளையும் தானியங்களையுங்கூடப் பள்ளிப் பண்ணையிலேயே விளைவிக்க உழைக்கவேண்டும். அவ்வாறு செயலாற்றும்

போதே உணவு நூல்பற்றிய அடிப்படைச் செய்திகளைப் பட்டறிவின் வாயிலாகவே கற்கவேண்டும்.

உணவளிப்பு வேலையில் கிட்டும் சமூகப் பயிற்சி

உணவளிப்பு சம்பந்தமான வேலைகளையெல்லாம் கூட்டுறவு முறையில் பகிர்ந்துகொண்டு செய்து முடிக்க முயலவேண்டும். இதனால் இயல்பான சமூகப் பயிற்சியும் கிட்டுகிறது.

உணவளிப்பின்போது பெறக்கூடிய சமூகப் பயிற்சி விவரங்கள் பாடத்திட்டத்தில் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டிருக்கின்றன :

(i) ஒழுங்காகவும் அமைதியாகவும் அமருதல்;

(ii) தம் முறை வரும் வரை பொறுமையுடனிருத்தல்;

(iii) தேவைப்பட்ட உணவைமட்டும் பெறுதல்;

(iv) உள்ள உணவு குறைவாயிருந்தால் எல்லோரும் அதைச் சீராகப் பங்கிட்டுக்கொள்ளுதல்;

(v) சீரான முறையில் சுத்தமாக உண்ணுதல்; [ஒலியிட்டு உறிஞ்சாமல், நக்காமல், பொருளைச் சிந்தாமல், பதறாமல், சிதறாமல், பார்ப்போருக்கு எவ்வகையிலும் அருவருப்பு உண்டாகாமல்]

(vi) பரிமாறும் கலங்களைத் துப்புரவு செய்து அழகாக வைத்தல்.

ஆதரிச ஆதாரப் பள்ளி :

இவையெல்லாம் நிறைவுடன் விளங்கவேண்டிய ஓர் ஆதரிச ஆதாரப் பள்ளியின் இலக்கணங்கள் ஆகும். ஆனால், உண்மையில் அந்நிறைவுடன் அல்லது அக்குறிக்கோளுக்கு மிக நெருங்கிய நிறைவுடன் அமையும் பள்ளிகள் இந்தியா முழுவதிலும் மிகச் சிலவே இருக்கக்கூடும். **சேவாக்கிராமத்தில்** ஹிந்துஸ்

தானி தாலிமி சங்கத்தார் நடத்திவரும் ஆதரிச ஆதாரப் பள்ளி அவ்வாறு நிறைவுடன் விளங்கும் ஓர் எடுத்துக் காட்டாக அமையும் எனலாம். '**நயீ தலீம்**' என்ற தமிழ்ப் புத்தகத்தில் அங்குள்ள ஆதாரப் பள்ளிபற்றிப் பின்வருமாறு காண்கிறது:

"மூன்றுவது இலாகா 7 வயது முதல் 11 வயது வரையிலுள்ள குழந்தைகள் இருந்து படிப்பதான "**ஆனந்த நிகேதனம்**" எனப் பெயரிய கல்வி விடுதி. அதன் மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் அப்பள்ளியைச் சேர்ந்த விடுதிகளிலேயே வசித்து வருவார்கள். இந்தப் பள்ளிப் படிப்பில் சுகாதார வேலை, உடற்பயிற்சி, சமையல் வேலை, தோட்டவேலை ஆகியனவும் பாடங்களுள் அடங்கியவை."

ஆதரிச பூர்வாதாரப் பள்ளி:

சேவாக்கிராம ஆசிரமத்திற்கு அருகிலிருக்கும் ஊரிலுள்ள பூர்வ ஆதாரப் பள்ளியில் முற்பகலில் ஒரு குவளைப் பால் வழங்கப்படுகிறது. படிக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் பாலைப் பரிமாறுவது, இடத்தைச் சுத்தஞ் செய்வது முதலிய அலுவல்களைக் குழந்தைகளே செய்கிறுர்கள். எனவே, உணவு அளிப்புத் திட்டம் ஆறு அகவைக்குட்பட்ட சிறுவர்கள் படிக்கும் பூர்வ ஆதாரப் பள்ளிக்கும் சிறந்தது என விளங்குகிறது.

நண்பகல் இலவச உணவளிப்பு:

நடைமுறையிலுள்ள ஆதாரப் பள்ளிகளில் எல்லாம் இத்தகைய உணவு விடுதிகள் அமைப்பது இயலாது. அவ்வாறு செய்வதற்குப் பெருத்த பணச்

செலவு ஆகும். தற்போதைய பொருளாதார நிலையில் அது இயலவே இயலாது. ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் மட்டும் விடுதி இணைந்திருக்கவேண்டுமென அரசினர் கட்டாயப்படுத்தியிருக்கின்றனர். ஆதாரப் பள்ளியைப் பொறுத்த மட்டில் அவ்வகை நிர்ப்பந்தம் இல்லை. அதில் படிக்கும் மாணவர்கள் வீட்டிலே பெற்றோருடன் வாழ்ந்துவரலாம். அவ்வாறு விடுதியில்லாத குறையை நீக்க, ஒரு வேளையாவது நண்பகலில் மாணவர்களுக்கு உணவு அளிப்பது ஆதாரக் கல்வி நோக்கங்களை நிறைவேற்றுவதற்குப் பேருதவியாக இருக்கும் என்று பாடத்திட்டத்தில் வற்புறுத்தியிருக்கிறார்கள்.

இல்லத்து உணவிலுள்ள குறைபாடுகள் :

ஆதாரக் கல்வி எதிர்பார்க்கும் உடல், உள்ளம், ஆன்மா என மூவகை வளர்ச்சிகளில் முதலிடம் பெற்றுள்ளது உடலைக் குறித்ததே என்று முன்னரே கூறப்பட்டது. 'சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதவேண்டும்' என்பது வழிவழி வந்த முதுமொழியன்றோ? வலிவுற்று, நோயற்று உடல் வளர அனைவருக்கும் இன்றியமையாதது நல்ல **சத்துள்ள உணவு** ஆகும்; விலையுயர்ந்த **அறுசுவை உண்டி**யன்று. சத்து, சுவையென்ற இவ்விரண்டினுள் சத்தே முதன்மையானது. சுவையை மட்டும் வற்புறுத்தினால் சத்துக் குறைந்து உணவின் முழுப் பயன் கிட்டாது. எடுத்துக்காட்டாக, கஞ்சி வடித்த சோறு, கஞ்சி வடிக்காத சோறு இவ்விரண்டில் பின்னதே சிறந்தது ஆகும். கஞ்சி வடிக்காத சோற்றில் சுவை குறைவு தான்; ஆனால் சத்து மிகுதியன்றோ? இதை யாவரும் அறிவர்.

ஆனால் மக்கள் செய்வது என்ன? 1000-க்கு 999 குடும்பங்களில் சுவையையே விரும்பி, சத்துக் குறைந்த சோறாகிய கஞ்சி வடித்த சோற்றையே உண்கின்றனர்.

சத்துள்ள கைக்குத்தல் அரிசியை விட்டு மில்லில் தீட்டிய (சத்து இழந்த) அரிசியையே பயன்படுத்து கின்றனர். அதனால் விளையும் தீமைகள் எண்ணிறந்தன. இத்தகைய தவறுகளால் குழந்தைகளிடம் மைனாப் புண், உடற் சோர்வு, பளபளப்பில்லாத பல், கண் பார்வை மங்கலாயிருத்தல், வளர்ச்சிக் குறைவு போன்ற கண்கூடாகக் காணவல்ல உடற் கோளாறுகள் ஏற்படுகின்றன. இவ்வுடற் கோளாறுகள் மாணவர் களின் மனத்தையும் பாதிக்கின்றன. ஆகையால் பள்ளியில் நாம் அளிக்கும் கல்வி அவர்களுக்கு முழுப் பயனளிப்பதில்லை.

உணவைச் சமைக்கும்போது அரிசியை நீண்ட நேரம் நீரில் கழுவுதல், நீண்ட நேரம் காய்கறிகளை நீரில் வேகவிடுதல், காய்கறி வெந்த நீரைக் கீழே கொட்டி விடுதல் போன்ற சத்தை இழக்கும் வேறு சில குறைபாடுகளையும் இங்கு எடுத்துக்காட்டலாம். இக்குறைபாடுகள் அறவே நீங்குதல்வேண்டும்.

மற்றொரு தவறான கருத்து :

இது தவிர, கிராம மக்களிடம் மற்றொரு தவறான எண்ணமும் குடிகொண்டிருக்கிறது. ‘சிறந்த உணவு என்பது செலவு மிகுந்தது. அது வறுமையில் வாடும் நாட்டு மக்களுக்குக் கிட்டாததொன்று; பணம் படைத்த மக்கட்கே கிட்டும்’ என்பதே அந்த எண்ணமாகும். அவர்கள் மனத்தினின்று அவ்வெண்ணம் அகல வேண்டும்.

சிற்றூர்களில் கிடைக்கும் பொருள்களைக் கொண்டே சமச்சீர் உணவு தயாரிக்கலாம். உள்ளூர்ப் பொருள்களிலுள்ள சத்துக்களைச் சிறிதும் பாழாக்காமல் அவற்றின் பலனை முழுதும் பெறுமாறு செய்யலாம்; உணவிலுள்ள குறைபாடுகளையும் அறியச் செய்யலாம்.

அமைதியான முறையில், இன்னு செய்யாத முறையில் புரட்சிகரமான மாறுதலை நோக்கமாகக் கொண்டுள்ள ஆதாரக் கல்வித் திட்டமே இக்குறைபாடுகளை நீக்க முதற்படியாக அமைகிறது.

இலவச உணவளிப்பின் நோக்கங்கள் :

எனவே, பள்ளியில் உணவளிப்பதன் நோக்கங்களாவன : (i) மாணவர்களின் வீட்டு உணவிலுள்ள குறைபாடுகளை ஒருவாறு குறைத்தல்; (ii) உணவு உண்ணும்போது கடைப்பிடிக்கவேண்டிய நற்பழக்கங்களைப் பயிற்றுதல்; (iii) உணவு நூலின் அடிப்படைச் செய்திகளைக் கற்பித்தல்; (iv) இவற்றை ஒட்டிய அலுவல்கள் மூலம் சமூகப் பயிற்சியளித்தல்; (v) உள்ளூர்ப் பெரியோரின் கொடைத்தன்மையை ஏழை மாணவர்களுக்குப் பயன்படுத்தல்.

இடம், நீர், பணம் ஆகிய வசதிகள் இருந்தால் நண்பகல் உணவைப் பள்ளியிலேயே தயாரித்து, மாணவர்களின் உதவியைக்கொண்டு முறையாகப் பகிர்ந்தளித்துச் சிறப்பான முழுப் பயன் பெறலாம். ஆனால் ஆண்டு முதல் தொடர்ந்து உணவளிப்பதற்குப் போதுமான பணம் வேண்டாமா?

ஆதாரப் பள்ளி நடைபெறும் ஊரிலும், அருகிலும் வள்ளல்தன்மைகொண்ட செல்வரும், தொண்டாற்றும் மனப்பான்மையுள்ள பரந்த மனம் படைத்த

வர்களும், குழந்தைகள்பாற் பரிவுகொண்ட குழந்தை யன்பர்களும், பணிவுகொண்ட அறிஞர்களும், செல்வாக்குள்ள உழைப்பாளர்களும் இல்லாமல் இரார். பள்ளி செவ்வையாகப் பணியாற்றினல் அது உடனே அவர்களுக்கு எப்படியாகிலும் தெரிந்துவிடும். தம் வீட்டுக் குழந்தைகள் பேசும் முறையிலிருந்தும், நடத்தை நயங்களிலிருந்தும், பிறருடன் பழகும் தன்மையிலிருந்தும், அவர்களின் வாழ்க்கை முறையிலிருந்தும் பள்ளியில் நடக்கும் வேலைகளைப்பற்றி அவர்கள் அறியக்கூடும். மாணவர்கள் தாமே பள்ளி ஆசிரியர்களைப் புகழ்ந்து பாராட்டிச் சொல்வதிலிருந்தும் அவர்கள் அறியக்கூடும். இவ்வாறு பலவாருகப் பள்ளியின்பால் அன்பும் பரிவும் அவர்கள் மனத்தில் எழும்; நல்ல உதவி மனப்பான்மையும் அவர்களிடம் உதிக்கும்.

திங்களுக்கு ஒரு முறை கூடும் பெற்ருேர் சங்கக் கூட்டத்தின் வாயிலாகப் பள்ளியின் தேவைகளை ஆதாரங்களுடனும் புள்ளி விவரங்களுடனும் தெரிவித்தால் சில பெற்ருேர்களை உறுப்பினராகக்கொண்டே 'பள்ளி உணவுக் குழு' ஒன்றை உருவாக்கலாம். ஆசிரியர் பின்புலத்தில் நின்றுகொண்டு அக் குழுவின் வாயிலாகவே போதிய அளவு உதவிபெறலாம். பணம் திரட்டவோ, பொருளுதவி திரட்டவோ அக் குழு பொறுப்பு ஏற்றுக்கொள்ளும். ஆசிரியர் தொண்டருக்குத் தொண்டராய்க் குழுவின் பிற வேலைகளில் மட்டும் ஈடுபடவேண்டும்; சுயநலங்கொண்டு குழுவின் வேலைகளில் குறுக்கிடக்கூடாது.

பணம் அல்லது பொருள் திரட்டும் வேலையில் ஆசிரியர் ஒருகாலும் ஈடுபடுதல்கூடாது. அவ்வாறு பொருள் திரட்டப் புறப்பட்டால் எதிர்பாராத

இடையூறுகளும் சிக்கல்களும் எழும். தவிர, அவருக்கு இயல்பாகவுள்ள கடமைகளைச் செய்ய நேரமும் இராதுபோகும். உணவளிப்பு சம்பந்தமாக ஆசிரியர் தம் கடமைகளைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். உணவளிப்புத் திட்டத்தின் நோக்கம் வெற்றிபெறச் செய்வதற்கே அவர் பாடுபடவேண்டும்.

ஆசிரியர் செய்யவேண்டியவற்றைக் கீழே குறிப்பிடுவோம் :

1. சத்துள்ள உணவு எது, சத்தை இழக்காமல் சமைப்பது எப்படி என்று அறியச் செய்தல்.

2. சீரான உணவு, கலப்புணவு என்றால் என்ன என்பதை அறிவுறுத்தல்.

3. உணவு சம்பந்தமான நற்பழக்கங்களை ஏற்படுத்தல்.

4. சமூகப் பயிற்சி அளித்தல்.

5. உணவு நூலின் அடிப்படைச் செய்திகளைக் கற்பித்தல்.

6. தோட்டவேலைத் திட்டத்துடன் உணவளிப்புத் திட்டத்தை இணைத்தல்.

7. உணவளிப்புத் திட்டம் தொடர்ந்து நடைபெறுமாறு பெற்றோர் சங்கத்தின் உதவியைப் பெறுதல்.

8. முன்னரே குறித்துள்ள உணவளிப்புத் திட்டம்பற்றி வைக்கவேண்டிய ரிஜிஸ்தர்களில் பதிவுசெய்தல். [இவ்வேலைக்கு மேல் வகுப்பு மாணவர்களைப் பயிற்றுவித்துப் பயன்படுத்திக்கொள்ளலாம்.]

இவ்வகையான வசதிகள் எல்லாம் சில பள்ளிகளில் ஆரம்ப நிலையில் கிட்டாமலிருக்கலாம். அவற்றைக் குறித்து ஆசிரியர் மனந்தளராமல் தம் வேலையைத் தொடர்ந்து ஒழுங்காகச் செய்துவரவேண்டும். பள்ளத்திற்பாயும் வெள்ளம்போல உண்மை உழைப்பை நாடி உதவி ஓடிவரும்; பொருள், பணம், ஆள், புகழ் எல்லாம் ஓடிவரும். காந்திஜியின் வாழ்க்கையே இதற்குச் சான்றாகும்.

ஒழுங்கான தினசரி உணவளிப்புத் திட்டம் அமைக்க இயலாத சிற்றூர்களிலும் மாணவர்களின் வீட்டுணவிலுள்ள குறைபாடுகளைக் குறைக்க ஓர் உபாயத்தைக் கையாளலாம். மாணவர்களையே உணவு கொண்டுவரச்செய்து, சுத்தமாகவும் அழகாகவும் சேர்ந்து உண்ணச் செய்யலாம். இச்செயலும் மாணவர் களுக்குப் பேருதவியாகும். சில தருணங்களில் பள்ளி முழுவதுக்கும் விருந்து நடத்தி, மேற்கூறிய நன்மை களைப் பெறலாம். ஊரில் திருமணங்கள் நிகழுங்கால் ஆசிரியர்களின் செல்வாக்கு வாயிலாக இதைப் பயன் படுத்துவது சிற்றூர்களில் அரிய காரியமன்று.

கார்த்திகைத் திங்களில் மழை நின்றபின் குடும்பம் குடும்பமாக ஊருக்கு வெளியே சென்று ஆற்றோரங் களிலும், தோப்புக்களிலும், துரவுகளின் அருகிலும் வனபோஜனம் நடத்துவது பெரும்பான்மையான ஊர்களில் நாளிதுவரை நடைபெற்றுவருகிறது. இத்தகைய பருவகால வசதிகளையும் ஆசிரியர் பயன் படுத்திக்கொள்ளலாம்.

உல்லாசப் பிரயாணங்களுக்காகப் போகும்போது வெளியிடங்களில் தங்கி, அங்கே உணவு தயாரிக்கத் தேவையான பொருள்களைக் கொண்டுவரச் சொல்ல லாம். அவற்றை முறைப்படி சமைத்துப் பகிர்ந்து உண்டு நற்பயிற்சிகள் பெறச்செய்யலாம். இது **பாசறை வாழ்க்கை** நடத்துவதுபோலாகும். இதனால் மாணவர் களுக்குத் தன்னம்பிக்கை பிறக்கும்.

உணவளிப்புத் திட்டத்தில் ஆசிரியர்கள் ஈரமுள்ள மனம் படைத்தவராயிருந்தால் மட்டும் போதாது; வீரம் படைத்தவர்களாயும் இருக்க

வேண்டும்; தம் சொல், செயல், பழக்கவழக்கங்கள் வாயிலாகப் பெற்றோரைக் கவர்தல்வேண்டும். அவர்கள் உண்மையாக முழு உள்ளத்துடன் மாணவர்களுக்கும் ஊராருக்கும் ஓயாது உழைத்தால் உணவளிப்புத்திட்டம் பெற்றோரிடமிருந்தே எழுந்து ஆசிரியர்களின் வேலையில் உற்ற துணையாக அமையலாம்.

உண்மையுள்ள உழைப்புக்குப் புகழ் எனப் பெயர் கொண்ட நறுமணம் உண்டு. அம்மணம் ஊரின் எல்லையைக் கடந்து மாநிலமுழுவதும் பரவும். மாணவர்களுக்காகவே பாடுபடும் நிறுவனங்களிலும் புகுந்து நறுமணம் வீசும். அதன் பயனாகப் பலவகை உதவி கிட்டும். உலகத்தில் வேறு நாடுகளில் இத்துறைகளில் பணியாற்றும் நிறுவனங்களிலிருந்து பால்தூள், பேரீச்சம்பழம், பால்பொருள்கள், கோதுமை, சோளம் போன்ற உணவுத் தானியங்கள், ஜீவசத்து மாத்திரைகள் என்ற பலவகை உருவங்களில் உதவி கிட்டும். அண்மையில் இத்தகைய உதவி பள்ளி மாணவர்களுக்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள், ரஷியா முதலிய நாடுகளிலிருந்து கிடைத்தன.

பள்ளியிலுள்ள எல்லா மாணவர்களுக்கும் உணவு அளிக்கவேண்டுமென்பதில்லை; ஏழைக் குழந்தைகட்கு மட்டும் உணவு அளித்தால் போதுமானது.

சென்னை அரசாங்கத்தில் **ஹரிஜனத் துறை** என்னும் ஒரு தனித் துறை இருக்கிறது. அதன் ஆதிக்கத்தில் பல மாவட்டங்களில் ஹரிஜன நலப் பள்ளிகள் நடைபெறுகின்றன. அப்பள்ளிகளில் இலவச நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. ஏழை ஹரிஜனக் குழந்தைகளின் வீட்டு உணவிலுள்ள குறைபாடுகளை

ஓரளவு நீக்கவே இத்திட்டம் ஏற்பட்டுள்ளது. அவ்வகைப் பள்ளிகளில் சில ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட்டுள்ளன. அவற்றில் எல்லாம் இந்த அத்தியாயத்தில் விவரித்துள்ள பயிற்சி அளிக்கும் வசதி இயல்பாக அமைந்துள்ளது. அப்பள்ளிகளில் தொண்டாற்றும் ஆசிரியர்கள் தமக்குக் கிடைத்துள்ள இவ்வரிய வாய்ப்பைக் கைநழுவவிடக்கூடாது.

10-A. கலை நிகழ்ச்சிகள்

ஆதாரப் பள்ளிகளில் நடத்தவேண்டிய ஐவகைப் பெரும் வேலைத் திட்டங்களில் ஐந்தாவதாகக் குறிக்கப் பட்டுள்ள வேலைத்திட்டம் 'கலை நிகழ்ச்சிகள்' ஆகும். இவற்றில் மாணவர்களின் கலை உணர்ச்சியை வளர்க்கும் செயல்களும், மாணவர்களின் களியாட்டங்களும் இடம் பெறும். இவற்றில் ஆசிரியர்களும் பங்கு எடுத்துக் கொள்ளலாம். எனவே, பயிற்சியாளர் இவற்றைப்பற்றி ஆதாரப் பள்ளிகளில் உற்றுநோக்குங்கால் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையறிதல் பயன் தரும்:

1. இந்நிகழ்ச்சிகளை எங்கு, எப்பொழுது நடத்து கிறார்கள்? [பள்ளி நேரத்திலா, வெளி நேரத்திலா, வேறிடத்திலா]

2. இவை பள்ளி வேலைகளாகக் கருதப்படுகின் றனவா? அல்லது அவற்றுக்குப் புறம்பானவையாகக் கருதப்படுகின்றனவா?

3. ஆண்டு முழுவதற்குமான கலை நிகழ்ச்சித் திட்டம் ஒன்று இருக்கிறதா? திட்டம் தீட்டும்போது என்னென்னவற்றைக் கவனிக்கிறார்கள்?

4. இவற்றில் என்னென்ன விஷயங்கள் சேர்க்கப் படுகின்றன?

5. இவற்றில் உள்ளூர்க் கலைஞர்களின் உதவியைப் பயன்படுத்திக்கொள்கிறார்களா? அந்த வட்டாரத்திலுள்ள கலை மரபுகளைப் பின்பற்றுகிறார்களா? எந்த அளவுக்கு?

6. இவற்றைப் பள்ளிகளில் நடத்துவதன் நோக்கங்கள் யாவை?

7. இவற்றில் ஆசிரியரின் பங்கு என்ன? மாணவர்களின் பங்கு என்ன? பெற்றோர்களின் பங்கு என்ன?

8. இவற்றுக்குத் தேவையான கருவிகள், உபகரணங்கள் இருக்கின்றனவா?

பரிபூரண வாழ்க்கையில் கலையுணர்ச்சியின் இடம்: ஆதாரக் கல்வியின் நோக்கம் ஒரு குழந்தையினுடைய எல்லாப் பண்புகளையும் சமமாகவும் சீராகவும் வளர்ப்பதும், பண்பு மிக்க பரிபூரண வாழ்க்கை நடத்தவல்ல ஒரு நற்குடியாக அவனைச் செய்வதும் ஆகும் அல்லவா? அவனுடைய கலையுணர்ச்சியைச் சிறு பிராயம் முதற்கொண்டே பேணி வளர்க்காவிடில் அவன் எங்ஙனம் பரிபூரண வாழ்க்கை நடத்த இயலும்? எனவே, அழகை ஆக்குவதும், அழகைச் சுவைப்பதுமான இக்கலையுணர்ச்சி முழு மனிதனுக்க முயலும் ஆதாரக் கல்வித் திட்டத்தில் சிறப்பான இடம் பெற்றுள்ளது.

விளையாட்டு, கிளர்ச்சியூட்டும் வேலைகளில் ஈடுபடுதல் முதலியன மாணவர்களுக்குப் புத்தூக்கம் தரவல்லவை. விருப்பமான வேலைகளில் பங்கெடுத்தல், களிப்பூட்டும் வேலைகளில் ஈடுபடுதல் ஆகிய செயல்கள் உடல், உள்ளம், ஆன்ம நலத்துக்கு இன்றியமையாதன.

"விளையாட்டே இல்லாமல் ஒரு சிறுவன் எப்பொழுதும் உழைப்பிலேயே ஈடுபட்டிருப்பானேயாகில் அவன் விரைவில் மந்தனுவான்." எனக் கூறுகிறது ஓர் ஆங்கிலப் பழமொழி.

ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் வேலையிலுள்ள உழைப்புக்குப் பின்னர் ஓய்வுநேரம் இருக்கிறது. அந்த ஓய்வுநேரத்தில் பயனும் இன்பமும் தரும் விளையாட்டுப் போன்ற புத்துயிரளிக்கும் செயல்களில் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை மேற்கூறிய பழமொழி எடுத்துக்காட்டுகிறது.

சிறுவர்களுக்கு ஓய்வுநேரம் மிகுதி. அதைத் தகுந்தபடி பயன்படுத்த ஆசிரியர் உதவிபுரியவேண்டும். அவர்களிடம் இயற்கையாக அமைந்துள்ள கலையுணர்ச்சியைக் கண்டறிய ஆசிரியர்கள் முயலவேண்டும். பாட்டு, நடனம், நடிப்பு, பேச்சு, அலங்காரம் செய்தல் போன்ற பலவகை வாய்ப்புக்களைத் தருணத்திற்கேற்ப அளித்தால் மாணவர்களின் மனத்திலுள்ள கலையுணர்ச்சி மலரும். அதை ஆசிரியர்கள் பேணி ஆதரித்துப் பாராட்டி வளர்க்கப் பயிற்சி முறைகள் அமைக்க வேண்டும்.

பல்வேறு தருணங்களில் எது நல்ல சுவை பொருந்தியது, எது பொருத்தமானது, எது ரசிக்கத்தகுந்தது, எது தள்ளத்தக்கது என்று திட்டவட்டமாய் அறிய மாணவர்களைப் பயிற்றவேண்டும். எது அழகானது என்று தெரிந்து அறியப் பயிற்றவேண்டும். அது எளிதான காரியமன்று. இசையையோ, நாடகத்தையோ, ஓவியத்தையோ, இலக்கியத்தையோ, இயற்கையழகையோ ரசிப்பதற்குப் பயிற்சி தேவை. பள்ளிகளில் நடத்தப்படும் கலை நிகழ்ச்சிகள் மாணவர்களின்

மேற்கூறிய கலையுணர்ச்சியை வளர்க்க வழிவகை செய்கின்றன.

கலையுணர்ச்சியைப் பேணி வளர்க்க உதவும் சாதனங்கள் : கலையுணர்ச்சியைப் பேணி வளர்க்கப் பின்வருவன உதவுகின்றன என்று பாடத்திட்டம் எடுத்துக்காட்டுகிறது :

(1) இலக்கியம், (2) இசை, நடனம், நாடகம், (3) ஓவியம், வர்ணம் தீட்டுதல், ஒப்பனைக் கலைகள், (4) கிளர்ச்சியூட்டும் உடற்பயிற்சியும் விளையாட்டுக் களும்.

இவை நான்கும் வெவ்வேருகக் குறிக்கப் பட்டாலும் அவை ஒன்ருேடொன்று நெருங்கிய தொடர்புகொண்டவை. ஒரு நல்ல நாடகத்தில் இவையெல்லாம் (அல்லது பெரும்பான்மையானவை) இடம் பெறும். எனவேதான் ஒவ்வோர் ஆதாரப் பள்ளியிலும் ஆண்டுக் கொருமுறையாவது ஒரு நல்ல நாடகம் நடத்துவது அவசியம் எனக் கருதப்படுகிறது. நடிப்போரும் காண்போரும் அழகை யுணரவும், ரசிக்கவும் நாடகம் ஒப்பற்ற வாய்ப்பு அளிக்கிறது. ஆதலால் அது ஒரு சிறந்த கலைப் பயிற்சியாகும்.

மேலே குறித்த நான்கு தலைப்புக்களிலும் மாண வர்களின் திறமை வேறுபடும் எனச் சொல்லத் தேவை யில்லை. இலக்கிய, இசை, நடன, நாடக, ஓவிய, விளை யாட்டுச் செயல்களில் அவர்கள் பெறும் மகிழ்ச்சியும், களிப்பும், புத்துயிர்ப்பும் வேறுபடும். எனவே, எவரெவர்க்கு எதெது பிடித்திருக்கிறதோ, எதில் திறமையிருக்கிறதோ அச்செயலில் அவர்கள் மனத்தைக் குவிக்க ஆசிரியர்கள் ஆதரவு தந்து உதவவேண்டும்.

இக்கலை நிகழ்ச்சிகள் நிறைந்த கல்விப் பயன் வாய்ந்தவை. அதனாலேயே அவை பள்ளிவேலைத் திட்டமாக ஒரு முக்கிய அங்கம் பெற்றுள்ளன என்பதை ஆசிரியர்கள் அனைவரும் உணரவேண்டும். அவ்வாறு அறியாவிடில் ஆதாரக் கல்வியின் நோக்கங்களையும், அதன் வேலைத் திட்டங்களின் அருமை பெருமைகளையும் அவர்கள் அறிந்தவர்கள் ஆகார்.

கலை நிகழ்ச்சிகள்பற்றிய தவறான கருத்து: ஆசிரியர்களிற் சிலர் கலை நிகழ்ச்சிகளைக் கேலிக் கூத்தாகவும், தமாஷாகவும் கருதுகிறார்கள். சிலர் கலை நிகழ்ச்சிகளைப்பற்றிப் பாராமுகமாகவும், அலட்சிய மனப்பான்மையுடனும், அவற்றில் கலந்துகொள்ளாம லும், விலகியும் இருந்துவிடுகின்றனர். ஆதாரப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களே இவ்விதம் கருதினால் முழு விவரம் அறியாத பொதுமக்கள் இவற்றைப்பற்றித் தவறான எண்ணங்கொள்ளுவது புதுமையாகாது. கலை நிகழ்ச்சி கள் வாயிலாகக் களிப்பும், களிப்புடன் கல்விப் பயன் களும் கிட்டுகின்றன என்ற உண்மையை ஆசிரியர் மறக்கவே கூடாது.

கலை நிகழ்ச்சிகளில் யார் யார் பங்கெடுக்கலாம்? கலை நிகழ்ச்சிகளில் பள்ளியிலுள்ள எல்லா வகுப்பு மாணவர்களும் பங்கெடுக்க அரிய வாய்ப்பு உண்டு. வயதில் சிறிய முதல் வகுப்பு மாணவர்கள்கூட அவற்றில் பங்கெடுத்துப் பிறரை மகிழ்விப்பதுடன் தாமும் சீரிய பயிற்சி பெறலாம். ஆசிரியர்களும் மாணவர்களுடன் சேர்ந்து பங்கெடுக்கலாம்.

கலை நிகழ்ச்சிகளில் இலக்கிய நிகழ்ச்சிகள்: இப்போது மேலே கூறிய நான்கு தலைப்புக்களின்கீழ்

என்னென்ன கலை நிகழ்ச்சிகளை நடத்தலாம் எனக் கவனிப்போம்.

(i) **இலக்கியம்:**

இலக்கிய ரசனைக்கு முதல் வகுப்பிலேயே அடி கோலவேண்டும். அவ்வாறு அடிகோல நல்ல, எளிய குழந்தைப் பாடல்கள், கதைப் பாடல்கள், பக்திப் பாடல்கள் முதலியவற்றை ஆசிரியர் நன்குகப் பாடிக் காட்டலாம்; அல்லது மாணவர்கள் சிலரைச் சேர்ந்து அவற்றைப் பண்ணுடன் பாடச் செய்யலாம். பெருங்காப்பியங்கள், சிறந்த கதைகள், நாடகங்கள் முதலியவற்றிலிருந்து சிறப்பான பகுதியை மேல் வகுப்பு மாணவர்களை ஒப்பு விக்கச் செய்யலாம்; அல்லது நடித்துக் காட்டச் செய்ய லாம்; பிற சமயப் பெருநூல்களின் நல்ல மொழிபெயர்ப் புக்களிலிருந்தும் சிறப்பான பகுதிகளைப் படிக்கச் செய்ய லாம். **எளிமை, அழகு, ஓசை, எதுகை, மோனை, பொருள்** முதலிய **இலக்கிய நயங்களும் சுவையும்** கெடாமல் அவற்றை எடுத்துக்காட்டும் வகையில் குழந்தைகள் பாடவோ படிக்கவோ வேண்டும்.

அமரகவி பாரதியார், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை ஆகியோரின் சுவைமிக்க குழந்தைப் பாடல் களைக் கட்டாயம் கற்றுக்கொடுக்கவேண்டும். அவை ஒப்பற்றவை; பொருள் பொதிந்தவை; ஊக்குவிப்பவை.

நமது நாடு சுதந்திரம் பெற்றபின் எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. குழந்தை இலக்கியம் இல்லையே என்ற குறை நீங்க, குழந்தை இலக்கியத் துறையில் இந்த மலர்ச்சி உண்டாகி விரைவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. குழந்தை எழுத்

T N57 146879

தாளர் சிலர் அழகான, சுவையுள்ள, கருத்து மிகுந்த குழந்தைப் பாடல்களை எழுதிவருகிறார்கள். குழந்தைகளுக்கெனவே பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவற்றில் சில நல்ல இலக்கியங்களைக் காணலாம். இவற்றுள் குழந்தைக் கவிஞர், **அழ. வள்ளியப்பா** எழுதிய "மலரும் உள்ளம்" என்னும் குழந்தைக் கவிதை நூலை இங்குக் குறிக்கலாம். அதன் சிறப்பைப் பாராட்டிப் பேராசிரியர், ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்கள். "மன்னும் கவிதை மணம் வீசும் **மலரும் உள்ளம்**" என்று காலஞ்சென்ற **கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை** யவர்களும் வாழ்த்துப் பா அருளியிருக்கின்றனர். அதிலுள்ள பாடல்கள் சுவை பொருந்தியவை; கருத்து நிறைந்தவை. குழந்தைகளின் இலக்கியக் கலை யுணர்ச்சியை வளர்க்க அந்நூல் மிகவும் பயன்படும்.

வேறு சில *குழந்தைப் பாடல் தொகுப்புக்களும் வெளிவந்துள்ளன. அவற்றிலிருந்தும் இலக்கியச் சுவையுள்ளவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்.

(ii) இசை, நடன, நாடக நிகழ்ச்சிகள் :

கலை நிகழ்ச்சிகளுக்கு இவை மூன்றும் மிகச் சிறப்புத் தருபவை. ஆண் பெண் குழந்தைகளுக்கு இச் செயல்களில் ஈடுபட மிக்க விருப்பம். பொது மக்களைக் கவரும் நிகழ்ச்சிகளும் இவையே ஆகும். பள்ளிக் கலை நிகழ்ச்சிகள் சிறப்புறுவன இவற்றாலேதான். ஆகையால் இவற்றை நடத்துங்கால் ஆசிரியர்கள் மிக விழிப்புடன் இருக்கவேண்டும்.

---

*ஆதாரப் பள்ளிப் பிரார்த்தனைப் பாடல்களும் கொடி வணக்கப் பாடல்களும் என்ற நூல் இளைஞர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

"ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமடா" என்றார் அமரகவி பாரதியார் இசையைக் குறித்து. கீழ் வகுப்பு மாணவர்களை நல்ல இசையுடனும் ஒழுங்கான அசைவுடனும் பாடச் செய்யலாம்.

மாணவிகளுக்குக் கும்மி, கோலாட்டம் ஆகிய செயல்கள் இங்குக் குறிக்கற்பாலன. பழைய கும்மிப் பாடல்களையே பாடாமல், சுகாதாரம், நாட்டுப்பற்று, குழந்தை வளர்ப்பு, உழைப்பால் உயர்ந்தோர் வரலாறு, அணைத் திட்டம் போன்ற அரும்பெரும் சாதனைகளைப்பற்றிய விவரங்களையும் எளிய பாக்களில் அமைத்துப் பாடலாம். இவ்வாறு மாற்றியமைப்பது இக்காலத்திற்குப் பொருந்திய செயலாகும்.

தனி இசை ஆசிரியர் தேவையா?

ஆதாரப் பள்ளிகளில் இசை கற்பிப்பதற்கென ஒரு தனி ஆசிரியருக்கு இடமில்லை. எனவே, வகுப்பு ஆசிரியர்களே இசை கற்பிக்கவேண்டும். பள்ளியிலுள்ள ஆசிரியர் எவருக்கும் இசைப் பயிற்சியே இல்லாவிடில் உள்ளூரிலோ, சுற்றுப்புறத்திலோ உள்ள இசை வல்லுநர்களின் உதவியைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அவர்கள் பள்ளிக்கு வந்து பாட்டுக்களைப் பாடிக் காண்பிக்கலாம்; முடியுமானால் வகுப்புக்கு வந்து மாணவர்களுக்கு முறையாகக் கற்பிக்கலாம். ஆனால் பள்ளித் தலைமையாசிரியர் தேர்ந்தெடுக்கும் பாடல்களையே அவர் கற்பித்தல்வேண்டும்.

இசைக் கருவிகள் தேவையா?

இசைக் கருவிகளுடன் சேர்ந்து இணைந்து பாடுவது இனிமையாக இருக்கும். வாய்ப் பாட்டுக்களுடன் இசைக் கருவிகளும் இணைந்தால்தான்

கலைநிகழ்ச்சிகளுக்கு ஜீவகளை ஏற்படும்; குழந்தைகளின் கலையுணர்ச்சியும் விரைவில் வளரும். உள்ளூர்ப் பழக்கத்திலுள்ள கருவிகளாகிய சுருதிப்பெட்டி, தப்புரா, டோலக், மிருதங்கம், கஞ்சிரா, ஜாலரா முதலியவற்றையே பயன்படுத்தவேண்டும். ஹார்மோனியம் அவ்வளவு சிறந்த கருவியன்று. அதை உபயோகிக்கக்கூடாதென்று பாடத்திட்டம் கூறுகிறது. புல்லாங்குழல், ஒரு கம்பியுள்ள தம்புரா முதலிய எளிய இசைக் கருவிகளை ஆசிரியர்களும் மாணவர்களும் கூடிச் செய்து நிகழ்ச்சிகளில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கலை நிகழ்ச்சிகளில் இடம்பெறக்கூடிய பாடல்கள் :

கீழ்க்கண்ட பாடல் வகைகளைத் திரட்டித் தொகுப்பு ஒன்றைத் தயார்செய்துகொண்டால் பின்னர் ஆதாரப் பள்ளிகளில் கலை நிகழ்ச்சிகளை நடத்துங்கால் தருணத்துக்கேற்ற பாடல்களை முன் கூட்டியே கற்பித்துப் பயிற்சியளிக்கக் கஷ்டம் தோன்றாது.

1. எளிய பஜனைப்பாடல்கள் (பாச்சாற்று)-சமயப் பாடல்கள் - (தேவாரம், திருவாய்மொழி, திருப்புகழ், அருட்பா முதலியன)

2. பண்ணுடன் பாடும் நாமாவளிகள் (திவ்ய நாம சங்கீர்த்தனம், ராம்துன்)

3. நாட்டுப் பாடல்கள் (தேசிங்கு ராஜன், கட்டபொம்மன்), இயற்கை வருணனைப் பாடல்கள் (வசந்தம், இலையுதிர் காலம், மாரிக்காலம், கோடைக்காலம்)

4. வழிநடைப் பாடல்களும் அபிநயப் பாடல்களும்

5. மக்கள் விரும்பும் வேறு வகை இனிய பாடல்கள்.

இனிமையாய்ப் பாடுந்திறன் எல்லா மாணவரிடமும் இராது என்பது நன்கு அறிந்ததே. எனினும்,

சேர்ந்து பாடுவதிலுள்ள இன்பத்தை அறியச் செய்ய வேண்டும். கலை நிகழ்ச்சிகளில் கீழ் வகுப்பு மாணவர்கள் சேர்ந்து கோஷ்டிக் கானமாகப் பாடுவது சிறந்தது. தொடக்கத்திலிருந்தே தெளிவான உச்சரிப்புடன் தாளம் பிசகாமல் சரியான உடல்நிலையில் நின்றுகொண்டு பாடவேண்டும். ஒரே காட்டுக் கூச்சலாக அடித் தொண்டை கிழியுமாறு கத்தவோ, ஒரு சிலர் மட்டும் வேகமாகவோ பாடக்கூடாது. பெற்றோர்களின் முன்னிலையில் கலை நிகழ்ச்சிகள் நடத்துமுன் முறையான, தொடர்ந்த கூட்டுப் பயிற்சி அவசியமானது.

ஒரு மாணவன் தனியாகப் பாடும் திறமை பெற்றிருந்தால் தனியாகப் பாட அநுமதிக்கலாம். ஒழுங்கான சாஸ்திரீய முறையில் தனியாகப் பாடுவதற்கு ஆறும், ஆறுக்கு மேற்பட்ட வகுப்பு மாணவர்கட்கு அநுமதி கொடுக்கலாம். இவை ஆசிரியருக்கு யோசனையே யன்றி ஒரு கட்டளையன்று. மாணவர்களின் தனித் தனித் திறமைக்கேற்ப சுதந்திரத்துடன் வேலைபுரிய ஆதாரக் கல்வித் திட்டத்தில் அவருக்கு உரிமை யுண்டு என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

நடன, நாடக நிகழ்ச்சிகள் : முதல் ஐந்து வகுப்பு மாணவர்களுக்கு இவை மிக்க பயனுள்ள கல்வி வேலைத் திட்டமாகும். குழுக் குழுவாக நடனம் ஆடவும், எளிய நாடகங்களை நடிப்பதிலும் அவர்களுக்குச் சிறந்த பயிற்சிகள் அளிக்கவேண்டும். மேல் வகுப்புக் களுக்கும் இவை பொருந்தும்.

நாட்டுப்புற மக்களின் எளிய காலடிகள்கொண்ட சுலபமான நடனங்களையே நடனம் என்ற பகுதியில் குறிக்கப்படுகிறது. பரத நாட்டியம், கதகளி நாட்டியம், அஸ்ஸாம் நடனம் போன்றவை ஆதாரப் பள்ளிகளில்

சாத்தியமானவையல்ல. அவற்றிற்கு மிகுந்த பயிற்சி தேவை; உடையலங்காரத்திற்குச் செலவும் மிகுதி; சிக்கல்கள் மிகுந்த அபிநயங்கள் வளர்ந்து வளம் பெற்றவை அவை.

எளிய நாடகங்கள் எழுதி நடிப்பது ஆதாரப் பள்ளிகளில் ஒரு சிறப்பான வேலைப் பகுதியாகும். எனவே, பயிற்சியாளர்கள் ஆசிரியப் பயிற்சி பெறுங் காலத்திலேயே போதுமான எளிய நாடகங்கள்கொண்ட தொகுப்பு ஒன்று தயாரித்து உடன் எடுத்துச்செல்ல வேண்டும். பின்னர், தாம் வேலைசெய்யவேண்டிவரும் ஆதாரப் பள்ளிக் கலை நிகழ்ச்சிகளுக்கு அந் நாடகத் தொகுப்பு பெரிதும் பயன்படும்.

நாடக, நடன நிகழ்ச்சிகள் **கிராம வாழ்க்கையுடனும், சுவையுள்ள** பிற **சம்பவங்களுடனும் தொடர்பு** கொண்டவையாக இருக்கவேண்டும். உதாரணமாக,

1. பள்ளியிலோ கிராமங்களிலோ விதைத்தல், அறுவடை செய்தல் போன்ற பயிர்த்தொழில் சம்பந்தமான நாடகங்களும் நடனங்களும்.

2. புராணங்கள், வீரர்கள் வரலாறு, சமயாசாரியர்கள், தமிழ்ப் புலவர்கள் வரலாறு ஆகியவற்றிலிருந்து சுவையுள்ள நிகழ்ச்சிகள்.

3. நாட்டு வரலாற்று நிகழ்ச்சிகள்.

4. பிற நாட்டுக் குழந்தைகளின் வாழ்க்கை வரலாறுபற்றிய நாடகங்கள்.

5. தாம் அவ்வப்போது வகுப்பில் கேட்ட பிற கதைகள்.

(iii) ஓவியம், வர்ணம் தீட்டுதல், ஒப்பனை செய்தல் ஆகிய நிகழ்ச்சிகள் :

மாணவர்கள் தங்கள் உள்ளத்திலுள்ளவற்றை ஓவிய வாயிலாக வெளியிடுகிறார்கள். அவர்களை ஊக்கினால் தங்கள் அன்றாடச் செயல்களிலிருந்தும்,

அநுபவங்களிலிருந்தும், கற்பனைகளிலிருந்தும் ஓவியங்கள் வரைகிறார்கள். தாம் வரைந்த ஓவியத்திற்குக் காட்சியிலிருந்தும், கற்பனையிலிருந்தும் வர்ணம் தீட்டுகிறார்கள்; பல பல உருவங்களை வரைகிறார்கள். பூ, கொடி, பறவை, விலங்குகள், மீன், தேர், விளக்கு, நாற்காலி, சூரியன், சந்திரன், மலை போன்ற பலவகைச் சிக்கலான உருவங்களைப் பொட்டுவைத்துக் கோல ரூபமாக வரைகிறார்கள். வகை வகையான இழை கோலங்கள் வெள்ளை நிறத்திலும், சிவப்பு நிறத்திலும் போடுகிறார்கள். விதவிதமான வட்டம், சதுரம் போன்ற க்ஷேத்திர நூல் உருவங்கள் வரைந்து, பலவகை வர்ணத்தூள் கொண்டு அவற்றை மேலும் அலங்கரிக்கிறார்கள். தோரணங்களாலும், பூக்களாலும், தழைகளாலும் படங்களையும், அறைகளையும், முன்புறத்தையும் அலங்காரஞ் செய்கிறார்கள். இவற்றில் எல்லாம் குறைபாடுகள் இருக்கலாம். எனினும், இவற்றின் மூலமாக மாணவர்களின் கலையுணர்ச்சி வளருகிறது. அதை நசுக்காமல் பேணிப் பாராட்டி ஊக்கி வளர்க்க வேண்டும்.

ஆதாரப் பள்ளியில் களியாட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், விழாக்கள் முதலியவற்றை நடத்த நேரிடும்போது அததற்கேற்ற அலங்காரம் செய்யவேண்டிவரும். அப்போது மேடை அலங்காரம், பள்ளி அலங்காரம், தரை அலங்காரம், சுவர் அலங்காரம், இயற்கைக் காட்சி காட்டும் நாடகத் திரைத் தயாரிப்பு போன்ற செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்தலாம். படம் எழுதவோ, பிள்ளையார், கண்ணன் போன்ற உருவம் செய்யவோ மாணவர்கள் முயலவேண்டிவரும்.

எனவே, பயிற்சியாளர்கள் இவற்றில் எல்லாம் பயிற்சி பெற்றிருந்தால்தான் பின்பு தம்மிடம்

ஒப்படைக்கப்படும் மாணவர்களின் கலைத்திறனை வளர்த்து, கலை நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்த முடியும். ஆதலால், ஒப்பனைக் கலைகளிற் பயின்று தம்முடன் போதிய குறிப்புக்களும் மாதிரிகளும் எடுத்துச் செல்லவேண்டும்.

(iv) **உடற்பயிற்சியும் விளையாட்டு நிகழ்ச்சிகளும் :**

ஆதாரப் பள்ளியில் நடக்கும் கலை நிகழ்ச்சிகளில் உடற்பயிற்சியும், பாலர் விளையாட்டு நிகழ்ச்சிகளுங்கூட இடம்பெறும்.

"வரிசையில் நில்" என்று கட்டளையிட்டவுடன் உயரவாரியாகச் சடுதியில் நிற்கவும், மிடுக்காக நிமிர்ந்து அணி வகுத்துச் செல்லவும், வரிசை கலையாமல் நடப்பதும் ஓடுவதும், 'நில்' என்றவுடன் திடுமென நிற்பதும், காலத்திற்கேற்ப வலம், இடம் என மாறி, முறையாகக் காலடித்து நிற்பதும் நடப்பதும், வலம் இடம் திரும்பி நடப்பதும் கலை நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய மற்றோர் அங்கமாகும்.

எளிய யோகஆசனங்களைப் பயின்று, கலை நிகழ்ச்சிகளில் காட்டலாம். எளிய கிராமிய விளையாட்டுக்களையும் (சடுகுடு, கொக்கோ, கிளித்தட்டு, நொண்டி, தொடும் விளையாட்டு) கலை நிகழ்ச்சிகளில் சேர்க்கலாம். கட்சி விளையாட்டுக்களும் விளையாடிக் காட்டலாம்.

கலை நிகழ்ச்சிகளில் என்னென்ன சேர்க்கலாம்?

கலை நிகழ்ச்சிகளில் என்னென்ன நிகழ்ச்சிகளைச் சேர்க்கலாம் என்ற பட்டியல் ஒன்று பின்வருமாறு கொடுக்கலாம்:

(1) இலக்கியப் பகுதிகளை வாசித்தல்: செய்யுளை உணர்ச்சியுடன் ஒப்புவித்தல்; கதை சொல்லுதல்; சிவாஜி,

நேத்தாஜிபோல் வீராவேசத்துடன் பேசுதல். (2) உரையாடல், பாடல் பாடுதல். (3) பாச்சாற்று (பஜனை செய்தல்). (4) நாட்டுப் பாடல் பாடுதல். (5) அபிநயத்துடன் பாடுதல். (6) கதைப் பாட்டு பாடுதல். (7) தொழிற் பாட்டு பாடுதல். (8) நாடகம் நடித்தல். (9) நாட்டுக் கூத்து, நாட்டு நடனம் காட்டுதல். (10) கும்மி, கோலாட்டம் அடித்தல். (11) உடற்பயிற்சி செய்துகாட்டுதல் (அணிவகுத்து நடத்துதல், பள்ளி மாணவர்கள் அனைவரும் உடற்பயிற்சி செய்துகாட்டுதல், கழி விளையாட்டு காட்டுதல்). (12) தமாஷ் பேச்சு, பாட்டு, செயல் (பிறரைப் புண்படுத்தாமல்). (13) குழுவாக ஆக்கவேலை செய்துகாட்டுதல் (பாட்டுடன்). [நூற்பு, நெசவு, பாய் முடைதல், பஞ்சைச் சுத்தம் செய்தல், அரைத்தல், பஞ்சடித்தல், பட்டை போடுதல், சாயம் போடுதல், துணியில் அச்சடித்தல் போன்ற செயல்கள்]. (14) அந்தந்தத் தருணத்திற்கேற்றபடி அலங்காரம் செய்யும் செயல்கள்.

குறிப்பு : *அந்தந்தத் தருணத்திற்கேற்ப, பொருத்தமான சில நிகழ்ச்சிகளைத் தயாரித்தல் போதுமானது; எல்லா வகைகளையும் காட்டவேண்டியதில்லை.*

கலை நிகழ்ச்சிகளில் எல்லா மாணவர்களுக்கும் பங்கு உண்டு :

மேற்குறித்த கலை நிகழ்ச்சிப் பட்டியலிலிருந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள எல்லா மாணவர்களுக்கும் வாய்ப்பு இருக்கிறதெனத் தெற்றென விளங்கும். அவரவர் திறமைக்கேற்ப அவரவர் பங்கெடுத்துக் கொள்ளுமாறு ஆசிரியர் ஊக்கவேண்டும். இந் நிகழ்ச்சிகளில் ஒருவராகவும், இருவராகவும், பலர் சேர்ந்தும் பங்கெடுக்கலாம். பலர் சேர்ந்து நடத்தும் நிகழ்ச்சிகள் பல மாணவர்களுக்கு வாய்ப்பும் பலனும் அளிப்பதுடன்

மிக்க சுவையுடன் அமையும். குறிப்பிட்ட ஒரு சிலருக்கு மட்டும் வாய்ப்பு அளித்தால் பெரும்பான்மையோருக்குச் சுவை குறையும். ஆதலால் பலர் ஈடுபடக்கூடிய **கூட்டு நிகழ்ச்சிகளை** ஆசிரியர் அதிகமாக ஊக்கவேண்டும்.

கலை நிகழ்ச்சிகளை எங்கு, எப்பொழுது நடத்துவது ?

1. ஒவ்வோர் ஆதாரப் பள்ளியிலும் வாரமொரு முறை நடக்கும் பாலர் சபையில் கலை நிகழ்ச்சிகளை நடத்தலாம். அவை சுமார் ஒரு மணி நேரத்திற்கு மிஞ்சாமலிருப்பது நலம்.

I, II வகுப்புக்களுக்கு ஒரு பாலர் சபையும், III, IV, V வகுப்புக்களுக்கு மற்றொரு சபையும், VI, VII, VIII வகுப்புக்கள் இருந்தால் அவற்றிற்கென ஒரு சபையும் அமைத்து நடத்துதல் நலம் பயக்கும். இவ்வாறு பிரிவினை செய்துகொள்வதால் பல மாணவர்களுக்கும் வாய்ப்புக் கிடைப்பதுடன் அவரவர் திறமைக்கேற்பப் பங்கெடுத்துக்கொள்ளவும், நிகழ்ச்சிகளை இரசிக்கவும் இயலும். எல்லா வகுப்புக்களுக்கும் ஒரே பாலர் சபை நிறுவி நடத்தினுல் வயது வித்தியாசத்தினுல் எல்லா மாணவர்களுக்கும் நிகழ்ச்சிகள் சுவையாக இருக்கமாட்டா; பல மாணவர்களும் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்பும் குறைவுறும். எனவே, அம்முறை சிறந்ததன்று.

2. மாதமொருமுறை நடக்கும் பெற்ருேர் சங்கக் கூட்டத்தில் பல பெற்ருேர்களின் முன்னிலையில் இந்நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டலாம்.

3. பள்ளித் தணிக்கையாளர், பார்வையாளர் வருங்காலத்திலும் இந்நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டலாம்.

4. ஆண்டு விழாவில் சிறப்பான நிகழ்ச்சிகளை நடத்தலாம்.

5. பருவகால, தேசிய, சமூக, சமய விழாக்களைக் கொண்டாடும்பொழுதும், மரம் நடும் விழா, உலக சமாதான நாள், உலக சுகாதார நாள்போன்ற விழாக்களைக் கொண்டாடும்போதும் அதததற்குப் பொருத்த மான பலவகை நிகழ்ச்சிகளை நடத்தலாம்.

பள்ளியில் மட்டுமின்றி ஊர்ப் பொது இடங்களிலும், உற்சவ காலங்களிலும், கோவில்களிலும், கிராமத் தொண்டு செய்யப்போகும்போதும், சேரிகளிலும் பொருத்தமான கலை நிகழ்ச்சிகளை நடத்திக்காட்டலாம். அவ்வாறு வேறிடங்களில் நடத்துமுன் சிறப்பான பயிற்சி பெற்றிருக்கவேண்டும்; அரைகுறையான பயிற்சியுடன் நடத்தக்கூடாது. எனவே, இவற்றைப் பள்ளி நேரத்திலும் நடத்தலாம். தேவைக்குத் தகுந்தவாறு வேறு நேரத்திலும் நடத்தலாம். பொருத்தமான உடைகளையும், பொருள்களையும் சிறிது சிறிதாகச் சேகரித்துக்கொள்ளவேண்டும்.

கலை நிகழ்ச்சிகளை நடத்துவதன் நோக்கங்கள் :

பள்ளிகளில் கலை நிகழ்ச்சிகள் கொண்டாடுவதன் நோக்கங்களைப் பின்வருமாறு கூறலாம் :

1. மாணவர்களின் தனிப்பட்ட திறமைகளையும் கலையுணர்ச்சியையும் கண்டுபிடித்து அத்திறமைகளை வெளியிட இயற்கையான வாய்ப்பு அளித்து வளர்க்க;

2. ஓய்வுநேரப் பொழுதை இன்பத்துடனும் பயனுடனும் கழிக்கப் பயிற்சி அளிக்க;

3. பள்ளிக்கும் சமூகத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை வலுப்படுத்துவதுடன் பள்ளி மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் களிப்பூட்டிப் புத்துயிரூட்ட;

4. நல்லவற்றைக் கண்டுபிடித்துச் சுவைக்கப் பயிற்ற;

5. நம் முன்னோர்களின் பண்பாட்டை அறிந்து மகிழ்ந்து பெருமையுறவும், அறிவியல் முறையில் அவற்றைப்பற்றி ஆராயவும்.

கலை நிகழ்ச்சிகளுக்கான ஓராண்டுத் திட்டம் :

இந்நிகழ்ச்சிகளையெல்லாம் பள்ளி வேலையின் ஓரங்கமாகவே கருதுதல்வேண்டும். இவை பள்ளிவேலைக்குப் புறம்பானவையென்றோ, சிறப்பான சில நாட்களுக்காகச் சிந்திக்கவேண்டியவையென்றோ, அல்லது வெறும் கேலிக்கூத்து, தமாஷ் என்றோ ஆசிரியர் பாரா முகமாயும், அலட்சிய மனப்பான்மையுடனும் ஒதுங்கியிருப்பது ஆதாரக் கல்வியின் நோக்கங்களைப் புறக்கணிப்பதாகும் என்று முன்னரே கூறப்பட்டது.

இச்செயல்களில் கல்விப் பயன்கள் பல உள்ளன. அவை கலையுணர்ச்சியை வளர்ப்பதுடன் உடல், உள்ள, ஆன்ம, சமூகப் பண்புகளை வளர்க்கவும், மொழிப் பயிற்சியளிக்கவும் வளம் பொருந்தியவை என்பதை மறக்கக்கூடாது. ஆகவே, அப்பண்புகளைச் சீராக வளர்க்க, கலை நிகழ்ச்சிகளைப் பயன்தரும் வகையில் நடத்த நல்ல திட்டமிடவேண்டியது ஆசிரியரின் பொறுப்பாகும்.

ஒரு பள்ளியில் ஓர் ஆண்டில் குறைந்தபட்சமாக என்னென்ன கலை நிகழ்ச்சிகள் நடத்தலாம், அவற்றை எப்படி, எங்கு நடத்தலாம், அவற்றுடன் என்ன அறிவை இணைக்கலாம், ஒவ்வொரு வகுப்பிலும் தனித் தனியாக நடத்தவேண்டியவை யாவை, எல்லா வகுப்புக்களும் சேர்ந்து நடத்தவேண்டியவை எவை என்று

பள்ளியிலுள்ள ஆசிரியர்கள் கூடிக் கலந்து திட்டமிட வேண்டும். பேராவலுடன் எல்லாவற்றையும் நடத்தத் திட்டமிடுவது சிறந்த திட்டமாகாது. ஒவ்வொன்றிற்கு முரிய முன் – தயாரிப்பு, செயல் நடத்துதல், இயைபுப் போதனை ஆகிய ஒவ்வொன்றிலும் கருத்துச் செலுத்த வேண்டும். கலை நிகழ்ச்சிகளின் பட்டியல் ஒன்று வைத்து, நடந்தவைபற்றிய சுருக்கமான ஒரு குறிப்பும் எழுதிவரவேண்டும்.

கலை நிகழ்ச்சிகளில் பலரது பங்கு :

கலை நிகழ்ச்சிகளில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பங்கை இப்போது கவனிக்கலாம்.

ஆசிரியரின் பங்கு :

1. ஆண்டு முழுவதற்குமான திட்டமொன்று தீட்டவேண்டும். 2. அதற்குத் தேவையான விஷயங்களையும் பொருள்களையும் முன்கூட்டியே திரட்டி வைக்கவேண்டும். 3. அந்தந்தத் தருணத்திற்குப் பொருத்தமான நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். 4. மாணவர்களின் தனித் திறமைகளைக் கண்டறிந்து, ஊக்கிப் பங்கெடுக்கச் செய்யவேண்டும். 5. எந்த நிகழ்ச்சியையும், மகிழ்ச்சியூட்டும் தன்மையையும், கல்விப்பயனையும் மனத்திற்கொண்டு அமைக்க வேண்டும். 6. பிறர் தூஷணைக்கு எந்த நிகழ்ச்சியிலும் இடந்தரக்கூடாது. 7. மாணவர்களுக்குப் பொறுப்பைப் பகிர்ந்தளித்து, சுதந்திரத்துடன் வேலைசெய்ய விடவேண்டும். 8. மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, முறையான, தொடர்ந்த பயிற்சியளிக்கவேண்டும். 9. பொருத்தமான உடைகளையும் பொருள்களையும்

முன்கூட்டியே திட்டஞ்செய்யவேண்டும். 10. குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகளை முடிக்க முயலவேண்டும். 11. பெற்ருேர்கள் வாயிலாக ஆலோசனை, தொண்டு, பொருள், பணம் ஆகிய நால்வகை உதவிகளும் பெற முயலவேண்டும்.

மாணவரின் பங்கு:

1. தம் திறமைக்கேற்ப, பங்கைக் கேட்டு வாங்கிக் கொள்ளவேண்டும். 2. தம் பங்கில் தக்க பயிற்சிபெற முயலவேண்டும். 3. குறித்த காலத்தில் வரவேண்டும். 4. தமக்குக் கிடைத்த பொறுப்பைப் பெரும்பேருகக் கருதி, முழு மனத்துடன் உழைக்கவேண்டும்.

பெற்ருேரின் பங்கு:

(1) கலை நிகழ்ச்சிகளுக்கு அழைப்பிதழ் வந்ததும், தவருமல் பள்ளிக்கு வருதல்வேண்டும். (2) மாணவர்களின் நிகழ்ச்சிகளைப் பாராட்டி ஊக்குதல்வேண்டும். (3) ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஆக்க ஆலோசனை, தொண்டு, பொருள், பணம்போன்ற எல்லா வகைகளிலும் ஊக்கம் அளித்து (Advice, Service, Materials and Money) உதவிபுரிய முன்வரவேண்டும்.

கலை நிகழ்ச்சிகள் நடத்த இடம்:

கலை நிகழ்ச்சிகளை நடத்த ஆதாரப் பள்ளியில் ஒரு கலைக்கூடம் வேண்டுமன்ருே? வகுப்பறைகளிலுள்ள மறைவுத் தட்டிகளை அகற்றிவிட்டால் அது ஒரு சிறந்த **கலைக்கூடம்** ஆகும். சாதாரண நிகழ்ச்சிகளுக்கு அதுவே போதுமானது. சிறப்பான நாட்களுக்குப் பள்ளிக்கு அருகிலேயே வெளியே கலையரங்கு ஒன்று தற்காலிகமாக அமைத்துக்கொள்ளவேண்டும்.

ஆதாரப் பள்ளியின் கலை அரங்குக்கு அதிகப் பொருட்செலவு கூடாது. உள்ளூரில் கிடைக்கும் வல்லுநர்களின் உதவியோடும் மாணவ மாணவிகளின் உதவியோடும் கலையரங்குக்கான உபகரணங்களைத் தயாரித்துக் கொள்ளலாம்.

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டு, வெளியிடப் பட்டுள்ள ஆதாரப் பள்ளிக் கட்டடப் படங்களில் சுற்றுச் சுவருடன் அமைக்கப்படும் பரந்த திறந்த வெளியிடத்தைக் காணலாம். அரசினரின் பண உதவியுடன் கட்டப்படும் அத்தகைய கட்டடங்களில் கலை நிகழ்ச்சிகளையும், பொதுக் கூட்டங்களையும் எளிதாக நடத்த இயலும். தற்போது கல்லூரிகளிலும், உயர்தரப் பள்ளிகளிலும் திறந்தவெளி அரங்கு (Open Air Theatre) கட்டுவது சர்வசாதாரணமாகிவிட்டது. முன்அநுமதியுடன் கட்டும் சிலவற்றுக்கு மத்திய சர்க்கார் பணஉதவி யளிக்கிறார்கள். மாணவர்களிடம் அமைந்திருக்கும் கலையுணர்ச்சியை வளர்க்கவே அரசினரும் நிர்வாகிகளும் இத்தகைய ஏற்பாடுகள் செய்து தருகின்றனர்.

கல்வி என்ற உயரமான கட்டடத்தின் அடிப் படையில் அமைந்துள்ள **ஆதாரப் பள்ளி**களிலும் கலையரங்கு அவசியந்தானே!

ஆதாரக் கல்வியின் வைட்டமின்கள்: நீரில்லா ஊர் சிறக்காது. உப்பில்லா உண்டி பிடிக்காது. உழைப் பின்றி உண்டால் உணவு ருசிக்காது. அதேபோல் கலை நிகழ்ச்சியில்லாத ஆதாரப் பள்ளியில் உயிர்க் களை இராது. ஆதாரக் கல்வித் திட்டத்திற்கு, **கலை நிகழ்ச்சிகள்** வைட்டமின்கள் எனலாம். ஏன்? வாழ்க்கைக்கே கலை நிகழ்ச்சிகள் வைட்டமின்களாகும்.

10-B. கண்காட்சிகளும் பொருட்காட்சிகளும்

ஒவ்வோர் ஆதாரப் பள்ளியிலும் நிரந்தரமான ஒரு பொருட்காட்சி அமைக்கவேண்டும் என்றும், ஆண்டுக்கு ஒன்றிரண்டு முறை பள்ளியில் கண்காட்சி நடத்த வேண்டுமென்றும் கூறப்படுகிறது. ஆகவே, ஆதாரப் பள்ளிகளை இச் செயல்கள்பற்றிப் பயிற்சியாளர் உற்று நோக்குங்கால் கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யறிந்து வருவது அவசியமாகும்:

1. பள்ளியில் கண்காட்சி நடத்துகிறார்களா? (எங்கே? எப்பொழுது?)

2. அதில் என்னென்ன காட்டப்படுகின்றன?

3. பள்ளியில் கண்காட்சி நடத்துவதன் நோக்கம் யாது?

4. கண்காட்சியினல் மாணவர்கள் பெறும் நன்மை யாது? பெற்றோர் பெறும் நன்மை யாது?

5. பள்ளியில் ஒரு பொருட்காட்சி இருக்கிறதா?

6. அதில் என்னென்ன பொருள்கள் வைத்திருக்கிறார்கள்? அவை எங்கிருந்து கிடைக்கின்றன?

7. பள்ளியில் பொருட்காட்சி அமைப்பதன் நோக்கம் யாது?

8. பள்ளிக் கண்காட்சிக்கும் பள்ளிப் பொருட்காட்சிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

கண்காட்சி எப்பொழுது நடத்தலாம்?

ஒவ்வோர் ஆதாரப் பள்ளியிலும் ஆண்டுக்கு ஒரு முறை அல்லது இரு முறை கண்காட்சி கட்டாயமாக நடத்தவேண்டும். பள்ளி வேலைகளில் மிக்க கல்விப் பயனளிக்கும் செயல்களில் ஒன்ருக அச் செயல் கருதப்

படுகிறது. ஊர் மக்களுக்கு அறிவூட்டும் அரிய சாதன மாயும் அது அமைகிறது. அதைக் கீழே குறித்திருக்கும் விழாக்களின் ஒரு சிறப்பு அங்கமாக அமைத்து நடத்த லாம்:

1. பள்ளி ஆண்டு விழா.

2. வேறு சிறப்பு விழா. (காந்தி ஜயந்தி, பொங்கல் விழா)

3. பள்ளி ஆசிரியர்களின் சங்க ஆண்டு விழா.

4. அருகில் நடைபெறும் பெருங் கண்காட்சியின் கல்விப் பகுதி.

5. ஆண்டுதோறும் நடக்கும் கல்வி வார விழா.

கண்காட்சி நடைபெறவேண்டிய காலம்:

ஒரு நல்ல கண்காட்சியை ஒரு நாளைக்கு மட்டும் பொது மக்கள் பார்வைக்குத் திறந்துவைத்திருந்தால் போதாது; இரண்டு மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து திறந்துவைத்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் பெற்றோர்கள் அனைவரும் வந்து அதைப் பார்க்க வாய்ப்புக் கிட்டும். விழாவைக் கொண்டாடும் நாளன்று அவசர அவசரமாகத் திறந்துவைத்துவிட்டு அன்றிரவே அதை மூடிவிடுவதால் மாணவர்களுக்கு எவ்விதக் கல்விப் பயனும் ஏற்படாது. அதனால் ஊர் மக்களுக்கும் எவ்வித நன்மையும் விளையாது; கண்காட்சி வெறும் தமாஷாக முடியும்.

கண்காட்சியிலுள்ள பல பகுதிகளை நிர்வகித்து, பார்வையிட வரும் பெற்றோர்களுக்கு விஷயங்களையும் செயல்களையும் விளக்கிக் கூறுவதற்கு மாணவர்களைப் பயிற்றவேண்டும். அவ்வாறு செய்வதற்கு முன்கூட்டிய தக்க பயிற்சி தேவை.

விழாவுக்கான அழைப்பிதழிலேயே கண்காட்சி திறந்திருக்கும் நேரம், நாட்கள் முதலியவற்றைக் குறிப்பிடல் சிறந்த முறையாகும்.

பள்ளிக் கண்காட்சியில் என்னென்ன உள்ளன என்று பட்டியல் ஒன்று தயார்செய்து, பார்வையிட வரும் ஒவ்வொருவருக்கும் கொடுத்தால் அது மிக்க கல்விப் பயன் தரும்.

கண்காட்சியைப் பார்க்க வருவோர்களின் எண்ணிக்கையை எடுக்கலாம். அவர்களுடைய கருத்துக்களை ஒரு தனி நோட்டுப் புத்தகத்தில் எழுதி வாங்கலாம். கண்காட்சியின் நிறை குறை காணவும், அடுத்த முறை நடக்கவிருக்கும் கண்காட்சியை இன்னும் சிறப்புற நடத்தவும் அக் கருத்துக்கள் மிகவும் உதவிபுரியும்.

கண்காட்சி நடத்துவது எப்படி ?

முதலில் ஆசிரியர்களும் மாணவர்களும் கூடி ஒரு திட்டம் தயாரித்துக்கொள்ளவேண்டும். சென்ற ஆண்டில் கண்காட்சி ஒன்று நடந்திருந்தால் அதன் பயனுய்க் கிடைத்த அநுபவத்தின்மீது முன்னிலும் சிறப்பாக நடத்த வழிமுறைகளைச் சர்ச்சை செய்ய வேண்டும்; காட்சிக்கான பொருள்களையும் செயல்களையும் நிர்ணயிக்கவேண்டும்; சிதைந்த பழங்காட்சிப் பொருள்களைப் புதுப்பிக்கவேண்டும்; புதுக் காட்சிப் பொருள்கள் தயாரிக்கத் திட்டமிடவேண்டும்; அதற்கான அட்டை, காகிதம், வர்ணத்தாள், வர்ணம், மை முதலியவற்றைத் திரட்டவேண்டும்; நடத்தவேண்டிய இடத்தைப்பற்றியும், அதை அலங்கரிக்கும் முறை பற்றியும் திட்டமிடவேண்டும்; நடத்தவேண்டிய தேதி, திறந்திருக்கவேண்டிய நாட்கள், நேரம், வேலைப் பங்கீடு முதலியவற்றை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

திட்டம் தீட்டிய பின் சிறிது சிறிதாகப் பொருள்களை நாளுக்கு நாள் சேகரித்துவரவேண்டும். புதிதாக வரையும் வேலையையும், வர்ணந் தீட்டும் வேலையையும் கண்காட்சி ஆரம்ப தினத்துக்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னரே முடித்துவிடவேண்டும்.

எல்லாவற்றையும் முன்கூட்டியே ஆயத்தம் செய்யவேண்டும். கண்காட்சி நடக்குமிடத்தைத் துப்புரவு செய்து அலங்கரித்து, காட்சிப் பொருள்களை எவ்வளவு கவர்ச்சிகரமாக வைக்க முடியுமோ அவ்வளவு கவர்ச்சிகரமாக வைக்கவேண்டும். வெவ்வேறு தலைப்புக்களின்கீழ்ப் பிரித்து, அதனதன் பெயர் எழுதிய அட்டைகளை ஆங்காங்கு தொங்க விடுதல் நன்று. வெளிச்சம் அவற்றின்மீது நன்ருய்ப் படும்படி அவற்றை வைக்கவேண்டும். சுவரில் மாட்டக் கூடியவற்றை மாட்டிவைக்கவேண்டும். மேசைமீதோ, தரைமீதோ பரப்பிவைக்கவேண்டியவற்றைப் பரப்பி வைக்கவேண்டும். சிலவற்றைக் கயிற்றில் கட்டித் தொங்கவிடலாம். பார்வையிட வருவோர் ஒன்றைக் கூடப் பார்க்கத் தவருமல் எல்லாவற்றையும் முறையாகப் பார்த்துவருமாறு வரிசையாகப் போக ஒரு-வழிப் போக்கு அமைக்கவேண்டும். அதாவது, ஒரு வழியாக நுழைந்து, வேறெரு வழியாக வெளியே வர வேண்டும். அதனுல், வருகிறவர்களும் போகிறவர்களும் ஒருவரோடொருவர் மோதாமல் எளிதில் பொருட் காட்சிப் பொருள்களைப் பார்க்க இயலும்.

ஆங்காங்கு, காட்சிப் பொருள்களை விளக்கிக் காட்டும்பொருட்டு மாணவர்களை நியமித்து நிறுத்த வேண்டும். அவர்கள் தூய ஆடை (முடிந்தால் கதராடை) அணிந்து வருவதுடன் தம்மிடம் உள்ளவைபற்றிச் சுருக்கமாகவும், தெளிவாகவும், பொறுமை இழக்காமலும் விளக்கத் தெரிந்துகொள்ள வேண்டும்.

செயல் முறையாக நடத்திக்காட்டும் காட்சிகளைக் காட்ட விசாலமான தனி இடம் அமைக்கவேண்டும். (உதாரணமாக, தறியில் துணி நெய்தல், சாயம் தோய்த்தல், தேனீ வளர்த்தல்.) இப்பொழுது கண்காட்சி தயார்.

கண்காட்சியில் என்னென்ன காட்டலாம்?

கண்காட்சியில் காட்டப்படவேண்டியவற்றை, கண்காட்சியின் நோக்கத்திற்கேற்பத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஓர் ஆதாரப் பள்ளியின் ஆண்டு விழாக் கண்காட்சியில் கீழ்க்கண்டவற்றைக் காட்டலாம்:

பள்ளித் தகவல் பலகை

தினசரிச் செய்திப் பலகை

பள்ளியின் வளர்ச்சி வரலாற்றுப் படங்கள், புள்ளி விவரங்கள், ரேகைப் படங்கள்

பள்ளிக் கட்டடம், பண்டகசாலை, விளையாடுமிடம், தோட்டம் — இவற்றின் பிளான்

பள்ளி வேலைகளின் பட்டியல் — ஒவ்வொரு வேலைக்கும் அளிக்கப்பட்டுள்ள நேரம் — இவற்றைக் காட்டும் படம்

மாதவாரி உற்பத்திக் குறிக்கோள் — வகுப்புவாரியாக

பள்ளிப் பொருட்காட்சிச்சாலை

பள்ளி மருத்துவச்சாலை

பள்ளிப் பண்டகசாலை

பள்ளி நூல்நிலையம்

பள்ளி இலவச உணவுஅளிப்பு — பதிவேடுகள்

புதுமுறைச் சிறுநீர்க் குழி — மாதிரி

வர்தாக் கக்கூசு — மாதிரி

குப்பைக் குழிகள் — மாதிரி

பள்ளி வேலைக் கருவிகள் — துப்புரவு வேலை — தோட்டவேலை — ஆதாரத் தொழில் — இசைக் கருவிகள்

சிறுவர்கள் தயாரித்துள்ள புத்தகங்கள், கையெழுத்துப் பத்திரிகைகள்

சிறுவர்கள் தீட்டிய சித்திரங்கள், வர்ணப் படங்கள்

சிறுவர்கள் திரட்டிய படத் தொகுப்புக்கள்
சிறுவர்கள் செய்துள்ள அலங்கார வேலைகள்
சிறுவர்கள் சேகரித்துள்ள அபூர்வப் பொருள்கள்
சிறுவர்கள் சேகரித்துள்ள பொன்மொழிகள்
சிறுவர்கள் சேகரித்த பழமொழிகள்
சிறுவர்கள் திரட்டிய விடுகதைகள்
சிறுவர்களின் கைவேலைப் பொருள்கள்
(அபூர்மானவை மட்டும்)

அழகிய நூல் சிட்டம்—நெய்த துணி (மாதிரி)-களிமண் வேலைப் பொருள்கள் — ஓலை வேலைப் பொருள்கள் — முடைந்த பாய் — நார்வேலைப் பொருள்கள் - கயிறுலான பை வேலை-நூல் வேலை –காகித வேலைப்பாடு—காகிதக்கூழாலான பொருள் கள் — கழிவுப் பொருளாலானவை - இதர வேலைப் பொருள்கள்

பெரியோர் உதவியுடன் சிறுவர்கள் தயாரித்த தின்பண்டங் கள் (விற்பனைக்கு) விற்குமிடம்

பாடசாலைத் தோட்டம் — தேனீ வளர்க்கும் பெட்டிகள்

சிறுவர்களின் பள்ளி வேலைச் செயல்கள்–இறை வழிபாடு – கொடி வணக்கம் — மந்திரி தேர்தல் — பொது மன்றம் — நீதிமன்றம் — விளையாட்டு, கும்மி, கோலாட்டம் - ஆதாரத் தொழில், அதன் உட்பகுதி கள் — மௌன நூற்பு

நூற்பு வேகம் (தக்ளி, சர்க்கா) காட்டும் சார்ட்டுகள் — சிட்ட உற்பத்தி காட்டும் சார்ட்டுகள்–வகுப்புவாரித் தோட்ட வருமானச் சார்ட்டுகள் — வகுப்புவாரி சுயதேவைப் பூர்த்தி சார்ட்டுகள்

ஆசிரியர்களின் மூலை - ஆசிரியர்களால் உற்பத்திசெய்யப் பட்ட பொருள்கள், வரையப்பட்ட படங்கள், தொகுப்புக்கள்

[குறிப்பு: *ஆசிரியர்களின் மூலை ஓர் எடுத்துக்காட்டாகவும் சிறப்பானதாயுமிருக்கவேண்டுமென்று சொல்லத் தேவையில்லை.*]

கண்காட்சி நடத்தும் நோக்கம் :

தன் வேலைச் சிறப்புக்களைப் பிறருக்குக் காட்டிப் பெருமையுறுவதும், அவர்களின் பாராட்டுப் பெறுவதுமே எப்பேர்ப்பட்ட பொருட்காட்சிகளின் நோக்கம் என **லக்ஹர்ஸ்டு (K. W. Luckhurst)** என்பார் எழுதியுள்ள "கண்காட்சிகளின் வரலாறு" என்னும் அரிய பெரிய ஆராய்ச்சி நூலில் கூறுகிறார்.

அதன் வாயிலாகவே வேறு பயன்களும் கிட்டுகின்றன என்கிறார் அவர்.

பள்ளிகளில் கண்காட்சி நடத்துவதன் நோக்கங் களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம் :

1. தன் வேலைகளையும் சாதனைகளையும் பிறருக்குக் காட்டிப் பாராட்டுப் பெறுதல்.

2. ஊராருக்கு (பெற்றோருக்கும் பொது மக்களுக் கும்) பள்ளிகளில் சில விஷயங்களைப்பற்றி அறிவூட்டுதல்.

3. பள்ளி – சமூக உறவை வலுப்படுத்தல்.

ஆகையால், கண்காட்சியைப் பள்ளியின் **ஒரு பிரசாரக் கருவி** அல்லது **பிரசாரச் செயல்முறை** என்று கூறலாம்.

பார்க்க வருபவர்களுக்கு வசதி செய்தல் :

கண்காட்சி அவ்வளவு வல்லமை பொருந்தி யுள்ளது. அது சிறப்புற்று வெற்றிதரவேண்டுமானால் முன்னரே விளக்கியபடி இடம், காலம், நேரம் இவ் வசதிகளுக்கேற்பக் கவர்ச்சிகரமாய் அமையவேண்டும். அதில் அழகுடன் ஒழுங்கும் அமையவேண்டும். பார்க்க வருவோரின் வசதிகளை மனத்திற்கொண்டு அவற்றிற்கு ஆனவற்றைச் செய்யவேண்டும். ஒரே காலத்தில் பலர் வருவார்கள். அவர்களை வரவேற்று, அவர்களுக்கு ஒன்றும் விடாமல் காட்டுவதற்குப் பல மாணவர்களைப் பொறுப்பேற்கச் செய்யவேண்டும். ஒரு வழியாக

நுழைந்து, பொருள்களைப் பார்த்துக்கொண்டே வேறு வழியாக வெளியே செல்ல ஏற்பாடு செய்யவேண்டும். இதைப்பற்றி முன்னரே கூறப்பட்டது.

இவையெல்லாம் சிறிய விஷயங்கள்; ஆனால் மிக நுட்பமானவை. இவற்றைச் சரியாய்க் கவனிப்பதால் தான் கண்காட்சி வெற்றிபெறும். பொதுமக்கள் மகிழ்ச்சி பெறுவதுடன் அறிவும் பெறுவார்கள்.

கண்காட்சியினால் மாணவர்கள் பெறும் நன்மைகள்:

கண்காட்சிக்கான திட்டத்தைத் தீட்டும்போதும், அதை நடத்தும்போதும், அதை முடித்து நிறைகுறைகளை விமரிசனம் செய்யும்போதும் மாணவர்களுக்குப் பலவகைப் பயிற்சிகள் கிட்டுகின்றன. அவற்றை முறையாய்க் கவனிக்கலாம்.

திட்டம் தீட்டும்போது

1. எதைக் கண்காட்சியில் வைக்கலாம், எதை வைக்கக்கூடாது;
2. என்ன பொருள்களைச் சேகரிக்கவேண்டும்;
3. பொருள்களையும் செயல்களையும் எவ்வாறு அமைத்தால் மக்கள் ரசிப்பார்கள்.

—போன்ற இன்றியமையாத அறிவை மாணவர்கள் பெறுகிறார்கள்.

நடத்தும்போது

1. தம் தம் வேலை, வேலை நேரம், வேலை இடம் ஆகியவற்றைப்பற்றி அறிகிறார்கள்;
2. பிறருடன் இன்முகம், இன்சொல்லுடன் பழக அறிகிறார்கள்;
3. செய்ம்முறைகளைப் பிறருக்கு விளக்கும்போது விஷயத் தெளிவும், ஐயங்களைத் தீர்க்கும் ஆற்றலும் மாணவர்கள் பெறுகிறார்கள்.

நிறை குறைகளை ஆராயும்போது

1. எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுவதன் அவசியத்தை அறிகிறார்கள்;

2. பார்வையாளரின் பலதரப்பட்ட கருத்துக் களையும் யோசனைகளையும் அறிகிறார்கள்;

3. இன்னும் சிறப்பாக நடத்தமுடியும் என்பதை அநுபவ வாயிலாக அறிகிறார்கள்.

எனவே, கண்காட்சி நடத்தும் செயல் மாணவர் களுக்கு அறிவையும், சில பழக்கவழக்கங்களையும், திறமைகளையும், மனப்பான்மைகளையும் ஏற்படுத்தத் தக்க சாதனமாய் அமைகிறது. கண்காட்சியினால் பெற்றோர்–பள்ளி உறவு வலிமை பெறுகிறது. எனவே தான் ஆதாரப் பள்ளிகளில் கண்காட்சி கட்டாயம் நடத்தவேண்டும் என்கிறார்கள்.

கண்காட்சியினால் பெற்றோருக்கு ஏற்படும் நன்மைகள் :

கண்காட்சியினால் பெற்றோர்களுக்குப் பல நன்மை கள் ஏற்படுகின்றன. பள்ளியில் நடக்கும் வேலைகளை அவர்கள் நிதரிசனமாய்க் கண்டு அறிகிறார்கள். மாண வர்கள் இயற்றும் **செய்முறை வேலை**களை நேரிற் கண்டு ரசிக்கிறார்கள்; பெருமைப்படுகிறார்கள்; பள்ளிக்கும் வீட்டுக்குமுள்ள தொடர்பை உணருகிறார்கள்; பள்ளி யில் கற்றனவற்றை மாணவர்கள் வீட்டிலும் தொடர்ந்து செய்யவேண்டியதன் (உதாரணமாக, துப்புரவு வேலை) அவசியத்தை அறிகிறார்கள். இவ்வாறு கண்காட்சி பெற்றோர்களுக்கு அறிவூட்டுவ தோடு பள்ளி–சமூக உறவையும் பலப்படுத்துகிறது.

பொருட்காட்சி

பொருட்காட்சி ஏன் ?

செவ்வையாக வளர்க்கப்படும் ஒரு மாணவரின் பெட்டியையோ அல்லது அலமாரியையோ சோதித்துப் பார்த்தால் அவனுடைய புத்தகம், நோட்டுப் புத்தகம் ஆகியவற்றைத் தவிர வேறு பலவகைப் பொருள் களையும் காணலாம். அவற்றுள் சில உபயோகமுள்ளன வாக இருக்கும்; சில உபயோகமற்றனவாக இருக்கும். இதுபோன்ற பல பொருள்களைத் தம் விருப்பம்போல்

திரட்டுவது மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் இயல்பாக அமைந்த திரட்டூக்கத்தின் வெளியீடு. எல்லா மாணவர்களிடமும் இவ்வூக்கம் அமைந்துள்ளது. ஆனால் சிலரிடத்தில் இது நசுக்கப்பட்டிருக்கும். அதனால் அவர்கள் மந்தமாயிருப்பார்கள். வாய்ப்புக் கொடுத்தால் அவர்களிடமும் இவ்வூக்கத்தைச் சீராகப் பயன்படுத்தலாம்.

வாழ்க்கையில் திரட்டூக்கம் மிக்க பயனுள்ளது. ஆகையால் அதை நசுக்காமல் போற்றி வளர்க்க வேண்டும். பள்ளிப் பொருட்காட்சி இதற்கு உதவியாக அமைகிறது. பொருள்களைத் திரட்டும்போது இயல்பான புலப் பயிற்சி மாணவர்களுக்குக் கிடைக்கிறது. அதனுடன் பொருள்களைச் சீராக உற்று நோக்கும் ஆற்றலையும் அவர்கள் பெறுகிறார்கள்.

வகுப்பறையிலும், வெளியிலும் செயல்களை நடத்தும்போது ஒத்த, மாறான பொருள்களைப்பற்றி மாணவர்களுக்குத் தெரியவேண்டியிருக்கிறது. சில தருணங்களில் நேரிடையாகப் பார்க்கக்கூடிய பொருள்களாகச் சில இருக்கமாட்டா. தவிர, அவை உள்ளூரிலேயே இல்லாமலிருக்கலாம். உதாரணமாக, தோட்டத்திலுள்ள மண் வகைகளைப்பற்றிச் சர்ச்சை செய்யும்போது வேறு மண் வகைகளைப்பற்றிச் சொல்லவேண்டியிருக்கும். அவற்றை மாணவர்களும் ஆசிரியர்களும் தேடிச் சேகரித்து, பொருட்காட்சி ஒன்று அமைத்து, அதில் வைத்திருந்தால் தேவையானபொழுது அவற்றை மாணவர்களுக்குக் காண்பிக்கலாம். வாயால் சொல்வதைக் கேட்பதால் பெறும் அறிவைவிடப் பொருள்களை மாணவர்கள் தொட்டுப் பார்த்துப் பரிசோதித்து அறிந்தால் அவ்வறிவு தெளிவாயிருக்கும்; நிலைத்தும் நிற்கும். இவ்வாறு பல செயல்களை ஒட்டிப் பொருட்காட்சியில் பலவகைப் பொருள்களையும், **உருவம், அளவு, விகிதம், வர்ணம்** இவற்றைக் காட்டவல்ல பொருள்களின் மாதிரிகளையும் திரட்டிவைக்கலாம்.

துப்புரவு, சுகாதார வேலை, தோட்டவேலை, நூற்புத் தொழில், சமூகப் பயிற்சி, கலைப் பயிற்சி, விளையாட்டு ஆகிய ஒவ்வொரு வேலைத் திட்டத்துடனும் சார்பு கொண்ட பல பொருள்கள் அங்கு இடம் பெறும்.

பொருட்காட்சியில் என்னென்ன பொருள்களை வைக்கலாம்? — கீழ்க்கண்ட தலைப்புக்களில் பொருள்களை வகைப்படுத்திப் பொருட்காட்சியில் வைக்கலாம்:

துப்புரவு, சுகாதார வேலை: மனித உடல், எலும்புக் கூடு, மூளை, கண், இருதய மாதிரிகள்.

மாதிரிக் கிராமம், மாதிரி வீடு, படுக்கையறை, சிறுநீர்க் குழி, குப்பைக் குழி, வர்தாக் கக்கூசு.

முதலுதவிப் பெட்டி மாதிரி, மூலிகைகளின் மாதிரிகள்.

நோயாளியின் அறை (மாதிரி)

பயிர்த் தொழில், தோட்டவேலை: தானியங்கள், நெல் வகைகள், தானியக் கதிர்கள், மர வகைகள், இலை வகைகள், பூ வகைகள் முதலியன. (இலை, பூ வகைகளை மை உறிஞ்சும் காகிதங்களுக்கிடையே வைத்து ஒரு தொகுப்பாக (album) வைப்பது வழக்கம்.)

பலவகைக் காய்கறிகள், பழங்கள் இவற்றின் மாதிரியாக மண் பொம்மைகள் — இயற்கையான நிறத்துடன் செய்து வைக்கலாம்.

தோட்டத்தில் காணும் பறவை வகைகள்:

1. இறந்த பறவைகளின் நிணம் நீக்கிப் பஞ்சடைத்த உருவங்கள்.
2. பறவைகளின் இறகு வகைகள், எலும்புக் கூடுகள்.
3. பறவைகள் கட்டும் பலவகைக் கூடுகள்.
4. பூச்சி வகைகள்.
5. நத்தை.

பிற பிராணிகளைப்பற்றியவை: சங்குகள், கிளிஞ்சில்கள், சோழிகள், பதனிட்ட தோல் வகைகள்.

தாது வகைகள்: மண் வகைகள், தாதுப் பொருள்களின் வகைகள்.

தொழில் வகைகள்: துணித் தொழில் உட்பகுதிகளுக்கான சரியான ஆசன முறைகள் — படம்; நூற்பு முறைப் படங்கள்; பருத்தி வகைகள்; நல்ல சிட்டம், நல்ல கண்டு மாதிரிகள்; சிறுவர்களின் கைவேலைப் பொருள்கள்.

தவிர, "கண்காட்சி" என்ற தலைப்பின்கீழ்ச் 'சிறுவர்களின் கைவேலைப் பொருள்கள்' என்ற பட்டியலில் முன்னரே குறித்துள்ள பொருள்கள் இங்கும் பொருந்தும்.

சமூகப் பயிற்சி: பழைய நாணயங்கள், தபால் பில்லைகள், தீப்பெட்டி பில்லைகள், உல்லாசப் பிரயாணம் போய்வந்த பின் செய்த கைவேலை மாதிரிகள்.

கொடி வணக்கத்திற்கான உருவ மாதிரி.

கலைப் பயிற்சி: களியாட்டங்களுக்காகவும் விழாக் கொண்டாட்டங்களுக்காகவும் பிரத்தியேகமாகத் தயாரித்த சில பொருள்கள்.

(உ-ம். கட்டபொம்மன் தலைப்பாகை; சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் அணிகள், வாள், உடைகள் போன்றவை.)

பொருள்களைத் திரட்டுவது எப்படி?

மாணவர்கள் ஆசிரியர்களுடன் உல்லாசப் பிரயாணம் போய்வரும் வழியில் சில பொருள்களைத் திரட்டிவரலாம். தினசரி பள்ளிக்கு வரும்போது ஏதாவது புதுமையான பொருள் கிடைத்தால் திரட்டிவரலாம்; சில பொருள்களைப் பிறரிடம் கேட்டு வாங்கலாம்; சிலவற்றை விலை கொடுத்து வாங்கவேண்டி வரும். (உ-ம்: மனித உடல்—மாதிரி)

திரட்டும் வேலை தொடர்ந்து நடந்தவாறே இருக்க வேண்டும். அதற்கு முடிவே கிடையாது எனலாம். அபூர்வப் பொருள்கள் கிடைத்தால் விழிப்புடனிருந்து உடனுக்குடன் அவற்றைத் திரட்டிவரவேண்டும்.

ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய இருதிறத்தாரும் காட்சிக்கான பொருள்களைத் திரட்டவேண்டும். பெற்றோர் சங்க மூலமாகப் பெற்றோர்களுங்கூடப் பள்ளிப் பொருட்காட்சிக்குப் பொருள் திரட்டலாம். ஆகவே பொருட்காட்சி ஆண்டு முழுவதும் வளரும் ஓர் அமைப்பு ஆகும்.

பொருள்களை எப்படி, எங்கு வைப்பது?

பொருட்காட்சி ஒன்றை ஆதாரப் பள்ளிகளில் முதன்முதல் ஆரம்பிக்கும்பொழுது அதற்கு ஒரு கண்ணாடி அலமாரி போதுமானது. காட்சிப் பொருள்கள் சேரச் சேரப் பொருட்காட்சிக்கான கொள்கலத்தையும் இட வசதியையும் அவற்றிற்கேற்ப அபிவிருத்தி செய்யவேண்டும்.

ஒவ்வொரு பொருளைப்பற்றியும் சுருக்கமான குறிப்புக்கள் எழுதிவைக்கவேண்டும். திரட்டியவர் பெயர், வயது, வகுப்பு, அங்கு வந்த தேதி முதலிய வற்றை அழகாக எழுதிவைத்தால் அப்பொருள்களை வழங்கியவருக்கு மனமகிழ்ச்சி உண்டாகும்; மற்றவர் களுக்கும் ஊக்கம் ஏற்படும்; பார்ப்பவர்களுக்கும் கவர்ச்சிகரமாயிருக்கும்.

மாணவர்கள் திரட்டிவரும் எல்லாப் பொருள் களையும் பொருட்காட்சியில் வைக்கவேண்டுமென்ப தில்லை. அதைத் தீர்மானிப்பதற்கென்று ஒரு குழுவை நியமிக்கவேண்டும். அக்குழுவில் ஆசிரியர்களும் உறுப்பினராயிருக்கலாம். குழுவினர் ஒவ்வொரு பொருளையும் பார்த்து, அதன் பொருத்தத்தை ஆராய்ந்த பின்னரே பொருட்காட்சியில் வைக்க அனுமதிக்கவேண்டும். அவ்வாறு செய்தால் மட்ட ரக மான பொருள்களும், சுவையற்ற பொருள்களும், ஏற்கெனவே இருக்கும் பொருள்களும் பொருட்காட்சி யில் இடம்பெற வகை இராது.

பொருட்காட்சியின் வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு :

பொருட்காட்சியை வளர்ப்பதில் ஆசிரியரின் பங்கைப் பின்வருமாறு விளக்கலாம்:

1. பள்ளியில் ஏற்கெனவேயுள்ள பொருட். காட்சியை மாணவர்களுக்குக் காட்டி, விளக்கி, அவர் களைப் புதுப்பொருள் திரட்டுவதில் ஈடுபடுத்தவேண்டும்.

2. அண்மையிலுள்ள பள்ளிப் பொருட்காட்சிச் சாலைகளுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று காட்டலாம்.

3. ஆசிரியர் தாமும் அவ்வப்போது புதுப் புதுப் பொருள்களைச் சேகரித்து, மாணவர்களின் முயற்சிக்கும் ஆர்வத்திற்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கவேண்டும்.

4. செயல் நடத்தும்போது பள்ளிப் பொருட் காட்சிப் பொருள்களைப் போதனை உபகரணங்களாகப்

பயன்படுத்தி, பள்ளியின் அலுவல்களில் பொருட்காட்சி ஒன்றென்பதை மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

பள்ளிப் பொருட்காட்சிக்கும் பள்ளிக் கண்காட்சிக்குமுள்ள வேறுபாடுகள்

பொருட்காட்சி	கண்காட்சி
1. பொருட்காட்சி நிரந்தர மானதொரு அமைப் பாகும்.	1. கண்காட்சி ஒரு தற்காலிக அமைப்பு ஆகும்.
2. நாள்தோறும் வளர்ந்து கொண்டே வரவேண்டிய ஓர் அமைப்பு.	2. ஆண்டுக்கு ஒன்றிரண்டு முறை நடைபெறும் தனி அமைப்பு.
3. பொருள்களைப்பற்றி விளக்கும் தனி அவசியம் இதில் இராது.	3. பொருள்களைப்பற்றி விளக்கும் அவசியம் உண்டு.
4. இதில் மாணவர்களின் செயல்களைச் செய்து காட்டவேண்டிய அவசிய மில்லை.	4. இதில் செய்ம்முறைகளைக் காட்டுவது அவசியம்.
5. அன்றாட வகுப்பு வேலை களுக்கு இதிலுள்ள பொருள்கள் உதவும்.	5. அன்றாட வகுப்பறை வேலைகளுக்கு இது உதவாது.
6. நிரந்தர அமைப்பாதலால் கண்காட்சியைப்போல் அவ்வளவு கவர்ச்சிகரமாக இராது.	6. பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடன் தற்காலிகமாக இதை அமைப்பதால் இது பொருட்காட்சியைவிடக் கவர்ச்சி மிக்கது.

இரண்டிற்குமுள்ள ஒற்றுமைகளாவன :

இரண்டும் கல்விப் பயன்கள் உள்ளவை. இரண்டும் மாணவர்களின் கலையுணர்ச்சியை வளர்க்கின்றன. இரண்டும் பொது மக்கள் கல்விக்கு மிக்க பயனுள்ளவை. மாணவர்களின் சமூக அறிவியல் பண்புகள் வளர இரண்டும் உதவுகின்றன.

பின் இணைப்பு - I

இந்நூலில் காணும் சில கலைச்சொற்களும், அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்களும்

Ability grouping - திறமை அடிப்படையில் குழுப் பிரித்தல்
Activity - செயல்
Administration - ஆட்சி, பரிபாலனம், நிர்வாகம்
Admission - சேர்க்கை
Adult - வயதுவந்தோர்
Aids, Teaching - போதனை சாதனங்கள், கற்பிக்க உதவும் பொருள்கள்
Alienation-நிலத்தைப் பள்ளி வேலைக்கு மாற்றிக்கொடுத்தல்
Appliances, Teaching - கற்பிக்க உதவும் கருவிகள்
Association - சங்கம், குழு
Association, Parents' - பெற்றோர் சங்கம்
Association, Staff - பள்ளி ஆசிரியர் குழு
Association, Teachers'-ஆசிரியர் சங்கம்
Background - பிற்புலம்
Basic Compact Range - ஆதார அடைப்புத் தொகுதி
Basic Craft - ஆதாரத் தொழில்
Basic Education - ஆதாரக் கல்வி
Certificate Book - தகுதிச் சீட்டு
Class - வகுப்பு
Class Teacher System-வகுப்பாசிரியர் முறை
Cleanliness - துப்புரவு
Commissioner - ஆணையாளர்
Compensation - நஷ்ட ஈடு
Compulsory Education - கட்டாயக் கல்வி
Concession - சலுகை
Copies - படிகள், பிரதிகள்
Cultural Programme - கலை நிகழ்ச்சி
Curriculum - கலைத்திட்டம்
Dalton Plan - டால்டன் திட்டம்
Defaulter - பள்ளி வரத் தவறியவன்
Diary - நாட்குறிப்பு
Director - மாநிலக் கல்வி இயக்குநர்
Discipline - ஒழுக்கம்
District - மாவட்டம்
Drill-மீண்டும் மீண்டும் செய்தல், பன்முறைப் பயிற்சி

District Board - மாவட்டக் கழகம்
Equipment - உபகரணம், தளவாடம்
Examination - தேர்வு
Excursion - பள்ளிப் பயணம்
Exemption-தவிர்ப்பு, விலக்கு
Exhibition - கண்காட்சி
Experience - பட்டறிவு, அநுபவம்
Extra Curricular Activities - கலைத்திட்டத்திற்குப் புறம்பான செயல்கள்
Field trip - பள்ளிப் பயணம், பள்ளிச்சுற்றுப்புறத்திற்குப் போய்வருதல்
Flexible Time-table - நெகிழும் கால அட்டவணை
Form - நமூனு
Government - அரசினர்
Grant - பண உதவி
Grade - வகுப்பு
Guide - வழிகாட்டி
Half-yearly promotion-அரையாண்டு வகுப்பு மாற்றல்
Hand-book - கையேடு, கைப்புத்தகம்
Handicraft - கைவேலை, கைத்தொழில் வேலை
Health-உடல்நலம், ஆரோக்கியம்
Holiday - விடுமுறை
Home-work - வீட்டு வேலை
Incidental Method-சந்தர்ப்ப போதனை முறை
Indent-வேண்டுகோள் பட்டி
Individuality - தனித்தன்மை
Information Board - தகவல் பலகை
Inspection - தணிக்கை
Integrated teaching - அறிவின் ஒருமைப்பாட்டை வற்புறுத்தும் போதனை
Junior Basic School - இளையோர் ஆதாரப் பள்ளி
Jurisdiction-அதிகார வரம்பு
Laboratory - ஆய்வுக்கூடம்
Latrine - கக்கூசு
Lesson Plan - செயல் திட்டம்
Learning - கற்றல்
Local bodies - தல ஆட்சி நிறுவனங்கள்
Literacy - படிப்பறிவு
Magazine - இதழ், பத்திரிகை, ஏடு
Magic Lantern-பட விளக்கு
Manager - நிர்வாகி
Maximum - உயர்ந்த பட்ச, பேரெல்லை
Medium of instruction - கற்பிக்கும் வாயில்
Minimum - குறைந்த பட்ச, சிற்றெல்லை
Municipality - நகராட்சி
Museum - பொருட்காட்சி

Newspaper - செய்தித்தாள்
Notes of lessons - பாடக் குறிப்பு
Panchayat Board - ஊராட்சிக் குழு
Period - பாட வேளை
Personality - ஆளுமை
Play-ground - விளையாடுமிடம்
Plural class teaching-பன்மை வகுப்புப் போதனை
Progress report - தேர்ச்சி அறிக்கை
Programme-வேலைத் திட்டம்
Promotion - வகுப்பு மாற்றல்
Radio - வானொலி
Reading Book - படிப்புப் புத்தகம், வாசிப்புப் புத்தகம்
Reading Sheet - படிப்புத் தாள்
Recognition - அங்கீகாரம்
Records and Registers - ரிக்கார்டுகளும் ரிஜிஸ்தர்களும்
Recreation - கிளர்ச்சியூட்டும் செயல்
Regional - பிரதேச, வட்டார
Report - அறிக்கை
Scheme - திட்டம்
Self-rating Scale - தானே தன்னை மதிப்பிடும் அளவை
School Trip-பள்ளிப் பயணம்
Senior Basic School - மூத்தோர் ஆதாரப் பள்ளி
Site - மனை
Stagnation - தேக்கம்
Staff - council - பள்ளி ஆசிரியர் குழு
State - மாநிலம், இராச்சியம்
Supply - வழங்குதல்
Syllabus - பாடத் திட்டம்
Teaching - பயிற்றல்
Teaching Aid - கற்பிக்க உதவும் பொருள்கள்
Teaching Appliances - கற்பிக்க உதவும் கருவிகள்
Text-Book - பாடப் புத்தகம்
Tools - கருவிகள்
Tool-subject - கருவிப்பாடம்
Union - யூனியன், கூட்டு மன்றம்
Unity - ஒருமைப்பாடு
Urinal - சிறுநீர்க் குழி
Visit - வருகை புரிதல், பார்வையிடுதல்
Wastage - சேதம்

பின் இணைப்பு II

பள்ளி ஆட்சிப் பாடத்திட்டம் — ஒரு கண்ணோட்டம்

எண்	தலைப்பு	உட்பிரிவு	நோக்கம்
1	ஆதாரப் பள்ளிக்கான இடமும் கட்டடமும்.	இடமும் கட்டடமும். (கல்வி நோக்கு, உடல்நல நோக்கு, அழகு நோக்கு)	1. தனித்தும், கூடியும், குழுக் குழுவாகவும் தொழில் செய்ய, திட்டமிட, விவாதிக்க, கற்க, கற்றவற்றைச் சோதிக்க, விளையாட. 2. கூட்டம் நடத்த, கலை நிகழ்ச்சிகள் நடத்த, கண்காட்சி நடத்த. 3. கற்றல் போதனைச் செயல்களில் சேதாரத்தைக் குறைக்க. 4. வெயில், மழை, காற்று, புழுதி இவற்றினின்றும் பாதுகாக்க. 5. பலர் கூடிப் பயிலும்போது உடல்நலம் கெடாமலிருக்க. 6. களைப்பைக் குறைக்க; அழகாகவும், கிராமத்திற்கு எடுத்துக்காட்டாகவும்அமைய
		தோட்ட வேலை (கல்வி நோக்கு, சமூக நோக்கு)	1. உடல், உள்ள, ஆன்ம, சமூக வளர்ச்சிக்குத் தொழில் மூலம் பயிற்ற. 2. உணவில் சுயதேவையைப் பூர்த்திசெய்ய அடிகோல. 3. உழைப்பின் மேன்மையை அறிய.

எண்	தலைப்பு	உட்பிரிவு	நோக்கம்
		சாதனங்கள் - நூற்புக் கருவிகள்.	1. உடல், உள்ள, ஆன்ம, சமூக வளர்ச்சிக்குத் தொழில் மூலம் பயிற்ற. 2. உடையில் சுயதேவையைப் பூர்த்தி செய்ய அடிகோல. 3. உழைப்பின் மேன்மையை அறிய.
		மரச் சாமான்கள், தளவாடங்கள், போதனை உபகரணங்கள் முதலியன.	1. மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அவரவர் வேலைகளில் வசதி அளிக்க. 2. போதனை விஷயங்களை எளிதாக்க, விளக்க.
2	ஆசிரியர் தகுதி, பிறருடன் தொடர்பு, சுயஅபிவிருத்தி.		1. கடமைகளை அறிந்து சமூகத் தொண்டாற்ற. 2. பயிற்றல் வேலையில் பிறருடன் உள்ள தொடர்பை அறிய. 3. கற்பிக்கும் முறைகளில் மேலும் மேலும் அபிவிருத்தி பெற. 4. பிற பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களின் அநுபவங்களை அறிய.

எண்	தலைப்பு	உட்பிரிவு	நோக்கம்		
3	குறிப்பேடுகளும், பதிவேடுகளும் (ரிகார்டுகளும், ரிஜிஸ்தர்களும்)	ஆசிரியர்களால் மாணவர்களால்	பள்ளி வேலையின் அளவு, தரம், ஒழுங்கு, தொடர்ச்சி	1. அரசினருக்கு	1. அங்கீகாரமும், பலவகைப் பண உதவியும் அளிக்க.
					2. ராச்சியக் கல்வி முன்னேற்றத்தை அளவிட
					3. புதுத் திட்டம் தீட்ட.
				2. ஆசிரியருக்கு	1. நிறை குறை காண.
					2. மாணவர்களின் தேர்ச்சித் தரம்கணக்கிட
					3. ஆதாரக் கல்வியின் சிறப்பைக் காட்ட.
				3. மாணவர்களுக்கு	1. தன் கல்வி வரலாற்றைஅறிய
					2. தன் முன்னேற்றத்தை அறிய.
				4. பொதுமக்களுக்கு	ஆதாரக்கல்வியின் சிறப்பை அறிய

எண்	தலைப்பு	உட்பிரிவு	நோக்கம்
4	வகுப்பு மாற்றல். திறமை அடிப்படையில் குழுவாகப் பிரித்தல்		1. செயலிலும், அறிவிலும் முன்னேறும் மாணவர்களை அடுத்த படிக்கு அனுப்ப. 2. அவரவர் தனித் திறமைகளில் அவரவர் வேகத்திலேயே முன்னேற்றம் அடையச் செய்ய.
5	கலைத் திட்டம்.		1. ஆதாரக் கல்வித் திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற எட்டாண்டுக்கும் வகுத்துள்ள சிற்றெல்லைச் செய்தி அளவை அறிய. 2. திட்டத்தை நிறைவேற்ற வழி முறைகளை அறிய; ஆண்டுக்கான விஷயங்களைத் திங்கள் வாரியாகவும், வார வாரியாகவும் வகுக்க.
6	ஆண்டுத் திட்டமும், செயல்களும்.	செயல் திட்டம். செயல்கள்.	1. செயல்கள் மூலம் மாணவர்களைச் சமூக, இயற்கைச் சூழ்நிலைகளோடு இணைத்தல். 2. உடல், உள்ள, ஆன்மப் பண்புகளைப் பயிற்றல்.
		காலஅட்டவணை.	1. காலம், இடம், அளவு ஆகியவற்றையொட்டி ஒரு செயலை நடத்தப் பயிற்சி பெற. 2. ஒரு வேலையில் பலர் ஈடுபடும்போது நேரப்படி தொடங்கி முடிக்கும் அவசியத்தை அறிய.

எண்	தலைப்பு	உட்பிரிவு	நோக்கம்
		புத்தகங்கள்.	அறிவு உலகுக்கும் இன்ப உலகுக்கும் வழி காட்ட.
		பள்ளிப் பயணங்கள்.	சுற்றியிருக்கும் இயற்கைச் சூழ்நிலையிலுள்ள பொருள், செய்ம்முறை, மனித சமூகம் ஆகியவற்றை நேரிடையாகக் கண்டு, இயல்பான முறையில் உடல், உள்ள, ஆன்ம வளர்ச்சிபெற.
		வீட்டு வேலை.	1. பள்ளி வேலைகளை வீட்டிலும் தொடர்ந்து செய்து, கற்றவற்றில் உறுதிபெறச் செய்ய. 2. தானே, தனியாகப் பிறர் சார்பற்றுப் படிக்க, எழுத, கணக்குப் போட; ஒரு செயல் செய்ய மாணவர்களைப் பயிற்ற. 3. வீட்டில் ஓய்வுநேரத்தை வீணாகக் கழிக்காமல் பயன்படு முறையில் செலவிடக் கற்க.

எண்	தலைப்பு	உட்பிரிவு	நோக்கம்
7	பல பள்ளிகளின் கூட்டுறவு.	விளையாட்டு விழா, பள்ளிக் கொண்டாட்டங்கள், தொழில் உற்பத்தியை யொட்டிப் பள்ளிகளை வரிசைப் படுத்தும் ஆராய்ச்சிக் குழாம்	1. பிறபள்ளிகளில்பணியாற்றுபவர்களோடு பழக, அவர்களோடு கூடிக் களிக்க, பிறரை ரசிக்கச்செய்ய, பள்ளிவேலைகளில் பலரின் சாதனைகளையும் வழிமுறைகளையும் அறிய. 2. ஆதாரத் தொழில்களில் உற்பத்தித்தரத்தை உயர்த்தும் உபாயங்களை ஆராய. 3. ஆசிரிய ஆராய்ச்சிக் குழுமூலம் தனிப்பட்ட பிரச்சினைகளை ஆராய.
		ஆசிரியர் சங்கம்	1. கல்வி கற்பிக்கும் முறைகளில் மேலும் திறன் பெற. 2. கூடி ஆலோசித்து, ஆங்காங்கு எழும் புதுப் புதுப் பிரச்சினைகளைத் தீர்க்க வழிமுறை காண. 3. சமூக வளர்ச்சிக்கேற்ற மாறுதல்களைக் கலைத்திட்டத்தில் மாற்றும்பொருட்டுப் பிற ஆசிரியர்களோடு விவாதம் நடத்த.
		ஆசிரியர் யூனியன்	ஊதியம் உயர, உரிமை விரிய, சலுகை பெருக, தொழில் நலம் வளர, ஜனநாயக முறையில் மேலதிகாரிகளுக்கு விண்ணப்பிக்க.
		ஆசிரியர் மகாநாடுகள்	மாநில முழுதும் ஆதாரக் கல்வியை நடத்தும் பொழுது எழும் பொதுப் பிரச்சினைகளைக் கூடி விவாதித்து முடிவுகாண.

எண்	தலைப்பு	உட்பிரிவு	நோக்கம்
		கண் காட்சிகளும், செய்ம்முறைக் காட்சிகளும்	மகாநாடுகளின் ஓர் அங்கமாக 1. செய்த வேலையின் அளவு, தரம், மதிப்பு முதலியவற்றை நிதரிசனமாகக்காட்டுதல் 2. கற்றல் செயல்களை எளிதாக்கப் பயன்படுத்திய சார்ட்டுகளும் உபாயங்களும் பிறருக்குப் பயன்படுமாறு காட்டுதல். 3. சில தனிப்பட்ட தொழிலை நேரில் செய்து காட்ட.
8	பள்ளியும் சமூகமும்.	பெற்றோர் – ஆசிரியர் தொடர்பு	பள்ளி-சமூக உறவை வலுப்படுத்த, பெற்றோர்களின் ஆலோசனை, தொண்டு, பொருள், பணம் ஆகியவற்றைப் பள்ளி வேலைக்குப் பயன்படுத்த; பள்ளி வேலையைச் சிறக்கச் செய்ய.
		சமூக வளத்தைப் (மனித சமூகம், பொருள்கள்) பயன்படுத்திக்கொள்ளுதல்	1. ஊராருடன் தொடர்பு பெற. 2. பள்ளி வேலைக்கு ஊர் அநுபவசாலிகளின் உதவி பெற.
		பள்ளி செய்யக்கூடிய சமூகத் தொண்டுகள், பள்ளிக் களியாட்டங்கள்	ஊருக்கு உழைக்கவும், ஊராரை மகிழ்விக்கவும், ஊராரைப் பயிற்றவும், ஊரைத் துப்புரவாக வைக்கும் வேலைகளில் உதவவும்.

எண்	தலைப்பு	உட்பிரிவு	நோக்கம்
9	நண்பகல் இலவச உணவளிப்பு.		1. இல்ல உணவிலுள்ள குறைபாடுகளைக் குறைக்க. 2. உணவு உண்ணும்போது கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களைப் பயிற்ற. 3. இவற்றையொட்டிய சமூகப் பயிற்சி அளிக்க. 4. உணவு நூலின் அடிப்படைச் செய்திகளைக் கற்பிக்க. 5. உள்ளூர்ப் பெரியோரின் கொடைத் தன்மையை ஏழை மாணவர்களுக்குப் பயன்படுத்த.
10	கலை நிகழ்ச்சிகள், களியாட்டங்கள்.		1. மாணவர்களிடம் காணும் தனித் திறமைகளைக் கண்டுபிடிக்கவும், கலையுணர்ச்சியை வளர்க்கவும். 2. ஓய்வுநேரத்தைக் கல்விப்பயனுக்காகவும், இன்பத்துக்காகவும் பயன்படுத்த. 3. பள்ளி - சமூக உறவை வலுப்படுத்த, பள்ளி மாணவர்களுக்கும் சமூகத்திற்கும் களிப்பூட்டி மகிழ்விக்க. 4. நல்லவற்றைக் கண்டறிந்து சுவைக்கப் பயிற்ற. (கலை ரசனை)

பின் இணைப்பு - III

அங்கீகாரம், பண உதவிபற்றிய கல்வித்துறைச் சட்டதிட்டங்களிற் சில :

1. புதிதாய் ஓர் ஆதாரப் பள்ளி திறக்க :

(i) மாவட்டக் கல்வியதிகாரியின் முன்-அநுமதி பெற்றபிறகே பள்ளியைத் திறக்கவேண்டும். முன்-அநுமதியின்றித் திறக்கப்படும் பள்ளிக்கு அரசினரின் அங்கீகாரமோ பணவுதவியோ கிடைக்காது.

(ii) அந்த வட்டாரத் துணை ஆய்வாளரைக் கலந்து ஆலோசித்து, திறக்க அநுமதி கோரும் விண்ணப்பத்தைக் குறிப்பிட்ட நமூனாவில் பூர்த்திசெய்து அவரிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

(iii) பள்ளி திறக்கவிருக்கும் இடத்தில் போதுமான படிக்கும் வயதுள்ள ஆண் பெண் குழந்தைகள் இருக்கின்றனரென்று புள்ளிவிவரங்களுடன் நிலைநாட்ட வேண்டும்.

(iv) சுற்றுப்புறத்தில் ஒரு கல் தொலைவுக்குள் இருக்கும் பள்ளிகளைப்பற்றிய முழு விவரங்களும் (தொலைவு, ஆசிரியர்கள் மாணவர்கள் இவர்களின் எண்ணிக்கை முதலியன) கொடுக்கவேண்டும்.

(v) புதிதாய் ஏற்படவிருக்கும் பள்ளி ஏற்கெனவே இருக்கும் பள்ளிகளுக்கு எவ்வகையிலும் போட்டியாக அமையக்கூடாது.

(vi) பள்ளி திறக்க எண்ணும் ஒரு நிர்வாகிக்குப் பின்வரும் தகுதிகள் இருக்கவேண்டும் :

(அ) அந்தத் தாலூகாவைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

(ஆ) எழுத, படிக்கத் தெரிந்தவராக இருக்கவேண்டும்.

(இ) ஆதாரக் கல்வியில் அக்கரை கொண்டவராக இருக்கவேண்டும்.

(ஈ) வேறெந்த ஆதாரப் பள்ளிக்கும் நிர்வாகியாக இருக்கக்கூடாது.

(vii) விண்ணப்பத்தைப் பள்ளியின் துணை ஆய்வாளருக்கு அனுப்பவேண்டும். அவர் பள்ளிக்கான இடத்தைப் பார்வையிட்டு, தம் கருத்துக்களுடன் மாவட்டக் கல்வியதிகாரிக்கு அனுப்புவார். அவர் அதை ஆய்ந்து புதுப் பள்ளியைத் திறக்க அநுமதியளிப்பார்; அந்த ஊரின் கல்வித் தேவைகளுக்குப் போது மான வசதிகள் ஏற்கெனவே உள்ளன என்றும், புதுப் பள்ளி அந்த ஊருக்குத் தேவையில்லையென்றும் கருதினுல் விண்ணப்பத்தை அவர் நிராகரிக்கலாம்.

2. பள்ளிக்கூடம் திறப்பதுபற்றிய அறிக்கை :

மாவட்டக் கல்வியதிகாரியின் அநுமதி கிடைத்த வுடன் கூடிய விரைவில் பள்ளியைத் திறக்கவேண்டும். திறந்தவுடன் திறந்த தேதி, அன்று இருந்த ஆசிரியர்களின் விவரங்கள், மாணவர்களின் தொகை முதலியவற்றைக் கொண்ட ஓர் அறிக்கையைத் துணை ஆய்வாளருக்கு அனுப்பவேண்டும்.

3. அங்கீகாரத்துக்கும் பணவுதவிக்கும் விண்ணப்பித்தல் :

பள்ளி திறந்த **மூன்று** மாதகாலத்திற்குள் அங்கீகாரத் திற்கும் பணவுதவிக்கும் குறிப்பிட்ட தனித்தனி நமூனுக் களில் **இரண்டு** படிகள் எழுதி, பள்ளித் துணை ஆய்வா ளருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு செய்தால் திறந்த தேதியிலிருந்தே அங்கீகாரமும் பணவுத வியும் கிடைக்கும். விண்ணப்பத்தைத் தாமதித்து அனுப் பினுல் விண்ணப்பத் தேதியிலிருந்துதான் அங்கீகாரமும் பணவுதவியும் அநுமதிக்கப்படும். அதனுல் நிர்வாகிக்கு நஷ்டம் ஏற்படும் என்று சொல்லத் தேவையில்லை.

4. அங்கீகாரமும் பணவுதவியும் :

அங்கீகாரம் வேறு, பணவுதவி வேறு என்பதை அறியவேண்டும். அங்கீகாரம் பெற்ற பள்ளிக்கும் சில தருணம் பணவுதவி மறுக்கப்படலாம். அங்கீகாரம்

இல்லாத பள்ளிக்கு அரசினரின் பணவுதவியோ, வேறு எந்த உதவியோ கிடைக்காது.

5. அங்கீகார விண்ணப்பம் :

இதைச் சரிவரப் பூர்த்திசெய்து, கீழே குறித்துள்ள பள்ளி உறுப்புக்கள் ஒவ்வொன்றுக்கும் சம்பந்தப்பட்ட முழு விவரங்களுடன் தணிக்கை அதிகாரிக்கு அனுப்ப வேண்டும் :

(i) பள்ளிக் கட்டடத்தின் கிடைப்படம் (Plan).

(ii) கட்டடம் (தன்மை, அமைப்பு, பள்ளி இடங்கள், சுகாதார வசதிகள்).

(iii) தோட்டவேலை, விளையாட்டுக்களுக்கான வசதிகள்.

(iv) எல்லாச் சாதியினரும் வந்து படிக்க உள்ள வசதி.

(v) மரச் சாமான்களின் பட்டியல், கரும்பலகை, தகவல் பலகை, பெயர்ப் பலகை, படங்கள், தேசப் படங்கள், கற்பிக்க உதவும் பொருள்கள், கருவிகள் முதலியனபற்றிய முழு விவரம்.

(vi) பள்ளியில் வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களின் பட்டியல் (வகுப்புவாரி).

(vii) பள்ளியில் அமுலிலிருக்கும் கால அட்டவணை.

(viii) ஆசிரியர்களின் பெயர், வயது, தகுதி, சம்பள விகிதம் முதலியன.

6. அங்கீகாரம் பெறுவதனால் விளையும் நன்மைகள் :

(i) அரசினரின் பணவுதவி கிடைக்கும்.

(ii) அரசினரின் தணிக்கை, ஆலோசனை முதலியன கிடைக்கும்.

(iii) மாணவர் ஒரு பள்ளியிலிருந்து வேறொரு பள்ளிக்கு மாற நேரிட்டால் தொடர்ந்து படிக்க உதவும்.

(iv) பொதுத் தேர்வுகளுக்கு உட்கார அருகதை கிடைக்கும். (உதாரணம் : எட்டாம் வகுப்புப் பொதுத் தேர்வு)

7. **தகவல் பலகையில் இருக்கவேண்டிய விவரங்கள் :**

பள்ளியின் பெயர்:

நிர்வாகியின் பெயர்:

அங்கீகரிக்கப்பட்ட ஆதார வகுப்புக்கள் (உத்தரவின் எண், தேதியுடன்):

அங்கீகரிக்கப்படாத வகுப்புக்கள் (ஏதாவது இருந்தால்):

ஆசிரியர்களின் எண்ணிக்கை : ஆண்......பெண்...

ஆதார ஆசிரியர் பயிற்சி
அல்லது மறு பயிற்சி பெற்றவர்:

சாதாரணப் பயிற்சி மட்டும் பெற்றவர்:..........

எப்பயிற்சியும் பெருதவர்: ....

பதிவிலுள்ள மாணவர்கள் : ஆண்......பெண்......

பள்ளி இடங்களின் எண்ணிக்கை
(15 சதுர அடி வீதம்):

தோட்டத்தின் பரப்பு : ......ஏக்கர்......சதுர கஜம்

தினசரி வேலை நேரம்

முற்பகல்:	......	முதல்	......	வரை
பிற்பகல்:	......	முதல்	......	வரை

வார விடுமுறை நாட்கள்:

உள்ளூரில் படிக்க லாயக்குள்ள மாணவர்களின்
எண்ணிக்கை: ஆண்: பெண்:

சிறப்புச் செயல்கள் நடைபெறும் நாட்கள்:

(அ) கொடி வணக்கம்	–திங்கட்கிழமைதோறும்
(ஆ) பாச்சாற்று (பஜனை)	–வெள்ளிக்கிழமைதோறும்
(இ) பாலர் சபை	–வெள்ளிக்கிழமைதோறும்
(ஈ) பெற்றோர் பள்ளிக்கு வந்து பள்ளி வேலையைப் பார்க்கக்கூடிய நாட்கள்	ஒவ்வொரு திங்களிலும் கடைசி வெள்ளிக்கிழமை பிற்பகல்

[குறிப்பு : **பள்ளியைப் பார்வையிட வரும் எவருக்கும் முதலில் கண்ணில்படும் வகையில் எடுப்பான இடத்தில் தகவல் பலகையை மாட்டிவைக்கவேண்டும்.**]

8. அரசினரின் அங்கீகாரம் :

அங்கீகார விண்ணப்பத்தில் முன்னரே குறிக்கப் பட்ட உறுப்புக்கள் எல்லாம் திருப்திகரமாக இருந்தால் பள்ளிக்கு **நிரந்தர அங்கீகாரம்** அளிக்கப்படும். அவ்வாறின்றி, முக்கியமான உறுப்புக்களில் குறைபாடுகள் காணப்பட்டால் குறிப்பிட்ட தேதியோடு முடியும் **தற்காலிக அங்கீகாரமே** அளிக்கப்படும்.

தற்காலிக அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் நிரந்தர அங்கீகாரம் பெற விரும்பினுல்

(i) குறைபாடுகளை நிவர்த்திக்கவேண்டும்;

(ii) குறிப்பிட்ட முடிவு தேதிக்கு **மூன்று திங்கள்** காலத்திற்கு முன்னரே மீண்டும் முன்போல முழு விவரங்களுடன் விண்ணப்பத்தைத் தயாரித்து, துணை ஆய்வாளரிடம் சேர்க்க வேண்டும்.

9. அங்கீகாரம்பற்றிய நிபந்தனைகள் :

(i) பள்ளி திறப்பதற்குமுன் மாவட்டக் கல்வியதிகாரியின் முன் - அனுமதி பெற்றிருக்கவேண்டும்.

(ii) பள்ளியில் எந்தச் சாதிக் குழந்தையும் படிக்க எவ்விதமான தடையும் இருக்கக்கூடாது.

(iii) **கட்டடம்:** மாணவர்களுக்கு 15 சதுர அடி வீதம் இட வசதி இருக்கவேண்டும்; சுகாதார வசதிகள் திருப்திகரமாக இருக்கவேண்டும்.

(iv) **தோட்டம்:** இரண்டு ஏக்கருக்குக் குறையாமல் கிணறு அல்லது நீர்ப்பாசன வசதிகளுடன் இருக்கவேண்டும். ஆதாரப் பள்ளிக்கு இது இன்றியமையாதது.

(v) **விளையாடுமிடம்:** போதுமான பரப்பளவுடன், அருகில் இருக்கவேண்டும்.

(vi) **ஆசிரியர்கள்:** பொதுவாக ஆசிரியர்கள் ஆதார ஆசிரியப் பயிற்சி பெற்றிருக்கவேண்டும்; அல்லது சாதாரணக் கல்வி முறையில் பயிற்சி பெற்றிருந்தார்களானுல் ஆதாரக் கல்வி முறைகளில் மறுபயிற்சி பெற்றிருக்கவேண்டும்.

கிராமங்களில் பயிற்சி முடித்த ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாயிருந்தால் பயிற்சிபெருத ஆசிரியரைத் தற்காலிகமாக நியமித்துக்கொள்ளலாம். இதைக்குறித்து ஒரு தனி விதி உண்டு. ஆசிரியர் பயிற்சிபெற்ற **இரண்டு** ஆசிரியர்களுக்கு, பயிற்சிபெருத ஆசிரியர் **ஒருவர்** என்ற விகிதத்தில் பயிற்சி பெருத ஆசிரியர்களை நியமித்துக்கொள்ளலாம். அத்தகைய ஆசிரியர்களை நியமிக்க மாவட்டக் கல்வியதிகாரியின் தவிர்ப்பு அனுமதி பெறவேண்டும்.

ஆசிரியர்களின் தரம்பற்றிய விதிகள் பின்வருமாறு :

பள்ளியின் வகை	ஆசிரியருக்கு இருக்கவேண்டிய தகுதி
I–V வகுப்புக்கள் உள்ள ஆதாரப் பள்ளிகளில் (ஜூனியர் பேஸிக்) வேலை	1. ஜூனியர் ஆதாரப் பயிற்சி பெற்றுத் தகுதிச் சீட்டு பெற்றவர்; அல்லது 2. எலிமெண்டரி ஆசிரியர் பயிற்சி முடித்துத் தகுதிச் சீட்டு பெற்று, மேலும் ஆதாரக் கல்வி முறையில் மறு பயிற்சி முடித்து, அதற்கான தகுதிச் சீட்டும் பெற்றவர்; அல்லது 3. ஜூனியர் ஆதாரப் பயிற்சித் தகுதிச் சீட்டுக்குச் சமமான தகுதிச் சீட்டு உடையவர் என அரசினரால் தீர்மானிக்கப்பட்டவர். (உ-ம்.) எட்டாம் வகுப்புத் தேர்வில் வெற்றிபெற்று அல்லது மூன்றும் படிவம் தேர்வு பெற்று, ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தில் ஆதாரக் கல்வி முறை பயின்றவர்.
VI–VIII வகுப்புகளுள்ள உயர் ஆதாரப்பள்ளிகளில் (ஸீனியர் பேஸிக்) வேலை செய்ய	1. ஸீனியர் பேஸிக் பயிற்சி பெற்று, தகுதிச் சீட்டுப் பெற்றவர்; அல்லது 2. சாதாரண செகண்டரி ஆசிரியர் பயிற்சி முடித்து, ஆதாரக் கல்வி முறைகளில் மறு பயிற்சி முடித்துத் தகுதிச் சீட்டுப் பெற்றவர்; அல்லது 3. ஆரும் படிவம் முடித்து ஹிந்துஸ்தானி தாலிமி சங்கத்தில் ஆதாரக் கல்வி பயின்று, ஸீனியர் பேஸிக் பயிற்சி பெற்றவருக்குச் சமமானவரென்று அரசினரால் தீர்மானிக்கப்பட்டவர்.

(vii) **உபயோகத்திலுள்ள பாடப் புத்தகங்கள்** அரசின ரால் நியமிக்கப்பட்டுள்ள பாடப் புத்தகக் கமிட்டியினரால் அங்கீகரிக்கப்பட்டனவாயிருக்கவேண்டும். அந்தக் கமிட்டி யினுல் அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களின் பட்டியலை அரசினர் கெஜட்டில் ஆண்டுதோறும் பிரசுரிக்கிறுர்கள்.

(viii) இட மாற்றமும், நிர்வாகி மாற்றமும் அங்கீகாரத் தைப் பாதிக்கும். எனவே, அங்கீகாரமான பள்ளி வேறிடத் திற்கு மாற்றப்பட்டாலும், பள்ளி நிர்வாகம் மாற்றப்பட்டா லும் மேலதிகாரிகளுக்கு எழுதி அநுமதி பெறவேண்டும்.

10. அங்கீகார ரத்து:

ஒரு பள்ளிக்கு அளிக்கப்பட்ட அங்கீகாரத்தைப் பின்வரும் காரணங்களுக்காக ரத்து செய்யலாம்:

(i) தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளாத காரணம்;

(ii) ஆசிரியர்களின் சம்பளத்தை ஊழிய ரிஜிஸ்தரில் கண்டுள்ள ஒப்பந்தப்படி பட்டுவாடா செய்யாத காரணம்;

(iii) ஆசிரியர்களை ஆசிரியர் காப்பு நிதியில் (Teachers' Provident Fund) சேர்க்காத காரணம்.

பொதுவாக அங்கீகாரம் அளிக்குமுன் எந்தெந்த நிபந்தனைகளுக்கு நிர்வாகி உட்பட்டாரோ அந்தந்த நிபந்தனை களை மீறினுல் அங்கீகாரம் ரத்துசெய்ய ஏதுவாகும்.

மேற்சொன்ன காரணங்களைத் தவிர, பள்ளியின் அங்கீகாரத்தைக் கீழ்க்காணும் காரணங்களுக்காகவும் ரத்து செய்யலாம்:

(iv) அம்மை நோய்க்குக் காப்பில்லாத மாணவர்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்தால்;

(v) ரிஜிஸ்தர்களிலும் ரிகார்டுகளிலும் உண்மைக்குப் புறம்பான பதிவுகளைச் செய்தாலும், மோசடி, கடுமையான ஒழுங்கீனங்கள் முதலியன உள்ளன என்று நிரூபிக்கப் பட்டாலும்;

(vi) பாடப் புத்தகக் கமிட்டியினரால் அங்கீகரிக்கப் படாத புத்தகங்களைப் பள்ளியில் பாடமாக வைத்திருப் பதற்காகவும்;

(vii) தொடர்ந்த ஆஜர்க் குறைவினுல் பள்ளி மிகக் கீழ் நிலையில் போய்க்கொண்டேயிருப்பதைத் தவிர்க்க அக்கறை காட்டாத காரணத்திற்காகவும்.

11. ஆசிரியர் காப்பு நிதி (Teachers' Provident Fund):

தல நிர்வாகப் பள்ளிகளுக்கும், அரசினர் பள்ளிகளுக்கும் இந் நிதிபற்றிய தனி விதிகள் உள்ளன.

பணஉதவி பெறும் பள்ளியாசிரியர்களைப் பொறுத்த மட்டில் தனி விதிகள் உள்ளன.

அவற்றுள் அடிப்படையான சில விதிகள் பின் வருமாறு :

(i) பண உதவிபெறும் பள்ளிகளில் வேலைபுரியும் ஒவ்வோர் ஆசிரியரும் இந்த நிதியில் சேரவேண்டும். சேருவதற்கு முன் குறிப்பட்ட நஒறுக்களைப் பூர்த்திசெய்து மாவட்டக் கல்வியதிகாரியினுல் அநுமதிக்கப்படவேண்டும்.

(ii) திங்கள்தோறும் சம்பளத் தொகையில் ஒரு ரூபாய்க்கு ஓரணு என்ற விகிதத்தில் பள்ளி நிர்வாகி ஒவ்வோர் ஆசிரியரின் சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்வார். அதற்கு அரசினரின் அநுமதி உண்டு.

(iii) ஒவ்வோர் ஆசிரியரின் சார்பிலும் அவரிடமிருந்து வசூல்செய்யப்பட்ட தொகையில் பாதித் தொகையை அந்தத் தொகையுடன் சேர்த்து, அருகிலுள்ள குறிப்பிட்ட அஞ்சல் அலுவலகத்தில் சேமிப்பு நிதிக் கணக்கில் அந்தந்த ஆசிரியர் பெயரிலுள்ள கணக்கில் திங்கள்தோறும் 15-ம் தேதிக்குள் நிர்வாகி கட்டிவிடவேண்டும்.

(iv) ஒவ்வொரு ஆசிரியருக்கும் தனிக் கணக்கு உண்டு.

(v) இவ்வாறு திங்கள்தோறும் சேரும் தொகையை மாவட்டக் கல்வியதிகாரியின் அநுமதியின்றி ஆசிரியரோ, நிர்வாகியோ திரும்பி வாங்க முடியாது.

(vi) வயதாகி, முடிவில் ஆசிரியர் வேலையைவிட்டு நீங்கும்போது, அவர் பெயரிலுள்ள தொகையை அஞ்சல் அலுவலகத்திலிருந்து திரும்பி வாங்க மாவட்டக் கல்வியதிகாரி அநுமதிப்பார். நிர்வாகி அத்தொகையை வாங்கி ஆசிரியரிடம் சேர்ப்பிப்பார்.

(vii) அவரவர் கணக்கிலிருந்த தொகையில் மூன்றில் ஒரு பங்குத் தொகையை அரசினர் தம் சார்பில் ஒவ்வோர் ஆசிரியர்க்கும் கூடுதலாக வழங்குவார்கள். இவ்வாறு சம்பளத் தொகையின்பேரில்

	அ. பை
ஆசிரியர் கட்டவேண்டியது ரூபாய்க்கு	1—0
நிர்வாகி கூடுதலாகக் கட்டவேண்டியது	0—6
அரசினர் கூடுதலாக வழங்குவது	0—6 ஆகும்.

இவ்விதம் மொத்தமானதொரு தொகை ஆசிரியருக்குத் தம் கடைசிக் காலத்தில் கிடைப்பது எவ்வளவு நன்மையாயிருக்கும் எனச் சொல்லத் தேவையில்லை.

12. போதனைக்குப் பண உதவி :

அரசினர் அளிக்கும் பலவகைப் பண உதவிகளைப் பற்றி முன்னரே கூறப்பட்டது. ஆதாரப் பள்ளிகளில் வேலைசெய்யும் ஆசிரியர் சார்பாகவும் அரசினர் பணஉதவி வழங்குகின்றனர். இந்த உதவிபற்றி நுட்பமான, சிக்கலான விதிகள் உள்ளன. அவற்றைப்பற்றி விவரமாக அறிய அரசினர் வெளியிட்டுள்ள நூலைப் படிக்க வேண்டும்; அநுபவ அறிவும் தேவை. முக்கியமான சில விதிகள் மட்டும் கீழே தரப்பட்டிருக்கின்றன :

(i) *மாத சராசரி ஆஜர் 20-க்கு ஒரு ஆசிரியர் வீதம் பள்ளியில் எத்தனை ஆசிரியர்கள் வேலைசெய்கிறார்களோ அத்தனை பேருக்கும் அவரவர் தகுதிக்கேற்றவாறு பண உதவி வழங்கப்படும்.*

(ii) *சராசரி ஆஜர் 30-39-க்கு*

	உள்ளாக இருந்தால்	2	ஆசிரியர்களுக்கு	உதவி
,, ,,	40-59 ,,	3	,,	,,
,, ,,	60-79 ,,	4	,,	,,

—என்பதுபோல் கணக்கிடப்படும்.

(iii) *பள்ளி சராசரி ஆஜர் 20-க்குக் குறைந்தால் அந்த மாதத்திற்கு அப்பள்ளிக்குப் போதனை கிராண்டு அளிக்கப்பட மாட்டாது.*

(iv) *60 வயது முடிந்த எந்த ஆசிரியருக்கும் பண உதவி கிடையாது. 17 வயதுக்குட்பட்ட பயிற்சிபெறாத ஆசிரியருக்கும் கிராண்டு வழங்கப்படமாட்டாது.*

(v) *நிர்வாகியின் செலவுக்காக* **நிர்வாக கிராண்டு** *என்ற தொகையை ஆண்டுதோறும் ஒரு முறை நிர்வாகிக்கு அரசினர் வழங்குகிறார்கள். அந்தத் தொகை ஆசிரியர்களுக்கான மொத்த கிராண்டில் 15 சத வீதத்திற்கு மேற்படாது. நிர்வாகியின் கணக்குகளைத் துணை ஆய்வாளர் பரிசீலித்துச் சிபாரிசு செய்வார். மாணவர்களிடம் சம்பள வசூல் செய்யும் பள்ளி*

களில் நிர்வாகிக்கு அதிக லாபம் ஏற்பட்டால் நிர்வாக கிராண்டு வழங்கப்படமாட்டாது.

13. ஆசிரியர் போதனை மானியங்களில் 1—11—56 முதல் அளிக்கப்பட்டுள்ள உயர்வு :

பக்கம் 80-ல் ஆசிரியர்களுக்காக அரசினர் கொடுக்கும் சம்பளப் பண உதவி விவரமும், கிராக்கிப் படி விகித விவரமும் தரப்பட்டுள்ளன. அந்தச் சம்பள விகிதத்தில் அரசினர் முக்கியமான மாறுதல்களை அனுமதித்துள்ளனர். அம் மாறுதல்களால் எல்லா வகை ஆசிரியர்களுக்கும் சம்பள உயர்வும், சம்பள உயர்வினால் கூடுதலாகக் கிடைக்கும் கிராக்கிப் படியும் கிடைக்கும். இந்த ஊதிய உயர்வு 1—11—1956-லிருந்து அமுலுக்கு வந்துள்ளது. சம்பள உயர்வு விதிகளின் சாராம்சம் பின்வருமாறு :

(i) **லோயர் எலிமெண்டரி கிரேடு ஆசிரியர் :**

இந்த கிரேடு ஆசிரியர்கள் பெறும் 20 ரூபாயோடு விசேஷக் கூடுதலான சம்பளம் ரூ. 7 அளிக்கப்படும். அத்தகைய ஆசிரியர்களுக்கு,தற்போதைய சம்பளம் ரூ. 27 ஆவதால், கிராக்கிப் படி ரூ. 18 லிருந்து ரூ. 19 ஆக உயரும். ஆகவே, முன்னர் ரூ. 20 + ரூ. 18 பெற்றுவந்த ஓர் ஆசிரியர் 1–11–56 முதல் ரூ. 27 + ரூ. 19 பெறுவார்.

(ii) **ஜூனியர் பேஸிக் கிரேடு ஆசிரியர் :**

இந்தத் தர ஆசிரியருக்கு உரித்தான ரூ. 30-½-33 என்ற விகிதத்தில் ஓர் ஆசிரியர் பெறும் சம்பளத் தொகையோடு ரூ. 6 விசேஷக் கூடுதல் சம்பளமாக அரசினர் அனுமதித்துள்ளனர். இவர்களுக்குச் சம்பள உயர்வினால் கிராக்கிப் படியில் யாதொரு உயர்வும் ஏற்படாது.

(iii) **சீனியர் பேஸிக் கிரேடு ஆசிரியர் :**

இந்த கிரேடு ஆசிரியர்களுக்கு உரித்தான சம்பள விகிதத்தில் ஓர் ஆசிரியர் பெறும் சம்பளத்தோடு விசேஷக் கூடுதல் சம்பளமாக ரூ. 5 அளிக்க அரசினர் அனுமதித்துள்ளனர். இந்த வகையான சம்பள உயர்வினால் மொத்தச்

சம்பளம் ரூ. 60-க்கு மேற்படாமற்போனுல் அவர்களுக்குத் தாங்கள் பெறும் ரூ. 22 கிராக்கிப் படிக்கு மேல் உயர்வு இராது. மொத்தம் ரூ. 60-க்கு மேற்போனுல் கிராக்கிப் படி ரூ. 22-லிருந்து ரூ. 24 ஆக உயரும்.

14. பென்ஷன் திட்டம் :

அரசாங்க ஊழியர்களுக்கு, வேலேயிலிருந்து ஒய்வு பெற்ற பின், வழங்கப்படும் பென்ஷன் தொகையைப் போன்று ஆரம்ப, ஆதாரப் பள்ளிகளிலும், உயர்நிலேப் பள்ளிகளிலும் பணியாற்றி ஒய்வுபெற்று விலகும் ஆசிரியர்களுக்கும் பென்ஷன் அளிக்க அண்மையில் அரசினர் முடிவுசெய்துள்ளனர். அதுபற்றிய அதிகார பூர்வமான விதிகளேக் கீழ்க்கண்ட தஸ்தாவேஜில் விரிவாகக் காணலாம் :

போர்ட்டு செயின்ட் ஜார்ஜ் கெஜட்
I-*B* பகுதியின் - அனுபந்தம்
எண் 15, தேதி 10—10—1956

இந்த விதிகள் 1—4—1955-லிருந்து அமுலாகியுள்ளன.

15. ஆசிரியருக்கு அபராதம் :

பள்ளி நிர்வாகி ஓர் ஆசிரியருக்கு அபராதம் விதிக்கலாம். அவ்வாறு விதித்தால் அதுபற்றிய விவரத்தை அபராத ரிஜிஸ்தரில் உடனுக்குடன் பதியவேண்டும்.

ஒரே தடவையில் ரூ. 5/-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கலாம்.

ஒரு தடவைக்கு ஒரு ரூபாய் வீதம் ஒரு திங்களில் மூன்று தடவைக்கு மேற்படாமல் அபராதம் விதிக்கலாம்.

16. பள்ளியில் மாணவர்களேச் சேர்த்தல் :

(i) **எத்தனே தடவை சேர்க்கலாம் ?** ஒரு பள்ளி ஆண்டில் மாணவர்களே இரண்டே முறைதான் பள்ளியில் சேர்க்கலாம் :

(அ) *கோடை விடுமுறை முடிந்து பள்ளி திறந்ததும்;*
(ஆ) *கிறிஸ்மஸ் விடுமுறை முடிந்து பள்ளி திறந்ததும்.*

சிலர், இரண்டாவதற்குப் பதிலாக, நவராத்திரி விடுமுறைக்குப் பின் பள்ளி திறந்ததும்.

பள்ளி திறந்த ஒரு திங்கள் காலத்திற்குள் மாணவர் களைச் சேர்க்கும் வேலை முடிந்துவிடவேண்டும். மற்ற நாட்களில் மாணவர்களைச் சேர்க்கக்கூடாது. அவ்விதம் சேர்க்க நேரிட்டால் துணை ஆய்வாளரின் அநுமதிபெற்ற பிறகே சேர்க்கவேண்டும்.

விலக்கு : (அ) முதல் வகுப்பில் மட்டும் மாணவர் களை ஆண்டின் எப்பகுதியிலும் சேர்க்கலாம்.

(ஆ) கட்டாயக் கல்வி அமுலிலிருக்கும் பிரதேசங் களில் மட்டும் ஆண்டின் எப்பகுதியிலும் மாணவர்களைச் சேர்க்கலாம்.

(ii) **சேர்க்கும் வயது :** 5 வயதுக்குட்பட்ட மாணவர்களைச் சேர்க்கக்கூடாது; சேர்த்தால் அவர்களைக் கிராண்டு கணக்கிடுவதில் நீக்கப்படும்.

(iii) **சேர்க்கவேண்டிய வகுப்பு :** ஓர் ஆதாரப் பள்ளியில் சேர விரும்பும் ஒரு மாணவன் வேறெந்தப் பள்ளியிலாவது அதற்குமுன் படித்திருந்தானுனல் அந்தப் பள்ளியிலிருந்து அவனுக்கு வழங்கப்பட்ட தேர்ச்சித் தாளை (ரிகார்டு ஷீட்டு) வாங்கி ஆய்ந்து அதில் குறிப்பிட்டவாறு உரிய வகுப்பில் சேர்த்துக்கொள்ள வேண்டும். அவன் அதற்குமுன் எப்பள்ளியிலும் படித்திராவிடில் அவனுக்கு ஒரு தேர்வு நடத்தி, எந்த வகுப்புக்கு அவன் தகுதியோ அந்த வகுப்பில் அவனைச் சேர்த்துக்கொள்ளலாம். தேர்வு சம்பந்தமான வினுக்கள், விடைகள் முதலியவற்றைக் காப்பாற்றிவைத்திருந்து துணை ஆய்வாளரிடம் காண்பிக்கவேண்டும்.

(iv) **சேர்க்கை விண்ணப்பம் :** கட்டாயக் கல்வி அமுலிலுள்ள இடங்களில் ஒரு மாணவனைச் சேர்க்குமுன் பெற்றோரிடமிருந்து அவன் சார்பாகச் சேர்க்கை விண்ணப்பம் ஒன்றைப் பூர்த்திசெய்து வாங்கவேண்டு வது அவசியம். பிற இடங்களிலும் அம்மாதிரியான சேர்க்கை விண்ணப்பம் எழுதி வாங்குவது நலம்.

(v) சேர்க்கும்போது கேட்டறியவேண்டிய முக்கிய மான இரு தகவல்கள் :

(i) *மாணவனின் பிறந்த தேதி;*

(ii) *அம்மை நோய்க்குக் காப்பு இருக்கிறதா என்ற தகவல்.*

பின் இணைப்பு IV

ஆதாரப் பள்ளி ஆட்சியைப் பொறுத்தமட்டில் வெவ்வேறு அதிகாரிகளின் அதிகார வரம்புகள்

ஆதாரப் பள்ளிகளின் துணை ஆய்வாளரின் (Deputy Inspector of Schools) அதிகாரங்கள்

1. ஒரு வகுப்பில் சராசரி ஆஜர் 35-க்கு மேற்பட்டால் அதை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க **அநுமதி அளிக்க.**
2. ஆண்டுக்கொருமுறை ஒவ்வொரு பள்ளியையும் **தணிக்கை** செய்யவும், மூன்று நான்கு முறை பார்வையிடவும் அவர்தான் தணிக்கை அதிகாரி.
3. தொழிற் கருவிகளையும், அரசினர் வழங்கும் மானியங்களின் உதவியால் வாங்கப்பட்ட பொருள் களையும் சோதித்தல்; தொழிற்கருவிகளைச் சீராய் வைத்திருக்கும் முறைகளைச் (துருப் பிடியாமலும், வேறு வகையில் சேதமுறாமலும் இருக்கின்றனவா எனச்) சோதித்தல்.
4. பள்ளிக்குத் தேவையான தொழிற் கருவிகளின் **வேண்டுகோள் பட்டி** (Indent) ஒன்றைப் பள்ளி நிர்வாகியிடமிருந்து (பள்ளி அங்கீகாரமானதும்) வாங்கித் தேவைகளை **ஆராய்ந்து** மேலதிகாரி களுக்கு அனுப்புதல்.
5. ஆசிரிய - மானேஜர்களுக்கு எல்லா வகை விடுதியும் (லீவும்) **அநுமதிக்க.**
6. ஆசிரிய - மானேஜருக்கு ஆண்டுதோறும் உள்ள சம்பள உயர்வை **அநுமதிக்க.**
7. அவ்வட்டாரத்திலுள்ள கட்டாயக் கல்விக் கமிட்டி களுக்கெல்லாம் தலைவர் அவரே.

8. வட்டாரத்திலுள்ள ஆசிரியர் சங்கங்களுக்கெல்லாம் நிரந்தரத் தலைவரும் அவரே.
9. ஆதாரப் பள்ளி நிர்வாகம்பற்றிய எந்த விஷயத்திலும் அவருடனேயே பொதுமக்கள் முதன்முதலாகத் தொடர்பு கொள்ளவேண்டும்.

ஆதாரக் கல்வி அதிகாரியின் (Basic Education Officer) அதிகாரங்கள்

1. புதிய ஆதாரப் பள்ளி ஒன்று திறக்க அநுமதி அளிக்க.
2. அவ்வாறு திறக்கப்பட்ட பள்ளிக்கு அங்கீகாரமும் பண உதவியும் அளிக்க.
3. டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அநுமதித்துள்ள பள்ளிகளுக்கு அங்கீகாரமும் பணஉதவியும் அளிக்க.
4. ஓர் ஆதாரப் பள்ளியில் போதனைப் பயிற்சி பெருத ஆசிரியரை நியமிப்பதற்குத் தவிர்ப்பு அளிக்க.
5. பணஉதவி பெறும் பள்ளிகளுக்கு மாதவாரி கிராண்டு அளிக்க.
6. பணஉதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊழிய ரிஜிஸ்தர் வழங்க.
7. ஆசிரியர் – மானேஜர் தகராறுகளில் ஊழிய ரிஜிஸ்தரில் கண்டுள்ள ஒப்பந்த நிபந்தனைகளை நிறைவேற்றுமாறு உத்தரவிட.
8. அரசினரால் நடத்தப்படும் கல்வி இலாகாப் பள்ளிகளுக்குத் தேவையான புத்தகங்களைத் தேர்ந்தெடுக்க.
9. பள்ளிக்கூடங்களைத் தற்காலிகமாக (காலரா போன்ற காலத்தில்) மூடுவதற்கு அநுமதிக்க.
10. ஓராண்டில் பள்ளி வேலைசெய்யவேண்டிய 220 நாட்களுக்கு ஒரு பள்ளி வேலைசெய்யாவிடில் தகுந்த காரணத்தின்பேரில் மன்னிப்பு அளிக்க
11. ஆசிரியர்களின் சம்பளங்களை ஓர் ஆதாரப் பள்ளி நிர்வாகி சரிவரப் பட்டுவாடா செய்யாத பட்சத்தில் அவர்களுக்கு நேரிடையாகப் பணத்தை அனுப்ப.

12. அளித்துள்ள அங்கீகாரத்தை ரத்துசெய்ய.
13. ஓர் ஆதாரப் பள்ளியின் நிர்வாகத்தை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு மாற்ற.
14. நிரந்தரமான வேலையிலிருக்கும் ஓர் ஆசிரியரைத் திறமைக் குறைவு காரணமாக நீக்க நிர்வாகிக்கு அநுமதி அளிக்க.
15. ரூ. 250-க்குட்பட்ட விசேஷ மானியங்களை அநுமதிக்க.

டிவிஷனல் (மண்டல) இன்ஸ்பெக்டரின் (Divisional Inspector of Schools) அதிகாரங்கள்

1. உப பள்ளிகள் (Feeder Schools) திறக்க அநுமதி அளிக்க.
2. ஓர் இளையோர் ஆதாரப் பள்ளியை மூத்தோர் ஆதாரப் பள்ளியாக மாற்ற; VI-ம் வகுப்பு திறக்க அநுமதி அளிக்க. (VI, VII, VIII வகுப்புக்கள் ஒவ்வொன்றாகத்தான் தனித்தனியாக அநுமதிக்கப்படும்.)
3. VI, VII, VIII வகுப்புக்கள்மட்டும் கொண்ட ஒரு புது ஆதாரப் பள்ளி திறக்க அநுமதிக்க. (VI, VII, VIII வகுப்புக்கள் ஓராண்டுக்கு ஒவ்வொன்றாகத்தான் அநுமதிக்கப்படும்.)
4. ஓர் ஊரிலோ, அதன் அருகிலோ ஒரு மைல் தொலைவிற்குள் ஏதாவது ஒரு பள்ளி இருந்தால் அங்குப் புதியதொரு பள்ளி திறக்க அநுமதிக்க.
5. கட்டாயக் கல்வித் திட்டம் நடைமுறையிலுள்ள ஊர்களுக்கு ஆஜர்க் கமிட்டி உறுப்பினர்களை நியமிக்க.
6. ரூ. 250-க்கு மேற்பட்டு ரூ. 500-க்கு உட்பட்ட விசேஷ மானியங்களை அநுமதிக்க.
7. சாதாரண ஆரம்பப் பள்ளிகளிலிருந்தும், உயர்தரப் பள்ளிகளிலிருந்தும் ஆதாரப் பள்ளிகளிலுள்ள VII, VIII வகுப்புக்களில் சேர விரும்பும் மாணவர்களை அநுமதிக்க.

8. தேவை ஏற்பட்டால் கீழ் அதிகாரிகளின் உத்தரவுகளை மீண்டும் ஆராய.

மாநிலக் கல்வி இயக்குநரின் (Director of Public Instruction) அதிகாரங்கள்

1. ஆதாரப் பள்ளி ஆட்சிபற்றிய அரசினரது கொள்கைகளை நிறைவேற்றப் பூரண அதிகாரம்.
2. ரூ. 500-க்கு மேற்பட்ட தனி மானியங்களை அநுமதிக்க.
3. பள்ளி கட்டவும், உபகரணங்கள் வாங்கவும் நேரிடையாகக் கிராமவாசிகளுக்கு ரூ. 300-க்கு மேற்படாத விசேஷ மானியம் அநுமதிக்க.
4. தேவைப்பட்டால் கீழ் அதிகாரிகளின் உத்தரவுகளை மீண்டும் ஆராய.
5. புதுப் பள்ளி திறந்து அங்கீகாரம், பணஉதவி கோரும் விண்ணப்பத்தை விதிகளிற் குறிக்கப்பட்டுள்ள மூன்று மாத காலத்திற்குள் தாமதித்து அனுப்பும் விஷயங்களில் பள்ளி திறந்த தேதி முதற்கொண்டே அங்கீகாரமும், பணஉதவியும் அளிக்குமாறு சிறப்பான தருணங்களில் அவர் அநுமதிக்கலாம்.

அரசினர் (Government):

1. ஆதாரக் கல்விபற்றிய கொள்கைகளை நிர்ணயிக்க.
2. மாநில முழுமைக்கும் அக் கொள்கை நிறைவேற்ற நிதி வசதி, பிற வசதி அமைக்க.
3. ஆதாரக் கல்வி மகாநாடு கூட்ட.

மத்தியப் பண்டகசாலைப் பொறுப்பாளரின் அதிகாரங்கள்:

1. மேலதிகாரிகளால் அநுமதிக்கப்பட்ட வேண்டுகோள் பட்டியின்படி தொழிற் கருவிகளை உரியவருக்கு வழங்க.
2. பண்டகசாலையில் சேர்ப்பிக்கப்படும் சிட்டங்களின் விலையை நிர்ணயிக்க.
3. நெசவுக்குத் தகுதியில்லாத நூல் சிட்டங்களை ஏழைச் சிட்டங்களாக மாற்றிவருமாறு திருப்பிவிட.

2e
6/4